Koviloor Digital Library

# தாயுமானவர் பாடல்கள்

ACCN 4A4039
R65 - தாயு

Koviloor Digital Library

Purch on 28/3/09
Koviloor Digital Library

# தாயுமானவர் பாடல்கள்

4/5

பதிப்பாசிரியர்
முனைவர் ச. மெய்யப்பன்

KOVILOOR ANDAVAR
A. No. 44039
LIBRARY, KOVILOOR

மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

Koviloor Digital Library

முதல் பதிப்பு : செப்டம்பர், 1998
நான்காம் பதிப்பு : ஆகஸ்ட், 2004
திருவள்ளுவர் ஆண்டு : 2035

**விலை : ரூ. 30.00**

**நினைவில் வாழும்**

**நிறுவனர்**

**ச. மெய்யப்பனார்**

டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

**'வள்ளுவம்'** இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

**'பதிப்புச்செம்மல்'** என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம் :

**மணிவாசகர் நூலகம்**

12-B, மேல சன்னதி, சிதம்பரம்- 608001. ✆:230069
31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-600108. ✆:25361039
5, சிங்காரவேலுதெரு, தி. நகர், சென்னை-600017. ✆:24357832
110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-625001. ✆:2622853
15, ராஜ வீதி, கோயமுத்தூர்-641001. ✆:2397155
28, நந்தி கோயில் தெரு, திருச்சி-620002. ✆:2706450

---

அச்சிட்டோர்: மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை-600021,
தொலைபேசி : 25954528

Koviloor Digital Library



# ஞானக்கதிர்

முனைவர் ச. மெய்யப்பன்

தமிழ் நாட்டின் ஞானவழி தொன்மையானது. திருமூலர் தொடங்கி பாரதி, கண்ணதாசன் வரை வாழையடி வாழை யென வருகிற தூய மரபுகளின் தொகையே தமிழர் சமயம். இந்த நிலத்தில் உழவர் உழாமல் பக்திப் பயிர் செழிக்கிறது. நீண்ட நெடுங்காலமாக அன்பு நெறி தழைத்து, அருள் நெறி பூத்துக் குலுங்குகிறது. பக்திமொழியாகிய தமிழில் இறை உணர்வுப் பாடல்கள் எண்ண முடியாதவை. காரைக்காலம் மையாரும், அப்பரும், சம்பந்தரும், சுந்தரரும், மணிவாசகரும், பாடி வளர்த்த பக்திப் பயிர் அருணகிரியாரால் மேலும் வளம் பெற்றது. அவர் வழியில் வந்த "தாயுமானவர் பாடல்கள்" இதுவரை எழுந்த சித்தாந்த, வேதாந்தப் பாடல்களின் விழுமிய பிழிவாய் அமைந்தன.

தமிழ் இலக்கிய வரலாற்றில் தாயுமானவர் ஒரு திருப்பு முனை. சன்மார்க்கத்திற்கு வீரிய விதையிட்ட சான்றோர். அது பின்னாளில் வள்ளலார் வாயிலாகச் சுத்த சமரச சன்மார்க்கமாய்ச் செழித்தது. தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி மணம் பரப்பும் இதழ்கள் பல. அந்தப் பக்திப் பொய்கையில், தாயுமானவர் ஆயிரம் இதழ்களையுடைய செந்தாமரை மலராய்ச் சிறந்தோங்குகிறார்.

பல நூற்றாண்டுகளாகத் தமக்கு முன் செழித்திருந்த கருத்துக்களை, சிந்தனைகளை, உண்டு களித்து, மாந்தி மகிழ்ந்து, செரித்துச் சீரணித்து, செந்தமிழ்ப் பாட்டோவிய மாக்குகிறார் தாயுமானவர். பக்தி இயக்கத்தின் பாதையில் தாயுமானவர் ஒரு மைல்கல். செந்தமிழ்ச் சொல்லும், வட மொழிச் சொல்லும் இழையோடிப் பக்திப் பெருந்தமிழாய்ப் பெருக்கெடுத்து ஓடுகின்றன. தாயுமானவர் பாடல்கள் தமிழர் வழிபாட்டு நெறியில் பக்தியும், ஞானமும் இணைந்து செல்லும் பெருவழியாய்த் திகழ்கின்றன.

இறை உணர்வுப் பெருங்கடலுக்கோர் 'கலங்கரை விளக்கம்'. அடிகளின் உவமை, உருவகம் தமிழுக்குப் புது வலிமை சேர்ப்பன. அவர் கண்ட கடவுள் காட்சி விண்ணையும், மண்ணையும் இணைக்கும் திருக்காட்சி உடையதாய், ஒலிநயம் சிறந்து, தாளக்கட்டுடன் இசை

Kaviloor Digital Library

வெள்ளமாய்ப் பாய்கிறது.

தத்துவச் சுடராய், தமிழ்க் கதிராய், ஞான விளக்கமாய், அருட் சோதியாய் தாயுமானவர், தமிழ் கூறும் நல்லுலகால் போற்றப்படுகிறார். சொற்களின் சேர்க்கை, சொல்லாக்கங்கள், தாயுமானவரின் தொடர்கள் வளர்தமிழுக்கு வலிமை சேர்ப்பன. சென்ற கால மொழியின் பழுதிலாச் சிறப்பை, குன்றாத நலத்தை, வற்றாத வளத்தை, பாடல் அடி ஒவ்வொன்றும் பறை சாற்றுகின்றன.

தமிழுக்குக் கனிவையும், நெகிழ்ச்சியையும் அடிகள் பாடல் அளிப்பதோடு, சொல்லுக்குச் சொல் பெருமித நடையை வழங்குகிறது. மோன நெறியினை, முக்தி நெறியாய், வடித்த சாறாய் விளங்கும் திருப்பாட்டு, அடிகள் தம் ஞானப்பாட்டு.

தமிழ்க் கவிதையின், வளர்ச்சியின், உயிராய், கொடு முடியாய், இமயமாய் விளங்கும் அடிகள் திருப்பாடலின் சுவடு படியாத பாடல்கள் பிற்காலத் தமிழில் இல்லை. வானமனைத்தும் அளந்த தமிழை அளந்த பெரியார் தாயுமானவர். ஆழ்கடலாய், விரிகடலாய், பரந்த வட மொழியின் நிலை கண்டுணர்ந்தவர், இரு மொழியினையும், ஒரு மொழியாய், திருமொழியாய்க் கொண்டு பாட்டியற்றி, அந்தன் மொழியில் நாடு உய்யச் செய்தார்.

பதியியல்பு, பசு (உயிர்) இயல்பு, பாசத்தடை பற்றித் தொடுத்த வினாக்களும், விடுத்த விடைகளும், தத்துவக் களஞ்சியங்களாகும். தவம் செய்த தவமாகவும், தமிழ் நிலம் செழிக்க வந்த அருள் முகிலாகவும், வற்றாத அன்புக் கடலாகவும் விளங்குபவர், தாயுமானவர். அவர்தம் திருப் பாடல்கள் படித்தாலும், கேட்டாலும் நினைத்தாலும், இனிக்கும் தன்மையன. பக்திப் பேரியக்கத்தில் ஞாயிற்றுக் கதிராக தாயுமானவர் பாடல்கள் விரிந்து, ஞான ஒளியை ஞாலமெல்லாம் பரப்புகின்றன. அவரது பாடல்களைப் பாடி நினைந்து, நனைந்து, நல்ல அருள் பெற்று உய்வோமாக! ஞானக் கதிர் வீச்சாய், ஞானம் தழைக்க வழிகாட்டுவோமாக!

❋ ❋ ❋ ❋

Koviloor Digital Library 4/5



# தாயுமானவர் வாழ்க்கை வரலாறு

தமிழகம் அன்று தொட்டு இன்று வரை அருளாளர் பலரைத் தோற்றுவித்து அரிய புகழைப் பெற்று வந்திருக்கிறது. பல துறைகளில் பலப்பல சான்றோர்கள் தோன்றி மக்களை நன்னெறியில் செலுத்தியுள்ளனர். பல அரிய உண்மைகளை மக்களுக்கு எடுத்துரைத்து உய்யும் நெறிக்கு வழிகாட்டியுள்ளனர். அத்தகைய அருளாளர் வரிசையில் குறிக்கத்தக்கவர் தவத்திரு தாயுமானவ அடிகள்.

தாயுமானவர் கி.பி. 18—ஆம் நூற்றாண்டில் திருச்சிராப்பள்ளியில் கேடிலியப்பப் பிள்ளை — கெசவல்லியம்மை என்பாருக்கு இரண்டாம் புதல்வராகப் பிறந்தார். இளமையில் சிற்றம்பல தேசிகர் என்பவரிடம் கல்வி பயின்றார். பின்னர் பல தமிழ் இலக்கிய இலக்கண நூல்களையும் வடமொழி நூல்களையும் கற்றுணர்ந்தார்.

இளமையிலேயே இவர் உள்ளம் பத்திமை நெறியில் படர்ந்தது. இறைவன்பால் பேரன்பு பூண்டிருந்தார். திருச்சிராப்பள்ளி மலைக் கோட்டையில் கோயில் கொண்டிருக்கும் தாயுமானவரை நாள்தோறும் வழிபட்டு வந்தார்.

இவர் திருச்சிராப்பள்ளியில் அரண்மனையில் கணக்கெழுதும் அலுவலராக வேலை பார்த்து வந்தார். அப்போது அங்கு சாரமா முனிவர் மடத்தில் தங்கியிருந்த மௌன குருவை ஒரு நாள் வழியில் கண்டார். கண்டவுடன் காந்தத்தால் ஈர்ப்புண்ட இரும்பைப் போல அவரால் கவரப்பட்டு அவரது மாணவரானார். அவரிடம் சித்தாந்த நூல்களையும், யோக ஞான முறைகளையும் கற்றுணர்ந்தார். நிட்டைப் பயிற்சியிலும் ஈடுபட்டார்.

பின்னர் சில நாட்களில் அரசியல் பணியினின்றும் விலகி விராலி மலைக்கு சென்று அங்கே சித்தர்கள் பலரைக் கண்டு அளவளாவினார். இதன் பயனாக இவரது உள்ளம் துறவில் ஈடுபடத் தொடங்கியது. இறைநெறி பற்றியும், துறவின் மேன்மை பற்றியும் பல பாடல்கள் பாடினார்.

துறவு நெறியை மேற்கொண்டு பல தலங்களுக்கு யாத்திரை செய்து பல பாடல்களைப் பாடி வந்த தாயுமானவரை இவர் தாயாரும், தமையனாரும் திருமணம் செய்து

Koviloor Digital Library



கொள்ள வற்புறுத்தினர். தமக்கு மனம் இல்லாத போதிலும், அவர்களின் வற்புறுத்தலுக்காக அடிகள் திருமணம் செய்து கொண்டார். ஒரு ஆண் மகவும் பிறந்தது. அதற்குக் 'கனகசபை' எனப் பெயரிட்டனர்.

சிலகாலம் சென்ற பின்னர் அடிகளார் இல்லறத்தை அடியோடு துறந்து கடுந்துறவை மேற்கொண்டு கோவண ஆடையுடன் வெளியேறினார். திருச்சிராப்பள்ளியில் தமது குருவாகிய மௌனகுருவை அடைந்து அவரது மடத்தில் சிலகாலம் தங்கினார். பின்னர் புறப்பட்டு இராமநாதபுரம் சென்று 'காட்டூரணி' என்னுமிடத்தை அடைந்து அங்கே புளியமரம் ஒன்றின் கீழ் தங்கி நிட்டையில் இருந்து பேரின்ப சமாதி நிலையை அடைந்தார்.

**காலம்**

இவரது காலம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டு எனவும், 18 ஆம் நூற்றாண்டு எனவும் இரு கொள்கைகள் நிலவுகின்றன.

இவர் சமாதிநிலை அடைந்த பொழுது இவரது மாணாக்கர்கள் சில பாடல்களைப் பாடினர். அவற்றுள், 'துகளறு சாலி வருடம்' எனத் தொடங்கும் பாடலை ஆதாரமாகக் கொண்டு அடிகளின் காலம் கி.பி. 1608 முதல் 1662 வரை எனப் பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை கூறுவர். டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்களும் இவர் காலம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டே என்பர். ஆனால் தமிழ்க் கலைக் களஞ்சியத்தில் இவர் காலம் கி.பி. 18 ஆம் நூற்றாண்டு (1705 – 1742) எனக் குறிக்கப்பட்டுள்ளது.

**புலமை**

சித்தாந்த செந்நெறியில் படர்ந்த அருளாளர்களுக்கு ஒரு தனித்தன்மை உண்டு. அதுவே தெய்வீகப் புலமை. அம்மையார் தந்த ஞானப்பாலால் அருட்புலமை பெற்றவர் திருஞானசம்பந்தர். திருவெண்ணெய் நல்லூரில் இறைவனால் தடுத்தாளப் பெற்று, அவர் 'பித்தா' என்று அடியெடுத்துக் கொடுக்கப் பல்லாயிரக் கணக்கான பதிகங்களைப் பாடியருளியவர் நம்பி ஆரூரர். இம்மரபு வழிவழியாகத் தொடர்ந்துள்ளது.

ஒரு நாள் மலைக்கோட்டையில் அமர்ந்துள்ள இறைவன் தாயுமானவரை அடிகளார் வழிபட்டுத்

Koviloor Digital Library



திரும்புங்கால் வழியில் மௌன குருவைக் கண்டு வணங்கி, பின்னர் அவர்பால் உபதேசம் பெற்று அருட்கவியானார். பின்னர் சிவத்தலங்கள் பலவற்றிற்கும் சென்று சிவபெருமானைப் பாடிப் பரவிப் போற்றினார்.

அடிகள், சாரமா முனிவர்பால் பல நூல்களைக் கற்றுத் தேறியவரெனினும் அவற்றுக்கும் அப்பாற்பட்ட அருட்புலமை இறைவனருளால் அவரிடம் அமைந்திருந்ததென்பதை, இவர் பாடல்கள் உணர்த்துகின்றன. சொல்லழகும், பொருள் நயமும், கற்பனை வளமும் இவர் பாடல்களில் விஞ்சி நிற்கின்றன. செந்தமிழ் நலமும், சித்தாந்தக் கருத்துக்களும் நிறைந்துள்ளன. சித்தரெல்லாம் போற்றும் சித்தராக மட்டுமின்றிப் புலவரெல்லாம் போற்றும் புலவராகவும் விளங்கியவர் தாயுமான அடிகள்.

**வடமொழிப் புலமை**

தமிழ் நூல்களைப் பயின்றதோடன்றி வடநூற் கடலையும், நிலை கண்டுணர்ந்தவர் அடிகளார். இவர் வாழ்ந்த காலம் வடமொழி தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த காலம். வடமொழிச் சொற்களைத் தமிழில் கலந்து பேசுவதும் எழுதுவதும் உயர்வென மதிக்கப் பெற்ற காலம். எனவே அடிகளாரின் பாடல்களில் ஏராளமான வடமொழி சொற்கள் இடம் பெற்றுள்ளதில் வியப்பொன்று மில்லை. வடசொற்களை மட்டுமின்றி அம்மொழிநூற் கருத்துக்களையும் இவர் தமது பாடலில் வடித்துள்ளார்.

கருணாகரக் கடவுள் என்னும் தலைப்புள்ள பதிகப் பாடல்களில், அபிஷேகம், நைவேத்தியம், ஆனந்தம், திவ்யரசம், சாந்தம், பிராணன், நிர்த்தம் போன்ற வடசொற்களைக் கையாளுகின்றார். நூல் முழுவதும் எண்ணற்ற வடமொழிச் சொற்கள் மாற்றமில்லாமல் ஆளப்பட்டுள்ளன.

**சொல்—தொடர் ஆட்சிகள்**

பிற அருளாளர்களின் நூல்களில் காணப்படும் சொற்களையும் சொற்றொடர்களையும் தாயுமானவர் தமது நூலில் கையாளுகின்றார். இவர் காலத்தில் வழங்கிய மரபுத் தொடர்களையும், உவமைத் தொடர்களையும் இவர் பாடல்களில் கண்டு சுவைக்க இயலுகின்றது.

Koviloor Digital Library



எடுத்துக்காட்டாகச் சில:

"நட்ட கல்லைத் தெய்வமென்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றிவந்து மொணமொணென்று சொல்லுமந்திரம் ஏதடா?"
— சிவவாக்கியர்

"பண்ணேன் உனக்கான பூசையொரு வடிவிலே
பாவித் திறைஞ்ச ஆங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி"
— தாயுமானவர். கருணாகர — 6

"சேயினும் நல்லன் அணியன் நல்லன்பர்க்குத்
தாயினும் நல்லன் பின்தாழ்சடை யோனே" — திருமூலர்

"தாயினும் இனிய நின்னை
சரண்என அடைந்த நாயேன்"
— தாயுமானவா

"எங்கும் நிறைந்து அமுதூறு பரஞ்சுடர்"
— மாணிக்கவாசகர்

"அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது"
— தாயுமானவர்

"அவனன்றி ஓரணுவும் அசையாது"

என்னும் தொடரை அருளியவர்.
— திருநாவுக்கரையர்.

இத்தொடரை

"அவனன்றி யோரணுவும் அசையா
தெனும் பெரிய ஆப்தர் மொழி" — தாயுமானவர்
— எங்கு நிறை — 1

எனத் தாயுமானவர் அமைத்துப் பாடுகின்றார்.

இவ்வாறு எண்ணற்ற தொடர்களைக் காணலாம்.

வள்ளுவத்தின்மீது பெரும் ஈடுபாடு கொண்டவர் இவர், திருக்குறளில் காணப்படும் சொற்றொடர்கள் பலவற்றை அடிகள் எடுத்தாளுகின்றார்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்" — குறள். 260

Koviloor Digital Library



"கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ? அறியேன்"

— தாயுமானவர் — பராபரக். 192

"ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையிற் பேதையார் இல்" — குறள். 834

"கற்றும் பலபல கேள்விகள் கேட்டுங் கறங்கெனவே
சுற்றுந் தொழில்கற்று சிற்றின்பத் தூடுசுழலில்"

— தாயுமான. பாயப்புலி — 57

இவ்வாறு வருமிடங்கள் பல.

**கற்பனை வளம்**

ஒரு மொழிக்குச் சிறப்பளிப்பன கற்பனை வளம் செறிந்த பாடல்களேயாகும். தாயுமானவர் பாடல்களில் கற்பனை வளம் ஆங்காங்கு சிறந்து நிற்பதைக் காணலாம்.

அக்காலத்தில் காடுகள் ஏராளமாக இருந்தன. அவற்றில் ஆறலை கள்வரான வேடுவர்கள் தங்கி, வழி செல்வோரது பொருள்களைக் கொள்ளையடிப்பதோடு அவர்களை பலவாறு துன்புறுத்தியும் வந்தனர். இதனை அடிப்படையாக வைத்துப் பின்வரும் கருத்தினைக் கற்பனை அமையக் கூறுகின்றார் அடிகள்.

உடல் ஒரு காடு. அக்காட்டில் வாழும் ஐம்புலன்களாகிய வேடுவர்கள், பொறிகளாகிய ஐந்து வழிகளில் வந்து நின்று கொண்டு உயிர் என்னும் வழிப்போக்கனை இழுத்துக் கொடிய காமமாகிய தீயிலே சுட்டு உயிருடன் தின்னுகின்றார்கள் என்கின்றார்.

"வாயில்ஓர் ஐந்தில் புலன்எனும் வேடர்
வந்துஎனை ஈர்த்து வெங்காமத்
தீயிலே வெதுப்பி உயிரொடும் தின்ன
சிந்தைநைந் துருகிமெய்ம் மறந்து
தாயிலாச் சேய்போல் அலைந் தகப்பட்டேன்"

— தாயுமான — சிவன் செயல் — 5

**உவமை நலம்**

அணிகட்கெல்லாம் தாய் எனப்படும் உவமையணியை நூலெங்கும் பல இடங்களில் அடிகள் கையாண்டுள்ளார்.

Koviloor Digital Library



அவை இயற்கையோடு இயைந்து கவியின்பம் தந்து நிற்கின்றன.

சமயத் தொடர்பான உண்மைகளைக் கூறும்போது வெற்றெனக் கூறினால் சலிப்பு உண்டாகக் கூடும். அவற்றை உவமை காட்டிக் கூறினால் சுவை உண்டாகி மனத்தில் பதியும். இவ்வுத்தியைத் தேவாரத் திருவாசக ஆசிரியர்கள் கையாண்டுள்ளனர். அவர்களைப் பின்பற்றித் தாயுமானவரும் பல உவமைகளைக் கூறுகின்றார்.

மனம் கட்டுக் கடங்காது தாவும் இயல்புடையது. எனவே, அதனைக் குரங்குக்கு ஒப்பாக அருளாளர்கள் கூறுவர்.

தாயுமானவர் மனத்தைக் குரங்கோடு ஒப்புமை கூறுவதோடு யானை, வண்ணான், பஞ்சு, காற்றாடி போன்ற பொருள்களையும் ஒப்புமை கூறி மனத்தின் இயல்புகளை விளக்குகின்றார்.

அடக்குதற்கரிய யானை போன்றது மனம் என்பதை,

"வட்ட மிட்டொளிர் பிராண வாயுவெனும்
நிகள மோடுகம னஞ்செயும்
மனமெனும் பெரிய மத்த யானையை"

— தாயுமான — அகிலாண்ட —1

எனவும்,

"இழுக்கடித்தாய் நெஞ்சேநீ என்கலைகள் சோர
அழுக்கடிக்கும் வண்ணர் போலாய்"

— தாயுமான — உடல் பொய் — 6ః

எனவும் கூறுகின்றார். வண்ணார்கள் கலை சோர மட்டுமா அடிக்கிறார்கள். மனம் சோரவும் அலைக்கழித்து அடிக்கின்றார்கள் அல்லவா? உலகியலோடு ஒட்டிய உவமை இது!

"ஆடு கறங்காகி அலமந் துழன்றுமனம்"

— காண்பேனோ - 22

கல்லினுள் தீ மறைந்திருக்கிறது. கல்லோடு கல்லைத் தட்டும்போது தீப்பொறி பறக்கின்றது. அதுபோல இறைவன் எல்லாப் பொருளிலும் உள்ளான். உருகி உணர்ந்து நினையும் போதுதான் வெளிப்படுவான் என்ற உண்மையை,

Koviloor Digital Library



"சொல்லுக் கடங்கான்காண்; சொல்லிறந்து நின்றவன்
காண்;
கல்லுள் இருந்த கனல்ஒளிபோல் நின்றவன் காண்"

எனப் பட்டினத்தடிகளார் விளக்குவர். இதே கருத்தை,

"எள்ளினுள் மறைந்து நிற்கும் எண்ணெய் போல"

எனவும்

"கருதரிய மலரின் மணம், எள்ளில் எண்ணெய் உடல்
உயிர்போல்"
— பொருள் வணக்கம்— 8

எனவும் தாயுமானவர் விளக்குவர்.

**சித்தாந்தம்**

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளின் உண்மையினையும், அவற்றின் தன்மைகளையும் விளக்குவது சைவ சித்தாந்தம்.

'நான் பிரம்மம்' (அகம் பிரமாஸ்மி) எனக் கூறுவது வேதாந்தம். இவ்விரண்டும் வெவ்வேறு எனக் கூறிப் பேதம் விளைவித்தோர் பலர். ஆனால் மெய்ஞ்ஞானிகள் பலர் 'சித்தாந்தமே வேதாந்தம்' என்றும், 'வேதாந்தத்தின் தெளிவே சித்தாந்தம்' என்றும் கூறி அக்கொள்கைக்கான காரணங்களை விரித்துரைததுச் சமரசத்தை நிலைநாட்ட முயன்றனர்.

"சித்தாந்த வேதாந்தம் செம்பொருள் ஆதலால்
சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே"

என்பர் திருமூலர்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் காழியில் பிறந்து சிவஞானப் பாலுண்டு செந்நெறியால் சைவ நெறியைச் சீர்பெற வளர்த்த திருஞானசம்பந்தர் முதலிய அருளாளர்கள் வைதிக நூல்களும் சிவாகமங்களும் இறைவனால் அருளி செய்யப்பட்டனவே. 'வேதப் பயனே சைவம்', 'வேதாந்தத் தெளிவே சைவ சித்தாந்தம்' என்று தெளிவுபடுத்தினர்.

தாயுமானவர் சித்தாந்தக் கருத்துக்களையும், வேதாந்தக் கருத்துக்களையும் சுமது பாடல்களில் அமைத்துப் பாடியுள்ளார். சைவ சமயமே முதற் சமயம்; அதுவே

Koviloor Digital Library



வேதாந்தத்துக்கு வித்தாக அமைந்தது என்பது தாயுமான வரின் கொள்கை. இதன் காரணமாகவே இவர் வேதாந்தி களையும் சித்தாந்திகளையும் ஒற்றுமைப்படுத்தி வைக்கும் நோக்கத்தோடு சமரசப் பாடல்கள் பல பாடியுள்ளார்.

**வேதாந்த சித்தாந்த சமரச சிவாநுபூதி**
**மன்னஒரு சொற்கொண் டெனைத்தடுத் தாண்டன்பின்**
**வாழ்வித்த ஞான குருவே!" — மௌனகுரு – 4**

என்பது போல் வருமிடங்கள் பல.

**தத்துவம்**

தாயுமானவர் தத்துவக் கருத்துக்களைத் தமது பாடல்களில் விளக்குகின்றார். இவர் பாடல்களில் பெரும்பான்மையானவை . தத்துவப் பாடல்களேயாகும். அன்றியும், 'தத்துவ மசி வாக்கியம்' என்ற தலைப்பி'ல் பதினாறு தத்துவ மந்திரங்களையும் அருளி செய்துள்ளார். இதுவுமன்றி 'தத்துவ முறைமை' என்ற தலைப்பில் இருபத்தேழு தத்துவக் கண்ணிகளைப் பாடியுள்ளார். எனவே, இவர் பத்திமை நெறியில் தத்துவங்கட்கு முதலிடம் தந்து பாடியவர் என்பதை நன்குணரலாம்.

ஆன்ம தத்துவம் குறித்து இவர் பாடியுள்ள பாடல்கள் பொருள் பொதிந்தவை.

'ஆன்மா அழியாதது; இறைவனைப் போலவே அநாதி யானது' என்பர் அறிஞர்.

**"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்**
**பதியினைச் சென்றணு பாசம் அநாதி**
**பதியினை சென்றணு காப்பசு பாசம்**
**பதியணு கிற்பசு பாசம் நிலாவே" திருமந்.— உபதேச—3**

என்பர் திருமூலர்.

இக்கருத்தை எதிரொலிப்பவர் போல்,

**"என்றுநீ அன்றுநான் உன்னடிமை அல்லவோ?"**
**தாயுமான — சுகவாரி — 7**

எனவும்

**"என்றுளைநீ அன்றுளம் யாம்"**

எனவும் ஆன்மாவின் அனாதித் தன்மையை விளக்குவர் தாயுமானவர்.

Koviloor Digital Library


புத்தியே பலவகைப்பட்ட பாவகத்திற்கும் காரணம். அதன்வழி நின்ற உயிர் கடவுளை அறியாமல் உலக பாசங்களில் சுழன்று அலமருகின்றது என்பது புத்தி தத்துவக் கொள்கை.

பாம்பின் வாயில் சிக்கிய தேரை தப்பிப் பிழையாததைப் போல புத்தி தத்துவ சுழலில் சிக்கிய உயிர் உய்தல் அரிது எனத் தாயுமானவர் எடுத்துரைக்கின்றார்.

**"புத்தியெனுந் துத்திப் பொறியரவின் வாய்த் தேரை**

**ஒத்துவிடாது எந்தையருள் ஓங்குநாள் எந்நாளோ?**

**— தத்துவமுறை — 8**

புத்தியிலிருந்து தோன்றுவது அகங்கார தத்துவம். இதுவே யான், எனது என்னும் செருக்கினை உண்டாக்குவது. இதனை ஒரு யானையாக உருவகப்படுத்திக் கூறுகின்றார் அடிகளார்.

**"ஆங்கார மென்னும்மத யானைவா யிற்கரும்பாய்**

**ஏங்காமல் எந்தையருள் எய்துநாள் எந்நாளோ?**

**— தத்துவமுறை — 9**

அகங்கார தத்துவம் உள்ளத்தில் செருக்கை விளைவிப்பதால் அதனை யானையாகவும், அதில் சிக்கித் தவிக்கின்ற உயிரைக் கரும்பாகவும் உருவகம் செய்து கூறினார். தத்துவங்கள் பற்றி மிக விரிவாக இவர் கூறுகிறார்.

மண் முதலான ஐந்து பூதங்களும், புறக்கருவிகளும், ஐம்பொறிகளும், தன்மாத்திரைகளும், முக்கரணங்களும், அசுத்தமாயா தத்துவங்களும், சுத்த தத்துவங்களும் ஆகிய தொண்ணூற்றாறு தத்துவங்களையும் வகைப்படுத்திப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார்.

**தாயுமானவர் உலகுக்கு வழங்கிய சன்மார்க்க நெறி**

தாயுமானவர் இறைவனை வழிபடும் நெறியைச் சன்மார்க்க நெறி என உணர்த்துகிறார்.

**"சங்கர! சுயம்புவே! சம்புவே! எனவு மொழி**

**தழுதழுத் திடவணங்குஞ்**

**சன்மார்க்க நெறி"**

**— சின்மயா — 1**

என்னும் பாடல் பகுதி இதனை உணர்த்தும்.

Koviloor Digital Library


"கும்பிட் டனந்தமுறை தெண்டனிட் டென்மனக்
குறையெலாந் தீரும்வண்ணம்
மருமலர் எடுத்துஉன் இருதாளை அர்ச்சிக்க"

— மௌனகுரு — 8

என இறைவழிபாட்டு முறையைக் கூறுகின்றார்.

இறைவனை வழிபடுவோர், இறைவன் திருவடியாகிய பேரின்பத்தை அடைவதற்கு இடையூறாக உள்ள தாய், தந்தை, மனைவி, மக்கள், மாடு, வீடு முதலியவற்றை மறந்து வழிபாட்டில் ஈடுபட வேண்டும் என வற்புறுத்துகின்றார்.

"நினதருளால்
மனைவி புதல்வர் அன்னை பிதா
மாடு வீடு என்றிரு மயக்கம்
தனையு மறந்திங் குனைமறவாத்
தன்மை வருமோ? தமி யேற்கே.

— தன்னையொப் — 2

"சிவனெனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மானை வழிபடுங்கள்! அவ்வாறு வழிபடாதவர் வீணே உடம்பை வளர்த்து இரை தேடித் தாமே காகங்கட்கு இரையாவர். சிவனை வணங்கியோர் உய்வர்!" எனத் தெளிவுறுத்து கின்றார். 'சிவனையன்றி வேறு தெய்வம் உளது என நம்பி அதனை வழிபடுவோர் நைவர்' என எச்சரிக்கின்றார்.

"தெய்வம் வேறுள தென்பவர்
சிந்தனை நைவர்"

— தாயுமான — பொன்னை — 76

"சைவ சிற்சிவனே! உனைச் சார்ந்தவர்
உய்வர்!"

என வழிகாட்டுகின்றார்.

தாயுமான அடிகள் தமது நூலில் கூறும் அறவுரைகள் பக்தி இலக்கியத்தின் அணிகலன்கள் எனலாம்.

Koviloor Digital Library

## தாயுமானஅடிகளின் மாணாக்கர்

# அருளையர்

## தாயுமானஅடிகளைத் துதிசெய்த

## அருள்வாக்கிய அகவல்

திருவளர் கருணைச் சிவானந்த பூரணம்
ஒருவரும் அறியா ஒருதனிச் சித்து
நவம்தரு பேதமாய் நாடகம் நடித்துப்
பவம்தனை நீக்கிப் பரிந்துஅருள் பராபரம்
கண்ணும் கருத்தும் கதிர்ஒளி போல

நண்ணிட எனக்கு நல்கிய நன்மை
ஒன்றாய்ப் பலவாய் ஒப்புஇலா மோனக்
குன்றாய் நிறைந்த குணப்பெருங் குன்றம்
மண்ணையும் புனலையும் வளியையும் கனலையும்
விண்ணையும் படைத்த வித்துஇலா வித்துப்

பந்தம் அனைத்தையும் பாழ்பட நூறிஎன்
சிந்தையுள் புகுந்த செழுஞ்சுடர் ஜோதி
விள்ஒணா ஞானம் விளங்கிய மேலோர்
கொள்ளைகொண்டு உண்ணக் குறைவுஇலா நிறைவு
தாள்தா மரைமலர்த் தாள்நினைப் பவர்க்குக்

காட்டா இன்பம் காட்டிய கதிநிலை
வாக்கால் மனத்தால் மதித்திட அரிதுஎன
நோக்காது இருக்க நோக்கிய நோக்கம்
ஆதியாய் அறிவாய் அகண்டமாய அகண்ட
ஜோதியாய் விரிந்து துலங்கிய தோற்றம்

பரவெளி தன்னில் பதிந்தஎன உளத்தில்
விரவி விரவி மேற்கொளும் வெள்ளம்
சுட்டுக்கு அடங்கா ஜோதி அடியார்
மட்டுக்கு அடங்கும் வான்பெருங் கருணை
எல்லைக்கு அடங்கா ஏகப் பெருவெளி

Koviloor Digital Library


தில்லைப் பொதுவில் திருநடத் தெய்வம்
வாதவூர் எந்தையை வரிசையாய் விழுங்கும்
போதவூர் மேவுகர்ப் பூர விளக்குச்
சுடரை அகண்டத் தூவெளி எல்லாம்
திகழவே காட்டும் சின்மய சாக்ஷி

செழுந்தமிழ் அப்பரைச் சிவலிங்கம் ஆகி
விழுங்கிய ஞான வித்தக வேழம்
எழில்தரு பட்டினத்து இறைவரை என்றும்
அழிவுஇலா இலிங்கம் ஆக்கிய அநாதி
சாந்த பூமி தண்அருள் வெள்ளம்

ஆர்ந்த நீழல் அசையாக் ககனம்
பரவுவார் நெஞ்சில் பரவிய மாட்சி
இரவுபகல் அற்ற ஏகாந்தக் காட்சி
ஆட்சிபோல் இருக்கும் அகிலம் தனக்குச்
சாக்ஷியாய் இருக்கும் தாரகத் தனிமுதல்

ஆணும் பெண்ணும் அலியும்அல் லாததுஓர்
தாணுவாய் நின்ற சத்துஆம் தனிச்சுடர்
எள்ளும் எண்ணெயும் எப்படி அப்படி
உள்ளும் புறம்பும் உலாவிய ஒருபொருள்
அளவுஇலா மதம்தொறும் அவர்அவர் பொருள்என

உளம்நிறைந்து இருக்கும் ஒருபொன் பனிதி
துள்ளும் மனப்பேய் துடிக்கத் தறிக்கக்
கொள்ளும் மோனவாள் கொடுத்திடும் அரசு
பெரிய பேறு பேசாப் பெருமை
அரிய உரிமை அளவுஇலா அளவு

துரிய நிறைவு தோன்றா அதீதம்
விரியும்நல் அன்பு விளைத்திடும் விளைவு
தீராப் பிணிஆம் ஜெனனம் அறுக்க
வாரா வரவாய் வந்தசஞ் சீவி
ஆலைக் கரும்புபாகு அமுதக் கட்டிநீள்

சோலைக் கனிபலாச் சுளைகத லிக்கனி
பாங்குறு மாங்கனி பால்தேன் சருக்கரை

Koviloor Digital Library



ஓங்குகற் கண்டுசேர்த்து ஒன்றாய்க் கூட்டி
அருந்திய ரசம்என அறிஞர் சமாதியில்
பொருந்திய இன்பம் பொழிசித் சுகோதயம்

எங்கணும் நிறைந்த இயல்பினை எனக்குச்
செங்கையால் விளங்கத் தெரித்தமெய்த் தேசிகன்
தன்னைஅறி வித்துத் தத்பரம் ஆகி
என்உளத்து இருந்துஅருள் ஏக நாயகன்
அடிமுடி இல்லா அரும்பொருள் தனக்கு

முடிஅடி இதுஎன மொழிந்திடும் முதல்வன்
மெய்அலால் மற்றவை மெய்அல எல்லாம்
பொய்என அறிஎனப் புன்னகை புரிந்தோன்
அருளும் பொருளும் அபேதமாய் இருந்தும்
இருதிறன் என்னும் இயலும்உண்டு என்றோன்

அருள்உனக்கு உண்டேல் அருளும் வெளிப்படும்
பொருள்மயம் தானே பொருந்தும்என்று உரைத்தோன்
சத்துஅசத்து இரண்டு தன்மையும் தானே
ஒத்தலால் சதசத்து உனக்குஎன உரைத்தோன்
ஆணவம் அறாவிடின் அருள்உறாது என்னக்

காணரு நேர்மையால் காணவே உரைத்தோன்
ஜென்மம்உள் ளளவும் தீராது இழுக்கும்
கன்மம் விடாதுஎனக் காட்டிய வள்ளல்
உளதுஇலது எனவும் உறுதலால் மாயை
வளம்இலது எனவும் வகுத்துஇனிது உரைத்தோன்

இல்லறத்து இருந்தும் இதயம் அடக்கிய
வல்லவன் தானே மகாயோகி என்றோன்
துறவறத்து இருந்தும் சூழ்மனக் குரங்குஒன்று
அறவகை அறியான் அஞ்ஞானி என்றோன்
இறவா மனம்தான் இறக்க உணர்த்திப்

பிறவா வரம்தரும் பேரறி வாளன்
அத்தனது அருளால் அனைத்தையும் இயக்கும்
சுத்தமா மாயையின் தோற்றம்என்று உரைத்தோன்
இருள்மலம் அகல இசைந்துஅதில் அழுந்தும்
பொருள்அருள் திரோதைப் பொற்புஎனப் புகன்றோன்

Koviloor Digital Library



வீறு சிவம்முதல் விளம்பிய படியே
ஆறும் அநாதிஎன்று அறிஞருக்கு உரைப்போன்
கொல்லா விரதம் குவலயத் தோர்கள்
எல்லாம் பெறுமின்என்று இயம்பிய தயாநிதி
தருமமும் தானமும் தவமும் புரிபவர்க்கு

உரிமையாய் அவரோடு உறவு கலப்பவன்
தன்உயிர் போலத் தரணியில் மருவிய
மன்உயிர் அனைத்தையும் வளர்த்திடும் வேந்தன்
களவுவஞ் சனைகள்செய் கருமிகள் தமக்கும்
தெளிவுவந்து உறஅருள் செய்திடும் திறத்தோன்

தான்பெறும் பேறு ஜகம்எலாம் பெறவே
வான்பெருங் கருணை வழங்கிய மாரி
தஞ்சம்என்று அடைந்த தாபதர் தம்மை
அஞ்சல்என்று ஆளும் அறிஞர் சிகாமணி
ஜீவ கோடிகளும் சித்தர் கோடிகளும்

யாவரும் புகழ யாவையும் உணர்ந்தோன்
யான்எனது என்னா இறைவன்எம் பெருமான்
நான்அவன் ஆகிய தலைவன்எம் கோமான்
அருண கிரியார்க்கு ஆறு முகன்சொலும்
பொருள்நலம் அல்லது பொருள்என மதியான்

பூதம் முதலாப் பொலிந்திடும் நாத
பேதமும் கடந்த பெருந்தகை மூர்த்தி
மூலா தார முதலாய் உள்ள
மேல்ஆ தாரமும் வெறுவெளி கண்டவன்
மண்டலம் மூன்றிலும் மன்னிய உருவிலும்.

கண்டவை யத்திலும் கடவுளாய் நின்றோன்
பகர்சம யம்தொறும் பரமே இருந்து
சுகநடம் புரியும் தொழில்எனச் சொன்னோன்
பேத அபேத பேதா பேத
போதம் இதுஎனப் புகன்றிடும் புண்ணியன்

அதுநான் எனவே ஆற்றிடும் அனுபவம்
சதுர்வே தாந்தத் தன்மைஎன்று உரைத்தோன்

Koviloor Digital Library



அல்லும் பகலும் அறிவுஆ னோர்க்குச்
சொல்லும் பொருளும் சுமைஎனச் சொன்னோன்
சுதனே குருஆம் சுவாமிநா யகற்குஎனின்

அதிகமெய்ஞ் ஞானம் அல்லவோ என்றோன்
நேசயோ கத்துறு நிருபர்எல் லாம்தொழும்
இராஜயோ கத்துஇறை இராஜ யோகத்தான்
பொறுமை தெளிவு புனித ஆசாரம்
மறுஇலா வண்மை வாரம் இயற்கை

தண்அமர் சாந்தம் தயங்கிய கீர்த்தி
எண்ணெண் கலைபயில் இணையிலாக் கல்வி
நல்ல இரக்கம் நடுநிலை சத்தியம்
இல்லை என்னாமல் எவர்க்கும் தரும்கொடை
நற்குணம் எல்லாம் நண்ணிய பெருந்தகை

சிற்குண வாதி திருஅருள் செல்வன்
கரம்மேல் எடுத்துக் கருத்துஉற வணங்கிப்
பரமே உனக்குப் பரம்எனப் பகர்ந்தோன்
ஆல்அடி மேவும் அரசினை அடுத்தே
சீலமெய்ஞ் ஞானம் தெளிந்தனன் எனவும்

சித்த மவுனி திடசித்தம் ஆக
வைத்த நிலையில்வளர்ந்தனன் எனவும்
மூலன் மரபில் முளைத்த மவுனிதன்
பாலன்யான் எனவும் பரிவொடும் பகர்ந்தோன்
வடமொழி இயற்கையின் மகிமையை உணர்ந்து

திடம்உற முப்பொருள் திறத்தையும் தெளிந்து
கண்டுஅமுது என்னக் கனிரசம் என்னத்
தண்தமிழ் மாரி தன்னைப் பொழிந்து
சித்தியும் முத்தியும் சிறந்துஅருள் கொழிக்கும்
நித்திய நிரஞ்சன நிராலம்ப நிறைவைப்

பாடியும் நாடியும் பணிந்துஎழுந்து அன்பால்
ஆடியும் அரற்றியும் அகம்குழைவு எய்தியும்
உடலம் குழைய உரோமம் சிலிர்ப்பப்
படபடென்று உள்ளம் பதைத்துப் பதைத்துப்
பாங்குஉறு நெட்டுயிர்ப்பு ஆகிப் பரதவித்து

Koviloor Digital Library



ஏங்கி ஏங்கி இரங்கி இரங்கி
ஒய்ந்த பம்பரம்போல் ஒடுங்கியே சிறிதும்
ஏய்ந்த விழிகள் இமைப்பதும் இன்றிச்
சோர்ந்து சோர்ந்து துவண்டு துவண்டுமெய்
ஆர்ந்த அன்போடு அவசம்உற்று அடிக்கடி

உள்நடுக்கு உறவே உருகியே சற்றுத்
தண்அமர் மொழியும் தழுதழுத் திடவே
உள்ளும் புறம்பும் ஒருமித்து உருகி
வெள்ள நீர்போல் விழிநீர் பெருகிக்
கன்று பசுவைக் கருதிக் கதறிச்

சென்றுசென்று ஓடித் திகைப்பது போல
என்புநெக்கு உடைய இருகரம் குவித்துப்
புன்புலால் யாக்கை பொருந்தாது இனிஎன
உணர்ந்துஉணர்ந்து அன்பாய் உவகைமேற் கொண்டுஇனிக்
கண்ணம்பிரி யேன்எனக் கருதியே குறித்துத்

திருஉரு எல்லாம் திருநீறு இலங்க
இருகர நளினம் இயல்முடி குவித்துப்
பூரண சந்திரன் போல்ஒளி காட்டும்
காரண வதனம் கவின்குறு வெயர்வுஉற
இளநிலா எனவே இலங்கிய சிறுநகை

தளதள என்னத் தயங்கி எழில்பெற
இத்தன்மை எல்லாம் இசைந்து இவன்அருள்
சித்துஎனச் சிவகதி தேர்ந்தவர் உரைப்பப்
பாத்திரம் ஆடப் பரிவுடன் ஆடிச்
சாத்திரம் காட்டித் தயவுசெய்து அருளும்

வல்லவன் எனவே மன்உயிர்க்கு ஆக
எல்லைஇல் அன்பன் இவன்என விளங்கி
ஈன உலகத்து இயற்கைபொய் என்றே
ஞானநூல் மெய்என நவின்றுஇனிது இரங்கிக்
கேவல சகலம் கீழ்ப்பட மேலாய்

மேவரும் சுத்த மெய்யினை நல்க
அருளே உருவுகொண்டு அவனியில் வந்த

Koviloor Digital Library



பொருளே இவன்எனப் பொலிந்திடும் புனிதன்
சைவம் சிவனுடன் சம்பந்தம் என்பது
மெய்வளர் ஞானம் விளக்கும்என்று இசைத்தோன்

கதிர்விழி ஒளிஉறக் கலத்தல் சித்தாந்த
விதிமுறை ஆமஎன வாளமபாய மெமலான
முடிவினில் ஆகம முறைமையின் உண்மையை
அடியரைக் குறித்துஉரைத்து அருளிய அண்ணல்
சிதம்பர நேர்மை திறமா உரைத்துஇறை

பதம்பரவு எனப்பகர் பரமமெய்ஞ் ஞானி
முக்திபஞ் சாக்ஷர முறைமையில் அயிக்கியம்
சத்தியம் இதுஎனச் சார்ந்தவர்க்கு உரைத்தோன்
அஞ்சுஎழுத்து உள்ளே அனைத்தையும் காட்டிஎன்
நெஞ்சுஅழுத் தியகுரு நீதி மாதவன்

எல்லாம் நிறைந்த இறைவன் செயல்எனக்
கல்லா எனக்கும் கருணைசெய் கடவுள்
குருஅரு ளாலே கூடுவது அல்லால்
திருஅருள் உறாதுஎனத் தெரிந்திட உரைத்தோன்
குருஉரு அருள்எனக் கொண்டபின் குறையாப்

பொருள்மயம் ஆம்எனப் புகன்றிடு போதன்
எந்தமூர்த் திகளையும் எழில்குரு வடிவுஎனச்
சிந்தையில் தியக்குஅறத் தேர்ந்தவர்க்கு உரைத்தோன்
சதாசிவம் என்றபேர் தான்படைத் ததுதான்
எதுஆவதே பொருள்என்று எடுத்துஎடுத்து உரைத்தோன்

கல்ஆனை கன்னல் கவர்ந்திடச் செய்தவன்
எல்லாம் வல்லசித்து எம்இறை என்றோன்
எவ்உயிர் தோறும் இறைமே வியதிறம்
செவ்விய பிரம்புஅடி செப்பிடும் என்றோன்
எவ்வண்ணம் எவர்எவர் இசைத்தனர் அவர்அவர்க்கு

அவ்வணம் ஆவன்எம் மான்என அறைந்தோன்
ஒருபாண னுக்கே ஒருசிவன் ஆட்படின்
வரும்அடி யார்திறம் வழுத்தொணாது என்றோன்
சிவன்அடி யாரைச் சிவன்எனக் காண்பவன்
எவன்அவன் சிவனே என்றுஎடுத்து உரைத்தோன்

Koviloor Digital Library



விருப்பு வெறுப்பினை வேர்அறப் பறித்துக்
கருப்புகாது என்னைக் காத்துஅருள் செய்தோன்
இருசொல் உரையாது யான்இன்பம் எய்த
ஒருசொல் உரைத்த உயர்குண பூதரன்
அத்துவா மார்க்கம் ஆறையும் அகற்றித்

தத்துவா தீதத் தன்மையைத் தந்தோன்
திருமகள் மருவிய திகழ்வள மறைசையில்
வரும்உணர் வாளன் மருள்இலா மனத்தான்
எண்ணிய எண்ணம்எல் லாம்தெரிந்து எனக்குத்
தண்அருள் செய்தவன் தாயு மானவன்

ஒருமொழி பகர்ந்த உதவியால் அவன்தன்
இருபதம் முப்போது இறைஞ்சிவாழ்த் துவனே.

## தாயுமானவர் வாழ்த்து

என்றும் இருக்க உளம்கொண்டாய்
இன்பத் தமிழுக்(கு) இலக்கியமாய்;
இன்றும் இருத்தல் செய்கின்றாய்;
இறவாய்; தமிழோ(டு) இருப்பாய்நீ;
'ஒன்று பொருள்,அஃ(து) இன்பம்'என
உணர்ந்தாய் தாயு மானவனே!
நின்ற பரத்து மாத்திரமோ?
நில்லா இகத்தும் நிற்பாய்நீ.

- சி. சுப்பிரமணிய பாரதியார்

Koviloor Digital Library

# தாயுமானவர் பாடல்கள்

## 1. திருவருள்விலாசப் பரசிவ வணக்கம்

### பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அங்குஇங்கு எனாதபடி எங்கும் ப்ரகாசமாய்,
ஆனந்த பூர்த்திஆகி,
அருளொடு நிறைந்ததுஎது? தன்அருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடிஎல்லாம்

தங்கும் படிக்குஇச்சை வைத்து,உயிர்க்கு உயிராய்த்
தழைத்தது எது? மனவாக்கினில்
தட்டாமல் நின்றதுஎது? சமயகோ டிகள்எலாம்
தம்தெய்வம் எம்தெய்வம்என்று

எங்கும் தொடர்ந்துஎதிர் வழக்குஇடவும் நின்றதுஎது?
எங்கணும் பெருவழக்காய்,
யாதினும் வல்லஒரு சித்துஆகி,இன்பமாய்,
என்றைக்கும் உள்ளதுஎது?மேல்

கங்குல்பகல் அறநின்ற எல்லைஉளது எது?அது
கருத்திற்கு இசைந்ததுஅதுவே;
கண்டன எலாம்மோன உருவெளியது ஆகவும்
கருதிஅஞ் சலிசெய்குவாம். 1

ஊர்அனந் தம்;பெற்ற பேர்அனந் தம்;சுற்றும்
உறவுஅனந் தம்;வினையினால்
உடல்அனந் தம்;செய்யும் வினைஅனந் தம்;கருத்
தோஅனந் தம்;பெற்றபேர்
சீர்அனந் தம்சொர்க்க நரகமும் அனந்தம்;நல்
தெய்வமும் அனந்தம்;பேதம்
நிகழ்கின்ற சமயமும் அனந்தம்; அத னால்ஞான
சிற்சக்தி யால்உணர்ந்து,

---

1. கங்குல் – இரவு.

Koviloor Digital Library



கார்அனந் தம்கோடி வருஷித்தது எனஅன்பர்
கண்ணும்விண் ணும்தேக்கவே,
கருதரிய ஆனந்த மழைபொழியும் முகிலை;நம்
கடவுளைத், துரியவடிவைப்,

பேர்அனந் தம்பேசி மறைஅனந் தம்சொலும்
பெரியமௌ னத்தின்வைப்பைப்,
பேசரும் அனந்தபத ஞான ஆனந்தம்ஆம்
பெரியபொரு ளைப்பணிகுவாம். 2

அத்வைத வஸ்துவைச், சொல்பிரகா சத்தனியை,
அருமறைகள் முரசுஅறையவே
அறிவினுக்கு அறிவுஆகி, ஆனந்த மயம்ஆன
ஆதியை, அநாதிஏக

தத்துவ சொரூபத்தை, மதசம்ம தம்பெறாச்
சாலம்ப ரகிதம்ஆன
சாசுவத புஷ்கல நிராலம்ப ஆலம்ப
சாந்தபத வ்யோமநிலையை,

---

2. கார் அனந்தம் – கரிய மேகக்கூட்டம். வருஷித்தது என் – மழை பொழிந்தது போல. துரியவடிவை – துரிய வடிவத்தை. 3. ஆதியை – உலகுக்கு மூலப்பொருளை. அநாதி – தான் எதிலிருந்தும் தோன்றி வராத பொருள். சாலம்ப ரகிதம் – பற்றுக்கோடு இல்லாதது. சாசுவதம் – யாண்டும் இருப்பது. புஷ்கலம் – நிறைவு. நிராலம்ப ஆலம்பம் – தனக்கு ஆதரவு தேவை இல்லாதது எனினும், உலகுக்கு ஆதரவாக இருப்பது. வ்யோமம் – வெட்டவெளி. நித்தம் – யாண்டும் இருப்பது. நிர்மலம் – அழுக்கற்றது. நிஷ்ப்ரபஞ்சப் பொருளை – உலகுக்கு அப்பாற்பட்ட பொருளை. நிர்விஷயம் – புலப்படாதது. நிர்விகாரம் – வடிவெடுக்காதது. தடஸ்தம் – படைத்தல், காத்தல், துடைத்தல் ஆகிய மூவிதச் செயல்கள் மூலம் தன்னை விளக்கும் பொருள். நிரஞ்சனம் – குற்றமற்றது. நிராமயத்தை – பழுதுபடாததை.

Koviloor Digital Library



நித்தநிர் மலசகித நிஷ்ப்ரபஞ் சப்பொருளை,
நிர்விஷய சுத்தம்ஆன
நிர்விகா ரத்தைத், தடஸ்தமாய் நின்று ஒளிர்
நிரஞ்சன நிராமயத்தைச்,

சித்தம்அறி யாதபடி சித்தத்தில் நின்றுஇலகு
திவ்யதே ஜோமயத்தைச்,
சிற்பர வெளிக்குள்வளர் தற்பரமது ஆனபர
தேவதையை அஞ்சலிசெய்வாம். 3

## 2. பரிபூரணானந்தம்

வாசா கயிங்கரியம் அன்றிஒரு சாதனம்
மனோவாயு நிற்கும்வண்ணம்
வாலாயம் ஆகவும் பழகிஅறி யேன்;துறவு
மார்க்கத்தின் இச்சைபோல
நேசானு சாரியாய் விவகரிப் பேன்;அந்த
நினைவையும் மறந்தபோது
நித்திரைகொள் வேன்;தேகம் நீங்கும்என எண்ணிலோ
நெஞ்சம் துடித்து அயருவேன்;
பேசாத ஆனந்த நிஷ்டைக்கும் அறிவுஇலாப்
பேதைக்கும் வெகுதூரமே;
பேய்க்குணம் அறிந்து இந்த நாய்க்கும்ஒரு வழிபெரிய
பேரின்ப நிஷ்டைஅருள்வாய்;
பாசா டவிக்குளே செல்லா தவர்க்குஅருள்
பழுத்துஒழுகு தேவதருவே!
பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கம்அற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே! 1

1. கயிங்கரியம்—மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களால் செய்யப்படும் பணிவிடைகளுள் எளிதில் அமைவது வெறும் வாய்ப்பேச்சுக் கயிங்கரியம். மனோவாயு – மனமும் பிராணனும். வாலாயம் ஆகவும் – படிப்படியாகவும். நேசானுசாரியாய் – (நேச + அனுசாரியாய்) அவரவர் பாங்கிற்கு ஏற்ப. பாசாடவி – (பாச + அடவி) ஆசைக் காடு. தேவதரு – கல்பக மரம்.

Koviloor Digital Library



தெரிவாக ஊர்வன நடப்பன பறப்பன
செயல்கொண்டு இருப்பனமுதல்
தேகங்கள் அத்தனையும் மோகம்கொள் பௌதிகம்
ஜென்மித்த ஆங்குஇறக்கும்;

விரிவாய பூதங்கள் ஒன்றோடுஒன் றாய்அழியும்
மேல்கொண்ட சேஷம்அதுவே;
வெறுவெளி; நிராலம்பம்; நிறைசூன்யம்; உபசாந்த
வேதவே தாந்தஞானம்;

பிரியாத பேரொளி பிறக்கின்ற அருள்;அருள்
பெற்றோர்கள் பெற்றபெருமை;
பிறவாமை என்றைக்கும் இறவாமை யாய்வந்து
பேசாமை ஆகும்,எனவே

பரிவாய் எனக்குநீ அறிவிக்க வந்ததே
பரிபாக காலம் அலவோ?
பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கம்அற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே! 2

ஆராயும் வேளையில் பிரமாதி ஆனாலும்
ஐய!ஒரு செயலும்இல்லை;
அமைதியொடு பேசாத பெருமைபெறு குணசந்த்ரர்
ஆம்என இருந்தபேரும்
நேராக ஒருகோபம் ஒருவேளை வரஅந்த
நிறைவுஒன்றும் இல்லாமலே
நெட்டுயிர்த் துத்தட்டு அழிந்துஉளறு வார்;வசன
நிர்வாகர் என்றபேரும்

2. சேஷம் – எஞ்சியிருக்கும் பொருள். நிராலம்பம் – பற்றுக்கோடற்றது.

3. குணசந்த்ரர் – நற்குணம் நிறைந்தவர். நெட்டுயிர்த்து – பெருமூச்சுவிட்டு. தட்டு அழிந்து – நிலை குலைந்து. பூராயமாய் – பொருத்தமாய். விரதியரும் – விரதம் பூண்டிருப்பவரும்.

Koviloor Digital Library



பூராய மாய்ஒன்று பேசும்இடம் ஒன்றைப்
புலம்புவார்; சிவராத்திரிப்
போதுதுயி லோம்என்ற விரதியரும் அறிதுயில்
போலேஇருந்து துயில்வார்;

பாராதி தனில்உள்ள செயல்எலாம் முடிவிலே
பார்க்கில்நின் செயல்அல்லவோ?
பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கம்அற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே! 3

அண்டபகி ரண்டமும் மாயா விகாரமே;
அம்மாயை இல்லாமையே
ஆம்எனவும் அறிவும்உண்டு; அப்பாலும் அறிகின்ற
அறிவினை அறிந்துபார்க்கின்,

எண்திசை விளக்கும்ஒரு தெய்வஅருள் அல்லாமல்
இல்லைஎனும் நினைவும்உண்டு;இங்கு
யான்எனது அறத்,துரிய நிறைவுஆகி நிற்பதே
இன்பம்எனும் அன்பும்உண்டு;

கண்டன எலாம்அல்ல என்றுகண் டனைசெய்து
கருவிகர ணங்கள்ஓயக்,
கண்மூடி ஒருகணம் இருக்கவென் றால்பாழ்த்த
கர்மங்கள் போர்ஆடுதே;

பண்டைஉள கர்மமே கர்த்தா எனும்பெயர்ப்
பக்ஷம்நான் இச்சிப்பனோ?
பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கம்அற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே! 4

---

4. துரியநிறைவு – பண்பு நிறைநிலை. கண்டன எலாம் – ஐம்பொறிகளுக்கு எட்டுபவை யாவும்.

Koviloor Digital Library



சந்ததமும் எனதுசெயல் நினதுசெயல், யான்எனும்
தன்மைநினை அன்றிஇல்லாத்
தன்மையால் வேறுஅலேன்; வேதாந்த சித்தாந்த
சமரச சுபாவம்இதுவே;

இந்தநிலை தெளியநான் நெக்குஉருகி வாடிய
இயற்கைதிரு உளம்அறியுமே;
இந்நிலையி லேசற்று இருக்கஎன் றால்மடமை
ஹிதசத்ரு ஆகவந்து

சிந்தைகுடி கொள்ளுதே; மலமாயை கர்மம்
திரும்புமோ? தொடுவழக்காய்
ஜென்மம்வரு மோ?எனவும் யோசிக்கு தேமனது;
சிரத்தைஎனும் வாளும்உதவிப்,

பந்தம்அற மெய்ஞ்ஞான தீரமும் தந்து,எனைப்
பாதுகாத்து அருள்செய்குவாய்;
பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கம்அற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே! 5

பூதலயம் ஆகின்ற மாயைமுதல் என்பர்சிலர்;
பொறிபுலன் அடங்கும்இடமே
பொருள்என்பர் சிலர்;கரண முடிவுஎன்பர் சிலர்;குணம்
போனஇடம் என்பர்சிலபேர்;

நாதவடிவு என்பர்சிலர்; விந்துமயம் என்பர்சிலர்;
நட்டநடு வேஇருந்த
நாம்என்பர் சிலர்;உருவம் ஆம்என்பர் சிலர்;கருதி
நாடில்அரு என்பர்சிலபேர்;

---

5. சந்ததமும் – எப்பொழுதும். ஹிதசத்ரு – நண்பன் போன்று காட்டிக்கொள்ளும் எதிரி.

6. பேதம் அற – வேறுபாடுகள் ஒழிய. சூனியமது – ஒன்றுமில்லாதது. சூனியம் + அது; அது பகுதிப் பொருள் விகுதி.

Koviloor Digital Library



பேதம்அற உயிர்கெட்ட நிலையம்என் றிடுவர்சிலர்;
பேசில்அருள் என்பர்சிலபேர்;
பின்னும்முன் னும்கெட்ட சூனியமது என்பர்சிலர்;
பிறவுமே மொழிவர்; இவையால்

பாதரச மாய்மனது சஞ்சலப் படும்அலால்
பரமசுக நிஷ்டைபெறுமோ?
பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கம்அற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே! 6

அந்தகா ரத்தைஓர் அகம்ஆக்கி, மின்போல்என்
அறிவைச் சுருக்கினவர்ஆர்?
அவ்வறிவு தானுமே பற்றினது பற்றாய்
அழுந்தவும் தலைமீதிலே

சொந்தமாய் எழுதப் படித்ததுஆர்? மெய்ஞ்ஞான
சுகநிஷ்டை சேராமலே,
சோற்றுத் துருத்தியைச் சதமெனவும் உண்டுஉண்டு
தூங்கவைத் தவர்ஆர்கொலோ?

தந்தைதாய் முதலான அகிலப்ர பஞ்சம்
தனைத்தந்தது எனதுஆசையோ?
தன்னையே நோவனோ! பிறரையே நோவனோ!
தற்காலம் அதைநோவனோ!
பந்தம்ஆ னதுதந்த வினையையே நோவனோ!
பரமார்த்தம் ஏதும்அறியேன்;
பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கம்அற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே! 7

வாராது எலாம்ஒழிய, வருவன எலாம்எய்த,
மனதுசாட் சியதுஆகவே
மருவநிலை தந்ததும்; வேதாந்த சித்தாந்த
மரபுசம ரசம்ஆகவே

7. அந்தகாரத்தை—இருளை. சுகநிஷ்டை—சமாதி. அகில ப்ரபஞ்சம்—தோற்றத்திற்கு வந்துள்ள உலகம் முழுவதும்.

Koviloor Digital Library



பூராய மாய்உணர ஊகம்அது தந்ததும்;
பொய்உடலை நிலைஅன்றுஎனப்
போதநெறி தந்ததும்; சாசுவத ஆனந்த
போகமே வீடுஎன்னவே

நீராள மாய்உருக உள்அன்பு தந்ததும்
நின்னதுஅருள்; இன்னும்இன்னும்
நின்னையே துணைஎன்ற என்னையே காக்கஒரு
நினைவுசற்று உண்டாகிலோ,

பாராதி அறியாத மோனமே இடைவிடாப்
பற்றாக நிற்கஅருள்வாய்;
பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கம்அற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே! 8

ஆழ்ஆழி கரைஇன்றி நிற்கஇலை யோ? கொடிய
ஆலம்அமுது ஆகஇலையோ?
அக்கடலின் மீதுவட அனல்நிற்க இல்லையோ?
அந்தரத்து அகிலகோடி

தாழாமல் நிலைநிற்க இல்லையோ? மேருவும்
தனுவாக வளையஇலையோ?
சப்தமே கங்களும் வஜ்ரதரன் ஆணையில்
சஞ்சரித்திட இல்லையோ?

வாழாது வாழவே இராமன்அடி யால்சிலையும்
மடமங்கை ஆகஇலையோ?
மணிமந்த்ரம் ஆதியால் வேண்டுசித் திகள்உலக
மார்க்கத்தில் வைக்கஇலையோ?

---

8. போதநெறி – ஞான மார்க்கம். நீராளமாய் – நீரின் பாங்கிற்கு ஒப்ப. 9. ஆழ் ஆழி – ஆழமான கடல். வடஅனல் – கடலில் எழுந்த வடவைத் தீ. சிலையும் – கல்லும். மடமங்கை – அகலிகை. மணிமந்த்ரம் – மந்திர சக்தியால் கட்டப்பட்ட பாதரசம்.

Koviloor Digital Library



பாழான என்மனம் குவியஒரு தந்திரம்
பண்ணுவது உனக்கு அருமையோ?
பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கம்அற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே! 9

ஆசைக்குஓர் அளவுஇல்லை அகிலம்எல் லாம்கட்டி
ஆளினும் கடல்மீதிலே
ஆணைசெல வேநினைவர்; அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்தபேரும்

நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர்;
நெடுநாள் இருந்தபேரும்
நிலையாக வேஇன்னும் காயகற் பம்தேடி
நெஞ்சுபுண் ஆவர்;எல்லாம்

யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவதும் ஆகமுடியும்;
உள்ளதே போதும்நான் நான்எனக் குளறியே
ஒன்றைவிட்டு ஒன்றுபற்றிப்

பாசக் கடற்குளே வீழாமல் மனதுஅற்ற
பரிசுத்த நிலையைஅருள்வாய்;
பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கம்அற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே! 10

---

10. ரசவாத வித்தைக்கு - தாமிரத்தைத் தங்கமாக்கும் கலை. காயகற்பம் - உடல் அழிந்து போகாது செய்யும் மருந்து.

Koviloor Digital Library



## 3. பொருள் வணக்கம்

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

நித்தியமாய்; நிர்மலமாய்; நிஷ்களமாய்;
நிராமயமாய்; நிறைவாய்; நீங்காச்

சுத்தமுமாய்த்; தூரமுமாய்ச்; சமீபமுமாய்த்;
துரியநிறை சுடராய்; எல்லாம்

வைத்துஇருந்த தாரகமாய்; ஆனந்த
மயம்ஆகி, மனம்வாக்கு எட்டாச்

சித்துஉருவாய் நின்றஒன்றைச்; சுகாரம்பப்
பெருவெளியைச் சிந்தை செய்வாம். 1

யாதுமனம் நினையும்அந்த நினைவுக்கு
நினைவுஆகி; யாதின் பாலும்

பேதம்அற நின்றுஉயிருக்கு உயிர்ஆகி;
அன்பருக்கே பேரா னந்தக்

கோதுஇல்அமுது ஊற்றுஅரும்பிக், குணம்குறிஒன்று
அறத்தன்னைக் கொடுத்துக் காட்டும்

தீதுஇல்பரா பரம்ஆன சித்தாந்தப்
பேரொளியைச் சிந்தை செய்வாம். 2

பெருவெளியாய்; ஐம்பூதம் பிறப்புஇடமாய்ப்;
பேசாத பெரிய மோனம்

வரும்இடமாய்; மனம்ஆதிக்கு எட்டாத
பேரின்ப மயமாய்; ஞானக்

குருஅருளால் காட்டிடவும் அன்பரைக்கோத்து
அறவிழுங்கிக் கொண்டு,அப் பாலும்

---

1. நிஷ்களமாய் – உருவம் இல்லையாய். நிராமயமாய் – குறையின்மையாய். தாரகமாய் – நிலைக்களமாய்.

Koviloor Digital Library



தெரிவுஅரிதாய்க் கலந்ததுஎந்தப் பொருள்? அந்தப்
பொருளினையாம் சிந்தை செய்வாம். 3

இகபரமும் உயிர்க்குஉயிரை; யான்எனதுஅற்
றவர்உறவை; எந்த நாளும்

சுகபரிபூ ரணமான நிராலம்ப
கோசரத்தைத்; துரிய வாழ்வை;

அகம்மகிழ வரும்தேனை; முக்கனியைக்;
கற்கண்டை; அமிர்தை நாடி,

மொகுமொகுஎன இருவிழிநீர் முத்துஇறைப்பக்
கரமலர்கள் முகிழ்த்து நிற்பாம். 4

ஜாதி,குலம், பிறப்புஇறப்புப், பந்தம்முக்தி,
அருஉருவத் தன்மை, நாமம்

ஏதும்இன்றி; எப்பொருட்கும் எவ்விடத்தும்
பிரிவுஅறநின்று இயக்கம் செய்யும்

ஜோதியை;மாத் தூவெளியை; மனதுஅவிழ
நிறைவான துரிய வாழ்வைத்;

தீதுஇல்பரம் ஆம்பொருளைத் திருஅருளே
நினைவுஆகச் சிந்தை செய்வாம். 5

இந்திரஜா லம்,கனவு, கானலின்நீர்
எனஉலகம் எமக்குத் தோன்றச்;

சந்ததமும் சிற்பரத்தால் அழியாத
தற்பரத்தைச் சார்ந்து வாழ்க!

4. நிராலம்ப கோசரத்தை – பற்றுக்கோடு இல்லாததாய் அமைந்திருக்கும் பொருளை. கரமலர்கள் முகிழ்த்து – கைகளாகிய மலர்களைக் குவித்து. 6. இந்திரஜாலம் – வெறுந்தோற்றம். சந்ததமும் – எப்பொழுதும். சிற்பரத்தால் – ஞான உறுதியினால். தற்பரத்தை – தன்னில் தானாக இருக்கும் பொருளை.

நா.3.

Koviloor Digital Library



புந்திமகிழ் உறநாளும் தடைஅறஆ
　　னந்தவெள்ளம் பொலிக! என்றே
வந்துஅருளும் குருமௌனி மலர்த்தாளை
　　அநுதினமும் வழுத்தல் செய்வாம். 6

பொருளாகக் கண்டபொருள் எவைக்கும்முதல்
　　பொருள்ஆகிப்; போதம்ஆகித்;
தெருள்ஆகிக்; கருதும்அன்பர் மிடிதீரப்
　　பருகவந்த செழுந்தேன் ஆகி;
அருள்ஆனோர்க்கு அகம்புறம்என்று உன்னாத
　　பூரணஆ னந்தம் ஆகி;
இருள்தீர விளங்குபொருள் யாது?அந்தப்
　　பொருளினையாம் இறைஞ்சி நிற்பாம். 7

அருமறையின் சிரப்பொருளாய்; விண்ணவர்,மா
　　முனிவர்,சித்தர் ஆதி ஆனோர்
தெரிவரிய பூரணமாய்; காரணமாய்,கற்
　　பனைகடந்த செல்வம் ஆகிக்;
கருதரிய மலரின்மணம், எள்ளில்எண்ணெய்,
　　உடல்உயிர்போல் கலந்துஎந் நாளும்
துரியநடு ஊடுஇருந்த பெரியபொருள்
　　யாது?அதனைத் தொழுதல் செய்வாம். 8

விண்ணாதி பூதம்எல்லாம் தன்அகத்தில்
　　அடக்கிவெறு வெளியாய்; ஞானக்
கண்ணாரக் கண்டஅன்பர் கண்ஊடே
　　ஆனந்தக் கடலாய்; வேறுஒன்று

---

6. குருமௌனி – மௌனகுரு.

7. போதம் ஆகி – ஆன்ம அனுபவம்ஆகி. தெருள்ஆகி – தெளிவு ஆகி. மிடி – வறுமை.

9. விண்ணாதி – வான் முதலான.

Koviloor Digital Library



எண்ணாத படிக்குஇரங்கித் தானாகச்
செய்துஅருளும் இறையே! உன்தன்
தண்ணாரும் சாந்தஅருள் தனைநினைந்து
கரமலர்கள் தலைமேல் கொள்வாம். 9

விண்நிறைந்த வெளியாய்;என் மனவெளியில்
கலந்து, அறிவாம் வெளியின் ஊடும்
தண்நிறைந்த பேரமுதாய்ச் சதானந்தம்
ஆனபெருந் தகையே! நின்பால்
உள்நிறைந்த பேரன்பால் உள்உருகி,
மொழிகுழறி, உவகை ஆகிக்,
கண்நிறைந்த புனல்உகுப்பக், கரம்முகிழ்ப்ப
நின்அருளைக் கருத்தில் வைப்பாம். 10

**எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

ஆதிஅந்தம் காட்டாத முதலாய்; எம்மை
அடிமைக்கா வளர்த்துஎடுத்த அன்னை போல
நீதிபெரும் குருஆகி; மனம்வாக்கு எட்டா
நிச்சயமாய்ச்; சொச்சமதாய்; நிமலம் ஆகி;
வாதம்இடும் சமயநெறிக்கு அரியது ஆகி;
மௌனத்தோர் பால்வெளியாய் வயங்கா நின்ற
ஜோதியை;என் உயிர்த்துணையை நாடிக் கண்ணீர்
சொரியஇரு கரம்குவித்துத் தொழுதல் செய்வாம். 11

அகரஉயிர் எழுத்துஅனைத்தும் ஆகி, வேறாய்
அமர்ந்ததுஎன அகிலாண்டம் அனைத்தும் ஆகிப்;

9. கரமலர்கள் – கைகளாகிய மலர்கள்.
10. கரம் முகிழ்ப்ப – கைகள் குவிய.

Koviloor Digital Library



கர்வனஎல் லாம்ஆகி; அல்லது ஆகிப்;
பரம்ஆகிச்; சொல்லரிய பான்மை ஆகித்;

துகள்அறுசங் கற்பவிகற் பங்கள் எல்லாம்
தோயாத அறிவுஆகிச்; சுத்தம் ஆகி;

நிகர்இல்பசு பதியான பொருளை நாடி
நெட்டுயிர்த்துப் பேரன்பால் நினைதல் செய்வாம். 12

## 4. சின்மயானந்தகுரு

### பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அங்கைகொடு மலர்தூவி அங்கமது புளகிப்ப,
அன்பினால் உருகி,விழிநீர்
ஆறாக, ஆராத முக்தியினது ஆவேச
ஆசைக் கடற்குள்மூழ்கிச்;

சங்கர! சுயம்புவே! சம்புவே! எனவும்மொழி
தழுதழுத் திடவணங்கும்
சன்மார்க்க நெறிஇலாத் துன்மார்க்க னேனையும்
தண்அருள் கொடுத்துஆள்வையோ?

துங்கமிகு பக்குவச் சனகன்முதல் முனிவோர்கள்
தொழுதுஅருகில் வீற்றிருப்பச்;
சொல்லரிய நெறியைஒரு சொல்லால் உணர்த்தியே
சொரூபஅநு பூதிகாட்டிச்,

செங்கமல பீடம்மேல் கல்ஆல் அடிக்குள்வளர்
சித்தாந்த முக்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே! 1

---

12. துகள்அறு – குற்றம் அற்ற. நிகர்இல் – ஒப்பற்ற. நெட்டுயிர்த்து – பெருமூச்சு விட்டு.

1. அங்கைகொடு – அழகிய கைகளால். துங்கமிகு – மேன்மை பொருந்திய. கல்ஆல் அடிக்குள் – இச்சி மரத்தடியில். சித்தாந்தம் – முடிவு செய்த பாதை. சிரகிரி – திருச்சிராப்பள்ளி.

Koviloor Digital Library



ஆக்கைஎனும் இடிகரையை மெய்என்ற பாவிநான்
அத்வைத வாஞ்சையாதல்
அரியகொம் பில்தேனை முடவன்இச் சித்தபடி
ஆகும்;அறிவு அவிழஇன்பம்

தாக்கும்வகை ஏது? இந்நாள் சரியைகிரி யாயோக
சாதனம் விடுத்ததுஎல்லாம்
சன்மார்க்கம் அல்ல;இவை நிற்க,என் மார்க்கங்கள்
சாராத பேரறிவதாய்,

வாக்குமனம் அணுகாத பூரணப் பொருள்வந்து
வாய்க்கும் படிக்குஉபாயம்
வருவித்து, உவட்டாத பேரின்பம் ஆனசுக
வாரியினை வாய்மடுத்துத்,

தேக்கித் திளைக்கநீ முன்நிற்பது என்றுகாண்?
சித்தாந்த முக்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே! 2

அவ்வியம் இருக்க,நான் என்கின்ற ஆணவம்
அடைந்திடடு இருக்க,லோபம்,
அருள்இன்மை கூடக் கலந்துஉள் இருக்க,மேல்
ஆசா பிசாசமுதலாம்

வெவ்விய குணம்பல இருக்க,என் அறிவூடு
மெய்யன்நீ வீற்றிருக்க
விதிஇல்லை என்னிலோ பூரணன் எனும்பெயர்
விரிக்கில்உரை வேறும்உளதோ?

---

2. இடிகரையை – வெள்ளத்தில் இடிகிற ஆற்றங் கரையை. அத்வைத வாஞ்சையாதல் – இரண்டற்ற நிலையில் விருப்பமுறல். உவட்டாத – தெவிட்டாத.

3. அவ்வியம் – பொறாமை. வெவ்விய குணம் – கீழான இயல்பு. விதிஇல்லை – பொருந்தாது.

Koviloor Digital Library



கவ்வுமலம் ஆகின்ற நாகபா சத்தினால்
கட்டுண்ட உயிர்கள்மூர்ச்சை
கடிதுஅகல வலியவரும் ஞானசஞ் சீவியே!
கதிஆன பூமிநடுவுள்
செவ்விதின் வளர்ந்துஓங்கு திவ்யகுண மேருவே!
சித்தாந்த முக்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே! 3

ஐவகை எனும்பூதம் ஆதியை வகுத்து,அதனுள்
அசரசர பேதம்ஆன
யாவையும் வகுத்து,நல் அறிவையும் வகுத்து,மறை
ஆதிநூ லையும்வகுத்துச்,
சைவமுதல் ஆம்அளவில் சமயமும் வகுத்து,மேல்
சமயம் கடந்தமோன
சமரசம் வகுத்தநீ உன்னையான் அணுகவும்
தண்அருள் வகுக்கஇலையோ?
பொய்வளரும் நெஞ்சினர்கள் காணாத காட்சியே!
பொய்இலா மெய்யர்அறிவில்
போதபரி பூரண அகண்டிதா காரமாய்ப்
போக்குவரவு அற்றபொருளே!
தெய்வமறை முடிவுஆன பிரணவ சொரூபியே!
சித்தாந்த முக்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே! 4

3. கவ்வு – பற்றுகிற. கதி – வீடுபேறு. பூமிநடுவுள் – உச்சந் தலையிலுள்ள சகஸ்ராரத்தில். செவ்விதின் – நன்றாக. திவ்ய குணமேருவே – தெய்விகமான நற்குணமலையே.

4. அசர சர பேதம் – அசையாதது அசைவது பற்றிய வேற்றுமை. போத பரிபூரணம் – ஆன்ம அனுபவ நிறைவு. அகண்டிதா காரமாய் – எல்லையில் அடங்காததாய். பிரணவ சொரூபியே – ஓங்கார மூர்த்தியே. சித்தாந்தம் – மனம் அற்றநிலை.

Koviloor Digital Library



ஐந்துவகை ஆகின்ற பூதபே தத்தினால்
ஆகின்ற ஆக்கை,நீர்மேல்
அமர்கின்ற குமிழிஎன நிற்கின்றது என்னநான்
அறியாத காலம்எல்லாம்

புந்திமகிழ் உறஉண்டு உடுத்துஇன்பம் ஆவதே
போந்தநெறி என்றுஇருந்தேன்;
பூராயம் ஆகநினது அருள்வந்து உணர்த்தஇவை
போனவழி தெரியவில்லை;

எந்தநிலை பேசினும் இணங்கவிலை; அல்லால்
இறப்பொடு பிறப்பைஉள்ளே
எண்ணினால் நெஞ்சது பகீரெனும்; துயில்உறாது
இருவிழியும் இரவுபகலாய்ச்

செந்தழலின் மெழுகானது அங்கம்;இவை என்கொலோ?
சித்தாந்த முக்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே! 5

காரிட்ட ஆணவக் கருஅறையில் அறிவுஅற்ற
கண்இலாக் குழவியைப்போல்
கட்டுண்டு இருந்தஎமை வெளியில்விட்டு, அல்லலாம்
காப்புஇட்டு அதற்குஇசைந்த

பேரிட்டு, மெய்என்று பேசுபாழ்ம் பொய்உடல்
பெலக்கவிளை அமுதம்ஊட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவரவு உறுகின்ற
பெரியவினை யாட்டுஅமைத்திட்டு,

5. புந்தி மகிழ் உற – மனம் இன்புற்றிருக்க. போந்த நெறி – வாய்த்துள்ள வாழ்க்கை முறை. பூராயம் ஆக – முற்றிலும். பகீரெனும் – அச்சம் மிகப் பூணும். துயில்உறாது – தூங்காது.

6. காரிட்ட – இருள் சூழ்ந்த. கருஅறையில் – கருப்பத்தில். பொய் உடல் – பாழாகிய நிலையற்ற உடல்.

Koviloor Digital Library



ஏரிட்ட தன்சுருதி மொழி தப்பில் நமனைவிட்டு
இடர்உறஉறுக்கி இடர்தீர்த்து,
இரவுபகல் இல்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்துதுயில் கொள்மின் என்று

சீரிட்ட உலகு அன்னை வடிவான எந்தையே!
சித்தாந்த முக்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே! 6

கருமருவு குகைஅனைய காயத்தின் நடுவுள்
களிம்புதோய் செம்புஅனையயான்
காண்தக இருக்க,நீ ஞானஅனல் மூட்டியே,
கனிவுபெற உள்உருக்கிப்,

பருவமது அறிந்து,நின் அருளான குளிகைகொடு
பரிசித்து, வேதிசெய்து,
பத்துமாற் றுத்தங்கம் ஆக்கியே பணிகொண்ட
பக்ஷத்தை என்சொல்லுகேன்?

அருமைபெறு புகழ்பெற்ற வேதாந்த சித்தாந்தம்
ஆதியாம் அந்தம்மீதும்;
அத்வைத நிலையராய் என்னைஆண்டு, உன்அடிமை
ஆனவர்கள் அறிவினூடும்;

---

6. பெலக்க – வளர. புவனத்தினிடை – உலகின்கண். ஏரிட்ட – அழகு பொருந்திய. சுருதிமொழி – வேதவாக்கு. இடர்உற – துன்பப்பட.

7. கருமருவு – கர்ப்பத்தில் பொருந்திய. களிம்புதோய் – அழுக்குப் படிந்த. கனிவுபெற – இள்கும்படி. குளிகை – மந்திர ஆற்றலோடு கூடிய மாத்திரை. பரிசித்து – தீண்டி. வேதி செய்து – மாற்றியமைத்து. பக்ஷத்தை – அன்பை. அத்வைத நிலையராய் – பூரணத்தை எட்டியவராகி. அறிவினூடும் – சமாதி நிலையிலும்.

Koviloor Digital Library



திருமருவு கல்லால் அடிக்கீழும் வளர்கின்ற
சித்தாந்த முக்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே! 7

கூடுதல் உடன்பிரிதல் அற்று, நிர்த் தொந்தமாய்[1]
குவிதல்உடன் விரிதல் அற்றுக்,
குணம்அற்று, வரவினொடு போக்குஅற்று, நிலைஆன
குறிஅற்று, மலமும்அற்று

நாடுதலும் அற்று,மேல் கீழ்நடுப் பக்கம்என
நண்ணுதலும் அற்று,விந்து
நாதம்அற்று, ஐவகைப் பூதபே தமும்அற்று,
ஞாதுருவின் ஞானம்அற்று,

வாடுதலும் அற்றுமேல் ஒன்றுஅற்று, இரண்டுஅற்று,
வாக்குஅற்று, மனமும்அற்று,
மன்னுபரி பூரணச் சுகவாரி தன்னிலே
வாய்மடுத்து உண்டு, அவசமாய்த்

தேடுதலும் அற்றஇடம் நிலைஎன்ற மௌனியே!
சித்தாந்த முக்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே! 8

தாராத அருள்எலாம் தந்துஅருள மௌனியாய்த்
தாய்அனைய கருணைகாட்டித்,

7. வளர்கின்ற – வீற்றிருக்கின்ற.

குறிப்பு: 1. அஞ்ஞான இருளில் ஆன்மா களிம்போடு கூடிய தாமிரத்துக்கு ஒப்பிடப்படுகிறது.

8. நிர்த்தொந்தமாய் – இரண்டற்றதாகி. ஞாதுருவின் – காண்போனுடைய. மன்னு – நிலைபெற்ற. சுகவாரி – இன்பக்கடல். வாய் மடுத்து – வாயினுள் போட்டு. அவசமாய் – பரபோதம் அடையப்பெற்று.

Koviloor Digital Library



தாள்இணைஎன் முடிசூட்டி, அறிவில் சமாதியே
சாசுவத சம்ப்ரதாயம்;

ஓராமல், மந்திரமும் உன்னாமல், முக்திநிலை
ஒன்றோடு இரண்டுஎனாமல்,
ஒளிஎனவும், வெளிஎனவும், உருஎனவும், நாதம்ஆம்
ஒலிஎனவும், உணர்வுஉறாமல்

பாராது பார்ப்பதே ஏதுசா தனம்அற்ற
பரமஅநு பூதிவாய்க்கும்
பண்புஎன்று; உணர்த்தியது பாராமல், அந்நிலை
பதிந்தநின் பழஅடியர்தம்

சீராய்இருக்க நினது அருள்வேண்டும் ஐயனே!
சித்தாந்த முக்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே! 9

போதமாய், ஆதிநடு அந்தமும் இலாததாய்ப்,
புனிதமாய், அவிகாரமாய்ப்,
போக்குவரவு இல்லாத இன்பமாய் நின்றநின்
பூரணம் புகல்இடமதா

ஆதரவு வையாமல், அறிவினை மறைப்பதுநின்
அருள்;பின்னும் அறிவுஇன்மைதீர்த்து
அறிவித்து நிற்பதுநின் அருள்;ஆகில் எளியனேற்கு
அறிவுஆவது ஏது? அறிவுஇலா

---

9. அறிவில் சமாதியே – சிற்றறிவு பேரறிவாகத் திகழ்வதே. அந்நிலை பதிந்த – நிர்விகல்ப சமாதியில் மூழ்கிய. சீராய் இருக்க – வீடுபேறு அடைந்திருக்க.

10. போதமாய் – ஞானவடிவாகி. புனிதமாய்– பரிசுத்தமாகி. அவிகாரமாய் – திரிவு படாமல். புகலிடமதா – வீடுபேறாக.

Koviloor Digital Library



ஏதம்வரு வகைஏது? வினைஏது? வினைதனக்கு
ஈடுஆன காயம்ஏது? என்
இச்சா சுதந்திரம் சிறிதும்இலை; இகபரம்
இரண்டினுள் மலைவுதீரத்
தீதுஇல்அருள் கொண்டுஇனி உணர்த்திஎனை
ஆள்வையோ?
சித்தாந்த முக்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே! 10

பக்திநெறி நிலைநின்றும், நவகண்ட பூமிப்
பரப்பைவலம் ஆகவந்தும்,
பரவையிடை மூழ்கியும், நதிகளிடை மூழ்கியும்,
பசிதாகம் இன்றி, எழுநா
மத்தியிடை நின்றும்,உதிர் சருகுபுனல் வாயுவினை
வன்பசி தனக்குஅடைத்து
மௌனத்து இருந்தும்,உயர் மலைநுழை தனில்புக்கும்
மன்னுதச நாடிமுற்றும்.
சுத்திசெய் தும்,மூலப் ராணனோடு அங்கியைச்
சோமவட் டத்துஅடைத்தும்,
சொல்அரிய அமுதுஉண்டும், அற்பஉடல் கற்பங்கள்
தோறும்நிலை நிற்கவீறு
சித்திசெய் தும்,ஞானம் அலதுகதி கூடுமோ?
சித்தாந்த முக்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே! 11

---

10. ஏதம் – குற்றம். மலைவு – மயக்கம்.

11. நவகண்டம் – ஒன்பது பிரிவுகள். பரவையிடை – கடலில். எழுநா – ஏழுநாவுடன் கூடிய தீ. மலை நுழை – மலைக்குகை. மன்னு – நிலைபெற்ற. தசநாடி – பத்துவித உயிர்நாடிகள்.

Koviloor Digital Library



## 5. மௌனகுரு வணக்கம்

ஆசைநிக ளத்தினை நிர்த்தூளி படஉதறி,
ஆங்கார முளையைஎற்றி,
அத்வைத மதம்ஆகி, மதம்ஆறும் ஆறுஆக
அங்கையின் விலாழிஆக்கிப்,

பாசஇருள் தன்நிழல் எனச்சுளித்து, ஆர்த்து,மேல்
பார்த்துப் பரந்தமனதைப்
பாரித்த கவளமாய்ப் பூரிக்க உண்டு, முக
படாம்அன்ன மாயைநூறித்,

தேசுபெற நீவைத்த சின்முத்தி ராங்குசச்
செங்கைக்கு உளேஅடக்கிச்,
சின்மயா னந்தசுக வெள்ளம் படிந்து,நின்
திருஅருள் பூர்த்திஆன

வாசம்உறு சற்சார மீதுஎன்னை ஒருஞான
மத்தகஜம் எனவளர்த்தாய்;
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே! 1

---

11. மூலப்ராணனோடு – மூலாதாரத்தில் உள்ள பிராண வாயுவுடன். அங்கியை – அக்கினியை. சோம வட்டத்து – சந்திர மண்டலத்தில். கற்பங்கள் – நெடுங்காலம். வீறு சித்தி – மேலான தெளிந்த ஆன்ம நிலை.

1. ஆசை நிகளத்தினை – ஆசையாகிய விலங்கை. ஆங்கார முளையை எற்றி – அகங்காரமாகிய முளையைப் பிடுங்கி எறிந்து. அங்கையின் விலாழி ஆக்கி – யானையின் அழகிய துதிக்கையின் உமிழ்நீர் ஆக்கி. சுளித்து – கோபித்து. பாரித்தகவளமாய் – பெரும் திண்டியாய். மாயை நூறி – மாயையின் தோற்றத்தை விலக்கி. வாசம்உறு – வசித்திருப்பதற்குத் தகுந்த. சற்சாரமீது – கூட்டத்தில். ஞானமத்தகஜம் – ஞானமாகிய மதம் பிடித்த யானை. மந்த்ரம் – இறைவனுடைய அருள்சக்தி வாய்ந்த பெயர். தந்த்ரம் – கையாளவேண்டிய உபாயம்.

Koviloor Digital Library



ஐந்துவகை ஆகின்ற பூதம்முதல் நாதமும்
அடங்கவெளி யாகவெளிசெய்து,
அறியாமை அறிவுஆதி பிரிவாக அறிவார்கள்
அறிவுஆக நின்றநிலையில்

சிந்தைஅற நில்என்று சும்மா இருத்தி,மேல்
சின்மயா னந்தவெள்ளம்
தேக்கித் திளைத்து,நான் அதுவாய் இருக்கநீ
செய்சித்ரம் மிகநன்றுகாண்;

எந்தைவட ஆல்பரம குருவாழ்க! வாழஅரு
ளியநந்தி மரபுவாழ்க!
என்றுஅடியர் மனம்மகிழ, வேதஆக மத்துணிபு
இரண்டுஇல்லை ஒன்றுஎன்னவே

வந்தகுரு வே!வீறு சிவஞான சித்திநெறி
மௌனஉப தேசகுருவே!
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே! 2

ஆதிக்கம் நல்கினவர் ஆர் இந்த மாயைக்கு?என்
அறிவுஅன்றி இடம்இல்லையோ?
அந்தரப் புஷ்பமும், கானலின் நீரும்,ஓர்
அவசரத்து உபயோகமோ?

போதித்த நிலையையும் மயக்குதே, அபயம்நான்
புக்கஅருள் தோற்றிடாமல்,
பொய்யான உலகத்தை மெய்யா நிறுத்தி,என்
புந்திக்குள் இந்த்ரஜாலம்

2. தேக்கித் திளைத்து – நிறைய அனுபவித்து. சித்ரம் – அமைப்பு. வடஆல் – இச்சிமரம். நந்திமரபு – நந்தியின் பரம்பரை. வீறு – மேலான. சிவஞான சித்தி – சிவஞான சித்தியார் என்னும் பெயர் தாங்கிய சைவநூல்.

3. அந்தரப்புஷ்பமும் – வானத்தில் பூப்போன்ற மயக்கக் காட்சியும். புக்க – புக. இந்த்ரஜாலம் – மயக்குவித்தை.

Koviloor Digital Library



சாதிக்கு தே, இதனை வெல்லவும் உபாயம்நீ
தந்துஅருள்வது என்றுபுகல்வாய்?
ஷண்மத ஸ்தாபனமும், வேதாந்த சித்தாந்த
சமரசநிர் வாகநிலையும்,

மாதிக்கொடு அண்டப் பரப்புஎலாம் அறியவே
வந்துஅருளும் ஞானகுருவே!
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே! 3

மின்அனைய பொய்உடலை நிலைஎன்றும்; மைஇலகு
விழிகொண்டு மையல்பூட்டும்
மின்னார்கள் இன்பமே மெய்என்றும்; வளர்மாட
மேல்வீடு சொர்க்கம் என்றும்;

பொன்னைஅழி யாதுவளர் பொருள்என்று; போற்றிஇப்
பொய்வேடம் மிகுதிகாட்டிப்;
பொறை,அறிவு, துறவு,ஈதல்,ஆதிநல் குணம்எலாம்
போக்கிலே போகவிட்டுத்;

தன்நிகரில் லோபாதி பாழ்ம்பேய் பிடித்திடத்
தரணிமிசை லோகாயதன்
சமயநடை சாராமல், வேதாந்த சித்தாந்த
சமரச சிவாநுபூதி

---

3. சாதிக்குதே – இல்லாததை இருப்பது போன்று காட்டுகிறதே. புகல்வாய் – சொல்லுவாய். ஷண்மத ஸ்தாபனமும் – சைவம், வைணவம், சாக்தம், காணபத்யம், கௌமாரம், சௌரம் ஆகிய ஆறு மதங்களுடைய நிலைபேறும். மா திக்கொடு - பெரிய திசைகளுடன்.

4. மைஇலகு – மை தீட்டிய. மையல் பூட்டும் – காமநுகர்ச்சியை வளர்க்கும். மின்னார்கள் – மாதர்கள். லோபாதி – பொருட்பற்று முதலிய. லோகாயதன் – உலகப்பற்றுடையவன். மன்ன – பொருந்தும்படி.

Koviloor Digital Library



மன்ன,ஒரு சொல்கொண்டு எனைத்தடுத்து
ஆண்டு,அன்பின்
வாழ்வித்த ஞானகுருவே!
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே! 4

போனகம் இருக்கின்ற சாலையிடை வேண்டுவ
புசித்தற்கு இருக்கும்அதுபோல்
புருஷர்பெறு தர்மாதி, வேதமுடன் ஆகமம்,
புகலும்அதி னால்ஆம்பயன்,

ஞானநெறி முக்யநெறி, காட்சிஅனு மானம்,முதல்
நானாவி தங்கள்தேர்ந்து;
நான்நான் எனக்குழறு படைபுடை பெயர்த்திடவும்
நான்குசா தனமும்ஓர்ந்திட்டு;

ஆனநெறி யாம்சரியை ஆதிசோ பானம்உற்று;
அணுபக்ஷம் சம்புபக்ஷம்
ஆம்இரு விகற்பமும், மாயாதி சேவையும்
அறிந்து;இரண்டு ஒன்றுஎன்னும்ஓர்

மானத விகற்பம்அற வென்றுநிற் பதுநமது
மரபுஎன்ற பரமகுருவே!
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே! 5

---

5. போனகம் – உணவு. தர்மாதி – அறம், பொருள், இன்பம், வீடு முதலான. புகலும் – புகட்டும். குழறுபடை – பிதற்றுவதை. நான்கு சாதனமும் – சரியை, கிரியை, யோகு, ஞானங்களும். சரியை – நல்லொழுக்கம். சோபானம் – படிப்படியாக வரும் சாதன முறை. அணுபக்ஷம் – ஆன்மா தானே பக்குவமடைதல். சம்புபக்ஷம் – திருவருளால் பக்குவமடைதல். விகற்பமும் – வேறுபாடுகளையும். மாயாதி சேவையும் – உலக வாழ்வு முதலியவைகளை நன்கு பயன்படுத்துதலும்.

Koviloor Digital Library



கல்லாத அறிவும்,மேல் கேளாத கேள்வியும்,
கருணைசிறிது ஏதும்இல்லாக்
காட்சியும், கொலைகளவு கள்காமம் மாட்சியாக்
காதலித் திடுநெஞ்சமும்,

பொல்லாத பொய்ம்மொழியும்; அலலாது நன்மைகள
பொருந்துகுணம் ஏதும்அறியேன்;
புருஷர்வடிவு ஆனதே அல்லாது கனவிலும்
புருஷார்த்தம் ஏதும்இல்லேன்;

எல்லாம் அறிந்தநீ அறியாதது அன்று,எனக்கு
எவ்வண்ணம் உய்வண்ணமோ?
இருளைஇருள் என்றவர்க்கு ஒளிதா . ம்;பெறும்
எனக்குநின் அருள்தாரகம்;

வல்லான் எனும்பெயர் உனக்குஉள்ள தே,இந்த
வஞ்சகனை ஆளநினையாய்;
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே! 6

கானகம் இலங்குபுலி பசுவொடு குலாவும்;நின்
கண்காண மதயானைநீ
கைகாட்ட வும்கையால் நெகிடிக்கு எனப்பெரிய
கட்டைமிக ஏந்திவருமே;

போனகம் அமைந்ததுஎன அக்காம தேனுநின்
பொன்அடியில் நின்றுசொலுமே;

---

6. மாட்சியாய் – மேலானவைகளாகக் கருதி. புருஷார்த்தம் – மனிதன் பெறவேண்டிய பேறு. ஒளிதாரகம் – வெளிச்சத்தையே குறிக்கோளாகக் கொள்ளுதல். அருள் தாரகம் – இறைவன் அருளையே குறிக்கோளாகக் கொள்ளுதல்.

7. கானகம் இலங்கு – காட்டில் திரிகிற. நெகிடிக்கு – எரிகிற தீயினுக்கு. போனகம் – உணவு.

Koviloor Digital Library



புவிராஜர், கவிராஜர், தவராஜர் என்றுஉனைப்
போற்றிஜய போற்றிஎன்பார்;

ஞானகரு ணாகர முகம்கண்ட போதிலே
நவநாத சித்தர்களும்உன்
நட்பினை விரும்புவார்; சுகர்,வாம தேவர்முதல்
ஞானிகளும் உனை மெச்சுவார்;

வானகமும் மண்ணகமும் வந்துஎதிர் வணங்கிடும்உன்
மகிமையது சொல்லஎளிதோ?
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே! 7

சருகுசல பக்ஷணிகள் ஒருகோடி; அல்லால்
சகோரப க்ஷிகள்போலவே
தவளநிலவு ஒழுகுஅமிர்த தாரைஉண்டு அழியாத
தன்மையர் அனந்தகோடி;

இருவினைகள் அற்று.இரவு பகல்என்பது அறியாத
ஏகாந்த மோனஞான
இன்பநிஷ் டையர்கோடி; மணிமந்த்ர சித்திநிலை
எய்தினர்கள் கோடிசூழக்

குருமணி இழைத்திட்ட சிங்கா தனத்தின்மிசை
கொலுவீற் றிருக்கும்நின்னைக்
கும்பிட்டு, அனந்தமுறை தெண்டனிட்டு, என்மனக்
குறைஎலாம் தீரும்வண்ணம்

---

7. புவிராஜர் – நாடாளுபவர். தவராஜர் – பெரும் துறவியர்.

8. பக்ஷணிகள் – உண்ணுபவர்கள். சகோரபக்ஷிகள் – நிலத்தில் இறங்காத பறவைகள். தவளநிலவு – வெண்மையாகிய நிலா வெளிச்சம். அமிர்த தாரை – யோகியர் உச்சந் தலையிலிருந்து சொட்டும் சாகாமருந்து. மணிமந்திர சித்தி நிலை – காயசித்திக்குரிய மந்திரத்தோடு கூடிய பாத ரசத்தைக் கொண்டு கட்டியமணி. குருமணி இழைத்திட்ட – நிறமுள்ள இரத்தினங்கள் அமைக்கப்பெற்ற. மருமலர் – மணம் நிறைந்த பூ.

Koviloor Digital Library



மருமலர் எடுத்து,உன்இரு தாளைஅர்ச் சிக்கஎனை
வாஎன்று அழைப்பது எந்நாள்?
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே! 8

ஆங்காரம் ஆனகுல வேடவெம் பேய்பாழ்த்த
ஆணவத்தினும் வலிதுகாண்,
அறிவினை மயக்கிடும்;நடுஅறிய ஒட்டாது,
யாதுஒன்று தொடினும்அதுவாய்த்

தாங்காது மொழிபேசும்; ஹரிஹரப் பிரமாதி
தம்மொடு சமானம்என்னும்;
தடைஅற்ற தேரில்அம் சுருவாணி போலவே
தன்னில்அசை யாதுநிற்கும்;

ஈங்குஆர் எனக்குநிகர் என்னப்ர தாபித்து
இராவணா காரம்ஆகி;
இதயவெளி எங்கணும் தன்அரசு நாடுசெய்து
இருக்கும்;இத னொடுஎந்நேரமும்

வாங்காநி லாது,அடிமை போராட முடியுமோ?
மௌனோப தேசகுருவே!
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே! 9

பற்றுவெகு விதமாகி, ஒன்றைவிட்டு ஒன்றனைப்
பற்றிஉழல் கிருமிபோலப்

8. குறிப்பு: அனைவரையும் ஆட்கொள்ளும் இறைவா அருள் சுரந்து என்னையும் ஆட்கொள்வாயாக.

9. ஹரிஹரப்பிரமாதி – விஷ்ணு, சிவன், பிரம்ம தேவன் முதலியோர். அம்சுருவாணி – அழகிய அச்சாணி. ப்ரதாபித்து – விளம்பரப்படுத்தி. இராவணாகாரம் ஆகி – செருக்கே வடிவெடுத்த இலங்கை வேந்தனுக்கு நிகராகி. தன்அரசு நாடு – தன் ஆட்சிக்குச் சொந்தமான. வாங்கா நிலாது – நீங்கி நில்லாமல்.

Koviloor Digital Library



பாழ்ஞ்சிந்தை பெற்றநான், வெளியாக நின்அருள்
பகர்ந்தும்அறி யேன்;துவிதமோ

சிற்றறிவு, அது அன்றியும் எவரேனும் ஒருமொழி
திடுக்கென்று உரைத்தபோது
சிந்தைசெவி ஆகவே பறைஅறைய, உதரவெந்
தீநெஞ்சம் அளவளாவ,

உற்றுஉணர உணர்வுஅற்று,உன் மத்தவெறி யினர்போல
உளறுவேன்; முக்திமார்க்கம்
உணர்வதுஎப் படி?இன்ப துன்பம்ச மானமாய்
உறுவதுஎப் படி?ஆயினும்

மற்றுஎனக்கு ஐயநீ சொன்னஒரு வார்த்தையினை
மலைஇலக்கு எனநம்பினேன்;
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே! 10

## 6. கருணாகரக் கடவுள்

நிர்க்குண நிராமய நிரஞ்சன நிராலம்ப
நிர்விஷய கைவல்யமாம்
நிஷ்கள அசங்கசஞ் சலரகித நிர்வசன
நிர்த்தொந்த நித்தமுக்த

தற்பரவிஸ் வாதீத வ்யோமபரி பூரண
சதானந்த ஞானபகவ
சம்புசிவ சங்கர சர்வேச என்றுநான்
சர்வகா லமும்நினைவனோ?

---

10. உழல் – சுற்றித்திரிகின்ற. துவிதமோ சிற்றறிவு – என்னை உன் வேற்றானாக வைப்பது அறியாமையாகும். பறைஅறைய – பிதற்ற. உதரவெந்தீ – உடலில் கதகதப்பை உண்டுபண்ணுகிற தீ. அளவளாவ – கலக்கும்படி. உணர்வு அற்று – அறிவு அற்று. மலைஇலக்கு என – மலையைக் குறியாகக் கொள்வது போல.

Koviloor Digital Library



அற்புத அகோசர நிவிர்த்திபெறும் அன்பருக்கு
ஆனந்த பூர்த்திஆன
அத்வைத நிச்சய சொரூபசா க்ஷாத்கார
அநுபூதி அநுசூதமும்

கற்பனை அறக்காண முக்கணுடன் வடநிழல்
கண்ணூடு இருந்தகுருவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே! 1

மண்ணாதி ஐந்தொடு புறத்தில்உள கருவியும்,
வாக்காதி சுரோத்ராதியும்,
வளர்கின்ற சப்தாதி, மனமாதி, கலையாதி,
மன்னுசுத் தாதிஉடனே

---

1. நிராமய – நோயற்றவனே. நிரஞ்சன – களங்கமில்லாதவனே. நிராலம்ப – பற்றுக்கோடில்லாதவனே. நிர்விஷய – கட்புலனாகாதவனே. கைவல்யமாம் – மோட்ச வடிவமான. நிஷ்கள – வடிவமற்றவனே. அசங்க – எதனோடும் சேராதவனே. சஞ்சலரகித – அசைவு அற்றவனே. நிர்வசன – சொல்லால் விளக்கப்படாதவனே. நிர்த்தொந்த – இரண்டற்றவனே. தற்பர – உண்மை வடிவத்தில் இணைந்திருப்பவனே. விஸ்வாதீத – உலகுக்கு அப்பாற்பட்டவனே. வ்யோம – அறிவுப் பெருவெளியே. சதானந்த – யாண்டும் இன்புற்றிருப்பவனே. பகவ – ஞானம், வைராக்யம், வீர்யம், ஆளும்தகைமை, திரு, புகழ் ஆகிய ஆறுவித தெய்வீகப் பெற்றியுடையவனே. சம்பு – அன்பனே. சிவ – மங்களகரமானவனே. சங்கர – நலம் செய்பவனே. அகோசர – புலன்களுக்கு எட்டாதவனே. நிவிர்த்தி – துறவு நெறி. நிச்சய – உறுதிப்பாடுடையவனே. சாக்ஷாத்கார அநுபூதி – கண்கூடான அநுபவம். அநுசூதமும் – பிரியாது இணைந்திருப்பவன். கற்பனைஅற – மனவிகாரமின்றி. வடநிழல் கண்ணூடு – கல் ஆலின் நிழற்கீழ்.

Koviloor Digital Library



தொண்ணூற்றொடு ஆறும்,மற்று உள்ளனவும்
மௌனியாய்ச்
சொன்னஒரு சொற்கொண்டதே,
தூவெளிய தாய்அகண்ட ஆனந்த சுகவாரி
தோற்றுமதை என்சொல்லுவேன்?

பண்ஆறும் இசையினொடு பாடிப், படித்து, அருள்
பான்மைநெறி நின்று, தவறாப்
பக்குவ விசேஷராய் நெக்குநெக்கு உருகிப்,
பணிந்துஎழுந்து, இருகைகூப்பிக்,

கண்ஆறு கரைபுரள நின்றஅன் பரைஎலாம்
கைவிடாக் காட்சிஉறவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே! 2

எல்லாம்உன் அடிமையே; எல்லாம்உன் உடைமையே;
எல்லாம்உன் னுடையசெயலே;
எங்கணும் வியாபிநீ என்றுசொலும் இயல்புஎன்று
இருக்குஆதி வேதம்எல்லாம்

சொல்லால் முழக்கியது; மிக்கஉப காரமாச்
சொல்இறந் தவரும்விண்டு
சொன்னவையும் இவை,நல்ல குருவான பேரும்
தொகுத்தநெறி தானும்இவையே

அல்லாமல் இல்லைஎன நன்றா அறிந்தேன்;
அறிந்தபடி நின்று,சுகம்நான்

---

2. சுரோத்ராதியும் – காது முதலியனவும். சப்தாதி – ஓசை முதலியன. மன்னுசுத்தாதி உடனே – நிலைத்துள்ள சுத்த தத்துவங்களுடனே. பண் – இராகம், தகுதி. பான்மை – முறைமை. கண்ஆறு – கண்ணீர் ஆகிய ஆறு.

3. இருக்குஆதி வேதம் – இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய வேதங்கள். கதிக்கு – மோட்சத்துக்கு.

Koviloor Digital Library



ஆகாத வண்ணமே இவ்வண்ணம் ஆயினேன்;
அதுவும்நினது அருள்என்னவே
கல்லாத அறிஞனுக்கு உள்ளே உணர்த்தினை;
கதிக்குவகை ஏதுபுகலாய்?
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே! 3

பட்டப் பகல்பொழுதை இருள்என்ற மருளர்தம்
பக்ஷமோ எனதுபக்ஷம்;
பார்த்தஇடம் எங்கணும் கோத்தநிலை குலையாது
பரமவெளி ஆகஒருசொல்
திட்டமுடன் மௌனியாய் அருள்செய்து இருக்கவும்
சேராமல் ஆராகநான்
சிறுவீடு கட்டி,அதின் அடுசோற்றை உண்டுஉண்டு,
தேக்குசிறி யார்கள்போல
நட்டனைய தாக்கற்ற கல்வியும் விவேகமும்
நல்நிலையம் ஆகஉன்னி,
நான்என்று நீஎன்று இரண்டுஇல்லை என்னவே,
நடுவே முளைத்தமனதைக்
கட்டஅறி யாமலே வாடினேன்; எப்போது
கருணைக்கு உரித்துஆவனோ?
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே! 4

4. மருளர் – மயக்கத்தில் மூழ்கியவர். பக்ஷம் – கொள்கை. கோத்த – என்னையாட்கொண்ட. ஆராக நான் – என்னை வேறு யாராகவோ எண்ணி. தேக்கு – தெவிட்டு. நட்டனையதா – நடுவு நிலைமையாக. நல்நிலையம் ஆக உன்னி – நல்ல நிலையிடமாகக் கருதி.

Koviloor Digital Library



மெய்விடா நாஉள்ள மெய்யர்உள் இருந்து,நீ
மெய்ஆன மெய்யைஎல்லாம்
மெய்என உணர்த்தியது மெய்,இதற்கு ஐயம்இலை;
மெய்ஏதும் அறியாவெறும்

பொய்விடாப் பொய்யினேன் உள்ளத்து இருந்து,தான்
பொய்ஆன பொய்யைஎல்லாம்
பொய்எனா வண்ணமே புகலவைத் தாய்எனில்
புன்மையேன் என்செய்குவேன்;

மைவிடாது எழுநீல கண்டகுரு வேவிஷ்ணு
வடிவான ஞானகுருவே
மலர்மேவி மறைஓதும் நான்முகக் குருவே
மதங்கள்தொறும் நின்றகுருவே

கைவிடா தேஎன்ற அன்பருக்கு அன்பாய்க்
கருத்தூடு உணர்த்துகுருவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே! 5

பண்ணேன் உனக்கான பூஜை,ஒரு வடிவிலே
பாவித்து இறைஞ்ச,ஆங்கே
பார்க்கின்ற மலருடு நீயே இருத்தி,அப்
பனிமலர் எடுக்கமனமும்

நண்ணேன், அலாமல்இரு கைதான் குவிக்கஎனின்
நாணும்,என் உளம்நிற்றிநீ,
நான்கும் பிடும்போது அரைக்கும் பிடுஆதலால்
நான்பூஜை செய்யல்முறையோ?

---

5. மெய்விடா – உண்மை நீங்காத. பொய்விடா – பொய்யான உலகைப்பற்றி நிற்கின்ற. பொய் எனா வண்ணமே – மெய்யென்றே. மை – கழுத்திலிருக்கும் கருமை.

6. நண்ணேன் - பொருந்தேன். நாணும் - தயங்கும். நிற்றி - நிற்கின்றாய்.

Koviloor Digital Library



விண்ணேவிண் ஆதியாம்|பூதமே நாதமே
வேதமே வேதாந்தமே
மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்
வித்தே அவித்தின்முளையே

கண்ணே கருத்தேஎன் எண்ணே எழுத்தே
கதிக்குஆன மோனவடிவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே! 6

சந்ததமும் வேதமொழி யாதுஒன்று பற்றினது
தான்வந்து முற்றும்எனலால்,
ஜகமீது இருந்தாலும் மரணம்உண்டு என்பது
சதாநிஷ்டர் நினைவதில்லை;

சிந்தைஅறி யார்க்குஈது போதிப்பது அல்லவே
செப்பினும் வெகுதர்க்கமாம்;
திவ்யகுண மார்க்கண்டர், சுகர்ஆதி முனிவோர்கள்
சித்தாந்த நித்யர் அலரோ?

இந்த்ராதி தேவதைகள், பிரமாதி கடவுளர்,
இருக்காதி வேதமுனிவர்,
எண்ணரிய கணநாதர், நவநாத சித்தர்கள்,
இரவிமதி ஆதியோர்கள்,

கந்தருவர், கின்னரர்கள், மற்றையர்கள் யாவரும்
கைகுவித் திடுதெய்வமே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே! 7

---

விண்ஆதியாம்பூதமே – வான், காற்று, தீ, நீர், நிலம் ஆகிய ஐம்பெரும்பூதங்களே. மேதக்க கேள்வியே – ஆன்ம ஆய்வே. 7. சந்ததமும் – காலமெல்லாம். ஜகமீது – உலகின் கண். சதா நிஷ்டர் – இடையறாது தியானம் பண்ணுபவர். சித்தாந்த – மனதைக் கடந்த. நித்யர் – அழியா நிலை பெற்றவர்.

Koviloor Digital Library



துள்ளும்அறி யாமனது பலிகொடுத் தேன்கர்ம
துஷ்டதே வதைகள்இல்லை,
துரியநிறை சாந்ததே வதையாம் உனக்கே
தொழும்பன்அன்பு அபிஷேகநீர்;

உள்உறையில் என்ஆவி நைவேத்தி யம்ப்ராணன்
ஓங்குமதி தூபதீபம்
ஒருகாலம் அன்றுஇது சதாகால பூஜையா
ஒப்புவித் தேன்; கருணைகூர்

தெள்ளிமறை வடியிட்ட அமுதப் பிழம்பே
தெளிந்ததே னேசீனியே
திவ்யரசம் யாவும் திரண்டுஒழுகு பாகே
தெவிட்டாத ஆனந்தமே

கள்ளன்அறி வூடுமே மெள்ளமௌ வெளியாய்க்
கலக்கவரு நல்லஉறவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே! 8

உடல்குழைய, என்புஎலாம் நெக்குஉருக, விழிநீர்கள்
ஊற்றுஎன வெதும்பிஊற்ற,
ஊசிகாந் தத்தினைக் கண்டுஅணுகல் போலவே
ஓர்உறவும் உன்னிஉன்னிப்.

படபடெனா நெஞ்சம் பதைத்துஉள் நடுக்குறப்
பாடிஆ டிக்குதித்துப்,
பனிமதி முகத்திலே நிலவுஅனைய புன்னகை
பரப்பி,ஆர்த்து ஆர்த்துஎழுந்து,

8. துரியநிறை – நிறைவாயுள்ள ஆத்மா. தொழும்பன் – தொண்டன். ஓங்குமதி – நல்லறிவு.

9. வெதும்பி – கதகதப்புற்று. உன்னி – நினைந்து. பனி மதி – குளிர்ந்த திங்கள். ஆர்த்து – ஆரவாரித்து.

Koviloor Digital Library



மடல்அவிழும் மலர்அனைய கைவிரித் துக்கூப்பி,
வானேஅவ் வானில்இன்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடுழி
வாழிஎன வாழ்த்திஏத்தும்

கடல்மடை திறந்தனைய அன்பர்அன் புக்குஎளியை;
கல்நெஞ்ச னுக்குஎளியையோ?
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே! 9

இங்குஅற்ற படிஅங்கும் எனஅறியும் நல்அறிஞர்
எக்காலமும் உதவுவார்,
இன்சொல்தவ றார்,பொய்மை யாம்இழுக்கு உரையார்,
இரங்குவார், கொலைகள்பயிலார்,

சங்கற்ப சித்தர்,அவர் உள்ளக் கருத்தில்உறை
சாட்சிநீ, இகபரத்தும்
சந்தான கற்பகத் தேவாய் இருந்தே
சமஸ்தஇன் பமும்உதவுவாய்;

சிங்கத்தை ஒத்துஎனைப் பாயவரு வினையினைச்
சேதிக்க வருசிம்புளே
சிந்தா குலத்திமிரம் அகலவரு பானுவே
தீனனேன் கரைஏறவே

---

வானே – ஞானவெளியே. கடல்மடை திறந்தனைய - கடலானது மடை திறந்தால் போன்ற.

10. இங்கு அற்றபடி – இவ்வுலகில் பற்றற்ற நிலையே. அங்கும் – மறுமை உலகிலும். சங்கற்ப சித்தர் – விரதம் பிச காதவர். சாட்சி – காண்போன். இகபரத்தும் – பிரபஞ்சத்திலும், அதற்கப்பாலும். சந்தான கற்பகத் தேவாயிருந்தே – தேவலோகத்திலுள்ள சந்தானம், கற்பகம் என்னும் மரங்கள் போன்று தெய்வமாய் இருந்து. சமஸ்த இன்பமும் – எல்லா இன்பங்களும். சேதிக்க – தாக்கியழிக்க. சிம்புளே – சிம்புள் பறவையே. சிந்தாகுலத்திமிரம் – மனத்துன்பங்கள் ஆகிய இருள்.

Koviloor Digital Library



கங்குஅற்ற பேராசை வெள்ளத்தின் வளர்அருள்
கககனவட் டக்கப்பலே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே! 10

## 7. சித்தர் கணம்

திக்கொடு திகந்தமும் மனவேகம் என்னவே
சென்றுஓடி ஆடிவருவீர்;
செம்பொன்மக மேருவொடு குணமேரு என்னவே
திகழ்துருவம் அளவுஅளாவி

உக்ரமிகு சக்ரதரன் என்னநிற் பீர்;கையில்
உழுந்துஅமிழும் ஆசமனமா
ஓர்ஏழு கடலையும் பருகவல் லீர்,இந்த்ரன்
உலகும்அயி ராவதமுமே

கைக்குளளிய பந்தாய் எடுத்து விளையாடுவீர்;
ககனவட் டத்தைஎல்லாம்
கடுகிடை இருத்தியே, அஷ்டகுல வெற்பையும்
காட்டுவீர்; மேலும்மேலும்

---

10. கங்குஅற்ற – வரம்பு கடந்த. அருள் ககனவட்டம் – கிருபையையுடைய வான வட்டத்தில்.

1. திக்கொடு திகந்தமும் – எட்டுத் திசைகளும் அவைகளுக்கு அப்பாலும். குணமேரு – நல்லொழுக்கமாகிய மேரு மலை. துருவம் அளவு அளாவி – துருவமண்டலம் வரையில் போய். உக்ரமிகு – வேகம் மிகுந்த. சக்ரதரன் – ஆழிப் படையை ஏந்திய திருமால். உழுந்து – உளுந்தின் அளவாக. அமிழும் ஓர்ஏழு கடலையும் – ஆழமான ஏழு கடல்களையும். ஆசமனமா பருகவல்லீர் – உள்ளங்கையில் வைத்து ஒரு துளி நீராகக் குடிக்க வல்லீர். அயிராவதமும் – இந்திர லோகத்திலுள்ள வெள்ளை யானையும். ககன வட்டத்தை – வான மண்டலங்களை. கடுகிடை இருத்தியே – கடுகுக்குள் அடக்கி வைத்தே. அஷ்டகுலவெற்பையும் – எட்டு மலைகளையும். சித்தி இலிரோ – சித்தியானது இல்லாதவரோ. வித்தகம் – ஞானத்திற்கு இருப்பிடம்.

Koviloor Digital Library



மிக்கசித் திகள்எலாம் வல்லநீர், அடிமைமுன்
விளங்கவரு சித்திஇலிரோ?
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே! 1

பாட்டளி துதைந்துவளர் கற்பகநல் நீழலைப்
பாரினிடை வரஅழைப்பீர்;
பத்மநிதி சங்கநிதி இருபாரி சத்திலும்
பணிசெயும் தொழிலாளர்போல்
கேட்டது கொடுத்துவர நிற்கவைப் பீர்;பிச்சை
கேட்டுப் பிழைப்போரையும்
கிரீடபதி ஆக்குவீர்; கற்பாந்த வெள்ளம்ஒரு
கேணியிடை குறுகவைப்பீர்;
ஓட்டினை எடுத்துஆ யிரத்துஎட்டு மாற்றுஆக
ஒளிவிடும் பொன்ஆக்குவீர்;
உரகனும் இளைப்புஆற யோகதண் டத்திலே
உலகுசுமை ஆகஅருளால்
மீட்டிடவும் வல்லநீர், என்மனக் கல்லைஅனல்
மெழுகுஆக்கி வைப்பதுஅரிதோ?
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே! 2

2. பாட்டளி துதைந்துவளர் – இசைப்பாட்டையுடைய வண்டுகள் நெருங்கி வளர்கின்ற. கற்பகநல் நீழலை – சொர்க்கத்திலுள்ள கற்பக மரத்தின் நிழலை. பத்மநிதி – நிலத்திலுண்டாகும் செல்வம். சங்கநிதி – கடல் நீரில் உண்டாகும் செல்வம். கிரீடபதி – முடிசூட்டிய மன்னன். கற்பாந்த வெள்ளம் - பிரளயத்தில் உண்டாகும் நீர்ப் பெருக்கு. ஓட்டினை – உடைந்த மண்பாண்டத் துண்டை. ஆயிரத்துஎட்டு மாற்று ஆக – முற்றிலும் சுத்தி அடைந்ததாக. உரகனும் – ஆதிசேடனும். யோகதண்டத்தில் – யோகிகள் இளைப்பாறுதற்கு வைத்திருக்கும் மரக்கவையில். அருளால் மீட்டிடவும் வல்லநீர் – கிருபை கூர்ந்து வாங்கிக்கொள்ளவும் வல்லவராகிய நீங்கள். அனல் மெழுகு ஆக்கி – நெருப்பி லிட்ட மெழுகு போல் செய்து.

Koviloor Digital Library



பாரொடுநல் நீர்ஆதி ஒன்றொடுஒன்று ஆகவே
பற்றிலயம் ஆம்போதினில்,
பரவெளியில் மருவுவீர், கற்பாந்த வெள்ளம்
பரந்திடின், அதற்குமீதே
நீரில்உறை வண்டாய்த் துவண்டுசிவ யோகநிலை
நிற்பீர்; விகற்பம்ஆகி,
நெடியமுகில் ஏழும் பரந்துவரு ஷிக்கிலோ
நிலவுமதி மண்டலமதே
ஊர்என விளங்குவீர் பிரமாதி முடிவில்விடை —
ஊர்திஅரு ளால் உலவுவீர்;
உலகங்கள் கீழ்மேல ஆகப் பெருங்காற்று
உலாவின்,நல் தாரணையினால்
மேருஎன அசையாமல் நிற்கவல்லீர்,உமது
மேதக்க சித்திஎளிதோ?
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே! 3

எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிதுஅரிதுகாண்;
இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?
ஏதுவருமோ? அறிகிலேன்;

3. நல்நீர்ஆதி – நல்லநீர் முதலிய ஐம்பூதங்களும். லயம் ஆம் போதினில் – ஒடுங்குகின்ற பிரளய காலத்தில். பர வெளியில் – சிதாகாசத்தில். கற்பாந்தவெள்ளம் – ஊழி முடிவில் தோன்றும் பிரளய வெள்ளம். பரந்திடின் – பரவினால். விகற்பம் ஆகி – வேறுபட்டு. நிலவு மதிமண்டலமதே – சந்திரலோகத்தில். ஊர்என விளங்குவீர் – குடியிருப்பீர். பிரமாதி முடிவில் – பிரம்மதேவன் முதலிய ஆயுள்படைத்த தேவதைகள் அழியுங்கால். விடைஊர்தி அருளால் – காளைமீது ஊர்ந்து செல்லும் சிவன் அருளால். பெருங்காற்று உலாவின் – ஊழிக்காற்று வீசினால். நல் தாரணையினால் – யோகத்தின் ஆறாவது அங்கமாயிருக் கிற தாரணையென்னும் சாதனத்தின் வாயிலாக.

Koviloor Digital Library



கண்அகல் நிலத்துநான் உள்ளபொழு தேஅருள்
ககனவட் டத்தில்நின்று,
கால்ஊன்றி நின்றுபொழி ஆனந்த முகிலொடு
கலந்து,மதி அவசம்உறவே
பண்ணுவது நன்மை; இந் நிலைபதியு மட்டுமே
பதியாய் இருந்ததேகப்
பவுரிகுலை யாமலே, கௌரிகுண் டலிஆயி
பண்ணவிதன் அருளினாலே,
விண்ணிலவும் மதிஅமுதம் ஒழியாது பொழியவே
வேண்டுவேன் உமதுஅடிமைநான்;
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே! 4

பொய்திகழும் உலகநடை என்சொல்கேன் என்சொல்கேன்
பொழுதுபோக்கு ஏதுஎன்னிலோ?
பொய்உடல் நிமித்தம் புசிப்புக்கு அலைந்திடல்
புசித்தபின் கண்உறங்கல்,
கைதவம் அலாமல்இது செய்தவமது அல்லவே;
கண்கெட்ட பேர்க்கும்வெளியாய்க்
கண்டதுஇது. விண்டுஇதைக் கண்டித்து நிற்றல்எக்
காலமோ? அதைஅறிகிலேன்,

4. மதி அவசம் உறவே – என்னுடைய ஆன்மநிலை பரம்பொருளோடு ஒன்றுபடச் செய்யவே. பவுரி – உலக வாழ்வு என்னும் கூத்தாட்டத்துக்குரிய அமைப்பு. கௌரி – உமா தேவி. குண்டலி – யோகியின் உடலில் அமைந்துள்ள அருள் சக்தி. ஆயி – தேவி. பண்ணவி – அம்பிகை. விண் நிலவும் – ஏழாவது யோக சக்கரமாகிய சஹஸ்ராரத் திலிருக்கும். மதிஅமுதம் – சந்திர மண்டலத்துக்குரிய அமிர்த தாரை.

Koviloor Digital Library



மைதிகழும் முகில்இனம் குடைநிழற் றிட,அஷ்ட
வரையினொடு செம்பொன்மேரு
மால்வரையின் முதுகூடும் யோகதண் டக்கோல்
வரைந்து, ஜய விருதுகாட்டி,

மெய்திகழும் அஷ்டாங்க யோகபூ மிக்குள்வளர்
வேந்தரே குணசாந்தரே
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே! 5

கெஜதுரக முதலான சதுரங்க மனம்ஆதி
கேள்வியின் இசைந்துநிற்பக்;
கெடிகொண்ட தலம்ஆறும் மும்மண்ட லத்திலும்
கிள்ளாக்குச் செல்ல,மிக்க

தெசவிதமது ஆய்நின்ற நாதங்கள் ஒலிடச்;
சிங்காச னாதிபர்களாய்த்
திக்குத் திகந்தமும் பூரண மதிக்குடை
திகழ்ந்திட, வசந்தகாலம்

இசைய,மலர் மீதுஉறை மண்போல ஆனந்தம்
இதயம்மேல் கொள்ளும்வண்ணம்,
என்றைக்கும் அழியாத சிவராஜ யோகமாய்,
இந்த்ராதி தேவர்கள்எலாம்

5. கைதவம் – கபடம். செய்தவம் – பழகுகிற தவம். விண்டு இதை – இதைப் புறக்கணித்து. குடை நிழற்றிட – குடைபோல் நிழலை உண்டுபண்ண. அஷ்டவரையினொடு – எட்டு மலைகளோடு. முதுகூடும் – புறத்தும். மெய்திகழும் – உண்மையை விளக்குகின்ற. அஷ்டாங்க யோக பூமிக்குள் வளர் – எட்டு அங்கங்களையுடைய ராஜயோக அனுஷ்டானத்தில் விருத்தியடைகிற.

6. கெஜதுரக முதலான – யானை, குதிரை முதலான. சதுரங்க – நான்கு உறுப்புக்களை உடைய. கேள்வியின் இசைந்து நிற்ப – பணிவிடைக்கு இணைந்து நிற்க. கெடிகொண்ட தலம் ஆறும் – புகழ் வாய்ந்த ஆறு ஆதாரங்

Koviloor Digital Library



விஜயஜய ஜயஎன்ன ஆசிசொல வே;கொலு
இருக்கும்நும் பெருமைஎளிதோ?
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே! 6

ஆணிலே பெண்ணிலே என்போல ஒருபேதை
அகிலத்தின் மிசைஉள்ளதோ?
ஆடிய கறங்குபோல் ஓடிஉழல் சிந்தையை
அடக்கிஒரு கணமேனும்யான்

காணிலேன் திருஅருளை; அல்லாது மௌனியாய்க்
கண்மூடி ஒடுமூச்சைக்
கட்டிக் கலாமதியை முட்டவே மூலவெம்
கனலினை எழுப்ப,நினைவும்

பூணிலேன், இற்றைநாள் கற்றதும் கேட்டதும்
போக்கிலே போகவிட்டுப்
பொய்உலகன் ஆயினேன் நாயினும் கடைஆன
புன்மையேன், இன்னம்இன்னம்

வீணிலே அலையாமல், மலைஇலக்கு ஆகநீர்
வெளிப்படத் தோற்றல்வேண்டும்;
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே! 7

களிலும். மும்மண்டலத்திலும் – நனவு, கனவு, உறக்கம் ஆகிய மூன்று நிலைகளிலும். கிள்ளாக்குச் செல்ல – அதிகாரம் செலுத்த. தெசவிதமது ஆய் நின்ற – பத்து விதமான. ஓலிட – முழங்க. சிங்காசனாதிபர்களாய் – பதவியிலிருக்கும் பெரியவர்களாக. திக்குத் திகந்தமும் – எட்டுத் திக்குக்களிலும் அவற்றுக்கப்பாலும்.

7. ஆடிய கறங்கு – சுழல்கின்ற காற்றாடி. கலாமதியை முட்டவே – சஹஸ்ராரத்தைத் தொடவே. மூலவெம் கனலினை எழுப்ப – மூலாதாரத்திலுள்ள வெப்பத்தைக் கிளப்ப. பூணிலேன் – கொள்ளவில்லை. புன்மையேன் – அற்பன். மலைஇலக்குஆக – வெள்ளிடைமலைபோல் தெளிவுற்ற குறிக்கோளாக.

Koviloor Digital Library



கன்னல்அமுது எனவும்,முக் கனிஎனவும், வாய்ஊறு
கண்டுஎனவும் அடிஎடுத்துக்
கடவுளர்கள் தந்ததுஅல; அழுதுஅழுது பேய்போல்
கருத்தில்எழு கின்றஎல்லாம்

என்னதுஅ;றி யாமைஅறிவு என்னும்இரு பகுதியால்
ஈட்டுதமிழ்; என்தமிழினுக்கு
இன்னல்பக ராதுஉலகம் ஆராமை மேலிட்டு
இருத்தலால்; இத்தமிழையே

சொன்னவன் யாவன் அவன்? முக்திசித் திகள்எலாம்
தோய்ந்தநெறி யேபடித்தீர்!
சொல்லும்என அவர்;நீங்கள் சொன்ன அவை ய்.ல்சிறிது
தோய்ந்தகுண சாந்தன்எனவே

மின்னல்பெற வேசொல்ல, அச்சொல்கேட்டு அடிமைமனம்
விகசிப்பது எந்தநாளோ?
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே! 8

பொற்பினொடு கைகாலில் வள்உகிர் படைத்தலால்;
போந்துஇடை ஒடுக்கம்உறலால்;
பொலிவான வெண்ணீறு பூசியே அருள்கொண்டு
பூரித்த எண்ணீர்மையால்;

---

8. கன்னல் – கருப்பஞ்சாறு. வாய்ஊறு கண்டு – வாயில் அடக்கியுள்ள கற்கண்டு. அடிஎடுத்துக் கடவுளர்கள் தந்தது அல – திருவருளால் தூண்டப் பெற்றுப் பாடியதல்ல. ஈட்டுதமிழ் – சொல்லிய தமிழ்ப்பாட்டாகும். என்தமிழினுக்கு – அப்படி என்னால் பாடப்பட்ட தமிழ்ப் பாட்டுக்கு. இன்னல் பகராது உலகம் – உலகம் குற்றம் கூறாது. ஆராமைமேலிட்டு இருத்தலால் – பேரன்பு அதிகப்பட்டிருத்தலால். படித்தீர் – படித்தவர்களே. குணசாந்தன் – நற்குணம் சிறிது படைத்தவன். விகசிப்பது – மகிழ்வடைவது.

தா.5.

Koviloor Digital Library


எற்பட விளங்குகக னத்தில்இமை யாவிழி
இசைந்துமேல் நோக்கம்உறலால்;
இரவுபகல் இருள்ஆன கனதந்தி பட்நூறி
இதயம் களித்திடுதலால்;

பற்பல விதம்கொண்ட புலிகலையின் உரியது
படைத்துப்ர தாபம்உறலால்;
பனிவெயில்கள் புகுதாமல் நெடியவான் தொடர்நெடிய
பருமர வனங்கள்ஆரும்

வெற்பினிடை உறைதலால்; தவராஜ சிங்கம்என
மிக்கோர் உமைப்புகழ்வர்காண்;
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே! 9

கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்,
கற்றும்அறிவு இல்லாதஎன்
கர்மத்தை என்சொல்கேன்? மதியைஎன் சொல்லுகேன்?
கைவல்ய ஞானநீதி

---

9. பொற்பினொடு – அழகோடு கூடிய. வள்உகிர் படைத்தலால் – கூர்மையான நகங்களைப் பெற்றிருத்த லால். போந்துஇடை ஒடுக்கம்உறலால் – இடையானது ஒடுங்கியிருப்பதால். பூரித்த – ஆனந்தமடைந்த. எண் ணீர்மையால் (எண்+நீர்மையால்) – மதிக்கத்தக்க நற் குணத்தினால். எற்பட (எல்+பட) விளங்கு ககனத்தில் – ஒளி நிறைந்த ஞானவெளியில். மேல் நோக்கம் உறலால் – பார்வை மேல் நோக்கி இருப்பதால். இருள்ஆன – அக் ஞானம் ஆகிய. கனதந்தி படநூறி – பெரிய யானையானது இறக்கும்படி அழித்து. புலிகலையின் உரியதுபடைத்து – புலித்தோலையும், மான்தோலையும் ஆசனங்களாகக் கொண்டு. ப்ரதாபம் உறலால் – மன உறுதியைப் பெற்றிருப் பதால். மிக்கோர் – மேலோர்கள்.

10. கைவல்ய ஞான நீதி – பரஞான விளக்கம். நாட்டு வேன் – வெறும் ஏட்டுக் கல்வியைக் கொண்டு நிலை

Koviloor Digital Library


நல்லோர் உரைக்கிலோ, கர்மம்முக் கியம்என்று
நாட்டுவேன்; கர்மம்ஒருவன்
நாட்டினா லோ,பழைய ஞானம்முக் கியம்என்று
நவிலுவேன்; வடமொழியிலே

வல்லான் ஒருத்தன்வர வும்,த்ரா விடத்திலே
வந்ததா விவகரிப்பேன்;
வல்லதமிழ் அறிஞர்வரின், அங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிதுபுகல்வேன்;

வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைவந்த
வித்தைஎன் முக்திதருமோ?
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே! 10

## 8. ஆனந்தமானபரம்

கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்கும்,அக்
குணம்ஒன்றும் ஒன்றிலேன்பால்,
கோரம்எத் தனை,பக்ஷ பாதம்எத் தனை,வன்
குணங்கள்எத் தனை,கொடியபாழ்ங்

கல்லாமை எத்தனை, அகந்தைஎத் தனை,மனக்
கள்ளம்எத் தனை,உள்ளசற்
காரியம் சொல்லிடினும் அறியாமை எத்தனை,
கதிக்குஎன்று அமைத்தஅருளில்

---

நிறுத்துவேன். நவிலுவேன் – சாதிப்பேன். வடமொழியிலே வல்லான் – சமஸ்கிருத பண்டிதன். த்ராவிடத்திலே – தமிழ் மொழியிலே. விவகரிப்பேன் – விளக்குவேன்.

1. ஒன்றிலேன்பால் – பொருந்தாதவனாகிய என்னிடத்தில். கோரம் – கொடுமை. வன்குணங்கள் – கெட்ட இயல்புகள். கதிக்குஎன்று – வீடுபேற்றின் பொருட்டு. விர்தா கோஷ்டி – வீண் பேச்சுக் கூட்டம். இந்த்ரஜாலம் – வெறும் தோற்றம். அல்லாமை எத்தனை – பொருந்தாத பாங்குகள் எத்தனை.

Koviloor Digital Library


செல்லாமை எத்தனை, விர்தாகோஷ்டி என்னிலோ
செல்வதுஎத் தனை,முயற்சி
சிந்தைஎத் தனை,சலனம் இந்த்ரஜா லம்போன்ற
தேகத்தில் வாஞ்சைமுதலாய்
அல்லாமை எத்தனை அமைத்தனை, உனக்குஅடிமை
ஆனேன், இவைக்கும் ஆளோ?
அண்டபகி ரண்டமும் அடங்கஒரு நிறைவுஆகி
ஆனந்தம் ஆனபரமே! 1

தெருளாகி, மருளாகி உழலும்மன மாய்,மனம்
சேர்ந்துவளர் சித்துஆகி,அச்
சித்துஎலாம் சூழ்ந்தசிவ சித்துஆய்,விசித்திரமாய்த்,
திரமாகி, நானாவிதப்

பொருளாகி, அப்பொருளை அறிபொறியும் ஆகி,ஐம்
புலனுமாய், ஐம்பூதமாய்ப்,
புறமுமாய், அகமுமாய்த், தூரம் சமீபமாய்ப்,
போக்கொடு வரத்தும்ஆகி

இருளாகி, ஒளியாகி, நன்மைதீ மையுமாகி,
இன்றாகி, நாளையாகி,
என்றுமாய், ஒன்றுமாய்ப், பலவுமாய், யாவுமாய்,
இவைஅல்ல ஆயநின்னை

அருளாகி நின்றவர்கள் அறிவதுஅல் லால்,ஒருவர்
அறிவதற்கு எளிது ஆகுமோ?
அண்டபகி ரண்டமும் அடங்கஒரு நிறைவுஆகி
ஆனந்தம் ஆனபரமே! 2

2. தெருளாகி – தெளிவு பெற்று. மருளாகி – மயக்கமடைந்து. சித்து ஆகி – ஞானவடிவெடுத்து. சிவசித்துஆய் – பரஞான வடிவெடுத்து. விசித்திரமாய் – வியப்புடையதாக. திரமாகி – உறுதிபடைத்து. ஐம்புலனுமாய் – சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகி. இவை அல்ல ஆயநின்னை – இவையாவையும் கடந்துள்ள உன்னை.

Koviloor Digital Library



மாறுபடு தர்க்கம் தொடுக்கஅறி வார்;சாண்
வயிற்றின் பொருட்டதுஆக
மண்தலமும் விண்தலமும் ஒன்றாகி மனதுஉழல
மாலாகி நிற்கஅறிவார்;

வேறுபடு வேஷங்கள் கொள்ளஅறி வார்;ஒன்றை
மெணமெணென்று அகம்வேறதாம்
வித்தைஅறி வார்;எமைப் போலவே சந்தைபோல்
மெய்ந்நூல் விரிக்கஅறிவார்;

சீறுபுலி போல்சீறி மூச்சைப் பிடித்துவிழி
செக்கச் சிவக்கஅறிவார்;
திரம்என்று தம்தம் மதத்தையே தாமதச்
செய்கைகொடும் உளறஅறிவார்;

ஆறுசம யங்கள்தொறும் வேறுவேறு ஆகிவிளை
யாடும்உனை யாவர்அறிவார்?
அண்டபகி ரண்டமும் அடங்கஒரு நிறைவுஆகி
ஆனந்தம் ஆனபரமே! 3

காய்இலை உதிர்ந்தகனி சருகுபுனல் மண்டிய
கடும்பசி தனக்குஅடைத்தும்;
கார்வரையின் முழையில்கருங் கல்போல அசையாது
கண்மூடி நெடிதுஇருந்தும்;

தீயினிடை வைகியும், தோயம்அதில் மூழ்கியும்;
தேகங்கள் என்புஎலும்பாய்த்
தெரியநின் றும்,சென்னி மயிர்கள் கூடாக்குருவி
தெற்றவெயி லூடுஇருந்தும்;

3. மாலாகி — பேராசை பிடித்து. ஒன்றை — ஒரு மந்திரத்தை. அகம் வேறதாம் — மனம் எங்கேயோ அலைதலாம். மூச்சைப் பிடித்து — பிராணாயாமம் பண்ணி. திரம்என்று — மேலானது என்று. தாமதச் செய்கை — தமோ குணத்தினால் வரும் அறிவில்லாத செய்கை.

Koviloor Digital Library



வாயுவை அடக்கியும்; மனதினை அடக்கியும்;
மௌனத்தி லேஇருந்தும்;
மதிமண்ட லத்திலே கனல்செல்ல அமுது உண்டு
வனமூடிருந்தும் அறிஞர்

ஆயும்மறை முடிவுஆன அருள்நாடி னார்;அடிமை
அகிலத்தை நாடல்முறையோ?
அண்டபகி ரண்டமும் அடங்கஒரு நிறைவுஆகி
ஆனந்தம் ஆனபரமே! 4

சுத்தமும் அசுத்தமும்; துக்கசுக பேதமும்;
தொந்தமுடன் நிர்த்தொந்தமும்;
ஸ்தூலமொடு சூக்ஷமமும் ஆசையும் நிராசையும்;
சொல்லும்ஒரு சொல்லின் முடிவும்;

பெத்தமொடு முக்தியும்; பாவமொடு அபாவமும்;
பேதமொடு அபேதநிலையும்;
பெருமையொடு சிறுமையும்;அருமையுடன் எளிமையும்;
பெண்ணினுடன் ஆணும்;மற்றும்

4. கார் வரையின் முழையில் – இருள்சூழ்ந்த மலைக் குகையில். தீயினிடை வைகியும் – நாலுபக்கம் தீ மூட்டி நடுவிலிருந்தும். தோயம்அதில் – புண்ணிய தீர்த்தத்தில். சென்னி மயிர்கள் கூடா – தலைமயிர்களைக் கூடாக்கிக் கொண்டு. தெற்ற – பின்னி. மதிமண்டலத்திலே கனல் செல்ல – குண்டலினி சக்தி சஹஸ்ராரத்தை எட்ட அமுது உண்டு – அமிர்ததாரையைப் புசித்து. வனமூடிருந்து – அடவியில் தங்கியும். ஆயும் – ஆராயப்பட்ட மறைமுடிவு ஆன அருள் – மெய்ப்பொருள். அகிலத்தை நாடல் – உலக வாழ்வை விரும்புதல்.

5. பேதமும் – வேறுபாடும். தொந்தமுடன் நிர்த்தொந்தமும் – இணைப்பும் இணைப்பின்மையும். பெத்தமொடு – பந்தபாசத்தோடு. பாவமொடு அபாவமும் – உணர்வும், உணர்வின்மையும். அஞ்சன நிரஞ்சனமும் – அழுக்கும், அழுக்கின்மையும். நிஷ்களமும் நிகழ்சகளமும் – உருவம்

Koviloor Digital Library



நித்தமும் அநித்தமும்; அஞ்சனநி ரஞ்சனமும்,
நிஷ்களமும் நிகழ்சகளமும்,
நீதியும் அநீதியும்; ஆதியொடு அநாதியும்;
நிர்விஷய விஷயவடிவும்;

அத்தனையும் நீ அலதுஎள் அத்தனையும் இல்லைஎனின்,
யாங்கள்உனை அன்றி உண்டோ?
அண்டபகி ரண்டமும் அடங்கஒரு நிறைவுஆகி
ஆனந்தம் ஆனபரமே! 5

கார்ஆரும் ஆணவக் காட்டைக் களைந்து;அறக்
கண்டு,அகங் காரம்என்னும்
கல்லைப் பிளந்து,நெஞ்சு அகமான பூமிவெளி
காணத் திருத்தி,மேன்மேல்

பார்ஆதி அறியாத மோனம்ஆம் வித்தைப்
பதித்து;அன்பு நீர்ஆகவே
பாய்ச்சி,அது பயிர்ஆகும் மட்டும்மா மாயைவன்
பறவைஅணு காதவண்ணம்

நேராக நின்று,விளை போகம் புசித்துஉய்ந்த
நின்அன்பர் கூட்டம்எய்த,
நினைவின் படிக்குநீ முன்நின்று காப்பதே
நின்அருள் பாரம் என்றும்;

ஆர்ஆரும் அறியாத சூதான வெளியில்வெளி
ஆகின்ற துரியமயமே
அண்டபகி ரண்டமும் அடங்கஒரு நிறைவுஆகி
ஆனந்தம் ஆனபரமே! 6

இன்மையும், உருவம் எடுத்தலும். நிர்விஷய விஷய வடிவும் – கட்புலனாகாததும், கட்புலனாவதும்.

6. பார்ஆதி – மண்ணுலகத்தவர் முதலானோர். மாமாயை – கடப்பதற்கரிய உலக வாழ்வு. அன்பர் கூட்டம் எய்த – சத்சங்கத்தை அடைய. சூதான வெளியில் – கட்புலனாகாத ஞானவெளியில். துரிய மயமே – பரமாத்ம வடிவமே.

Koviloor Digital Library



வான்ஆதி பூதமாய், அகிலாண்ட கோடியாய்,
மலைஆகி, வளைகடலுமாய்,
மதிஆகி, இரவியாய், மற்றுஉள எலாம்ஆகி,
வான்கருணை வெள்ளம்ஆகி,

நான்ஆகி நின்றவனும் நீஆகி நின்றிடவும்
நான்என்பது அற்றிடாதே,
நான்நான் எனக்குளறி, நானா விகாரியாய்,
நான்அறிந்து அறியாமையாய்ப்

போனால் அதிர்ஷ்டவலி; வெல்லஎளி தோ? பகல்
பொழுதுபுகும் முன்கண்மூடிப்
பொய்த்துயில்கொள் வான்தனை எழுப்பவச மோ? இனிப்
போதிப்பது எந்தநெறியை?

ஆனாலும் என்கொடுமை அநியாயம் அநியாயம்;
ஆர்பால் எடுத்துமொழிவேன்?
அண்டபகி ரண்டமும் அடங்கஒரு நிறைவுஆகி
ஆனந்தம் ஆனபரமே! 7

பொய்யினேன், புலையினேன், கொலையினேன், நின்அருள்
புலப்பட அறிந்துநிலையாப்
புன்மையேன், கல்லாத தன்மையேன், நன்மைபோல்
பொருள்அலாப் பொருளைநாடும்

வெய்யனேன், வெகுளியேன், வெறியனேன், சிறியனேன்,
வினையினேன், என்றுஎன்னைநீ
விட்டுவிட நினைவையேல் தட்டுஅழிவது அல்லாது
வேறுகதி ஏதுபுகலாய்;

---

7. நான் என்பது அற்றிடாதே – உடல் உணர்வு போகாமல். நானாவிகாரியாய் – பலவித மனப்பான்மை உடையவனாகி. அதிர்ஷ்டவலி – நல்வாய்ப்பு.

8. நிலையாப் புன்மையேன் – உறுதிப்பாடு இல்லாத அற்பன். வெய்யனேன் – கொடியவன். துய்யனே – தூய

Koviloor Digital Library



துய்யனே மெய்யனே உயிரினுக்கு உயிர்ஆன
துணைவனே இணைஒன்றுஇலாத்
துரியனே துரியமும் காணா அதீதனே
சுருதிமுடி மீதுஇருந்த

ஐயனே அப்பனே எனும்அறிஞர் அறிவைவிட்டு
அகலாத கருணைவடிவே
அண்டபகி ரண்டமும் அடங்கஒரு நிறைவுஆகி
ஆனந்தம் ஆனபரமே! 8

எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும்என்
இதயமும் ஒடுங்கவில்லை,
யான்எனும் அகந்தைதான் எள்அளவும் மாறஇலை,
யாதினும் அபிமானம்என்

சித்தமிசை குடிகொண்டது, ஈகையொடு இரக்கம்என்
ஜென்மத்தும் நான்அறிகிலேன்;
சீலமொடு தவவிரதம் ஒருகனவில் ஆயினும்
தரிசனம் கண்டும்அறியேன்;

பொய்த்தமொழி அல்லால் மருந்துக்கும் மெய்ம்மொழி
புகன்றிடேன்; பிறர்கேட்கவே
போதிப்பது அல்லாது சும்மா இருந்துஅருள்
பொருந்திடாப் பேதைநானே;

அத்தனை குணக்கேடர் கண்டதாக் கேட்டதா
அவனிமிசை உண்டோசொலாய்?
அண்டபகி ரண்டமும் அடங்கஒரு நிறைவுஆகி
ஆனந்தம் ஆனபரமே! 9

எக்கால மும்தனக்கு என்னஒரு செயல்இலா
ஏழைநீ என்றுஇருந்திட்டு,
எனதுஆவி உடல்பொருளும் மௌனியாய் வந்துகை
ஏற்று,நமது என்றஅன்றே,

---

வ்னே. துரியனே – ஆத்ம சொரூபனே. துரியமும் காணா அதீதனே – பரமாத்ம சொரூபனே.

Koviloor Digital Library



பொய்க்கால தேசமும் பொய்ப்பொருளில் வாஞ்சையும்
பொய்உடலை மெய்என்னலும்
பொய்உறவு பற்றலும் பொய்யாகும்; நான்என்னல்
பொய்யினும் பொய்ஆகையால்

மைக்கால் இருட்டுஅனைய இருள்இல்லை, இருவினைகள்
வந்துஏற வழியும்இல்லை,
மனம் இல்லை, அம்மனத்து இனம்இல்லை, வேறும்ஒரு
வரவுஇல்லை, போக்கும்இல்லை,

அக்காலம் இக்காலம் என்பதுஇலை, எல்லாம்
அதீதமயம் ஆனதுஅன்றோ?
அண்டபகி ரண்டமும் அடங்கஒரு நிறைவுஆகி
ஆனந்தம் ஆனபரமே!

## 9. சுகவாரி

இன்அமுது கனிபாகு கற்கண்டு சீனிதேன்
எனருசித் திட,வலியவந்து
இன்பம் கொடுத்தநினை, எந்நேரம் நின்அன்பர்
இடையறாது உருகிநாடி,

உன்னிய கருத்துஅவிழ உரைகுளறி, உடல்எங்கும்
ஓய்ந்துஅயர்ந்து அவசமாகி,
உணர்வுஅரிய பேரின்ப அநுபூதி உணர்விலே
உணர்வார்கள் உள்ளபடிகாண்;

---

10. மைக்கால் இருட்டு அனைய – மழைக்கால இருளை யொத்த. இருள் இல்லை – அஞ்ஞான இருள் இல்லை. அம்மனத்து இனம் இல்லை – மனத்தின் இனமாகிய சித்தம், புத்தி, அகங்காரம் இல்லை. அதீதமயம் – சிதாகாசம் அல்லது பரவெளி மயம்.

1. உன்னிய கருத்துஅவிழ – மனோவேகம் குறைய. அவசமாகி – பரவசமாகி. கணவன்அருள்பெறின்முனே – மணம்புரிந்து கொள்ளுவதற்கு முன்பு. சுகாரம்பமாம் – பேரின்பத் துவக்கமாம். சுகவாரியே – இன்பக்கடலே.

Koviloor Digital Library



கன்னிகை ஒருத்திசிற் றின்பம்வேம்பு என்னினும்
கைக்கொள்வள் பக்குவத்தில்,
கணவன்அருள் பெறின்முனே சொன்னவாறு என்எனக்
கருதிநகை யாவள்,அதுபோல்

சொன்னபடி கேட்கும்இப் பேதைக்கு நின்கருணை
தோற்றின் சுகாரம்பமாம்;
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரம்
ஜோதியே சுகவாரியே! 1

அன்பின்வழி அறியாத என்னைத் தொடர்ந்து,என்னை
அறியாத பக்குவத்தே
ஆசைப் பெருக்கைப் பெருக்கிக் கொடுத்து,நான்
அற்றேன் அலந்தேன்என

என்புலன் மயங்கவே பித்துஏற்றி விட்டாய்;
இரங்கிஒரு வழியாயினும்
இன்பவெள்ளம் ஆகவந்து உள்ளம் களிக்கவே
எனைநீ கலந்ததுஉண்டோ?

தன்பருவ மலருக்கு மணம்உண்டு வண்டுஉண்டு
தண்முகை தனக்கும்உண்டோ?
தமியனேற்கு இவ்வணம் திருஉளம் இரங்காத
தன்மையால் தனிஇருந்து

துன்பம்உறின் எங்ஙனே அழியாத நின்அன்பர்
சுகம்வந்து வாய்க்கும்உரையாய்;
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரம்
ஜோதியே சுகவாரியே! 2

கல்லேனும் ஐயஒரு காலத்தில் உருகும்என்
கல்நெஞ்சம் உருகஇலையே,
கருணைக்கு இணங்காத வன்மையையும் நான்முகன்
கற்பிக்க ஒருகடவுளோ?

2. நான் அற்றேன் – தெய்வத்தன்மையை இழந்தேன். தண்முகை தனக்கும் உண்டோ – குளிர்ந்த அரும்பை நாடி வண்டு வருவதில்லை.

Koviloor Digital Library



வல்லான் வகுத்ததே வாய்க்கால் எனும்பெரு
வழக்குக்கு இழுக்கும்உண்டோ?
வானமாய் நின்றுஇன்ப மழையாய் இறங்கிஎனை
வாழ்விப்பது உன்பரம்காண்;

பொல்லாத சேய்எனில் தாய்தள்ளல் நீதமோ?
புகலிடம் பிறிதும்உண்டோ?
பொய்வார்த்தை சொல்லிலோ திருஅருட்கு அயலுமாய்ப்
புன்மையேன் ஆவன்,அந்தோ

சொல்லால் முழக்கிலோ சுகம் இல்லை, மௌனியாய்ச்
சும்மா இருக்கஅருளாய்;
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரம்
ஜோதியே சுகவாரியே! 3

என்புஎலாம் நெக்குஉடைய, ரோமம் சிலிர்ப்ப,உடல்
இளக,மனது அழலின்மெழுகாய்
இடையறாது உருக,வரு மழைபோல் இரங்கியே
இருவிழிகள் நீர் இறைப்ப,

அன்பினால் மூர்ச்சித்த அன்பருக்கு அங்ஙனே
அமிர்தசஞ் சீவிபோல்வந்து
ஆனந்த மழைபொழிவை; உள்அன்பு இலாதஎனை
யார்க்காக அடிமைகொண்டாய்,

புன்புலால் மயிர்தோல் நரம்புஎன்பு மொய்த்திடு
புலைக்குடிலில் அருவருப்புப்
பொய்அல்ல வே,இதனை மெய்என்று நம்பிஎன்
புந்திசெலு மோபாழிலே?

3. வன்மையை – உலகப்பற்றை. இழுக்கும் – தடையும். உன்பரம் – உன் கடமை. நீதமோ – பொருந்துமோ. புகலிடம் – அடைக்கலம் புகும் இடம். அயலுமாய் – வேற்றானாகி.

4. சஞ்சீவிபோல் – உயிர் கொடுக்கும் மூலிகை போல். புந்தி – அறிவு. பாழிலே – உலக வாழ்விலே.

Koviloor Digital Library


துன்பமாய் அலையவோ? உலகநடை ஐயஒரு
சொப்பனத் தினும்வேண்டிலேன்;
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரம்
ஜோதியே சுகவாரியே! 4

வெந்நீர் பொறாதுஎன்உடல்; காலில்முள் தைக்கவும்
வெடுக்கென்று அசைத்துஎடுத்தால்
விழிஇமைத்து அங்ஙனே தண்ணருளை நாடுவேன்;
வேறுஒன்றை ஒருவர்கொல்லின்

அந்நேரம் ஐயோஎன் முகம்வாடி நிற்பதுவும்
ஐயநின் அருள்அறியுமே,
ஆனாலும் மெத்தப் பயந்தவன் யான்என்னை
ஆண்டநீ கைவிடாதே;

இந்நேரம் என்றுஇலை உடல்சுமை,அது ஆகவும்
எடுத்தால் இறக்கஎன்றே
எங்குஎங்கும் ஒருதீர்வை ஆயம்உண்டு, ஆயினும்
இறைஞ்சுசுகர் ஆதியான

தொல்நீர்மை யாளர்க்கு மானுடம் வகுத்த அருள்
துணைஎன்று நம்புகின்றேன்;
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரம்
ஜோதியே சுகவாரியே! 5

பற்றுவன அற்றிடும் நிராசைஎன்று ஒருபூமி,
பற்றிப் பிடிக்கும்யோகப்
பாங்கில் பிராணலயம் என்னும்ஒரு பூமி,இவை
பற்றின்மனம் அறும்என்னவே

---

5. ஒரு தீர்வை ஆயம் உண்டு – ஒரு தீர்ப்பும், நியமனமும் உண்டு. இறைஞ்சுசுகர் – நெறி நிற்கின்ற சுகப்பிரம்மம். தொல்நீர்மையாளர்க்கு – சனாதன தர்மத்தைக் கடைப்பிடிக்கிறவர்களுக்கு.

6. பற்றுவன – பொறிகளால் நுகரப்படுபவைகள். அற்றிடும் – நீங்குதற்குக் காரணமாகிய. நிராசை – அவாவின்மை. யோகப் பாங்கில் – யோக சாதனத்தால்.

Koviloor Digital Library


கற்றைஅம் சடைமௌனி தானே கனிந்தகனி
கனிவிக்க வந்தகனிபோல்
கண்டதுஇந் நெறிஎனத் திருஉளக் கனிவினொடு
கனிவாய் திறந்தும் ஒன்றைப்

பெற்றவனும் அல்லேன் பெறாதவனும் அல்லேன்;
பெருக்கத் தவித்துஉளறியே
பெண்நீர்மை என்னஇரு கண்ணீர் இறைத்துநான்
பேய்போல் இருக்கஉலகம்

சுற்றிநகை செய்யவே உலையவிட் டாய்எனில்
சொல்லஇனி வாயும்உண்டோ?
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரம்
ஜோதியே சுகவாரியே! 6

அரும்பொனே மணியேஎன் அன்பேஎன் அன்பான
அறிவேஎன் அறிவில்ஊறும்
ஆனந்த வெள்ளமே என்றுஎன்று பாடினேன்,
ஆடினேன், நாடிநாடி

விரும்பியே கூவினேன், உலறினேன், அலறினேன்,
மெய்சிலிர்த்து இருகைகூப்பி
விண்மாரி எனஎன்இரு கண்மாரி பெய்யவே
வேசற்று அயர்ந்தேனியான்

இரும்புநேர் நெஞ்சகக் கள்வன் ஆனாலும்உனை
இடைவிட்டு நின்றதுஉண்டோ?
என்றுநீ அன்றுநான் உன்அடிமை அல்லவோ?
யாதேனும் அறியாவெறும்

---

கற்றை அம் சடை – திரட்டிக் கட்டிய அழகிய சடைமுடி. பெருக்கத்தவித்து உளறியே – மிகவும் இளைத்து அரற்றி. பெண் நீர்மை என்ன – இளகிய உள்ளம் படைத்தாற் போன்று.

7. அரும்பொனே – அருமையான தங்கமே. உலறினேன் – சினந்தேன். அலறினேன் – கூப்பாடு போட்டேன். வேசற்று – மனம் நொந்து.

Koviloor Digital Library


துரும்பனேன் என்னினும் கைவிடுதல் நீதியோ?
தொண்டரொடு கூட்டுகண்டாய்;
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரம்
ஜோதியே சுகவாரியே! 7

பார்ஆதி அண்டங்கள் அத்தனையும் வைக்கின்ற
பரவெளியின் உண்மைகாட்டிப்,
பற்றுமன வெளிகாட்டி, மனவெளியி னில்தோய்ந்த
பாவியேன் பரிசுகாட்டித்,

தாரான மாய்நிற்க நிச்சிந்தை காட்டிச்
சதாகால நிஷ்டைஎனவே
சகஜநிலை காட்டினை; சுகாதீத நிலையம்
தனைக்காட்ட நாள்செல்லுமோ?

கார்ஆர எண்ணரும் அனந்தகோ டிகள்நின்று
கால்ஊன்றி மழைபொழிதல்போல்
கால்வீசி மின்னிப் படர்ந்து,பர வெளிஎலாம்
கம்மி, ஆனந்தவெள்ளம்

சோராது பொழியவே கருணையின் முழங்கியே
தொண்டரைக் கூவுமுகிலே
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரம்
ஜோதியே சுகவாரியே! 8

பேதித்த சமயமோ ஒன்றுசொன படிஒன்று
பேசாது, துறவுஆகியே
பேசாத பெரியோர்கள் நிர்விகற் பத்தினால்
பேசார்கள், பரமகுருவாய்ப்

---

8. பரிசு காட்டி — தன்மையை விளக்கி. நிச்சிந்தை காட்டி — மனமற்ற நிலையைக் காட்டி. சகஜநிலை — உண்மைநிலை. சுகாதீத நிலையம் — இன்பத்துக்கப்பா லுள்ள பெருநிலை. கார்ஆர — மேகங்கள் நிறைந்த. கால்வீசி — காற்று வீசி.

9. பேதித்த சமயமோ — முரண்படுகின்ற சமயங்களோ. நிர்விகற்பத்தினால் — மனமற்ற சமாதியிலிருந்து. முக்கண்

Koviloor Digital Library


போதிக்கும் முக்கண்இறை நேர்மையாய்க் கைக்கொண்டு
போதிப்பது ஆச்சுஅறிவிலே,
போக்குவரவு அறஇன்ப நீக்கம்அற வசனமாப்
போதிப்பது எவர்ஐயனே?

சாதித்த சாதனமும் யோகியர்கள் நமதுஎன்று
சங்கிப்பர், ஆதலாலே
தன்னிலேதானாய் அயர்ந்துவிடு வோம்எனத்
தனிஇருந் திடின்,அங்ஙனே

சோதிக்க மனமாயை தனைஏவி னால்அடிமை
சுகம்ஆவது எப்படிசொலாய்;
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரம்
ஜோதியே சுகவாரியே! 9

அண்டமுடி தன்னிலோ, பகிரண்டம் அதனிலோ,
அலரிமண் டலநடுவிலோ,
அனல்நடுவி லோ,அமிர்த மதிநடுவி லோ,அன்பர்
அகம்உருகி மலர்கள்தூவி

தெண்டமிட வரும்மூர்த்தி நிலையிலோ, திக்குத்
திகந்தத்தி லோ, வெளியிலோ,
திகழ்விந்து நாதநிலை தன்னிலோ, வேதாந்த
சித்தாந்த நிலைதன்னிலோ,

கண்டபல பொருளிலோ, காணாத நிலைஎனக்
கண்டதூ னியம்அதனிலோ,
காலம் ஒரு மூன்றிலோ, பிறவிநிலை தன்னிலோ,
கருவிகர ணங்கள் ஓய்ந்த

---

இறை – மூன்று கண்களை உடைய சிவனார். சாதித்த சாதனமும் – பழகிய பயிற்சிகளும். சங்கிப்பர் – தடை சொல்லுவர்.

10. அலரி மண்டல நடுவிலோ – சூரிய மண்டலத்தின் நடுவிலோ. அமிர்தமதி – இன்பம் தருகிற சந்திரமண்டலம். திக்குத் திகந்தத்திலோ – திக்குகளிலும், திக்குகளுக்கு அப்பாலுமோ. வெளியிலோ – பரவெளியிலோ.

Koviloor Digital Library



தொண்டர்கள் இடத்திலோ நீவீற் றிருப்பது
தொழும்பனேற்கு உளவுபுகலாய்;
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரம்
ஜோதியே சுகவாரியே! 10

எந்தநாள் கருணைக்கு உரித்தாகும் நாள்? எனவும்
என்இதயம் எனைவாட்டுதே;
ஏதுஎன்று சொல்லுவேன்? முன்னொடுபின்
மலைவுஅறவும்
இற்றைவரை யாதுபெற்றேன்?

பந்தமா னதில்இட்ட மெழுகுஆகி உள்ளம்
பதைத்துப் பதைத்துஉருகவோ
பரமசுகம் ஆவது பொறுப்புஅரிய துயரமாய்ப்
பலகாலும் மூர்ச்சிப்பதோ?

சிந்தையா னதும்அறிவை, என்அறிவில் அறிவுஆன
தெய்வம்நீ அன்றிஉளதோ?
தேகம்நிலை அல்லவே உடைகப்பல் கப்பலாய்த்
திரைஆழி ஊடுசெலுமோ?

சொந்தமாய் ஆண்டநீ அறியார்கள் போலவே
துன்பத்தில் ஆழ்த்தல்முறையோ?
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரம்
ஜோதியே சுகவாரியே! 11

---

திகழ்விந்து நாதநிலை தன்னிலோ – விளங்குகின்ற விந்து, ஓசை ஆகிய இடங்களிலோ. கண்ட சூனியம் அதனிலோ – ஆராய்ச்சிக்கு எட்டிய பாழிலோ. பிறவிநிலை தன்னிலோ – மூல இயல்பின் கண்ணோ. கருவி கரணங்கள் ஒய்ந்த – மனதையும், இந்திரியங்களையும் வென்ற.

11. மலைவு – முரண்பாடு. பந்தமானதில் இட்ட – எரிகிற தீவட்டியில் வைத்த. பொறுப்பு அரிய துயரமாய் – தாங்க முடியாத துன்பமுற்று. உடைகப்பல் கப்பலாய் – உடைந்த கப்பலானது நல்ல கப்பலாக மாறி.

தா.6.

Koviloor Digital Library



எந்நாளும் உடலிலே உயிராம் உனைப்போல்
இருக்கஇலை யோ? மனதுஎனும்
யானும்என் நட்பாம் பிராணனும், எமைச்சடமது
என்றுஉனைச் சித்துஎன்றுமே

அந்நாளில் எவனோ பிரித்தான்; அதைக்கேட்ட
அன்றுமுதல் இன்றுவரையும்
அநியாய மாய்எமை அடக்கிக், குறுக்கே
அடர்ந்துஅரசு பண்ணி,எங்கள்

முன்னாக நீஎன்ன கோட்டைகொண் டாய்என்று
மூடமனம் மிகவும்ஏச,
மூண்டுஎரியும் அனல்இட்ட மெழுகாய் உளம்கருகல்
முறைமையோ? பதினாயிரம்

சொன்னாலும் நின்அருள் இரங்கஇலை யேஇனிச்
சுகம்வருவது எப்படிசொலாய்;
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரம்
ஜோதியே சுகவாரியே! 12

## 10. எங்கும் நிறைகின்ற பொருள்

அவன்அன்றி ஓர்அணுவும் அசையாது எனும்பெரிய
ஆப்தர்மொழி ஒன்றுகண்டால்,
அறிவுஆவது ஏது;சில அறியாமை ஏது;இவை
அறிந்தார்கள் அறியார்கள்ஆர்?

மௌனமொடு இருந்ததுஆர்? என்போல் உடம்புஎலாம்
வாயாய்ப் பிதற்றுமவர்ஆர்?
மனதுஎனவும் ஒருமாயை எங்கே இருந்துவரும்?
வன்மையொடு இரக்கம்எங்கே?

புவனம் படைப்பதுஎன்? கர்த்தவியம் எவ்விடம்?
பூதபே தங்கள்எவிடம்?

1. கர்த்தவியம் – செயல் என்னுடையது என்னும் எண்ணம். ஹிதம்அஹிதம் – ஒத்தவை, ஒவ்வாதவை.

Koviloor Digital Library


பொய்மெய், ஹிதம் அஹிதமே, வருநன்மை தீமையொடு
பொறைபொறா மையும்எவ்விடம்?

எவர்சிறியர்; எவர்பெரியர்; எவர்உறவர்; எவர்பகைஞர்;
யாதும்உனை அன்றிஉண்டோ?
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிர்ஆகி
எங்கும்நிறை கின்றபொருளே! 1

அன்னே அனேஎனும் சிலசமயம்; நின்னையே
ஐயாஐயா என்னவே
அலறிடும் சிலசமயம், அல்லாது பேய்போல
அலறியே ஒன்றும்இலவாய்ப்

பின்ஏதும் அறியாமல் ஒன்றைவிட்டு ஒன்றைப்
பிதற்றிடும் சிலசமயம்;மேல்
பேசரிய ஒளிஎன்றும் வெளிஎன்றும் நாதாதி
பிறவுமே நிலயம்என்றும்

தன்நேர் இலாததோர் அணுஎன்றும் மூவிதத்
தன்மையாம் காலம்என்றும்
சாற்றிடும் சிலசமயம்; இவை ஆகி, வேறதாய்ச்,
சதாஞான ஆனந்தமாய்,

என்னே எனேகருணை விளையாட்டு இருந்தவாறு!
எம்மனோர் புகலஎளிதோ?
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிர்ஆகி
எங்கும்நிறை கின்றபொருளே! 2

வேதமுடன் ஆகம புராணஇதி காசமுதல்
வேறும்உள கலைகள் எல்லாம்
மிக்காக அத்வைத த்வைதமார்க் கத்தையே
விரிவாய் எடுத்துஉரைக்கும்;

---

2. அன்னே அனே – தாயே தாயே. என்னே எனே – என்ன வியப்பு!

3. ஊகம் – யுக்தி. உபய வாதிகள் – அத்வைதிகள், துவைதிகள் ஆகிய இருதரத்தார். சரியை ஆதிகள் – சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய சாதனங்கள்.

Koviloor Digital Library


ஓதரிய த்வைதமே அத்வைத ஞானத்தை
உண்டுபணும் ஞானம்ஆகும்;
ஊகம்அனு பவம்வசனம் மூன்றுக்கும் ஒவ்வும்ஈது;
உபயவா திகள்சம்மதம்

ஆதலின் எனக்குஇனிச் சரியைஆ திகள்போதும்;
யாதுஒன்று பாவிக்கநான்
அதுஆத லால்,உன்னை நான்என்று பாவிக்கின்
அத்வைத மார்க்கம்உறலாம்;

ஏதுபா வித்திடினும் அதுவாகி வந்தருள்செய்
எந்தைநீ குறையும்உண்டோ?
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிர்ஆகி
எங்கும்நிறை கின்றபொருளே! 3

சொல்லான தில்சற்றும் வாராத பிள்ளையைத்
தொட்டில்வைத்து ஆட்டிஆட்டித்
தொடையினைக் கிள்ளல்போல் சங்கற்பம் ஒன்றில்
தொடுக்கும்; தொடுத்துஅழிக்கும்;

பொல்லாத வாதனை எனும்சப்த பூமியிடை
போந்துதலை சுற்றிஆடும்;
புருஷனில் அடங்காத பூவைபோல் தானே
புறம்போந்து சஞ்சரிக்கும்;

கல்லோடு இரும்புக்கும் மிகவன்மை காட்டிடும்;
காணாது கேட்டஎல்லாம்
கண்டதாக் காட்டியே அணுவாச் சுருக்கிடும்;
கபடநா டகஞாலமோ

எல்லாமும் வலதுஇந்த மனமாயை ஏழையாம்
என்னால் அடக்கவசமோ?
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிர்ஆகி
எங்கும்நிறை கின்றபொருளே! 4

---

4. சங்கற்பம் – இச்சையோடு கூடிய எண்ணம். வாதனை – வாசனை, பழைய பிறவியின் கூறு. சப்த பூமியிடை – ஞான பூமிகள் ஏழினுள். அணுவாச் சுருக்கிடும் – ஒன்றுமிலாது செய்து விடும்.

Koviloor Digital Library



கண்ணார நீர்மல்கி உள்ளம்நெக்கு உருகாத
கள்ளனேன் ஆனாலுமோ
கைகுவித்து ஆடியும் பாடியும் விடாமலே
கண்பனித் தாரைகாட்டி,

அண்ணா பரஞ்ஜோதி அப்பா உனக்குஅடிமை
யான்எனவும் மேல்எழுந்த
அன்புஆகி நாடகம் நடித்ததோ குறைவுஇல்லை,
அகிலமும் சிறிது அறியுமேல்

தண்ணாரும் நின்னதுஅருள் அறியாதது அல்லவே,
சற்றேனும் இனிதுஇரங்கிச்
சாசுவத முக்திநிலை ஈதுஎன்று உணர்த்தியே
சஹஜநிலை தந்து,வேறுஒன்று

எண்ணாமல் உள்ளபடி சுகமாய் இருக்கவே
ஏழையேற்கு அருள்செய்கண்டாய்;
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிர்ஆகி
எங்கும்நிறை கின்றபொருளே! 5

காகம்ஆ னதுகோடி கூடிநின் றாலும்ஒரு
கல்லின்முன் எதிர்நிற்குமோ?
கர்மம்ஆ னதுகோடி முன்னேசெய் தாலும்நின்
கருணைப்ர வாக அருளைத்

தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ?
தமியனேற்கு அருள்தாகமோ
சற்றும்இலை என்பதுவும் வெளியாச்சு; வினையெலாம்
சங்கேத மாய்க்கூடியே

5. கண்பனித்தாரை – குளிர்ச்சியான இன்பக்கண்ணீர் வடித்தல். சாசுவத முக்தி நிலை – யாண்டும் உள்ள வீடுபேறு. சஹஜ நிலை – இயல்பாயுள்ள ஆன்ம ஞானம்.

6. கருணை ப்ரவாகம் – கருணைப் பெருக்கு. சங்கேதமாய்க் கூடியே – கட்டுப்பாட்டோடு ஒன்று கூடி. சஹஜ நிஷ்டைக்கும் – ஞானியர்கள் புரிகிற வியவகாரத்துக்கும்.

Koviloor Digital Library



தேகம்ஆ னதைமிகவும் வாட்டுதே; துன்பங்கள்
சேராமல் யோகமார்க்க
சித்தியோ வரவில்லை; சஹஜநிஷ் டைக்கும்என்
சிந்தைக்கும் வெகுதூரம்;நான்

ஏகமாய் நின்னோடு இருக்கும்நாள் எந்தநாள்
இந்நாளில் முற்றுஉறாதோ?
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிர்ஆகி
எங்கும்நிறை கின்றபொருளே! 6

ஒருமைமனது ஆகியே அல்லல்அற நின்அருளில்
ஒருவன்நான் வந்திருக்கின்
உலகம் பொறாததோ? மாயா விசித்ரம்என
ஓயுமோ? இடம்இல்லையோ?

அருளுடைய நின்அன்பர் சங்கைசெய் திடுவரோ?
அலதுகிர்த் தியகர்த்தராய்
அகிலம் படைத்துஎம்மை ஆள்கின்ற பேர்சிலர்
அடாதுஎன் பரோ அகன்ற

பெருமைபெறு பூரணம் குறையுமோ? பூதங்கள்
பேய்க்கோல மாய்விதண்டை
பேசுமோ? அலதுதான் பரிபாக காலம்
பிறக்கஇலை யோ? தொல்லையாம்

இருமைசெறி ஜடவினை எதிர்த்துவாய் பேசுமோ?
ஏதுஉளவு சிறிதுபுகலாய்;
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிர்ஆகி
எங்கும்நிறை கின்றபொருளே! 7

7. மாயா விசித்ரம் – உலக வியவகாரங்கள். சங்கை – தடை. கிர்த்திய கர்த்தராய் – முத்தொழில்களுக்குத் தலைவர் களாகி. தொல்லையாம் – காலத்துக்கு எட்டாத. இருமை செறி – நலம் கேடு அமைந்துள்ள. ஜடவினை – உணர்ச்சி யற்ற கர்மம். ஏது உளவு – எது உண்மை.

Koviloor Digital Library



நில்லாது தேகம்எனும் நினைவுண்டு, தேகம்நிலை
நின்றிடவும் மௌனியாகி
நேரே உபாயம்ஒன்று அருளினை; ஐயோ இதனை
நின்றுஅனுஷ் டிக்கஎன்றால்

கல்லாத மனமோ ஒடுங்கி உபரதிபெறக்
காணஇலை; ஆகையாலே
கைஏற்று உணும்புசிப்பு ஒவ்வாது; எந்நாளும்உன்
காட்சியில் இருந்துகொண்டு

வல்லாள ராய்இயம நியமாதி மேற்கொண்ட
மாதவர்க்கு ஏவல்செய்து
மனதின் படிக்குஎலாம் சித்திபெற லாம்; ஞானம்
வாய்க்கும்;ஒரு மனுஎனக்கு;இங்கு

இல்லாமை ஒன்றினையும் இல்லாமை ஆக்கவே
இப்போது இரங்குகண்டாய்;
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிர்ஆகி
எங்கும்நிறை கின்றபொருளே! 8

மரவுரி உடுத்தும்மலை வனநெல் கொறித்தும்உதிர்
வனசருகு வாயில்வந்தால்
வன்பசி தவிர்த்தும்அனல் வெயில்ஆதி மழையால்
வருந்தியும் மூலஅனலைச்

---

8. உபரதி – செயலற்ற நிலை. இயமம் – அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரம்மச்சரியம், அபரிக்கிரஹம். (கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பொறிவழிச் செல்லாமை, பொருள் மிகப் படையாமை) ஆகிய இப்பஞ்ச சீலம் இயமம் எனப்படும். நியமாதி – சௌசம், சந்தோஷம், சுவாத்யாயம், ஆர்ஜவம், ஆத்ம சமர்ப்பணம் (தூய்மை, மாண்புள்ள மன உவகை, நூல் ஆராய்ச்சி, நேர்மை, அருள் திட்டத்தோடு தன்னை இணைத்துக் கொள்ளுதல்) ஆகியவற்றை. மாதவர்க்கு – பெரும் துறவியர்க்கு.

9. அனல் வெயில் ஆதி – நெருப்பு, வெயில் முதலான. மூலஅனலை – குண்டலினி சக்தியை.

Koviloor Digital Library



சிரம்அளவு எழுப்பியும் நீரினிடை மூழ்கியும்
தேகம்நமது அல்லஎன்று
சிற்சுக அபேக்ஷையாய் நின்அன்பர் யோகம்
செலுத்தினார்; யாம்பாவியேம்

விரவும்அறு சுவையினொடு வேண்டுவ புசித்து,அரையில்
வேண்டுவ எலாம்உடுத்து,
மேடைமா ளிகைஆதி வீட்டினிடை வைகியே,
வேறொரு வருத்தம்இன்றி,

இரவுபகல் ஏழையர்கள் சையோகம் ஆயினோம்;
எப்படிப் பிழைப்பதுஉரையாய்?
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிர்ஆகி
எங்கும்நிறை கின்றபொருளே! 9

முத்தனைய மூரலும் பவளவாய் இன்சொலும்
முகத்துஇலகு பசுமஞ்சளும்
மூர்ச்சிக்க விரகசன் னதம்ஏற்ற இருகும்ப
முலையின்மணி மாலைநால

வைத்துஎமை மயக்கி,இரு கண்வலையை வீசியே
மாயா விலாசமோக
வாரிதியில் ஆழ்த்திடும் பாழான சிற்றிடை
மடந்தையர்கள் சிற்றின்பமோ

புத்தமிர்த போகம் புசித்துவிழி இமையாத
பொன்நாட்டும் வந்ததுஎன்றால்,
போராட்டம் அல்லவோ பேரின்ப முக்திஇப்
பூமியில் இருந்துகாண

---

சிற்சுக அபேக்ஷையாய் – ஞானானந்தத்தை விரும்பி. வைகியே – தங்கியிருந்து. சையோகம் – போகம், கூட்டுறவு.

10. மூரலும் – பற்களும். விரகசன்னதம் – காமவெறி. புத்தமிர்தபோகம் – புதியதாகச் சமைத்த உணவை உண்ணும் அனுபவம். விகாரம் – தடை.

Koviloor Digital Library



எத்தனை விகாரம்வரும் என்றுசுகர் சென்றநெறி
இவ்வுலகம் அறியாததோ;
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிர்ஆகி
எங்கும்நிறை கின்றபொருளே! 10

உன்நிலையும் என்நிலையும் ஒருநிலை எனக்கிடந்து
உளறிடும் அவஸ்தைஆகி
உருவுதான் காட்டாத ஆணவமும் ஒளிகண்டு
ஒளிக்கின்ற இருள்என்னவே

தன்நிலைமை காட்டாது ஒருங்கஇரு வினையினால்
தாவுசுக துக்கவேலை
தட்டழிய முற்றும்இல் லாமையை அதனால்
தடித்துஅகில பேதம்ஆன

முன்னிலை ஒழிந்திட அகண்டிதா காரமாய்
மூதறிவு மேல்உதிப்ப
முன்பினொடு கீழ்மேல் நடுப்பக்கம் என்னாமல்
முற்றும்ஆ னந்தநிறைவே

என்நிலைமை யாய்நிற்க இயல்புகூர் அருள்வடிவம்
எந்நாளும் வாழிவாழி
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிர்ஆகி
எங்கும்நிறை கின்றபொருளே! 11

## 11. சச்சிதானந்தசிவம்

பார்ஆதி ககனப் பரப்பும்உண் டோஎன்று
படர்வெளியது ஆகிஎழுநாப்
பரிதிமதி காணாச் சுயஞ்ஜோதி யாய்அண்ட
பகிரண்ட உயிர்எவைக்கும்

நேராக அறிவாய் அகண்டமாய் ஏகமாய்
நித்தமாய் நிர்த்தொந்தமாய்

---

11. அவஸ்தை – மனநிலை. ஒருங்க – அடங்க.

1. படர் வெளியது ஆகி – பரவெளியாகி. எழுநா – ஏழு கொழுந்து விட்டு எரியும் தீ.

Koviloor Digital Library



நிர்க்குண விலாசமாய் வாக்குமனம் அணுகாத
நிர்மலா னந்தமயமாய்ப்

பேராது நிற்றிநீ சும்மா இருந்துநான்
பேரின்பம் எய்திடாமல்
பேய்மனதை அண்டியே தாய்இலாப் பிள்ளைபோல்
பித்தாக வோ? மனதை நான்

சாராத படிஅறிவில் நிர்விகற் பாங்கமாம்
சாசுவத நிஷ்டை அருளாய்;
சர்வபரி பூரண அகண்டதத் துவம்ஆன
சச்சிதா னந்தசிவமே! 1

குடக்கொடு குணக்காதி திக்கினை உழக்கூடு
கொள்ளல்போல் ஐந்துபூதம்
கூடும் சுருங்குஇலைச் சாலேகம் ஒன்பது
குலாவுநடை மனையை;நாறும்

வடக்கயிறு வெண்நரம் பா,என்பு தசையினால்
மதவேள் விழாநடத்தி
வைக்கின்ற கைத்தேரை; வெண்ணீர்செந் நீர்கணீர்
மலநீர்புண் நீர்இறைக்கும்

விடக்குத் துருத்தியைக்; கருமருந் துக்கூட்டை;
வெட்டவெட் டத்தளிர்க்கும்
வேட்கைமரம் உறுகின்ற சுடுகாட்டை;முடிவிலே
மெய்போல் இருந்துபொய்யாம்

---

நிர்த்தொந்தமாய் – இரண்டற்றதாகி. நிர்க்குணவிலாசமாய் – முக்குணங்களுக்கு அப்பாலுள்ள பெரு நிலையமாகி. பேராது நிற்றிநீ – நீ அசையாது நிற்கின்றாய். அறிவின் நிர்விகற்ப அங்கமாம் – தேங்கிய தூய அறிவாகி. சாசுவத நிஷ்டை – தட்டுப்பாடில்லாத ஆன்ம ஞானம்.

2. குடக்கொடு – மேற்குத் திசையுடன். குணக்காதி – கீழ்த்திசை முதலான. உழக்கூடு – ஆழாக்கின் கண். சாலேகம் ஒன்பது – ஒன்பது துவாரங்கள். கைத்தேரை – சிறு உடலை. வெண்ணீர் – கோழை. செந்நீர் – இரத்தம்.

Koviloor Digital Library



சடக்கைச், சடக்கெனச், சதம்என்று சின்மயம்
தானாகி நிற்பதுஎன்றோ?
சர்வபரி பூரண அகண்டதத் துவம்ஆன
சச்சிதா னந்தசிவமே! 2

பாகத்தி னால்கவிதை பாடிப் படிக்கவோ
பக்திநெறி இல்லை;வேத
பாராய ணப்பனுவல் மூவர்செய் பனுவலது
பகரவோ இசையும்இல்லை;

யோகத்தி லேசிறிது முயலஎன் றால்தேகம்
ஒவ்வாது; இவ்ஊண்வெறுத்தால்
உயிர்வெறுத் திடல்ஒக்கும்; அல்லது கிரியைகள்
உபாயத் தினால்செய்யவோ

மோகத்தி லேசிறிதும் ஒழியஇலை; மெய்ஞ்ஞான
மோனத்தில் நிற்கஎன்றால்
முற்றாதுபரிபாக சக்திகள் அனேகம்,நின்
மூதறிவி லேஎழுந்த

தாகத்தி லேவாய்க்கும் அமிர்தப்ர வாகமே!
தன்னந் தனிப்பெருமையே!
சர்வபரி பூரண் அகண்டதத் துவம்ஆன
சச்சிதா னந்தசிவமே! 3

---

கணீர் – கண்ணீர். மலநீர் – மூத்திரம். புண்நீர் – சீழ். இறைக்கும் – நிறைந்துள்ள. விடக்குத் துருத்தியை – மாமிசத் துருத்தியை. கருமருந்துக்கூட்டை – பிறவி என்னும் மருந்து விளைகிற உடலை. சடக்கை – சரீரத்தை. சடக்கென – பொய்யென்று.

3. பாகத்தினால் - பாட்டுக்குரிய மூன்றுவித நல்ல அமைப்புக்களுடன். பரிபாக சக்திகள் அனேகம் - இடையூறுகள் பல உள. தாகத்திலே வாய்க்கும் - முமுக்ஷுத்வம் அல்லது முக்தியில் ஆசை உண்டாகிற. அமிர்தப்ரவாகமே - பேரானந்தப் பெருக்கே.

Koviloor Digital Library



இமைஅளவு போதைஒரு கற்பகா லம்பண்ணும்,
இவ்வுலகம் எவ்வுலகமோ
என்றுஎண்ணம் வருவிக்கும்; மாதர்சிற் றின்பமோ
என்னின்மக மேருஆக்கிச்,

சுமைஎடுமின் என்றுதான் சும்மாடு மாய்,எமைச்
சுமைஆளும் ஆக்கி,நாளும்
துர்ப்புத்தி பண்ணி,உள நற்புத்தி யாவையும்
தூறையிட்டு, இந்த்ரஜாலம்

அமையஒரு கூத்தும் சமைந்துஆடும் மனமாயை;
அம்மம்ம வெல்லஎளிதோ?
அருள்பெற்ற பேர்க்குஎலாம் ஒளிபெற்று நிற்கும்ஈது
அருளோ? அலாதுமருளோ?

சமயநெறி காணாத சாக்ஷிநீ, சூக்ஷமமாத்
தமியனேற்கு உளவுபுகலாய்
சர்வபரி பூரண அகண்டதத் துவம்ஆன
சச்சிதா னந்தசிவமே! 4

இனிஏது எமக்குஉன்அருள் வருமோ எனக்கருதி
ஏங்குதே நெஞ்சம்ஐயோ
இன்றைக்கு இருந்தாரை நாளைக்கு இருப்பார்என்று
எண்ணவோ திடம்இல்லையே;

அநியாய மாய்இந்த உடலைநான் என்றுவரும்
அந்தகற்கு ஆளாகவோ?
ஆடித் திரிந்துநான் கற்றதும் கேட்டதும்
அவலமாய்ப் போதல்நன்றோ?

4. இமைஅளவு போதை ஒரு கற்பகாலம் பண்ணும் – இமைப்பொழுதை நெடுங்காலம் ஆக்கும். சூக்ஷமமா – நுட்பமாய்.

5. நான் என்றுவரும் அந்தகற்கு ஆளாகவோ – தான் அல்லாத உடலை தான் என மயங்கி அழிந்துபட்டுப் போகவோ. கந்தமூலங்களேனும் – உணவாகப் பயன்படும் கிழங்குகளாயினும். கனல்வாதை – பசி.

Koviloor Digital Library


கனியேனும் வறியசெங் காயேனும் உதிர்சருகு
கந்தமூ.லங்களேனும்
கனல்வாதை வந்துஎய்தின் அள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனிஆகித்

தனியே இருப்பதற்கு எண்ணினேன்; எண்ணம் இது
சாமிநீ அறியாததோ?
சர்வபரி பூரண அண்டதத் துவம்ஆன
சச்சிதா னந்தசிவமே! 5

மத்தமத கரிமுகில் குலம்என்ன நின்றுஇலகு
வாயிலுடன் மதிஅகடுதோய்
மாடகூ டச்சிகரம் மொய்த்தசந் திரகாந்த
மணிமேடை உச்சிமீது,

முத்தமிழ் முழக்கமுடன் முத்தநகை யார்களொடு
முத்துமுத் தாய்க்குலாவி
மோகத்து இருந்தும்என்? யோகத்தின் நிலைநின்று
மூச்சைப் பிடித்துஅடைத்துக்

கைத்தலம் நகப்படை விரித்தபுலி சிங்கமொடு
கரடிநுழை நூழைகொண்ட
கானம்மலை உச்சியில் குகையூடு இருந்தும்என்?
கரதலா மலகம் என்னச்

6. நின்று இலகு – தென்படுகின்ற. மதி அகடு தோய் – சந்திரனின் நடுப்பக்கத்தைத் தொடுகின்ற. சந்திரகாந்த மணிமேடை உச்சி மீது – ரத்தினங்கள் அமைத்த மேடையின் உச்சியில். மோகத்து இருந்தும் என்? – ஆசையில் அழுந்திக்கிடந்தால் என்ன நஷ்டம்? நகப்படை விரித்த – நகமாகிய ஆயுதங்களை விரித்த. நூழைகொண்ட – அடர்ந்துள்ள. கரதலாமலகம் (கரதல + ஆமலகம்) என்ன – கையிலுள்ள நெல்லிக்கனிபோல. சனகாதி துணிவு இது அன்றோ – சனகன் முதலிய முனிவர்கள் கொள்கை இதுவாகும் அன்றோ.

Koviloor Digital Library


சத்தம்அற மோனநிலை பெற்றவர்கள் உயர்வர்காண்
சனகாதி துணிவுஇது அன்றோ?
சர்வபரி பூரண அகண்டதத் துவம்ஆன
சச்சிதா னந்தசிவமே! 6

கைத்தலம் விளங்கும்ஒரு நெல்லிஅம் கனிஎனக்
கண்டவே தஆகமத்தின்
காட்சிபுரு ஷார்த்தம்;அதில் மாட்சிபெறும் முக்தி;அது
கருதின்அனு மானம்ஆதி

யுக்திபல வாம்;நிர் விகற்பம்மேல் இல்லையால்
ஒன்றோடு இரண்டுஎன்னவோ
உரையும்இலை, நீயும்இலை, நானும்இலை என்பதும்
உபாயம்;நீ உண்டு,நானும்

சித்தம்உளன், நான்இல்லை எனும்வசனம் நீ அறிவை;
தெரியார்கள் தெரியவசமோ?
செப்புகே வலநீதி ஒப்புஉவமை அல்லவே;
சின்முத்தி ராங்கமரபில்

சத்தம்அற எனைஆண்ட குருமௌனி கையினால்
தமியனேற்கு உதவுபொருளே;
சர்வபரி பூரண அகண்டதத் துவம்ஆன
சச்சிதா னந்தசிவமே! 7

காயாத மரமீது கல்லேறு செல்லுமோ?
கடவுள்நீ; யாங்கள் அடியேம்;
கர்மபந் தத்தினால் ஜன்மபந் தம்பெறக்
கற்பித்தது உன்னதுஅருளே;

---

7. வேத ஆகமத்தின் காட்சி – நூல்களின் குறிக்கோள். புருஷார்த்தம் – அறம், பொருள், இன்பம், வீடு. மாட்சி பெறும் முக்தி – வீடுபேறு மேன்மையடையும். அனுமானம் ஆதியுக்திபலவாம் – ஆராய்ச்சிக்கு முடிவில்லை. நிர்விகற்ப மேல் இல்லையால் – சமாதி நிலையில் இந்த ஆராய்ச்சிகள் பயன்படமாட்டா. கேவல நீதி – முக்தி நெறியின் ஒழுங்கிற்கு. சின்முத்திராங்க மரபில் – ஞான மார்க்க மரபில். சத்தம் அற – சொல்லைக்கடந்து.

Koviloor Digital Library



வாயார உண்டபேர் வாழ்த்துவதும் நொந்தபேர்
வைவதுவும் எங்கள்உலக
வாய்பாடு; நிற்கநின் வைதிக ஒழுங்குநினை
வாழ்த்தினால் பெறுபேறுதான்

ஓயாது பெறுவர்என முறையிட்ட தால்பின்னர்
உளறுவது கர்மம் அன்றாம்;
உபயநெறி ஈதுஎன்னின் உசிதநெறி எந்தநெறி?
உலகிலே பிழைபொறுக்கும்

தாயான கருணையும் உனக்குஉண்டு; எனக்குஇனிச்
சஞ்சலம் கெடஅருள்செய்வாய்;
சர்வபரி பூரண அகண்டதத் துவம்ஆன
சச்சிதா னந்தசிவமே! 8

இன்னம் பிறப்பதற்கு இடம்என்னின் இவ்வுடலம்
இறவா திருப்பமூலத்து
எழும்அங்கி அமிர்துஒழுகும் மதிமண்ட லத்தில்உற,
என்அம்மை குண்டலினிபால்

பின்னம் பிறக்காது சேய்என வளர்த்திடப்
பேயேனை நல்கவேண்டும்;
பிறவாத நெறிஎனக்கு உண்டுஎனின் இம்மையே
பேசுகற் பூரதீபம்

மின்னும் படிக்குஅகண் டாகார அன்னைபால்
வினையேனை ஒப்புவித்து
வீட்டுநெறி கூட்டிடுதல் மிகவும்நன்று; இவைஅன்றி
விவகாரம் உண்டுஎன்னிலோ

---

8. உளறுவது கர்மம் அன்றாம் – வியவகாரங்கள் பண்ணுதல் நற்கருமம் ஆகா.

9. மூலத்து எழும்அங்கி – மூலாதாரத்தில் உருவெடுக்கிற அக்னியானது. அமிர்து ஒழுகும் – அமிர்த தாரை சொட்டுகிற. மதிமண்டலத்தில் உற – சஹஸ்ராரத்தில் தாக்கும்படி. விவகாரம் - பந்தபாச வாழ்வு.

Koviloor Digital Library


தன்னந் தனிச்சிறியன் ஆற்றிலேன்; போற்றி.வளர்
சன்மார்க்க முக்திமுதலே!
சர்வபரி பூரண அகண்டதத் துவம்ஆன
சச்சிதா னந்தசிவமே! 9

வேதாவை இவ்வணம் விதித்ததுஏது என்னின்,உன்
வினைப்பகுதி என்பன்,அந்த
வினைபேச அறியாது, நிற்கஇவை மனதால்
விளைந்ததால் மனதைநாடில்

போதமே நிற்கும்;அப் போதத்தை நாடிலோ
போதமும்நின் னால்விளக்கம்;
பொய்அன்று; தெய்வமறை யாவுமே நீஎன்று
போக்குவரவு அறநிகழ்த்தும்;

ஆதார ஆதேயம் முழுதும்நீ ஆதலால்
அகிலமீது என்னைஆட்டி
ஆடல்கண் டவனும்நீ; ஆடுகின் றவனும்நீ;
அருளும்நீ; மௌனஞான

தாதாவும் நீ;பெற்ற தாய்தந்தை தாமும்நீ;
தமரும்நீ; யாவும்நீகாண்;
சர்வபரி பூரண அகண்டதத் துவம்ஆன
சச்சிதா னந்தசிவமே! 10

கொந்துஅவிழ் மலர்ச்சோலை நல்நிழல் வைகினும்;
குளிர்தீம் புனல்கைஅள்ளிக்
கொள்ளுகினும்; அந்நீ ரிடைத்திளைத்து ஆடினும்;
குளிர்சந்த வாடை மடவார்

---

10. வேதாவை – படைப்புத் தெய்வத்தை நோக்கி. போதமேநிற்கும் – அறிவு நிலைத்திருக்கும். ஆதார ஆதேயம் – தாங்குபவனும், தாங்கப்பெறுபவனும். தாதாவும் நீ – கொடுப்பவனும் நீ. தமரும் நீ – உறவினனும் நீ.

11. தீம்புனல் கை அள்ளிக் கொள்ளுகினும் – சுவையான நீரைக் கையினால் அள்ளி உட்கொண்டாலும்.

Koviloor Digital Library

வந்துஉலவு கின்றதுஎன முன்றிலிடை உலவவே
வசதிபெறு போதும்;வெள்ளை
வட்டமதி பட்டப் பகல்போல நிலவுதர
மகிழ்போதும்; வேலைஅமுதம்

விந்தைபெற அறுசுவையில் வந்ததுஎன அமுதுஉண்ணும்
வேளையிலும்; மாலைகந்தம்
வெள்ளிலை அடைக்காய் விரும்பிவேண் டியவண்ணம்
விளையாடி விழிதுயிலினும்;

சந்ததமும் நின்அருளை மறவா வரம்தந்து
தமியேனை ரக்ஷைபுரிவாய்;
சர்வபரி பூரண அகண்டதத் துவம்ஆன
சச்சிதா னந்தசிவமே! 11

## 12. தேஜோ மயானந்தம்

மருமலர்ச் சோலைசெறி நல்நீழல் மலைஆதி
மன்னும்முனி வர்க்குஏவலாய்,
மந்த்ரமா லிகைசொல்லும் இயமநிய மாதியாம்
மார்க்கத்தில் நின்றுகொண்டு,

கருமருவு காயத்தை நிர்மலமது ஆகவே
கமலாச னாதிசேர்த்துக்,
காலைப்பிடித்து, அனலை அம்மைகுண் டலிஅடிக்
கலைமதியி னூடுதாக்கி,

உருகிவரும் அமிர்தத்தை உண்டுஉண்டு, உறங்காமல்
உணர்வான விழியைநாடி,
ஒன்றோடு இரண்டுஎனாச் சமரச சொரூபசுகம்
உற்றிட,என் மனதின்வண்ணம்

---

வேலை அமுதம் – கடலில் எடுத்த அமுதமானது. மாலைகந்தம் – பூமாலையும் நறுமணமும். வெள்ளிலை அடைக்காய் – வெற்றிலையும் பாக்கும்.

1. மந்த்ர மாலிகை – ஜபமாலை. கருமருவு காயத்தை – கர்ப்பத்தில் வருந்துகிற உடலை. கமலாசனாதி சேர்த்து – பத்மாசனம் முதலியன அமைத்து. காலைப் பிடித்து – பிரா

 Koviloor Digital Library 

திருவருள் முடிக்கஇத் தேகமொடு காண்பனோ?
தேடரிய சத்துஆகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவுஆன தெய்வமே!
தேஜோ மயானந்தமே! 1

இப்பிறவி என்னும்ஓர் இருள்கடலில் மூழ்கி,நான்
என்னும்ஒரு மகரவாய்ப்பட்டு,
இருவினை எனும்திரையின் எற்றுண்டு, புற்புதம்
எனக்கொங்கை வரிசைகாட்டும்

துப்புஇதழ் மடந்தையர் மயல்சண்ட மாருதச்
சுழல்வந்து வந்துஅடிப்பச்
சோராத ஆசையாம் கான்ஆறு வான்நதி
சுரந்ததுஎன மேலும்ஆர்ப்பக்,

கைப்பரிசு காரர்போல் அறிவுஆன வங்கமும்
கைவிட்டு மதிமயங்கிக்,
கள்ளவங் கக்காலர் வருவர்என்று அஞ்சியே
கண்அருவி காட்டும்எளியேன்,

செப்பரிய முக்தியாம் கரைசேர வும்கருணை
செய்வையோ? சத்துஆகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவுஆன தெய்வமே!
தேஜோ மயானந்தமே 2

தந்தைதாய் தமர்தாரம் மகவுஎன்னும் இவைஎலாம்
சந்தையில் கூட்டம்,இதிலோ

---

ணாயாமம் செய்து. அனலை – மூலாதாரத்திலுள்ள அக்னியை. கலைமதியினூடு தாக்கி – சஹஸ்ராரத்தை எட்டும்படி செய்து. உணர்வான விழியை நாடி – ஞானக் கண்கொண்டு பார்த்து.

2. மகரவாய்ப்பட்டு – சுறா மீனின் வாயில் அகப்பட்டு. புற்புதம் என – நீர்க்குமிழி போன்ற. துப்பு இதழ் – பவளம் போன்ற உதடு. அறிவுஆன வங்கமும் கைவிட்டு – ஞானக் கப்பலினின்றும் விலகி. கள்ளவங்கக்காலர் – திருட்டுக் கப்பலையொத்த யமபடர்.

Koviloor Digital Library


சந்தேகம் இல்லை,மணி மாடம்மா ளிகைமேடை
சதுரங்க சேனையுடனே
வந்ததுஓர் வாழ்வும்ஓர் இந்த்ரஜா லக்கோலம்;
வஞ்சனை பொறாமைலோபம்
வைத்தமன மாம்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வாஞ்சனை இலாதகனவே;
எந்தநா ளும்சரி எனத்தேர்ந்து தேர்ந்துமே
இரவுபகல் இல்லாஇடத்து
ஏகமாய் நின்றநின் அருள்வெள்ளம் மீதிலே
யான்என்பது அறவும்மூழ்கிச்
சிந்தைதான் தெளியாது சுழலும்வகை என்கொலோ?
தேடரிய சத்துஆகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவுஆன தெய்வமே!
தேஜோ மயானந்தமே! 3

ஆடாமல் ஓய்ந்திட்ட பம்பரம் போல்விசை
அடங்கிமனம் வீழ,நேரே
அறியாமை ஆகின்ற இருள்அகல இருள்ஒளியும்
அல்லாது இருந்தவெளிபோல்
கோடாது எனைக்கண்டு எனக்குள்நிறை சாந்தவெளி
கூடிஇன் பாதீதமும்
கூடினே னோ;சரியை கிரியையில் முயன்றுநெறி
கூடினேனோ அல்லன்யான்

---

3. இந்த்ரஜாலக்கோலம் – அழகான கண்கட்டு மயக்கம். மலபாண்டமோ – அழுக்கு நிறைந்த உடலோ. வாஞ்சனை – விருப்பம்.

4. வெளிபோல் – அறிவுப் பெருவெளி போன்று. கோடாது எனைக் கண்டு – பிசகாது என்னைப் பார்த்து. இன்ப அதீதமும் – ஆனந்தத்துக்கு அப்பாலுள்ள பெரு நிலையும். சரியை கிரியையில் – ஒழுக்கத்திலும், கரும யோகத்திலும். ஆறு வீட்டினில் – உடலிலுள்ள மூலாதாரம் முதலிய ஆறு யோக வீடுகளில். இருநிதியினைக்கட்டி – இட,

Koviloor Digital Library


ஈடாக வேஆறு வீட்டினில் நிரம்பியே
இலகிவளர் பிராணன்என்னும்
இருநிதி யினைக்கட்டி யோகபரன் ஆகாமல்
ஏழைக் குடும்பனாகித்

தேடாது அழிக்கஒரு மதிவந்தது என்கொலோ?
தேடரிய சத்துஆகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவுஆன தெய்வமே!
தேஜோ மயானந்தமே! 4

பாடாது பாடிப் படித்து,அளவு இல் சமயமும்
பஞ்சுபடு சொல்லன் இவனைப்
பார்மினோ பார்மினோ என்றுசபை கூடவும்
பரமார்த்தம் இதுஎன்னவே

ஆடாதும் ஆடி,நெஞ்சு உருகிநெக்கு ஆடவே
அமலமே, ஏகமே,எம்
ஆதியே, ஜோதியே, எங்குநிறை கடவுளே,
அரசே எனக்கூவிநான்

வாடாது வாடும்என் முகவாட்ட மும்கண்டு
வாடா எனக்கருணைநீ
வைத்திடா வண்ணமே சங்கேத மாஇந்த
வன்மையை வளர்ப்பித்ததுஆர்?

தேடாது தேடுவோர் தேட்டற்ற தேட்டமே,
தேடரிய சத்துஆகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவுஆன தெய்வமே!
தேஜோ மயானந்தமே! 5

---

பிங்கள என்னும் இரண்டு செல்வங்களைச் சமப்படுத்தி. யோகபரன் – யோக சாதனத்தில் வல்லவன். ஒரு மதி வந்தது – ஒரு புல்லறிவு வந்தது.

5. பஞ்சுபடு சொல்லன் – பொருளற்ற வீண்வார்த்தை பேசுபவன். பரம அர்த்தம் – மேலான பொருள். நெக்கு ஆடவே – நெகிழ்ந்து ஆட. அமலமே – தூய பொருளே. தேட்டு அற்ற தேட்டமே – புறத்தில் தேட முடியாத பெரிய பொருளே.

Koviloor Digital Library



பிறியாத தண்ணருள் சிவஞானி யாய்வந்து
பேசரிய வாசியாலே
பேரின்ப உண்மையை அளித்தனை;என் மனதறப்
பேரம்ப லக்கடவுளாய்

அறிவாய் இருந்திடும் நாதஒலி காட்டியே
அமிர்தப்ர வாகசித்தி
அருளினை; அலாதுதிரு அம்பலமும் ஆகிஎனை
ஆண்டனை;பின் எய்திநெறியாய்க்

குறிதான் அளித்தனை;நல் மரஉரிகொள் அந்தணக்
கோலமாய் அஜபாநலம்
கூறினபின் மௌனியாய்ச் சும்மா இருக்கநெறி
கூட்டினை; எலாம்இருக்கச்

சிறியேன் மயங்கிமிக அறிவுஇன்மை ஆவனோ?
தேடரிய சத்துஆகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவுஆன தெய்வமே!
தேஜோ மயானந்தமே! 6

ஆர்ஆர் எனக்குஎன்ன போதித்தும் என்ன? என்
அறிவினை மயக்கவசமோ?
அண்டகோ டிகள்எலாம் கர்ப்பஅறை போலவும்
அடுக்குஅடுக் காஅமைத்துப்

பேராமல் நின்றபர வெளியிலே மனவெளி
பிறங்குவதுஅ லாது,ஒன்றினும்
பின்னம்உற மருவாது, நன்னயத் தால்இனிப்
பேரின்ப முக்திநிலையும்

6. வாசியாலே – யோகதாரணையினாலே. நாத ஒலி காட்டியே – பிரணவ மகிமையைப் புகட்டி. அமிர்தப்ரவாக சித்தி – அருள் பெருக்கின் நிறைவு. திரு அம்பலமும் ஆகி – அறிவுப் பெருவெளியாகி. அஜபா நலம் கூறின பின் – மகாவாக்கியத்தை உபதேசித்த பிறகு.

7. பிறங்குவது அலாது – சிறப்புற்றிருத்தல் அல்லாமல். பின்னம் உற மருவாது – கெட்டுப்போகும்படி சேராது.

Koviloor Digital Library



தாராது தள்ளவும் போகாது, உனால்அது
தள்ளினும் போகேன்யான்,
தடைஏதும் இல்லை,ஆண் டவன்அடிமை என்னும் இரு
தன்மையிலும் என்வழக்குத்

தீராது, விடுவதுஇலை, நடுவான கடவுளே;
தேடரிய சத்துஆகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவுஆன தெய்வமே!
தேஜோ மயானந்தமே! 7

கந்துஉக மதக்கரியை வசமா நடத்தலாம்;
கரடிவெம் புலிவாயையும்
கட்டலாம்; ஒருசிங்கம் முதுகின்மேல் கொள்ளலாம்;
கட்செவி எடுத்துஆட்டலாம்;

வெந்தழலின் இரதம்வைத்து ஐந்துலோ கத்தையும்
வேதித்து விற்றுஉண்ணலாம்;
வேறுஒருவர் காணாமல் உலகத்து உலாவலாம்;
விண்ணவரை ஏவல்கொளலாம்;

சந்ததமும் இளமையொடு இருக்கலாம்; மற்றுஒரு
சரீரத்திலும் புகுதலாம்;
ஜலம்மேல் நடக்கலாம்; கனல்மேல் இருக்கலாம்;
தன்நிகர்இல் சித்திபெறலாம்;

சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறம்அரிது; சத்துஆகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவுஆனதெய்வமே
தேஜோ மயானந்தமே! 8

---

8. கந்து உக – கட்டுத் தறியினை முறியச் செய்யும். கட்செவி – பாம்பு. இரதம் வைத்து – பாதரசம் வைத்து. ஐந்து லோகத்தையும் – தாமிரம், இரும்பு, நாகம் முதலிய கீழான தாதுக்களையும். வேதித்து – மேலானவைகளாக (பொன்னாக) மாற்றி.

Koviloor Digital Library



எல்லாம் அறிந்தவரும், ஏதும்அறி யாதவரும்
இல்லைஎனும் இவ்வுலகமீது
ஏதும்அறி யாதவன் எனப்பெயர் தரித்துமிக
ஏழைக்குள் ஏழைஆகிக்,

கல்லாத அறிவில் கடைப்பட்ட நான்,அன்று
கையினால் உண்மைஞானம்
கற்பித்த நின்அருளின் உனக்குஎன்ன கைம்மாறு
காட்டுவேன் குற்றேவல்நான்,

அல்ஆர்ந்த மேனியொடு குண்டுகண், பிறைஎயிற்று,
ஆபாச வடிவம்ஆன
அந்தகா! நீஒரு பகட்டால் பகட்டுவது
அடாதுஅடா, காசுநம்பால்

செல்லா தடாஎன்று பேசவா யதுதந்த
செல்வமே! சத்துஆகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவுஆன தெய்வமே
தேஜோ மயானந்தமே! 9

மின்போலும் இடைஒடியும் ஒடியும்என மொழிதல்போல்
மென்சிலம்பு ஒலிகள்ஆர்ப்ப,
வீங்கிப் புடைத்துவிழு சுமைஅன்ன கொங்கைமட
மின்னார்கள் பின்ஆவலாய்

என்போல் அலைந்தவர்கள் கற்றார்கள் கல்லார்கள்
இருவர்களில் ஒருவர் உண்டோ?
என்செய்கேன் அம்மம்ம! என்பாவம் என்கொடுமை
ஏதுஎன்று எடுத்து மொழிவேன்,

அன்பால் வியந்துஉருகி, அடிஅற்ற மரம்என்ன
அடியிலே வீழ்ந்துவீழ்ந்து,எம்
அடிகளே உமதுஅடிமை யாங்கள்எனும் நால்வருக்கு
அறம்ஆதி பொருள்உரைப்பத்

9. அல்ஆர்ந்தமேனியொடு – கருநிற உடம்புடன். பிறைஎயிற்று – பிறைபோன்று வளைந்த அச்சம் தரும் பற்களையும்.

Koviloor Digital Library



தென்பாலின் முகம்ஆகி வடஆல் இருக்கின்ற
செல்வமே! சத்துஆகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவுஆன தெய்வமே
தேஜோ மயானந்தமே! 10

புத்தமிர்த போகமும், கற்பகநல் நிழலில்
பொலிவுஉற இருக்கும்இயல்பும்,
பொன்உலகில் அயிராவ தத்துஏறு வரிசையும்,
பூமண்ட லாதிக்கமும்,

மத்தவெறி யினர்வேண்டு மால்என்று தள்ளவும்,எம்
மாலும்ஒரு சுட்டும் அறவே
வைக்கின்ற வைப்பாளன், மௌனதே சிகன்என்ன
வந்தநின் அருள்வாழிகாண்!

சுத்தபரி பூரண அகண்டமே! ஏகமே!
சுருதிமுடிவு ஆனபொருளே!
சொல்லரிய உயிரினிடை அங்குஅங்கு நின்று அருள்
சுரந்துபொழி கருணைமுகிலே!

சித்தநிலை முக்திநிலை விளைகின்ற பூமியே!
தேடரிய சத்துஆகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவுஆன தெய்வமே!
தேஜோ மயானந்தமே! 11

---

10. மடமின்னார்கள் – இளமங்கையர். நால்வர்க்கு – சனகன், சனந்தனன், சனாதனன், சனத்குமரன் ஆகிய நால்வர்க்கு. அறம் ஆதி – அறம், பொருள், இன்பம், வீடு. தென்பாலின் முகம்ஆகி – தக்ஷிணாமூர்த்தியாக எழுந்தருளி. வடஆல் – கல் இச்சிமர நிழலில்.

11. புத்தமிர்த போகமும் – புதிதாகச் சமைத்த உணவை உண்பதும். மத்த வெறியினர் வேண்டும் – உலக ஆசையாகிய உன்மத்தம் பிடித்தவர் விரும்புகின்ற. மால் – பேராசை. ஒரு சுட்டும் அறவே – சுட்டிக் காட்ட முடியாத. உயிரின் இடை – உயிர்களிடத்து.

Koviloor Digital Library



## 13. சிற்சுகோதய விலாசம்

### பதினான்கு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

காக மோடுகழுகு அலகை நாய்நரிகள்
சுற்று சோறிடு துருத்தியைக்;
கால்இ ரண்டுநவ வாசல் பெற்றுவளர்
காம வேள்நடன சாலையை;

மோக ஆசைமுறி இட்ட பெட்டியை;மும்
மலம்மி குந்துஒழுகு கேணியை;
மொய்த்து வெம்கிருமி தத்து கும்பியை;
முடங்க லார்கிடை சரக்கினை;

மாக இந்த்ரதனு மின்னை ஒத்துஇலக
வேதம் ஓதிய குலாலனார்
வனைய, வெய்யதடி காரன் ஆனயமன்
வந்துஅ டிக்கும்ஒரு மண்கலத்

தேகம் ஆனபொயை மெய்எ னக்கருதி
ஐய வையமிசை வாடவோ?
தெரிவ தற்குஅரிய பிரம மேஅமல
சிற்சு கோதய விலாசமே! 1

குறிக ளோடுகுணம் ஏதும் இன்றி,அனல்
ஒழுக நின்றிடும் இரும்பு,அனல்
கூடல் இன்றிஅது வாய்இ ருந்தபடி,
கொடிய ஆணவ அறைக்குளே

---

1. அலகை – பேய். நவ வாசல் – ஒன்பது வாயில்கள். காமவேள் நடன சாலையை – மன்மதனுடைய நாட்டியக் கூடத்தை. மோக ஆசை முறியிட்ட பெட்டியை – மயக்கத்துக்கும் ஆசைக்கும் இருப்பிடமான பெட்டியை. தத்து – நெளிந்து. முடங்கல் ஆர் – குறைபாடு உடைய. மாக இந்த்ரதனு – ஆகாயத்தில் தென்படுகின்ற வானவில். மின்னை – மின்னலை. அமல சிற்சுகோதய விலாசமே – தூய அறிவு இன்பத்தை வளர்க்கிற ஆனந்த மாளிகையே.

Koviloor Digital Library



அறிவது ஏதும்அற, அறிவுஇ லாமைமய
மாய்இ ருக்கும்என்ன, அருளினால்
அளவுஇ லாததனு கரணம் ஆதியை
அளித்த போதுஉனை அறிந்துநான்,

பிறிவுஇ லாதவணம் நின்றி டாதபடி
பலநி றம்கவரும் உபலமாய்ப்
பெரிய மாயையில் அழுந்தி, நின்னது
ப்ரசாத நல்அருள் மறந்திடும்

சிறிய னேனும்உனை வந்துஅ ணைந்துசுக
மாய்இ ருப்பதுஇனி என்றுகாண்?
தெரிவ தற்குஅரிய பிரம மேஅமல
சிற்சு கோதய விலாசமே! 2

ஐந்து பூதம்ஒரு கானல் நீர்என
அடங்க வந்தபெரு வானமே;
ஆதி அந்தம்நடு ஏதும் இன்றிஅரு
ளாய்நிறைந்து இலகு ஜோதியே

தொந்த ரூபமுடன் அரூபம் ஆதிகுறி
குணம்இ றந்துவளர் வஸ்துவே;
துரிய மேதுரிய உயிரி னுக்குஉணர்வு
தோன்ற நின்றுஅருள் சுபாவமே;

எந்த நாளும்நடு ஆகி நின்றுஒளிரும்
ஆதியே; கருணை நீதியே;
எந்தை யே!என இடைந்துஇடைந்து உருகும்
எளிய னேன்கவலை தீரவும்

---

2. தனுகரணம் ஆதியை – உடல், அந்தக்கரணம் முதலியவற்றை. உபலமாய் – படிகத்தை ஒத்து.

3. தொந்த ரூபமுடன் – பற்றிப் பிடிக்கிற வடிவத்துடன். இடைந்து இடைந்து உருகும் – நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகுகின்ற.

Koviloor Digital Library



சிந்தை யானதை அறிந்து நீஉன்அருள்
செய்ய நானும்இனி உய்வனோ?
தெரிவ தற்குஅரிய பிரம மே!அமல
சிற்சு கோதய விலாசமே! 3

ஐவர் என்றபுல வேடர் கொட்டமது
அடங்க மர்க்கடவன் முட்டியாய்
அடவி நின்று,மலை அருகில்நின்று, சருகு
ஆதி தின்றுபனி வெயிலினால்

மெய்வ ருந்துதவம் இல்லை;நல் சரியை
கிரியை யோகம்எனும் மூன்றதாய்
மேவு கின்றசவு பான நன்னெறி
விரும்ப வில்லை;உல கத்திலே

பொய்மு டங்குதொழில் யாது அ தற்குநல
சார தித்தொழில் நடத்திடும்
புத்தி, யூகம்,அறிவு அற்ற மூகம்இவை
பொருள்என க்கருதும் மருளன்யான்,

தெய்வ நல்அருள் படைத்த அன்பரொடு
சேர வும்கருணை கூர்வையோ?
தெரிவ தற்குஅரிய பிரம மேஅமல
சிற்சு கோதய விலாசமே! 4

ஏக மானஉரு வான நீ,அருளி
னால்அ நேகஉரு ஆகியே,
எந்த நாள்அகில கோடி சிருஷ்டிசெய
இசையும் நாள்வரைஅ நாள்முதல்

---

4. மர்க்கடவன் முட்டியாய் – குரங்குப் பிடியைப்போன்று பிடிப்புடையவனாய். சவுபானம் – படிகளாகிய. சாரதித் தொழில் – அடி பணிந்து போகும் பாங்கு. மூகம் – ஊமை.

5. மோகம் ஆதி தரு – மயக்கம் முதலானவைகளைக் கொடுக்கின்ற.

Koviloor Digital Library



ஆக நாளது வரைக்கும் உன்அடிமை
கூடவே ஜனனம் ஆனதோ
அநந்தம் உண்டு;நல ஜனனம் ஈது,இதனுள்
அறிய வேண்டுவன அறியலாம்;

மோகம் ஆதிதரு பாச மானதை
அறிந்து விட்டு,உனையும் எனையுமே
முழுதுஉ ணர்ந்துபரம் ஆன இன்பவெளம்
மூழ்க வேண்டும்; இதுஇன்றியே

தேக மோநழுவி, நானுமோ நழுவின்
பின்னை உய்யும்வகை உள்ளதோ?
தெரிவ தற்குஅரிய பிரம மேஅமல
சிற்சு கோதய விலாசமே! 5

நியம லக்ஷணமும் இயம லக்ஷணமும்
ஆச னாதிவித பேதமும்
நெடிதுஉ ணர்ந்துஇதய பத்ம பீடம்மிசை
நின்றுஇ லங்கும்அஜ பாநலத்து

இயல்அ றிந்து,வளர் மூல குண்டலியை
இனிதுஇ றைஞ்சி,அவள் அருளினால்
எல்லை அற்றுவளர் ஜோதி மூலஅனல்
எங்கள் மோனமனு முறையிலே

வயம்மி குந்துவரும் அமிர்த மண்டல
மதிக்கு ளேமதியை வைத்து,நான்
வாய்ம டுத்து,அமிர்த வாரி யைப்பருகி,
மன்னும் ஆர்அமிர்த வடிவமாய்

6. அஜபா நலத்து – வாய்விட்டுச் சொல்லாது எண்ணு கிற மேலாம் எண்ணம். எங்கள் மோன மனுமுறையிலே – எங்களுடைய பேச்சைக் கடந்த மந்திர முறையிலே. வயம் மிகுந்து வரும் – வெற்றி நிலைபெற்று வரும். அமிர்த மண்டல மதிக்குளே – அமிர்தத்தைப் பொழிகிற சஹஸ் ராரத்திலே. மதியை வைத்து – அறிவைச் செலுத்தி.

Koviloor Digital Library

ஜெயம்மி குந்துவரு சித்த யோகநிலை
பெற்று, ஞானநெறி அடைவனோ?
தெரிவ தற்குஅரிய பிரம மேஅமல
சிற்சு கோதய விலாசமே! 6

எறிதி ரைக்கடல் நிகர்த்த செல்வம்மிக
அல்லல் என்றுஒருவர் பின்செலாது,
இல்லை என்னும்உரை பேசி டாது,உலகில்
எவரும் ஆம்என மதிக்கவே

நெறியின் வைகிவளர் செல்வ மும்உதவி,
நோய்கள் அற்றசுக வாழ்க்கையாய்,
நியமம் ஆதிநிலை நின்று; ஞானநெறி
நிஷ்டை கூடவும்;எந் நாளுமே

அறிவில் நின்று,குரு வாய்உ ணர்த்தியதும்
அன்றி, மோனகுரு ஆகியே
அகிலம் மீதுவர வந்த சீர்அருளை
ஐய ஐயஇனி என்சொல்கேன்?

சிறியன் ஏழைநமது அடிமை என்றுஉனது
திருஉ ளத்தினில் இருந்ததோ?
தெரிவ தற்குஅரிய பிரம மேஅமல
சிற்சு கோதய விலாசமே! 7

எவ்வு யிர்த்திரளும் உலகில் என்உயிர்
எனக்கு ழைந்துஉருகி, நன்மையாய்
இதம்உ ரைப்ப,எனது என்ற யாவையும்
எடுத்துஎ றிந்துமத யானைபோல்,

கவ்வை அற்றநடை பயில, அன்பர்அடி
கண்டதே அருளின் வடிவமாக்,
கண்ட யாவையும் அகண்டம் என்ன,இரு
கைகு வித்து,மலர் தூவியே,

8. கவ்வை அற்ற நடை பயில – பழிச்சொல்லுக்கு இடம் தராத நல்வாழ்வு வாழ.

Koviloor Digital Library



பவ்வ வெண்திரை கொழித்த தண்தரளம்
விழிஉ திர்ப்பமொழி குளறியே,
பாடி ஆடி,உள் உடைந்துஉ டைந்து,எழுது
பாவைஒத்து அசைதல் இன்றியே,

திவ்ய அன்புஉருவம் ஆகி அன்பரொடும்
இன்ப வீட்டினில் இருப்பனோ!
தெரிவ தற்குஅரிய பிரம மேஅமல
சிற்சு கோதய விலாசமே! 8

மத்தர் பேயரொடு பாலர் தன்மையது
மருவி வேதியர் வடிவெலாம்
மன்னு தேசமொடு காலம் ஆதியை
மறந்து நின்அடியர் அடியிலே

பக்தி யாய்நெடிது நம்பும் என்னை,ஒரு
மையல் தந்து,அகில மாயையைப்
பாரு பார்என நடத்த வந்ததுஎன
பாரதத் திலும் இது உள்ளதோ?

சுத்த நித்தஇயல்பு ஆகு மோ?உனது
விசுவ மாயைநடு ஆகவே
சொல்ல வேண்டும்வகை, நல்ல காதிகதை
சொல்லும் மாயையினும் இல்லை;என்

சித்தம் இப்படி மயங்கு மோ?அருளை
நம்பி னோர்கள்பெறு பேறுஇதோ?
தெரிவ தற்குஅரிய பிரம மேஅமல
சிற்சு கோதய விலாசமே! 9

---

பவ்வம் — கடல். தண்தரளம் — குளிர்ந்த முத்துப்போன்ற நீர்த்துளிகளை. விழி உதிர்ப்ப — கண்கள் சிந்தவும்.

9. மன்னு — நிலைபெற்ற. சுத்த நித்த இயல்பு ஆகுமோ — ஆத்ம சொரூபத்துக்கு ஒவ்வுமோ?. உனது விசுவ மாயை நடுவாகவே — உன் மோகனா சக்தியின் இடையில்.

Noolaham Digital Library

பன்மு கச்சமய நெறிப டைத்தவரும்,
யாங்க ளேகடவுள் என்றிடும்
பாத கத்தவரும், வாத தர்க்கமிடு
படிற ருந்தலை வணங்கிடத்;

தன்மு கத்தில்உயிர் வரஅ ழைக்கும்எம
தரும னும்பகடு, மேய்க்கியாய்த்
தனிஇ ருப்ப,வட நீழ லூடுவளர்
சனகன் ஆதிமுனி வோர்கள்தம்

சொல்ம யக்கமது தீர, அம்கைகொடு
மோன ஞானமது உணர்த்தியே,
சுத்த நித்தஅருள் இயல்ப தாகஉள
சோம சேகரகிர் பாளுவாய்த்,

தென்மு கத்தின்முக மாயி ருந்தகொலு
எம்மு கத்தினும் வணங்குவேன்;
தெரிவ தற்குஅரிய பிரம மேஅமல
சிற்சு கோதய விலாசமே! 10

## 14. ஆகார புவனம் – சிதம்பர ரகசியம்

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஆகார புவனம்இன் பாகாரம் ஆக
அங்ஙனே ஒருமொழியால் அகண்டா கார
யோகானு பூதிபெற்ற அன்பர் ஆவிக்கு
உறுதுணையே என்அளவும் உகந்த நட்பே

---

10. பல் முகம் – பலப்பல பாங்குடைய. படிறரும் – வஞ்சனையாளர்களும். பகடுமேய்க்கியாய் – எருமை மேய்ப்பவனாய். வடநீழலூடு வளர் – கல் ஆலமரத்தின் நிழலில் மேன்மையடைகிற. அம்கை கொடு – அழகிய கைகளைக் கொண்டு. கிர்பாளுவாய் – அருள்வடிவினனாய்

1. ஆகார – வடிவம். வாகு ஆரும்படிக்கு – அழகு பொருந்துமாறு.

Koviloor Digital Library

வாகுஆரும் படிக்குஇசை கிண்கிணிவாய் என்ன
மலர்ந்தமல ரிடைவாசம் வயங்கும் மாபோல்
தேகாதி உலகம்எங்கும் கலந்து தானே
திகழ்அனந்தா னந்தமயத் தெய்வக் குன்றே. 1

அனந்தபத உயிர்கள்தொறும் உயிராய் என்றும்
ஆனந்த நிலைஆகி அளவைக்கு எட்டாத்
தனந்தனிச்சின் மாத்திரமாய்க் கீழ்மேல் காட்டாச்
சதசத்தாய் அருள்கோயில் தழைத்த தேவே
இனம்பிரிந்த மான்போல்நான் இடையா வண்ணம்
இன்பம்உற அன்பர்பக்கல் இருத்தி வைத்துக்
கனம்தருமா கனமேதண் ணருளில் தானே
கனிபலித்த ஆனந்தக் கட்டிப் பேறே! 2

பேறுஅனைத்தும் அணுஎனவே உதறித் தள்ளப்
பேரின்பம் ஆகவந்த பெருக்கே; பேசா
வீறுஅனைத்தும் இந்நெறிக்கே என்ன என்னை
மேவுஎன்ற வரத்தே;பாழ் வெய்ய மாயைக்
கூறுஅனைத்தும் கடந்தஎல்லைச் சேஷம் ஆகிக்
குறைவுஅறநின் றிடும்நிறைவே; குலவா நின்ற
ஆறுஅனைத்தும் புகும்கடல்போல் சமய கோடி
அத்தனையும் தொடர்ந்துபுகும் ஆதி நட்பே! 3

ஆதிஅந்தம் எனும்எழுவாய் ஈறுஅற்று ஓங்கி
அருமறைஇன் னமும்காணாது அரற்ற,நானா
பேதமதங் களும்மலைய, மலைபோல் வாதப்
பெற்றியரும் வாய்வாதப் பேயர் ஆகச்

---

2. இடையாவண்ணம் – வருந்தாதிருக்கும்படி. கனம் – சிறப்பு. மாகனமே – மிகச் சிறந்த பொருளே.

3. பேசாவீறு – சொல்லில் அடங்காத ஆத்மப்பெரு நிலை. எல்லைச் சேஷம் ஆகி – எல்லையாகிய ஆதாரமாகி.

4. எழுவாய் ஈறு அற்று ஓங்கி – தோன்றுதலையும், மறைதலையும் கடந்து உயர்ந்து. மலைய – ஒன்றோடு ஒன்று போராட.

Koviloor Digital Library



சாதகம்மோ னத்தில் என்ன வடஆல் நீழல்
தண்ணருள்சந் திரமௌலி தடக்கைக்கு ஏற்க
வேதகசின் மாத்திரமாய் எம்ம னோர்க்கும்
வெளியாக வந்தஒன்றே விமல வாழ்வே! 4

விமலம்முதல் குணம்ஆகி நூற்றுஎட்டு ஆதி
வேதம்எடுத்து எடுத்துஉரைத்த விருத்திக்கு ஏற்க
அமையும்இலக் கணவடிவாய்; அதுவும் போதாது
அப்பாலுக்கு அப்பாலாய் அருள்கண் ஆகிச்;
சமமும்உடன் கலப்பும்அவிழ் தலும்யாம் காணத்
தண்ணருள் தந்து எமைக்காக்கும் சாக்ஷிப் பேறே!
இமைஅளவும் உபகாரம் அல்லால் வேறுஒன்று
இயக்காநிர்க் குணக்கடலாய் இருந்த ஒன்றே! 5

ஒன்றுஆகிப் பலஆகிப் பலவாக் கண்ட
ஒளிஆகி வெளிஆகி உருவும் ஆகி
நன்றுஆகித் தீதுஆகி மற்றும் ஆகி
நாசமுடன் உற்பத்தி நண்ணாது ஆகி
இன்றுஆகி நாளையுமாய் மேலும் ஆன
எந்தையே எம்மானே என்றுஎன்று ஏங்கிக்,.
கன்றுஆகிக் கதறினர்க்குச் சேதா ஆகிக்
கடிதினில்வந்து அருள்கூரும் கருணை விண்ணே! 6

சாதகம் மோனத்தில் என்ன — முக்திக்கு வழி மௌனம் என்று. சந்திரமௌலி — சந்திரனை முடியில் அணிந்திருப்பவனே. வேதகசின்மாத்திரமாய் — அறிவுப்பொருளை அறிவற்ற பொருளினின்று பிரித்துக் காட்டும் இயல்பமைந்த. விமலவாழ்வே — தூயவாழ்வே.

5. குணம் ஆகி — விபூதிகளை உடையதாகி. நூற்று எட்டு ஆதிவேதம் — வேதங்களில் அடங்கியுள்ள நூற்று எட்டு உபநிடதங்கள் முதலியன.

6. நாசமுடன் உற்பத்தி நண்ணாது ஆகி — இறப்பும் பிறப்பும் இல்லாதது ஆகி. சேதா — தாய்ப்பசு.

Koviloor Digital Library



அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே
ஆர்அமிர்தே என்கண்ணே அரிய ஆன
பொருள்அனைத்தும் தரும்பொருளே கருணை நீங்காப்
பூரணமாய் நின்றஒன்றே புனித வாழ்வே
கருதரிய கருத்ததனுள் கருத்தாய் மேவிக்
காலமும்தே சமும்வகுத்துக் கருவி ஆதி
விரிவினையும் கூட்டி உயிர்த் திரளை ஆட்டும்
விழுப்பொருளே யான்சொலும்விண் ணப்பம் கேளே! 7

விண்ணவர்இந் திரன்முதலோர், நார தாதி
விளங்குசப்த ரிஷிகள்,கன வீணை வல்லோர்,
எண்ணரிய சித்தர்,மனு ஆதி வேந்தர்,
இருக்காதி மறைமுனிவர் எல்லாம் இந்தக்
கண்அகல்ஞா லம்மதிக்கத் தானே உள்ளங்
கையில்நெல்லிக் கனிபோலக் காக்ஷி யாகத்,
திண்ணியநல் அறிவால்இச் சமயத்து அன்றோ
செப்பரிய சித்திமுக்தி சேர்ந்தார் என்றும். 8

செப்பரிய சமயநெறி எல்லாம் தம்தம்
தெய்வமே தெய்வம்எனும்; செயற்கை ஆன
அப்பரிசா ளரும்அஃதே பிடித்து ஆலிப்பால்
அடுத்தஅந்நூல் களும்விரித்தே அநுமா னாதி
ஒப்பவிரித்து உரைப்பர்;இங்ஙன் பொய்மெய் என்ன
ஒன்றுஇலைஒன்று எனப்பார்ப்பது ஒவ்வாது ஆர்க்கும்;
இப்பரிசுஆம் சமயமுமாய், அல்ல ஆகி,
யாதுசம யமும்வணங்கும் இயல்பது ஆகி, 9

---

8. கனவீணை வல்லோர் – பெரிய வீணை வாசிக்கின்ற தும்புரு முதலானோர். மனு ஆதிவேந்தர் – மனு முதலிய அரசர்கள். இருக்கு ஆதி மறை – ரிக்வேதம் முதலான. இந்தக் கண் அகல்ஞாலம் மதிக்க – இந்த இடம் அகன்ற உலகத்தார் மதிக்கும்படி.

9. ஆலிப்பால் – ஆரவாரத்தால்.

Koviloor Digital Library



இயல்புஎன்றும் திரியாமல் இயமம் ஆதி
எண்குணமும் காட்டி,அன்பால் இன்பம் ஆகிப்,
பயன்அருளப் பொருள்களபரி வாரம் ஆகிப்,
பண்புஉறவும் சௌபான பக்ஷம் காட்டி,
மயல்அறுமந்த் ரசிக்ஷை ஜோதி டாதி
மற்றுஅங்க நூல்வணங்க, மௌன மோலி
அயர்வுஅறச்சென் னியில்வைத்து, ராஜாங் கத்தில்
அமர்ந்ததுவை திகசைவம் அழகுஇது அந்தோ! 10

அந்தோஈது அதிசயம்,இச் சமயம் போல்இன்று,
அறிஞர்எல்லாம் நடுஅறிய அணிமா ஆதி
வந்துஆடித் திரிபவர்க்கும்; பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கும்; மற்றும் மற்றும்
இந்த்ராதி போகநலம் பெற்ற பேர்க்கும்;
இதுஅன்றித் தாயகம்வேறு இல்லை இல்லை;
சந்தான கற்பகம்போல் அருளைக் காட்டத்
தக்கநெறி இந்நெறியே தான்சன் மார்க்கம். 11

சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமயசங்கே தப்பொருளும் தான்ஒன்று ஆகப்
பன்மார்க்க நெறியினிலும் கண்டது இல்லை;
பகர்வுஅரிய தில்லைமன்றுள் பார்த்த போதுஅங்கு

10. இயமம் ஆதி எண்குணமும் — இயமம் முதலான எட்டு அங்கங்களை உடைய யோகமும். சௌபானபக்ஷம் காட்டி — படிப்படியாக மேல்நோக்கிப் போகும் உபாயத்தைக் காட்டி. மந்த்ரம் சிக்ஷை — வேதத்திலுள்ள மந்திரமும் சிக்ஷையும் ஆகிய பகுதிகள். ஜோதிடாதி — ஜோதிடம் முதலான. அங்கநூல் — உடன் அமைந்த நூல். மௌன மோலி — மௌன நிலையாகிய கிரீடத்தினை.

11. போக நலம் — இன்ப வாழ்வு. சந்தான கற்பகம் — ஓயாது வழங்குகின்ற கற்பக மரம்.

12. வீறு சமயம் — தாம் தாமே மேலானவை என இறுமாந்திருக்கிற சமயங்களால். கல்மார்க்கம் நெஞ்சம் உள — கல்போன்ற மனம் படைத்துள்ள.

Koviloor Digital Library



என்மார்க்கம் இருக்குதுஎல்லாம் வெளியே என்ன
எச்சமயத் தவர்களும்வந்து இறைஞ்சா நிற்பர்;
கல்மார்க்க நெஞ்சம்உள எனக்கும் தானே
கண்டவுடன் ஆனந்தம் காண்டல் ஆகும். 12

காண்டல்பெறப் புறத்தின்உள்ள படியே உள்ளும்
காட்சிமெய்ந்நூல் சொலும்பதியாம் கடவு ளே!நீ
நீண்டநெடு மையும்அகலக் குறுக்கும் காட்டா
நிறைபரிபூ ரணஅறிவாய், நித்தம்ஆகி,
வேண்டுவிருப் பொடுவெறுப்புச் சமீபம் தூரம்
விலகல்அணு குதல்முதலாம் விவகா ரங்கள்,
பூண்டஅளவை கள்,மனம்வாக்கு ஆதி எல்லாம்
பொருந்தாமல் அகம்புறமும் புணர்க்கை ஆகி. 13

ஆகியசற் காரியஊ கத்துக்கு ஏற்ற
அமலமாய், நடுஆகி, அனந்த சக்தி
யோகம்உறும் ஆனந்த மயமது ஆகி,
உயிர்க்குஉயிராய் எந்நாளும் ஓங்கா நிற்ப
மோகஇருள் மாயைவினை உயிர்கட்கு எல்லாம்
மொய்த்ததுஎன்கொல்? உபகார முயற்சி யாகப்
பாகம்மிக அருளஒரு சக்தி வந்து
பதிந்ததுஎன்கொல்? நான்எனும்அப்
பான்மை என்கொல்? 14

நான்என்னும் ஓர்அகந்தை எவர்க்கும் வந்து
நலிந்தவுடன் ஜகமாயை நானா ஆகித்
தான்வந்து தொடரும்;இத்தால் வளரும் துன்பச்
சாகரத்தின் பெருமைஎவர் சாற்ற வல்லார்?
ஊன்என்றும் உடல்என்றும் கரணம் என்றும்
உள்என்றும் புறம்என்றும் ஒழியா நின்ற
வான்என்றும் கால்என்றும் தீநீர் என்றும்
மண்என்றும் மலைஎன்றும் வனமது என்றும், 15

14. அமலமாய்—அழுக்கற்றதாய். பாகம்—பரிபக்குவத்தை.

15. ஜகமாயை நானா ஆகி – உலகை மயக்குகின்ற மோகனாசக்தி பல ஆகி. இத்தால் – இதனால். கால் என்றும் – காற்று என்றும்.

Koviloor Digital Library



மலைமலையாம் காட்சிகண்கா ணாமை ஆதி
மறப்புஎன்றும் நினைப்புஎன்றும் மாயா வாரி
அலைஅலையாய் அடிக்கும்இன்ப துன்பம்என்றும்
அதைவிளைக்கும் வினைகள்என்றும் அதனைத்தீர்க்கத்
தலைபலஆம் சமயம்என்றும் தெய்வம் என்றும்
சாதகர்என்றும் அதற்குச் சாக்ஷி ஆகக்
கலைபலஆம் நெறிஎன்றும் தர்க்கம் என்றும்
கடல்உறும்நுண் மணல்,எண்ணிக் காணும் போதும், 16

காணரிய அல்லல்எல்லாம் தானே கட்டுக்
கட்டாக விளையும்அதைக் கட்டோ டேதான்
வீணினில்கர்ப் பூரமலை படுதீப் பட்ட
விந்தைஎனக் காணஒரு விவேகம் காட்ட,
ஊண்உறக்கம் இன்பதுன்பம் பேர்ஊர் ஆதி
ஒவ்விடவும், எனைப்போல உருவம் காட்டிக்
கோண்அறஓர் மான்காட்டி மானை ஈர்க்கும்
கொள்கைஎன அருள்மௌன குருவாய் வந்து, 17

வந்துஎன்உடல் பொருள்ஆவி மூன்றும் தன்கை
வசம்எனவே, அத்துவா மார்க்கம் நோக்கி,
ஐந்துபுலன் ஐம்பூதம் கரணம் ஆதி
அடுத்தகுணம் அத்தனையும் அல்லை அல்லை;
இந்தஉடல் அறிவுஅறியா மையும்நீ அல்லை;
யாதுஒன்று பற்றின்அதன் இயல்பாய் நின்று
பந்தம்அறும் பளிங்குஅனைய சித்து நீஉன்
பக்குவம்கண்டு அறிவிக்கும் பான்மை யேம்யாம். 18

16. மாயா வாரி — மாயை ஆகிய கடலினுள். கலைபல ஆம் நெறி என்றும் — பல நூல்களால் உரைக்கப்பட்ட வழிகள் என்றும்.

17. வீணினில்— பயனின்றி. ஒவ்விடவும் — ஒத்திருக்கவும். கோண் அற — களங்கம் நீங்க. ஈர்க்கும் — பிடிக்கும்.

18. அத்துவா மார்க்கம் — மந்த்ரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்னும் ஆறு வழிகள். சித்து நீ — அறிவுப்பொருள் நீ.

Koviloor Digital Library



அறிவுஆகி ஆனந்த மயமாய் என்றும்
அழியாத நிலைஆகி யாதின் பாலும்
பிறியாமல் தண்ணருளே கோயில் ஆன
பெரியபரம் பதிஅதனைப் பெறவே வேண்டின்
நெறியாகக் கூறுவன்கேள்;எந்த நாளும்
நிர்க்குணம்நிற் குஉளம்வாய்த்து நீடு வாழ்க;
செறிவுஆன அறியாமை எல்லாம் நீங்கச்
சிற்சுகம்பெற் றிடுக;பந்தம் தீர்க என்றே! 19

பந்தம்அறும் மெய்ஞ்ஞானம் ஆன மோனப்
பண்புஒன்றை அருளி,அந்தப் பண்புக் கேதான்
சிந்தைஇல்லை நான்என்னும் பான்மை இல்லை
தேசம்இல்லை காலம்இல்லை திக்கும் இல்லை
தொந்தம்இல்லை நீக்கம்இல்லை பிறிதும் இல்லை
சொல்லும்இல்லை இராப்பகல்ஆம் தோற்றம் இல்லை
அந்தம்இல்லை ஆதிஇல்லை நடுவும் இல்லை
அகமும்இல்லை புறமும்இல்லை அனைத்தும் இல்லை. 20

இல்லைஇல்லை என்னின்ஒன்றும் இல்லாது அல்ல;
இயல்புஆகி என்றும்உள்ள இயற்கை ஆகிச்
சொல்லரிய தன்மையதாய் யான்தான் என்னத்
தோன்றாதுஎல் லாம்விழுங்கும் சொரூபம் ஆகி
அல்லைஉண்ட பகல்போல அவித்தை எல்லாம்
அடையஉண்டு, தடைஅறஉன் அறிவைத் தானே
வெல்லஉண்டு,இங்கு உன்னையும்தான் ஆகக் கொண்டு
வேதகமாய்ப் பேசாமை விளக்கும் தானே. 21

தான்ஆன தன்மயமே அல்லால் ஒன்றைத்
தலைஎடுக்க ஒட்டாது; தலைப்பட்டு ஆங்கே
போனாலும் கர்ப்பூர தீபம் போலப்
போய்ஒளிப்பது அல்லாது புலம்வேறு இன்றாம்;

21. அடைய உண்டு – அறவே கெடுத்து. வேதகமாய்ப் பேசாமை விளக்கும் – மௌனமானது உன் நிலையை வேறுபடுத்துவதாய் உனக்கு விளக்கிக் காட்டும்.

Koviloor Digital Library


ஞானாகா ரத்தினொடு ஞேயம் அற்ற
ஞாதுருவும் நழுவாமல் நழுவி நிற்கும்;
ஆனாலும் இதன்பெருமை எவர்க்குஆர் சொல்வார்?
அதுஆனால் அதுஆவர்; அதுவே சொல்லும். 22

அதுஎன்றால் எதுஎனஒன்று அடுக்கும் சங்கை;
ஆதலினால் அதுஎனலும் அறவே விட்டு,
மதுஉண்ட வண்டுஎனவும் சனகன் ஆதி
மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தார் என்றும்
பதிஇந்த நிலைஎனவும் என்னை ஆண்ட
படிக்கு,நிர் விகற்பத்தால் பரமா னந்தக்
கதிகண்டு கொள்ளவும்நின் அருள்கூர்; இந்தக்
கதிஅன்றி உறங்கேன்;மேல் கருமம் பாரேன். 23

பார்ஆதி விண்அனைத்தும் நீயாச் சிந்தை
பரியமட லாஎழுதிப் பார்த்துப் பார்த்து
வாராயோ என்ப்ராண நாதா என்பேன்;
வளைத்துவளைத்து எனைநீயா வைத்துக் கொண்டு
பூராயமா மேல்ஒன்று அறியா வண்ணம்
புண்ணாளர் போல்நெஞ்சம் புலம்பி உள்ளே
நீராள மாய்உருகிக் கண்ணீர் சோர
நெட்டுயிர்த்து மெய்ம்மறந்துஓர் நிலையாய் நிற்பேன். 24

ஆயும்அறிவு ஆகிஉன்னைப் பிரியா வண்ணம்
அணைந்துசுகம் பெற்றஅன்பர் ஐயோ என்னத்
தீயகொலைச் சமயத்தும் செல்லச் சிந்தை
தெளிந்திடவும் சமாதானம் செய்வேன்; வாழ்வான்

---

22. ஞானாகாரத்தினொடு ஞேயம் – காணுதலுடன், காணப்படு பொருள். ஞாதுருவும் – காண்போனும்.

23. சங்கை – ஐயம். கதி – மேலாம் பரநிலை.

24. பரிய மடலா – பெரிய ஏடாக. பூராயமா – முற்றிலும். புண்ணாளர்போல் – நோயாளிகள் போல். நீராளமாய் உருகி – நீராய் உருகி.

Koviloor Digital Library



காய்இலைபுன் சருகுஆதி அருந்தக் கானம்
கடல்மலைஎங் கேஎனவும் கவலை ஆவேன்;
வாய்இல்கும்பம் போல்கிடந்து புரள்வேன் வானில்
மதிகதிரை முன்னிலையா வைத்து நேரே; 25

நேரேதான் இரவுபகல் கோடா வண்ணம்
நித்தம்வர உங்களைஇந் நிலைக்கே வைத்தார்
ஆரே? அங்கு அவர்பெருமை என்னே என்பேன்;
அடிக்கின்ற காற்றேநீ யாரா லேதான்
பேராதே சுழல்கின்றாய் என்பேன்; வந்து
பெய்கின்ற முகில்காள்எம் பெருமான் நும்போல்
தாராள மாக்கருணை பொழியச் செய்யும்
சாதகம்என் னேகருதிச் சாற்றும் என்பேன். 26

கருதரிய விண்ணேநீ எங்கும் ஆகிக்
கலந்தனையே உன்முடிவின் காக்ஷி ஆக
வருபொருள்எப் படிஇருக்கும் சொல்லாய் என்பேன்;
மண்ணேஉன் முடிவில்எது வயங்கும் ஆங்கே
துரியஅறி வுடைச்சேஷன் ஈற்றின் உண்மை
சொல்லானோ சொல்என்பேன்; சுருதி யேநீ
ஒருவரைப்போல் அனைவருக்கும் உண்மை ஆம்முன்
உரைஅன்றோ உன்முடிவை உரைநீ என்பேன் 27

உரைஇறந்து பெருமைபெற்றுத் திரைக்கை நீட்டி
ஒலிக்கின்ற கடலேஇவ் உலகம் சூழக்
கரைஇன்றி உனைவைத்தார் யாரே என்பேன்;
கானகத்தின் பைங்கிளிகாள், கமலம் மேவும்

25. வாய்இல் கும்பம்போல் – வாயில்லாத குடம் போன்று. மதி க்திரை – சந்திர சூரியர்களை.

26. கோடாவண்ணம் – பிசகாதபடி. பேராதே – இடையறாமல்.

27. துரிய அறிவுடை – மேலான அறிவைப் படைத்துள்ள. சுருதியே – வேதமே. முன் உரை அன்றோ – முதல் நூல் அன்றோ.

Koviloor Digital Library



வரிசிறைவண்டு இனங்காள்,ஓ திமங்காள், தூது
மார்க்கம்அன்றோ நீங்கள்இது வரையி லேயும்
பெரியபரி பூரணம்ஆம் பொருளைக் கண்டு
பேசியதுஉண் டோஒருகால் பேசும் என்பேன். 28

ஒருவன்அவன் யானைகெடக் குடத்துள் செங்கை
ஒட்டுதல்போல் நான்பேதை உப்போடு அப்பை
மருவவிட்டும், கர்ப்பூரம் அதனில் தீபம்
வயங்கவிட்டு, ஐக்கியம்உன்னி வருந்தி நிற்பேன்;
அருளுடைய பரம்என்றோ அன்று தானே
யான்உளன்என் றும்,எனக்கே ஆண வாதி
பெருகுவினைக் கட்டுஎன்றும் என்னால் கட்டிப்
பேசியதுஅன் றே,அருள்நூல் பேசிற்று அன்றே. 29

அன்றுமுதல் இன்றைவரை ஜனன கோடி
அடைந்தடைந்துஇங்கு யாதனையால்
அழிந்தது அல்லால்
இன்றைவரை முக்தியின்றே, எடுத்த தேகம்
எப்போதோ தெரியாதே, இப்போ தேதான்
துன்றுமனக் கவலைகெடப் புலைநா யேனைத்
தொழும்புகொளச் சீகாழித் துரையே, தூது
சென்றிடவே பொருளைவைத்த நாவ லோய்நம்
சிவன்அப்பா என்றஅருள் செல்வத் தேவே! 30

28. வரிசிறை – நீண்ட சிறகுகள். ஓதிமங்காள் – அன்னப் பறவைகளே.

29. செங்கை ஒட்டுதல்போல் – சிவந்த கையைவிட்டுத் துழாவுதல் போல. உப்போடு அப்பை மருவ விட்டும் – உப்பையும் நீரையும் ஒன்றுபடக் கலக்கிவிட்டும். வயங்க விட்டும் – பிரகாசிக்கச் சேர்த்தும். அருள் நூல் – சுருதிப் பிரமாணம்.

30. யாதனையால் – துன்பத்தினால். துன்று – அதிகரித்த. தொழும்பு கொள – ஆட்கொள்ள.

Koviloor Digital Library



தேவர்தொழும் வாதவூர்த் தேவே என்பேன்,
திருமூலத் தேவே,இச் சகத்தோர் முக்திக்கு
ஆவல்உறச் சிவஎன்வாக் குடனே வந்த
அரசே,சும் மாஇருந்துஉன் அருளைச் சாரப்
பூஉலகில் வளர்அருண கிரியே, மற்றைப்
புண்ணியர்காள், ஓஎன்பேன் புரைஒன்று இல்லா
ஓவியம்போல் அசைவுஅறவும் தானே நிற்பேன்,
ஓதரிய துயர்கெடவே உரைக்கும் முன்னே. 31

ஓதரிய சுகர்போல ஏன்ஏன் என்ன
ஒருவர்இலை யோஎனவும் உரைப்பேன், தானே
பேதம்அபே தம்கெடவும் ஒருபே சாமை
பிறவாதோ, ஆல்அடியில் பெரிய மோன
நாதன்ஒரு தரம்உலகம் பார்க்க இச்சை
நண்ணானோ, என்றுஎன்றே நானா ஆகிக்
காதல்மிகும் அணிஇழையார் எனவா டுற்றேன்,
கருத்தறிந்து புரப்பதுன்மேல் கடன்முக் காலும். 32

காலமொடு தேசவர்த்த மானம் ஆதி
கலந்துநின்ற நிலைவாழி, கருணை வாழி,
மால்அறவும் சைவம்முதல் மதங்கள் ஆகி
மதாதீதம் ஆனஅருள் மரபு வாழி,
ஜாலம்மிகும் எளியேன்இவ் வழக்குப் பேசத்
தயவுவைத்து வளர்த்தஅருள் தன்மை வாழி,
ஆல்அடியின் பரமகுரு வாழி வாழி,
அகண்டிதா காரஅருள் அடியார் வாழி! 33

---

31. அரசே – சிவவாக்கியரே.

32. ஏன ஏன் என்ன – சுகப்ரமம் ப்ரமமே என்று கூவியதற்கு ஏன் ஏன் என்னும் விடை புறவுலகினின்று வந்தது.

33. வர்த்தமானம் – காரண காரியக் கோட்பாடு. மால் அறவும் – மயக்கம் ஒழியவும். ஜாலம் மிகும் – மாயா விகாரம் மிகுந்த. அகண்டித ஆகாரம் – சேதிக்கப்படாத உருவத்தை உடைய.

Koviloor Digital Library



## 15. தேன் முகம்

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தேன்முகம் பிலிற்றும் பைந்தாள்
செய்யபங் கஜத்தில் மேவும்
நான்முகத் தேவே! நின்னால்
நாட்டிய அகில மாயை
கான்முயல் கொம்பே என்கோ,
கானல்அம் புனலே என்கோ,
வான்முக முளரி என்கோ,
மற்றுஎன்கோ விளம்பல் வேண்டும். 1

வேண்டுவ படைத்தாய் நுந்தை
விதிப்படி புரந்தான், அத்தைக்
காண்தக அழித்தான் முக்கண்
கடவுள்தான், இனைய ஆற்றால்
ஆண்டவன் எவனோ என்ன
அறிகிலாது அகிலம், நீயே
ஈண்டிய அல்லல் தீர
எம்மனோர்க்கு இயம்பு கண்டாய். 2

கண்டன அல்ல என்றே
கழித்திடும் இறுதிக் கண்ணே
கொண்டது பரமா னந்தக்
கோதுஇலா முக்தி, அத்தால்
பண்டையின் படைப்பும் காப்பும்
பறந்தன மாயை யோடே,
வெண்தலை விழிகை காலில்
விளங்கிட நின்றான் யாவன்? 3

---

1. செய்ய-சிவந்த. கான்-காட்டில் வாழ்கின்ற. கானல் அம்புனல்-கானல் நீர். வான்முக முளரி-ஆகாயத் தாமரை. 2. அத்தை - அதனை. இனைய ஆற்றால் - இப்படியிருப்பதால். ஈண்டிய - மிகுந்த. 3. கொண்டது - பரம்பொருள் என்று சொல்லப்பட்டது. அத்தால் - அதனால். வெண் தலைவிழி - வெண்மையாகிய தலையும், கண்ணும்.

Koviloor Digital Library



விளங்கவெண் ணீறு பூசி,
விரிசடை கங்கை தாங்கித்,
துளங்குநல் நுதல்கண் தோன்றச்,
சுழல்வளி நெடுமூச்சு ஆகக்
களங்கம்இல் உருவம் தானே
ககனமாய்ப் பொலிய, பூமி
வளர்ந்ததாள் என்ன, உள்ளம்
மன்றுஎன, மறைஒன்று இன்றி, 4

மறைமுழக்கு ஒலிப்பத், தானே
வரதமோடு அபயக் கைகள்
முறைமையின் ஓங்க, நாதம்
முரசுஎனக் கறங்க, எங்கும்
குறைவிலா வணம்நி றைந்து
கோதுஇலா நடனம் செய்வான்
இறையவன் எனல்ஆம், யார்க்கும்
இதயசம் மதம்ஈது அல்லால். 5

அல்லல்ஆம் தொழில்ப டைத்தே,
அடிக்கடி உருஎ டுத்தே,
மல்லல்மா ஞாலம் காக்க
வருபவர் கடவுள் என்னில்,
தொல்லைஆம் பிறவி வேலை
தொலைந்திடாது, இருள்நீங் காது,
நல்லது மாயை தானும்
நான்என வந்து நிற்கும். 6

4. துளங்கு – பிரகாசிக்கின்ற. சுழல் வளி – வீசுகின்ற காற்றானது. மறை ஒன்றும் இன்றி – இரகசியம் ஒன்றும் இல்லாது.

5. வரதமோடு அபயக் கைகள் – வரம் தரும் கையுடன் அச்சத்தை நீக்கும் கைகள்.

6. மல்லல் – வளம் பொருந்திய.

Koviloor Digital Library



நான்என நிற்கும் ஞானம்
ஞானம்அன்று, அந்த ஞானம்
மோனமாய் இருக்க ஒட்டா,
மோனம்இன்று ஆக வேதான்,
தேன்என ருசிக்கும் அன்பால்
சிந்தைநைந்து உருகும் வண்ணம்,
வான்என நிறைந்தான் அந்த
மாகடல் வளைவது இன்றே. 7

இன்றுஎன இருப்போம் என்னின்
என்றும் சூனியம்ஆம் முக்தி,
நன்றொடு தீதும் அன்றி
நாம்முன்னே பெறும்அ வித்தை
நின்றது, பெத்தம் தானே
நிரந்தர முக்தி என்னின்,
ஒன்றுஒரு வரைநான் கேட்க
உணர்வுஇல்லை, குருவும் இல்லை. 8

இல்லைஎன் றிடின்,இப் பூமி
இருந்தவாறு இருப்போம் என்னில்,
நல்லவன் சாரு வாகன்
நான்சொலும் நெறிக்கு வீணில்
தொல்லைஏன்? ஆகம் ஆதி
தொடுப்பதுஏன் மயக்கம் ஏதுஇங்கு?
ஒல்லைவந்து இருமின் என்ன
உறவுசெய் திடுவன் அந்தோ! 9

அந்தணர் நால்வர் காண
அருட்குரு ஆகி வந்த
எந்தையே! எல்லாம் தான்என்று
இயம்பினன், எமைப்ப டைத்த
தந்தைநீ எம்மைக் காக்கும்
தலைவனே நுந்தை அன்றோ?
பந்தம்இல் சித்தி முக்தி
படைக்கநின் அருள்பா லிப்பாய். 10

9. சாருவாகன் – நிரீஸ்வரவாதி, உலகாயதன்.

Koviloor Digital Library



## 16. பன்மாலை

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பன்மாலைத் திரள்இருக்கத், தமைஉ ணர்ந்தோர்
பாமாலைக் கேநீதான் பக்ஷம் என்று,
நன்மாலை யாஎடுத்துச் சொன்னார் நல்லோர்;
நலம்அறிந்து கல்லாத நானும் சொன்னேன்;
சொன்மாலை மாலையாக் கண்ணீர் சோரத்,
தொண்டனேன் எந்நாளும் துதித்து நிற்பேன்;
என்மாலை அறிந்து,இங்கே வாவா என்றே
எனைக்கலப்பாய் திருக்கருணை எம்பி ரானே! 1

கருணைமொழி சிறிதுஇல்லேன், ஈதல் இல்லேன்,
கண்ணீர்கம் பலைஎன்தன் கருத்துக்கு ஏற்க
ஒருபொழுதும் பெற்றுஅறியேன், என்னை ஆளும்
ஒருவா!உன் அடிமைநான் ஒருத்த னுக்கோ
இருவினையும் முக்குணமும் கரணம் நான்கும்
இடர்செயும்ஐம் புலனும்கா மாதி ஆறும்
வரவரவும் ஏழைக்குஓர் எட்டது ஆன
மதத்தொடும்வந்து எதிர்த்தநவ வடிவ மன்றே. 2

வடிவுஅனைத்தும் தந்தவடிவு இல்லாச் சுத்த
வான்பொருளே; எளியனேன் மனம்ஆம் மாயைக்
குடிகெடுக்கத் துஜம்கட்டிக் கொண்ட மோன
குருவே;என் தெய்வமே; கோதுஇ லாத

---

1. பன்மாலைத் திரள் இருக்க – பூமாலைகள் பல இருக்கச் செய்து. பக்ஷம் – விருப்பம். நன்மாலை – சிறந்த பாமாலை. என்மாலை அறிந்து – என் விருப்பத்தை உணர்ந்து. 2. காமாதி ஆறும் – காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னும் ஆறும். வரவரவும் – ஓயாது. எட்டது ஆன மதத்தொடும் – குலம், ரூபம், யவ்வனம், வித்தை, தனம், பிரபுத்துவம், சகாயம், சகசம் என்னும் எட்டுக் கர்வங்களுடன். நவ வடிவமன்றே – பிரம்மா, திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன், சக்தி, சிவம், நாதம், விந்து ஆகிய சிதாகாசமே.

Koviloor Digital Library



படிஎனக்குஆ னந்தவெள்ளம் வந்து தேக்கும்
படி,எனக்குஉன் திருக்கருணை பற்று மாறே
அடிஎடுத்துஎன் முடியில்இன்னம் வைக்க வேண்டும்;
அடிமுடிஒன்று இல்லாத அகண்ட வாழ்வே! 3

வாழ்வுஅனைத்தும் மயக்கம்எனத் தேர்ந்தேன்; தேர்ந்த
வாறேநான் அப்பால்ஓர் வழிபா ராமல்
தாழ்வுபெற்றுஇங்கு இருந்தேன்;ஈது என்ன மாயம்?
தடைஉற்றால் மேல்கதியும் தடையது ஆமே;
ஊழ்வலியோ, அல்லதுஉன்தன் திருக்கூத் தோ,இங்கு
ஒருதமியேன் மேல்குறையோ உணர்த்தாய்;இன்னம்
பாழ்அவதிப் படஎனக்கு முடியாது; எல்லாம்
படைத்துஅளித்துத் துடைக்கவல்ல பரிசி னானே! 4

நான்நான்இங்கு எனும்அகந்தை எனக்குஏன் வைத்தாய்;
நல்வினைதீ வினைஎனவே நடுவே நாட்டி;
ஊன்ஆரும் உடல்சுமைஎன் மீதுஏன் வைத்தாய்;
உயிர்எனவும் என்னைஒன்றா உள்ஏன் வைத்தாய்?
ஆனாமை யாய்அகிலம் நிகில பேதம்
அனைத்தின்உள்ளும் தான்ஆகி, அறிவுஆ னந்தத்
தேன்ஆகிப், பால்ஆகிக் கனியாய்க், கன்னல்
செழும்பாகாய்க், கற்கண்டாய்த் திகழ்ந்த ஒன்றே! 5

ஒன்றிஒன்றி நின்றும்நின்றும் என்னை? என்னை
உன்னிஉன்னும் பொருள்அலைநீ; உன்பால் அன்பால்
நின்றதன்மைக்கு இரங்கும்வயி ராக்கியன் அல்லேன்;
நிவர்த்திஅவை வேண்டும்இந்த நீல னுக்கே;

---

3. துஜம் – கொடி. கோது – குற்றம். 4. கதியும் – முக்தி அடைதலும். பரிசினானே – பாங்குடையவனே.

5. ஆனாமையாய் – நீங்காமையாகி. நிகிலபேதம் அனைத்தின் உள்ளும் – வேறுபடுகின்ற வடிவங்கள் எல்லாவற்றினுள்ளும்.

6. என்னை – என்ன பலன். உன்னும் – நினைக்கப் படுகிற. நீலனுக்கே – பொய்யனுக்கே. இடுக்குவார் – எடுப்பவர்கள். கன்று மனத்துடன் – வருந்துகின்ற மனத்துடன்.

Koviloor Digital Library



என்றும்என்றும் இந்நெறிஓர் குணமும் இல்லை;
இடுக்குவார் கைப்பிள்ளை ஏதோ ஏதோ?
கன்றுமனத் துடன்ஆடு தழைதின் றால்போல்
கல்வியும்கேள் வியும்ஆகிக் கலக்குற் றேனே. 6

உற்றதுணை நீஅல்லால் பற்று வேறுஒன்று
உன்னேன்;பன் னாள்உலகத்து ஓடி ஆடிக்
கற்றதும்கேட் டதும்இதனுக்கு ஏது ஆகும்;
கற்பதும்கேட் பதும்அமையும்; காணா நீத
நல்துணையே; அருள்தாயே; இன்பம் ஆன
நாதாந்த பரம்பொருளே; நார ணாதி
சுற்றமுமாய் நல்லன்பர் தமைச்சேய் ஆகத்
தொழும்புகொளும் கனாகனமே; சோதிக் குன்றே! 7

குன்றாத மூவுருவாய், அருவாய், ஞானக்
கொழுந்துஆகி, அறுசமயக் கூத்தும் ஆடி
நின்றாயே! மாயைஎனும் திரையை நீக்கி
நின்னையார் அறியவல்லார்? நினைப்போர் நெஞ்சம்
மன்றுஆக இன்பக்கூத்து ஆட வல்ல
மணியே;என் கண்ணே;மா மருந்தே; நால்வர்க்கு
அன்றுஆலின் கீழ்இருந்து மோன ஞானம்
அமைத்தசின்முத் திரைக்கடலே; அமரர் ஏறே! 8

திரைஇல்லாக் கடல்போலச் சலனம் தீர்ந்து,
தெளிந்துஉருகும் பொன்போல ஜெகத்தை எல்லாம்
கரையவே கனிந்துஉருக்கும் முகத்தி லேநீ
கனிந்தபர மானந்தக் கட்டி, இந்நாள்

7. உன்னேன் – நினைக்கேன். காணாநீதம் – எல்லார்க்கும் விளங்காத மார்க்கத்தின். நாதாந்த – ஓசைக்கப்பாலுள்ள. நாரணாதி – நாராயணன் முதலான. தொழும்பு கொளும் – அடிமையாக ஏற்றுக்கொள்கின்ற. கனாகனமே – மிகக் கனத்த பொருளே.

Koviloor Digital Library


வரையிலே வரக்காணேன்; என்னால் கட்டி
வார்த்தைசொன்னால் சுகம்வருமோ? வஞ்ச னேனை
இரையிலே இருத்தி,நிர் விகற்பம் ஆன
இன்பநிஷ்டை கொடுப்பதுஐயா எந்த நாளோ? 9

எந்தநாள் உனக்குஅடிமை ஆகும் நாளோ?
எந்நாளோ கதிவரும்நாள்? எளிய னேன்தன்
சிந்தைநா ளதுவரைக்கும் மயங்கிற்று அல்லால்
தெளிந்ததுஉண்டோ? மௌனியாய்த் தெளிய ஓர்சொல்
தந்தநாள் முதல்இன்பக் கால்சற்று அல்லால்,
தடைஅறஆ னந்தவெள்ளம் தானே பொங்கி
வந்தநாள் இல்லை;மெத்த அலைந்தேன்; உன்னை
மறவாஇன் பத்தாலே வாழ்கின் றேனே. 10

## 17. நினைவு ஒன்று

### ஞானிகளின் இடம் பொருள் ஏவல்

நினைவுஒன்று நினையாமல் நிற்கின்அகம் என்பார்;
நிற்கும்இட மேஅருளாம்; நிஷ்டைஅருள் ஒட்டும்;
தனைஎன்று மறந்துஇருப்ப அருள்வடிவா னதுமேல்
தட்டிஎழுந் திருக்கும்; இன்பம் தன்மயமே அதுவாம்;
பினைஒன்றும் இலை;அந்த இன்பம்எனும் நிலயம்
பெற்றாரே பிறவாமை பெற்றார்;மற் றும்தான்
மனைஎன்றும் மகவுஎன்றும் சுற்றம்என்றும் அசுத்த
வாதனையாம் ஆசைஒழி மன்ஒருசொல் கொண்டே. 1

---

9. இரையிலே இருத்தி – உடம்பில் வைத்து. 10. இன்பக் கால் சற்று அல்லால் – ஆனந்தத் தோற்றம் பட்டும் படாதும் இருந்தது அன்றி.

1. அகம் – முடிந்தநிலை. நிஷ்டை அருள் ஒட்டும் – தியானத்தால் பரநிலை வாய்க்கும். தனைஎன்று மறந்து இருப்ப – ஜீவபோதத்தைக் கருத்தில் வாங்காது அகற்ற. அருள்வடிவானது மேல் தட்டி எழுந்திருக்கும் – பரபோதம் தானாக நிகழும். நிலயம் – பரபோதம். அசுத்த வாதனை யாம் ஆசை – அழுக்குப்படிந்த பொருந்தாத ஆசை. மன்ஒரு சொல் கொண்டே – குருவின் ஓர் உபதேசத்தினால்.

Koviloor Digital Library


ஒருமொழியே பலமொழிக்கும் இடம்கொடுக்கும்; அந்த
ஒருமொழியே மலம்ஒழிக்கும் ஒழிக்கும்என மொழிந்த
குருமொழியே மலைஇலக்கு; மற்றைமொழி எல்லாம்
கோடுஇன்றி வட்டுஆடல் கொள்வதுஒக்கும் கண்டாய்;
கருமொழிஇங்கு உனக்குஇல்லை; மொழிக்குமொழி ருசிக்கக்
கரும்புஅனைய சொல்கொடுஉனைக் காட்டவும்கண் டனை;மேல்
தருமொழிஇங்கு உனக்குஇல்லை; உன்னைவிட்டு நீங்காத்
தற்பரமாய் ஆனந்தப் பொற்பொதுவாய் நில்லே. 2

நில்லாத ஆக்கைநிலை அன்றுஎனவே கண்டாய்;
நேயஅருள் மெய்அன்றோ? நிலயமதா நிற்கக்
கல்லாதே ஏன்படித்தாய்? கற்றதுஎல்லாம் மூடம்
கற்றதுஎல்லாம் மூடம்என்றே கண்டனையும் அன்று;
சொல்லாலே பயன்இல்லை; சொல்முடிவைத் தானே
தொடர்ந்துபிடி; மர்க்கடம்போல் தொட்டதுபற் றாநில்;
எல்லாரும் அறிந்திடவே வாய்ப்பறைகொண்டு அடிநீ;
இராப்பகல்இல் லாஇடமே எமக்குஇடம்என்று அறிந்தே. 3

இடம்பொருள்ஏ வலைக்குறித்து மடம்புகுநாய் எனவே
எங்கேநீ அகப்பட்டாய்; இங்கேநீ வாடா;
மடம்பெறுபாழ் நெஞ்சாலே அஞ்சாதே; நிராசை
மன்இடமே இடம்;அந்த மாநிலத்தே பொருளும்;

2. கோடு இன்றி வட்டு ஆடல் கொள்வது ஒக்கும் – கோடு போடாமல் சொக்கட்டான் விளையாடுவது போன்றதாம். கருமொழி – கர்ப்பத்தில் பிறப்பெடுப்பதைப் பற்றிய பேச்சு. தற்பரமாய் – சொந்தமாயுள்ள பெருநிலையில். ஆனந்தப் பொற் பொதுவாய் – பொன்னம்பலமாய்.

3. நேய அருள் மெய் அன்றோ – இறைவன் திருவருள் உண்மை அன்றோ. மர்க்கடம் – குரங்கு.

Koviloor Digital Library



திடம்பெறவே நிற்கின்எல்லா உலகமும்வந்து ஏவல்
செய்யும்;இந்த நிலைநின்றோர் சனகன்முதல் முனிவர்;
கடம்பெறுமா மதயானை என்னவும்நீ பாசக்
கட்டான நிகளபந்தக் கட்டுஅவிழப் பாரே. 4

பார்ஆதி அண்டம்எலாம் படர்கானல் ஜலம்போல்
பார்த்தனையே; முடிவில்நின்று பார்;எதுதான் நின்றது?
ஆராலும் அறியாத சத்துஅன்றோ; அதுவாய்
அங்குஇருநீ; எங்குஇருந்தும் அதுஆவை கண்டாய்;
பூராயம் ஆகவும்நீ மற்றுஒன்றை விரித்துப்
புலம்பாதே; சஞ்சலமாப் புத்தியைநாட் டாதே;
ஓராதே ஒன்றையும்நீ; முன்னிலைவை யாதே;
உள்ளபடி முடியும்எலாம் உள்ளபடி காணே. 5

உள்ளபடி என்னவும்நீ மற்றுஒன்றைத் தொடர்ந்திட்டு
உளம்கருத வேண்டா;நிஷ் களங்கமதி ஆகிக்
கள்ளமனத்து உறவைவிட்டு,எல் லாம்துறந்த துறவோர்
கற்பித்த மொழிப்படியே கங்குல்பகல் அற்ற
வெள்ளவெளிக் கடல்மூழ்கி, இன்பமயப் பொருளாய்
விரவி,எடுத்து எடுத்துஎடுத்து விள்ளவும்வாய் இன்றிக்,
கொள்ளைகொண்ட கண்ணீரும் கம்பலையும் ஆகிக்,
கும்பிட்டு ஜகம்பொய்எனத் தம்பட்டம் அடியே. 6

அடிமுடியும் நடுவும்அற்ற பரவெளிமேல் கொண்டால்
அத்வைத ஆனந்த சித்தம்உண்டாம்; நமது
குடிமுழுதும் பிழைக்கும்;ஒரு குறையும்இல்லை; எடுத்த
கோலம்எல்லாம் நன்றுஆகும்; குறைவுநிறைவு அறவே

4. மடம் பெறு – அறியாமையை உடைய. நிராசை மன் இடமே இடம் – ஆசையற்ற இடமே பெருநிலம். கடம் பெறு – மதங்கொண்ட. நிகளபந்தக் கட்டு – உடைக்க முடியாத இரும்புத்தளை.

5. பூராயம் ஆகவும் – முழுதும். 6. வெள்ள வெளிக் கடல் மூழ்கி – பரமாத்ம சோதியில் கலந்து.

7. வித்தகரோடும் – நிறைஞானிகளோடும். படி முழுதும் – மண்ணுலகம் முழுதையும்.

Koviloor Digital Library


விடியும்உத யம்போல அருள்உதயம் பெற்ற
வித்தகரோ டும்கூடி விளையாடல் ஆகும்;
படிமுழுதும் விண்முழுதும் தந்தாலும் களியாப்
பாலருடன் உன்மத்தர் பிசாசர்குணம் வருமே. 7

வரும்போம்என் பனவும்இன்றி, என்றும்ஒரு படித்தாய்,
வான்ஆதி தத்துவத்தை வளைந்துஅருந்தி, வெளியாம்
இரும்போ,கல் லோ,மரமோ என்னும்நெஞ்சைக் கனல்மேல்
இட்டமெழு காஉருக்கும் இன்பவெள்ளம் ஆகிக்,
கரும்போ,கண் டோ,சீனி சர்க்கரையோ, தேனோ,
கனி,அமிர்தோ எனருசிக்கும் கருத்தவிழ்ந்தோர்
உணர்வார்;
அரும்போ,நன் மணம்காட்டும் காமரசம் கன்னி
அறிவாளோ? அபக்குவர்க்கோ அந்நலந்தான் விளங்கும்?
8

தானேயும் இவ்உலகம் ஒருமுதலும் ஆகாத்
தன்மையினால் படைத்துஅளிக்கும் தலைமையது ஆன
கோன்ஆக ஒருமுதல்இங்கு உண்டுஎனவும் யூகம்
கூட்டியதும், ஐகமுடிவில் குலவுறும்மெய்ஞ் ஞான
வான்ஆக அம்முதலே நிற்கும்நிலை நம்மால்
மதிப்பரிதாம் எனமோனம் வைத்ததும்உன் மனமே;
ஆனாலும் மனம்ஜடம்என்று அழுங்காதே, உண்மை
அறிவித்த இடம்குருஆம், அருள்இலதுஒன்று இலையே.
9

## 18. பொன்னை மாதரை

### கலிவிருத்தம்

பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்;
என்னை நாடிய என்உயிர் நாதனே!
உன்னை நாடுவன்; உன்அருள் தூவெளி
தன்னை நாடுவன்; தன்னம் தனியனே! 1

8. அபக்குவர்க்கோ – பண்பாடு அடையாதவர்க்கோ.
9. யூகம் – பகுத்தறிவு. குலவுறும் – விளங்குகின்ற.

Koviloor Digital Library



தன்னது என்றுஉரை சாற்று வனஎலாம்
நின்னது, என்தனை நின்இடத் தேதந்தேன்,
இன்னம் என்னை இடர்உறக் கூட்டினால்
பின்னை உய்கிலன் பேதையன் ஆவியே! 2

ஆவி யேஉனை யான்அறி வாய்நின்று
சேவி யேன்களச் சிந்தை திறைகொடேன்,
பாவி யேன்உளப் பான்மையைக் கண்டு,நீ
கூவி ஆள்,எனை ஆட்கொண்ட கோலமே! 3

கோலம் இன்றிக் குணம்இன்றி நின்அருள்
சீலம் இன்றிச் சிறியன் பிழைப்பனோ?
ஆலம் உண்டும் அமிர்துஉரு வாய்வந்த
காலம் எந்தை கதிநிலை காண்பதே. 4

காணும் கண்ணில் கலந்தகண் ணேஉனைச்
சேணும் பாரும் திரிபவர் காண்பரோ?
ஆணும் பெண்ணும் அதுஎனும் பான்மையும்
பூணும் கோலம் பொருந்திஉள் நிற்கவே. 5

நிற்கும் நன்னிலை நிற்கப்பெற் றார்அருள்
வர்க்கம் அன்றி மனிதர்அன் றேஐயா!
துர்க்கு ணக்கடல் சோங்குஅன்ன பாவியேற்கு
என்கு ணம்கண்டு என்பெயர் சொல்வதே? 6

சொல்லை உன்சரித் துடித்தது அலால்அருள்
எல்லை உன்னி எனைஅங்கு வைத்திலேன்;
வல்லை நீஎன்னை வாஎன் றிடாவிடின்
கல்லை யாம்இக் கருமி நடக்கையே. 7

3. களச் சிந்தை – கள்ள மனதை.

5. காணும் கண்ணில் கலந்த கண்ணே – ஞானக் கண் வடிவினனே. சேணும் – விண்ணிலும்.

6. அருள்வர்க்கம் – தெய்வப்பெற்றி படைத்தவர். சோங்கு அன்ன – மரக்கலத்தை ஒத்த.

7. வல்லை – விரைவில். கல்லை – வெளிப்படட்டு.

Koviloor Digital Library



கையும் மெய்யும் கருத்துக்கு இசையவே
ஐய! தந்ததற்கு ஐயம் இனிஉண்டோ?
பொய்ய னேன்சிந்தைப் பொய்கெடப் பூரண
மெய்ய தாம்இன்பம் என்று விளைவதே? 8

என்றும் உன்னை இதய வெளிக்குளே
துன்ற வைத்தன னே;அருள் ஜோதிநீ
நின்ற தன்மை நிலைக்குஎன்னை நேர்மையாம்?
நன்று தீதுஅற வைத்த நடுவதே. 9

வைத்த தேகம் வருந்த வருந்திடும்
பித்தன் நான்அருள் பெற்றும் திடம்இலேன்;
சித்த மோன சிவசின்ம யானந்தம்
வைத்த ஐய அருள்செம்பொன் ஜோதியே! 10

செம்பொன் மேனிச் செழுஞ்சுட ரே!முழு
வம்ப னேன்உனை வாழ்த்தும் மதிஇன்றி
இம்பர் வாழ்வினுக்கு இச்சைவைத் தேன்;மனம்
நம்பி வாளனின் நான்என்கொல் செய்வதே? 11

செய்யும் செய்கையும் சிந்திக்கும் சிந்தையும்
ஐய! நின்னதுஎன்று எண்ணும் அறிவுஇன்றி,
வெய்ய காம வெகுளி மயக்கம்ஆம்
பொய்யி லேசுழன் றேன்;என்ன புன்மையே? 12

புன்பு லால்நரம்பு என்புஉடைப் பொய்உடல்
அன்பர் யார்க்கும் அருவருப்பு அல்லவோ?
என்பொ லாமணி யே! இறை யே!இத்தால்
துன்பம் அன்றிச் சுகம்ஒன்றும் இல்லையே! 13

9. துன்ற – பொருந்த. நடுவதே – சாட்சிப் பொருளே.

10. சித்தமோன – உண்மையான மௌன நிலையினை அறிவிப்பவனே.

11. இம்பர் வாழ்வினுக்கு – இவ்வுலக வாழ்க்கைக்கு.

13. பொலாமணியே – துளைக்கப்படாத மணியே, அகண்ட பொருளே. இத்தால் – இந்த உடம்பினால்.

Koviloor Digital Library



இல்லை உண்டுஎன்று எவர்பக்கம் ஆயினும்
சொல்ல வோஅறி யாத தொழும்பன்யான்;
செல்ல வேறுஒரு திக்குஅறி யேன்;எலாம்
வல்ல நீஎனை வாழ்விக்க வேண்டுமே. 14

வேண்டும் சீர்அருள் மெய்அன்பர்க் கேஅன்பு
பூண்ட நான்என் புலம்அறி யாததோ?
ஆண்ட நீஉன் அடியவன் நான்என்று
தூண்டுவேன்; அன்றித் தொண்டன்என் சொல்வதே? 15

எனக்கு ளேஉயிர் என்ன இருந்தநீ
மனக்கி லேசத்தை மாற்றல் வழக்குஅன்றோ!
கனத்த சீர்அருள் காக்ஷிஅ லால்ஒன்றை
நினைக்க வோஅறி யாதுஎன்தன் நெஞ்சமே. 16

நெஞ்சுஉ கந்துஉனை நேசித்த மார்க்கண்டர்க்கு
அஞ்சல் என்ற அருள்அறிந் தேஐயா!
தஞ்சம் என்றுஉன் சரண்அடைந் தேன்;எங்கும்
செஞ்செ வேநின்ற சிற்சுக வாரியே! 17

வாரி ஏழும் மலையும் பிறவும்தான்
சீரிது ஆனநின் சின்மயத் தேஎன்றால்
ஆரி லேஉளது ஆவித் திரள்;அதை
ஓரி லேன்;எனை ஆண்ட ஒருவனே! 18

ஒருவர் என்உளத்து உள்கும் குறிப்புஅறிந்து
அருள்வ ரோஎனை ஆளுடை அண்ணலே!
மருள னேன்பட்ட வாதை விரிக்கினோ
பெருகு நாள்இனிப் பேச விதிஇன்றே. 19

---

15. என்புலம் அறியாததோ – என் அறிவுக்கு எட்டாததோ.

17. செஞ்செவே – நேராக, முழுதும்.

18. வாரி ஏழும் – ஏழு கடல்களும். ஆவித்திரள் – ஜீவர்களின் தொகை. ஓரிலேன் – ஆராய்ந்திலேன்.

Koviloor Digital Library



இன்றுஉ னக்குஅன்பு இழைத்திலன் நான்என்றே
அன்று தொட்டுஎனை ஆள்அர சேஎன்று
நின்றுஅ ரற்றிய நீலனைக் கைவிட்டால்
மன்றம் எப்படி நின்அருள் வாழ்த்துமே? 20

வாழ்த்து நின்அருள் வாரம்வைத் தால்அன்றிப்
பாழ்த்த சிந்தைப் பதகனும் உய்வனோ?
சூழ்த்து நின்ற தொழும்பரை ஆனந்தத்து
ஆழ்த்து முக்கண் அருள்செம்பொன் ஜோதியே! 21

ஜோதி யே,சுட ரேசுக மேதுணை
நீதி யே,நிஜ மே,நிறை வே,நிலை
ஆதி யே,உனை யான்அடைந் தேன்;அகம்
வாதி யாதுஅருள் வாய்அருள் வானையே! 22

வானைப் போல வளைந்துகொண்டு ஆனந்தத்
தேனைத் தந்துஎனைச் சேர்ந்து கலந்தமெய்ஞ்
ஞானத் தெய்வத்தை நாடுவன்; நான்எனும்
ஈனப் பாழ்கெட என்றும் இருப்பனே. 23

இரும்பைக் காந்தம் இழுக்கின்ற வாறுஎனைத்
திரும்பிப் பார்க்கஒட் டாமல், திருவடிக்
கரும்பைத் தந்து,கண் ணீர்கம்ப லைஎலாம்
அரும்பச் செய்எனது அன்னைஒப் பாமனே! 24

அன்னை அப்பன்என் ஆவித் துணைஎனும்
தன்னை ஒப்புஅற்ற சற்குரு என்பதுஎன்?
என்னைப் பூரண இன்ப வெளிக்குளே
துன்ன வைத்த சுடர்எனத் தக்கதே. 25

---

20. நீலனை – வஞ்சகனான என்னை.

21. வாரம் வைத்தால்அன்றி – என்மேல் அன்பு வைத்தால் அல்லது. பதகனும் – கொடும்பாவியாகிய நானும்.

22. வாதியாது – துன்பப்படுத்தாது. அருள்வானையே – அருள் வெளியையே.

25. துன்ன வைத்த – பொருந்த வைத்த.

Koviloor Digital Library



தக்க கேள்வியில் சார்ந்தநல் பூமியில்
மிக்கது ஆக விளங்கு முதல்ஒன்றே;
எக்க ணும்தொழ யாவையும் பூத்துக்காய்த்து
ஒக்க நின்றும்ஒன் றாய்நிறைவு ஆனதே. 26

ஆனம் ஆன சமயங்கள் ஆறுக்கும்
தான மாய்நின்று தன்மயம் காட்டிய
ஞான பூரண நாதனை நாடியே
தீன னேன்இன்பம் தேக்கித் திளைப்பனே. 27

தேக்கி இன்பம் திளைக்கத் திளைக்கவே
ஆக்க மாய்எனக்கு ஆனந்தம் ஆகியே,
போக்கி னோடு வரவுஅற்ற பூரணம்
தாக்கி நின்றவா தன்மயம் ஆம்அதே. 28

அதுஎன்று உன்னும் அதுவும் அறநின்ற
முதிய ஞானிகள் மோனப் பொருளது,
எதுஎன்று எண்ணி இறைஞ்சுவன் ஏழையேன்;
மதியுள் நின்றுஇன்ப வாரி வழங்குமே. 29

வாரிக் கொண்டுஎனை வாய்மடுத்து இன்பமாய்ப்
பாரில் கண்டவை யாவும் பருகினை;
ஓரில் கண்டிடும் ஊமன் கனவுஎன
யாருக் கும்சொல வாய்இலை ஐயனே! 30

ஐய! மற்ற அறிவரு ணர்க்குஎலாம்
கையில் ஆமல கக்கனி ஆகிய
மெய்ய னே,இந்த மேதினி மீதுஉழல்
பொய்ய னேற்குப் புகல்இடம் எங்ஙனே? 31

எங்ங னேஉய்ய யான்எனது என்பதுஅற்று
அங்ங னேஉன் அருள்மயம் ஆகிலேன்;
திங்கள் பாதி திகழப் பணிஅணி
கங்கை வார்சடைக் கண்நுதல் எந்தையே! 32

---

27. தானமாய் – இருப்பிடமாய். 30. ஓரில் – ஆராயு மிடத்து. 31. ஆமலகக்கனி – நெல்லிக்கனி. 32. பணி – பாம்பு. கண்நுதல் – நெற்றிக்கண்ணை உடைய.

Koviloor Digital Library



கண்ணில் காண்பதுஉன் காக்ஷி,கை யால்தொழில்
பண்ணல் பூஜை. பகர்வது மந்த்ரம்.
மண்ணொடு ஐந்தும் வழங்குஉயிர் யாவுமே
அண்ண லே!நின் அருள்வடிவு ஆகுமே. 33

வடிவுஎ லாம்நின் வடிவுஎன வாழ்த்திடாக்
கடிய னேனும்உன் காரணம் காண்பனோ?
நெடிய வான்என எங்கும் நிறைந்துஒளிர்
அடிக ளே,அர சே,அருள் அத்தனே! 34

அத்த னே,அகண் டானந்த னே,அருள்
சுத்த னே,என உன்னைத் தொடர்ந்திலேன்;
மத்த னேன்பெறு மாமலம் மாயவான்
கத்தனேகல்வி யாதுஅது கற்கவே. 35

கற்றும் என்பலன்? கற்றிடும் நூல்முறை
சொற்ற சொற்கள் சுகாரம்ப மோ?நெறி
நிற்றல் வேண்டும், நிர்விகற் பச்சுகம்
பெற்ற பேர்பெற்ற பேசாப் பெருமையே! 36

பெருமைக் கேஇறு மாந்து பிதற்றிய
கருமிக்கு ஐய! கதியும்உண் டாம்கொலோ?
அருமைச் சீர்அன்பர்க்கு அன்னைஒப்பு ஆகவே
வரும்அப் பேரொளி யே,உன்ம னாந்தமே! 37

உன்ம னிக்குள் ஒளிர்பரம் ஜோதியாம்
சின்ம யப்பொரு ளே,பழம் செல்வமே,
புன்ம லத்துப் புழுஅன்ன பாவியேன்
கல்ம னத்தைக் கரைக்கக் கடவதே! 38

34. உன் காரணம் காண்பனோ – நீ முதல்வன் என்பதை அறிவனோ. 35. மாமலம்மாய – பெரிய குறைவு நீங்க. வான்கத்தனே – மேலான ஆற்றல் உடையவனே. 37. கருமிக்கு – வினையேனுக்கு. உன் மனாந்தமே – உன்மனிய சக்திக்கும் முடிவான இடமே. 38. உன்மனிக்குள் – உன்மனி என்னும் அருள் சக்திக்குள்ளே. புன்மலத்து – அற்பமாகிய மலத்திலுள்ள.

Koviloor Digital Library



கரையில் இன்பக் கடல்அமு தே!இது
வரையில் நான்உனை வந்து கலந்திலேன்;
உரைஇ லாஇன்பம் உள்ளவர் போலஇத்
தரையி லேநடித் தேன்என்ன தன்மையே? 39

மைஉ லாம்விழி மாதர்கள் தோதகப்
பொய்யில் ஆழும் புலைஇனிப் பூரைகாண்;
கையில் ஆமல கக்கனி போன்றஎன்
ஐய னே,எனை ஆளுடை அண்ணலே! 40

அண்ண லே,உன் அடியவர் போல்அருள்
கண்ணி னால்உனைக் காணவும், வாஎனப்
பண்ணி னால்என் பசுத்துவம் போய்உயும்
வண்ணம் ஆக மனோலயம் வாய்க்குமே. 41

வாய்க்கும் கைக்கும் மௌனம் மௌனம்என்று
ஏய்க்கும் சொல்கொண்டு இராப்பகல் அற்றிடா
நாய்க்கும் இன்பம்உண் டோ?நல் அடியரைத்
தோய்க்கும் ஆனந்தத் தூவெளி வெள்ளமே! 42

தூயது ஆன துரிய அறிவுஎனும்
தாயும் நீ,இன்பத் தந்தையும் நீ,என்றால்
சேய தாம்இந்தச் சீவத் திரள்அன்றோ?
ஆயும் பேரொளி ஆன அகண்டமே! 43

அகண்டம் என்ன அருமறை ஆகமம்
புகன்ற நின்தன்மை போதத்து அடங்குமோ?
ஜெகங்கள் எங்கும் திரிந்துநல் மோனத்தை
உகந்த பேர்உனை ஒன்றுவர் ஐயனே! 44

---

40. மை உலாம் விழி – மை தீட்டிய கண்களை உடைய. தோதகப் பொய்யில் – வஞ்சகத்தோடுகூடிய பொய்யான இன்பத்தில்.

41. பசுத்துவம் போய் – ஆன்ம இயல்பு கெட்டு. மனோலயம் – மனம் அழிந்து போதல்.

43. சீவத்திரள் – உயிர்த்தொகை.

Koviloor Digital Library



ஐய னேஉனை அன்றி ஒருதெய்வம்
கையி னால்தொழ வும்கரு தேன்கண்டாய்;
பொய்யன் ஆகிலும்பொய்உரை யேன், சுத்த
மெய்ய னாம்உனக் கேவெளி ஆகுமே! 45

வெளியில் நின்ற வெளியாய் விளங்கிய
ஒளியில் நின்ற ஒளிஆம்உன் தன்னை,நான்
தெளிவு தந்தகல் லால்அடித் தேஎன்று
களிபொ ருந்தஅன் றோகற்ற கல்வியே. 46

கல்லை உற்ற கருத்தினர், கார்நிறத்து
அல்லை ஒத்த குழலினர் ஆசையால்
எல்லை அற்ற மயல்கொள வோஎழில்
தில்லை யில்திக ழும்திருப் பாதனே! 47

திருவ ருள்தெய்வச் செல்வி மலைமகள்
உருஇ ருக்கின்ற மேனி ஒருபரம்
குருவை முக்கண்எம் கோவைப் பணிநெஞ்சே!
கருஇ ருக்கின்ற கன்மம்இங்கு இல்லையே. 48

கன்மம் ஏது? கடுநரகு ஏது?மேல்
ஜென்மம் ஏது?எனைத் தீண்டக் கடவதோ?
என்ம னோரதம் எய்தும் படிக்குஅருள்
நன்மை கூர்முக்கண் நாதன் இருக்கவே. 49

நாத கீதன்,என் நாதன்,முக் கண்பிரான்,
வேத வேதியன், வெள்விடை ஊர்திமெய்ப்
போத மாய்நின்ற புண்ணியன், பூந்திருப்
பாத மே!கதி மற்றுஇலை பாழ்நெஞ்சே! 50

45. பொய்யன் ஆகிலும்—என்னுடைய வாழ்க்கை நிலையற்றது எனினும். 46. வெளியில் நின்ற – ஞானவெளியில் நிலை பெற்றிருந்த. வெளியாய் விளங்கிய – கண்கூடாகத் தென்பட்ட. ஒளியில் நின்ற – உயிர் விளக்கத்தில் நின்ற. ஒளிஆம்உன் தன்னை – சுயம்பிரகாசமாகிய உன்னை. தேஎன்று – தட்சிணாமூர்த்தியென்று. 50. மெய்ப்போதமாய் – ஆன்மஞானமாக.

Koviloor Digital Library


மற்றுஉ னக்கும யக்கம்என் வன்நெஞ்சே?
கற்றை வார்சடைக் கண்நுத லோன்அருள்
பெற்ற பேர்அவ ரேபெரி யோர்எலாம்
முற்றும் ஓர்ந்தவர் மூதுரை அர்த்தமே! 51

உரைஇ றந்துஉளத்து உள்ள விகாரம்ஆம்
திரைக டந்தவர் தேடும்முக் கண்பிரான்;
பரைநி றைந்த பரப்புஎங்ஙன் அங்ஙனே
கரைக டந்துஇன்பம் ஆகக் கலப்பனே! 52

கலந்த முக்தி கருதினும் கேட்பினும்
நிலங்கள் ஆதியும் நின்றுஎமைப் போலவே
அலந்து போயினம் என்னும் அருமறை
மலர்ந்த வாய்முக்கண் மாணிக்க ஜோதியே! 53

சோதி யாதுஎனைத் தொண்டருள் கூட்டியே
போதி யாதஎல் லாம்மெளப் போதிக்க,
ஆதி காலத்தில் உன்அடிக்கு ஆம்தவம்
ஏது நான்முயன் றேன்முக்கண் எந்தையே! 54

எந்த நாளைக்கும் ஈன்றுஅருள் தாய்என
வந்த சீர்அருள் வாழ்கஎன்று உன்னுவேன்;
சிந்தை நோக்கம் தெரிந்து, குறிப்புஎலாம்
தந்து காக்கும் தயாமுக்கண் ஆதியே! 55

கண்அ கன்றஇக் காசினி யூடுஎங்கும்
பெண்ணொடு ஆண்முதல் ஆம்என் பிறவியை
எண்ண வோஅரிது; ஏழை கதிபெறும்
வண்ணம் முக்கண் மணிவந்து காக்குமே! 56

---

51. மூதுரை அர்த்தமே – வேதப் பொருளாகும்.
52. திரைகடந்தவர் – அஞ்ஞானத் திரையைத் தாண்டியவர். பரைநிறைந்த – பராசக்தியின் அருள்நிறைந்த.
53. அலந்து போயினம் – துன்பப்பட்டுப் போனோம்.
54. மெ(ள்)ளப் போதிக்க – படிப்படியாகப் புகட்ட.
55. உன்னுவேன் – வணங்குவேன்.
56. கண் அகன்ற – இடம் அகன்ற.

Koviloor Digital Library


காக்கும் நின்அருள் காக்ஷிஅல் லால்ஒரு
போக்கும் இல்லைஎன் புந்திக் கிலேசத்தை
நீக்கி ஆளுகை நின்பரம்; அன்பினர்
ஆக்க மே,முக்கண் ஆனந்த மூர்த்தியே! 57

ஆனந் தம்கதி என்னஎன் ஆனந்த
மோனம் சொன்ன முறைபெற, முக்கண்எம்
கோன்இங்கு ஈந்த குறிப்ப தனால்வெறும்
நீனன் செய்கை திருஅருள் செய்கையே. 58

கையி னால்தொழுது ஏத்திக் கசிந்துஉளம்
மெய்யி னால்உனைக் காண விரும்பினேன்
ஐய னே,அர சே,அரு ளே,அருள்
தையல் ஓர்புறம் வாழ்ஒக நாதனே! 59

ஜகத்தின் வாழ்வைச் சதம்என எண்ணியே
மிகுத்த தீமை விளைய விளைக்கின்றேன்;
அகத்துள் ஆர்அமுது ஆம்ஐய நின்முக்திச்
சுகத்தில் நான்வந்து தோய்வதுஎக் காலமோ? 60

காலம் மூன்றும் கடந்துஒளி ராநின்ற
சீல மே,நின் திருஅரு ளால்இந்த்ர
ஜால மாம்இச் சகம்என எண்ணி,நின்
கோலம் நாடுதல் என்று கொடியனே? 61

கொடிய வெவ்வினைக் கூற்றைத் துரந்திடும்
அடிக ளாம்பொரு ளே!நினக்கு அன்புஇன்றிப்
படியில் ஏழைமை பற்றுகின் றேன்;வெறும்
மிடியி னேன்,கதி மேவும் விதிஇன்றே! 62

---

57. போக்கும் இல்லை – புகலிடம் இல்லை. புந்திக் கிலேசத்தை – மனவருத்தத்தை. நின்பரம் – உன் பொறுப்பு.

59. அருள் தையல் ஓர்புறம் வாழ் – திருவருட் சக்தி ஒருபாகம் ஆகிய.

60. ஆர் அமுதுஆம் – அரிய அமிர்தமாகிய.

62. வெறும் மிடியினேன் – மிகவும் வறியனாகிய நான். கதி மேவும் விதி – முக்தியை அடையும் முறை.

Koviloor Digital Library



விதியை யும்விதித்து, என்னை விதித்திட்ட
மதியை யும்விதித்து, அம்மதி மாயையில்
பதிய வைத்த பசுபதி! நின்அருள்
கதியை எப்படிக் கண்டு களிப்பதே? 63

கண்ட கண்ணுக்குக் காட்டும் கதிர்எனப்
பண்டும் இன்றும்என் பால்நின்று உணர்த்திடும்
அண்ட னே!உனக்கு ஓர்பதி னாயிரம்
தெண்டன், என்பொய்ம்மை தீர்த்திடல் வேண்டுமே. 64

வேண்டும் யாவும் இறந்து வெளியிடைத்
தூண்டு வார்அற்ற ஜோதிப் பிரான்,நின்பால்
பூண்ட அன்பர்தம் பொற்பணி வாய்க்குமேல்
ஈண்டு ஜன்மம் எடுப்பன் அனந்தமே! 65

எடுத்த தேகம் இறக்கும்மு னேஎனைக்
கொடுத்து, நின்னையும் கூடவும் காண்பனோ?
அடுத்த பேர்அறி வாய்,அறி யாமையைக்
கெடுத்த இன்பக் கிளர்மணிக் குன்றமே! 66

குன்றி டாத கொழுஞ்சுட ரே,மணி
மன்றுள் ஆடிய மாணிக்க மே,உனை
அன்றி ஆர்துணை ஆர்உறவு ஆர்கதி
என்று நீஎனக்கு இன்அருள் செய்வதே? 67

அருள்எ லாம்திரண்டு ஓர்வடிவு ஆகிய
பொருள்எ லாம்வல்ல பொற்பொது நாத!என்
மருள்எ லாம்கெடுத் தேஉளம் மன்னலால்
இருள்எ லாம்இரிந்து எங்குஒளித் திட்டதே? 68

---

64. கதிர் என – ஞாயிறு போல. அண்டனே – கடவுளே.

65. இறந்து – கடந்து.

66. கிளர் – விளங்குகின்ற.

68. பொற்பொது – பொன்னம்பலத்தில். மன்னலால் – நீ நிலைபெற்றிருத்தலால். இருள் எலாம் இரிந்து – அஞ்ஞான இருள் மறைந்துபோய்.

Koviloor Digital Library 

எங்கும் என்னை இகல்உற வாட்டியே
பங்கம் செய்த பழவினைப் பற்றுஅற்றால்
அங்க ணா!உன் அடியிணை அன்றியே
தங்க வேறுஇடம் உண்டோ ஜகத்திலே? 69

உண்ட வர்க்குஅன்றி உள்பசி ஓயுமோ?
கண்ட வர்க்குஅன்றிக் காதல் அடங்குமோ?
தொண்ட ருக்குஎளி யான்என்று தோன்றுவான்?
வண்த மிழ்க்குஇசைவு ஆக மதிக்கவே. 70

மதியும் கங்கையும் கொன்றையும் மத்தமும்
பொதியும் சென்னிப் புனித!நின் பொன்அடிக்
கதியை விட்டுஇந்தக் காமத்தில் ஆழ்ந்தஎன்
விதியை எண்ணி விழிதுயி லாதுஅன்றே. 71

அன்றுஎ னச்சொல ஆம்என அற்புதம்
நன்றுஎ னச்சொல நண்ணிய நன்மையை
ஒன்றுஎ னச்சொன ஒண்பொரு ளே!ஒளி
இன்றுஎ னக்குஅருள் வாய்இருள் ஏகவே! 72

இருவ ரேபுகழ்ந்து ஏத்தற்கு இனியராம்
ஒருவ ரேதுணை என்றுஉண ராய்நெஞ்சே!
வருவ ரேகொடும் காலர்கள், வந்துஎதிர்
பொருவ ரே,அவர்க்கு என்கொல் புகல்வதே? 73

---

69. இகல் உற – மாறுபாடு மிக. அங்கணா – அழகிய ஞானக் கண்ணனே.

70. வண் தமிழ்க்கு – செந்தமிழ்ப் பாடலுக்கு.

71. பொதியும் – அணிந்திருக்கின்ற. சென்னி – ஜடா பாரத்தினை உடைய.

72. நண்ணிய – பொருந்தியிருந்த. ஒண்பொருளே – மேலான பொருளே.

73. இருவரே – பக்தர்களும், ஞானிகளும் ஆகிய இருவர்களுமே. எதிர்பொருவரே – எதிர்த்து உன்னைக் கொல்லப் போர் செய்வரே.

Koviloor Digital Library


புகழும் கல்வியும் போதமும் பொய்இலா
அகமும் வாய்மையும் அன்பும் அளித்தவே
சுகவி லாசத் துணைப்பொருள் தோற்றமாம்
ககன மேனியைக் கண்டன கண்களே. 74

கண்ணுள் நின்ற ஒளியைக் கருத்தினை
விண்ணுள் நின்று விளங்கிய மெய்யினை
எண்ணி எண்ணி இரவும் பகலுமே
நண்ணு கின்றவர் நான்தொழும் தெய்வமே. 75

தெய்வம் வேறுஉளது என்பவர் சிந்தனை
நைவர் என்பதும், நற்பர தற்பர
சைவ சிற்சிவ னேஉனைச் சார்ந்தவர்
உய்வர் என்பதும் யான்உணர்ந் தேன்உற்றே. 76

உற்ற வேளைக்கு உறுதுணை யாய்இந்தச்
சுற்ற மோநமைக் காக்கும்சொ லாய்நெஞ்சே!
கற்றை வார்சடைக் கண்ணுதல் பாதமே
பற்றது ஆயின் பரசுகம் பற்றுமே. 77

பற்ற லாம்பொரு ளே,பரம் பற்றினால்
உற்ற மாதவர்க்கு உண்மையை நல்குமே;
மற்றும் வேறுஉள மார்க்கம்எ லாம்எடுத்து
எற்று வாய்மன மேகதி எய்தவே. 78

---

74. சுகவிலாசம் – இன்பம் தருகின்ற திருவிளையாடல்களை உடைய. ககனமேனியை – ஞானவெளியை.

75. நண்ணுகின்றவர் – யோகத்தில் நிலைத்திருப்பவர்.

77. கற்றை வார் சடைக் கண்ணுதல் – நீண்ட சடைமுடியை உடைய முக்கண்ணனார்.

78. பற்றலாம் பொருளே பரம் – பற்றுதற்குரிய பொருள் இறைவனே. எடுத்து எற்றுவாய் – அறவே புறக்கணித்துவிடுவாய்.

தா.10.

Koviloor Digital Library



## 19. ஆரணம்

### எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஆரண மார்க்கத்து ஆகம வாசி
அற்புத மாய்நடந் தருளும்
காரணம் உணர்த்தும் கையும்நின் மெய்யும்
கண்கள்மூன்று உடையஎன் கண்ணே!
பூரண அறிவில் கண்டிலம்; அதனால்
போற்றிஇப் புந்தியோடு இருந்து,
தாரணி உள்ள மட்டுமே வணங்கத்
தமியனேன் வேண்டிடத் தகுமே. 1

இடம்ஒரு மடவாள் உலகுஅன்னைக்கு ஈந்திட்டு,
எவ்வுல கத்தையும் ஈன்றும்,
தடம்உறும் அகிலம் அடங்குநாள் அம்மை
தன்னையும் ஒழித்து,விண் எனவே
படர்உறு சோதிக் கருணைஅம் கடலே!
பாய்இருள் படுகரில் கிடக்கக்
கடவனோ? நினைப்பும் மறப்புஎனும் திரையைக்
கவர்ந்துஎனை வளர்ப்பதுஉன் கடனே. 2

வளம்பெறு ஞான வாரிவாய் மடுத்து,
மண்ணையும் விண்ணையும் தெரியாது,
அளம்பெறும் துரும்புஒத்து, ஆவியோடு ஆக்கை
ஆனந்தம் ஆகவே அலந்தேன்;

---

1. ஆரணமார்க்கத்து – வேத வீதியில். ஆகமவாசி – ஆகமம் என்ற குதிரை.

2. மடவாள் – பெண்பால் ஆகிய. தடம்உறும் – பெருமை தங்கிய. அடங்கு நாள் – ஊழிக் காலத்தில். படர் உறு – எங்கும் பரந்து இருக்கிற. பாய் இருள் – பரவியுள்ள அஞ்ஞான இருள். படுகரில் – பிறவிக் கடலில்.

3. அளம் பெறும் – கடலில் பட்ட. அலந்தேன் – வருந்தினேன். களம்பெறு – கருமை கொண்ட.

Koviloor Digital Library


களம்பெறு வஞ்ச நெஞ்சினர் காணாக்
காக்ஷியே; சாக்ஷியே; அறிஞர்
உளம்பெறும் துணையே; பொதுவினில் நடிக்கும்
உண்மையே உள்ளவாறு இதுவே. 3

உள்ளமே நீங்கா என்னைவா வாஎன்று
உலப்புஇலா ஆனந்தம் ஆன
வெள்ளமே பொழியும் கருணைவான் முகிலே;
வெப்புஇலாத் தண்அருள் விளக்கே;
கள்ளமே துரக்கும் தூவெளிப் பரப்பே;
கருஎனக் கிடந்தபாழ் மாயப்
பள்ளமே வீழாது, எனைக்கரை ஏற்றிப்
பாலிப்பது உன்அருள் பரமே. 4

பரம்பரம் ஆகிப் பக்குவம் பழுத்த
பழஅடி யார்க்குஅருள் பழுத்துச்
சுரந்துஇனிது இரங்கும் தானகற் பகமே;
ஜோதியே; தொண்டனேன் நின்னை
இரந்து,நெஞ்சு உடைந்து, கண்துயில் பெறாமல்
இருந்ததும், என்கணில் இருட்டைக்
கரந்து,நின் கண்ணால் துயில்பெறல் வேண்டிக்
கருதினேன் கருத்துஇது தானே. 5

கருத்தினுள் கருத்தாய் இருந்துநீ உணர்த்தும்
காரணம் கண்டுஞ்சும் மாதான்
வருத்தம்அற்று இருந்து, சகம்பெறா வண்ணம்
வருந்தினேன்; மதியின்மை தீர்ப்பார்

---

4. உலப்பு இலா – கெடுதல் இல்லாத. வெப்பு இலா – சூடு இல்லாத. கள்ளமே – அஞ்ஞான இருளையே. கருஎனக் கிடந்த – இருள் என்று சொல்லப்பட்ட. 5. தானகற்பகமே – கொடை வள்ளலே. இரந்து – பணிந்து வேண்டி. கண் துயில் பெறாமல் – தூக்கம் பிடிக்காமல். கணில் இருட்டை – கண்ணிலுள்ள அஞ்ஞான இருளை. 6. கருத்தினுள் கருத்தாய் இருந்து – ஆன்மாவுக்கு அடிப்படையான இறை ஞானமாயிருந்து. பன்னெறி – பயனற்ற பல வழிகள்.

Koviloor Digital Library


ஒருத்தர்ஆர்? உளப்பாடு உணர்பவர் யாவர்?
உலகவர் பன்னெறி எனக்குப்
பொருத்தமோ சொல்லாய் மௌனசற் குருவே!
போற்றிநின் பொன்அடிப் போதே. 6

அடிஎனும் அதுவும் அருள்எனும் அதுவும்
அறிந்திடின் நிர்க்குணம்; நிறைவும்
முடிஎனும் அதுவும் பொருள்எனும் அதுவும்
மொழிந்திடில் சுகம்;மன மாயைக்
குடிகெட வேண்டில் பணிஅற நிற்றல்
குணம்எனப் புன்னகை காட்டிப்,
படிமிசை மௌனி ஆகி,நீ ஆளப்
பாக்கியம் என்செய்தேன் பரனே? 7

என்செயல் இன்றி யாவும்நின் செயல்என்று
எண்ணுவேன் ஒவ்வொரு காலம்;
புன்செயல் மாயை மயக்கின்என் செயலாப்
பொருந்துவேன் அஃதுஒரு காலம்;
பின்செயல் யாதும் நினைவுஇன்றிக் கிடப்பேன்
பித்தனேன்; நன்னிலை பெறநின்
தன்செயல் ஆக முடித்திடல் வேண்டும்
சச்சிதா னந்தசற் குருவே! 8

குருஉரு ஆகி மௌனியாய் மௌனக்
கொள்கையை உணர்த்தினை; அதனால்
கருஉரு ஆவது எனக்குஇலை; இந்தக்
காயமோ பொய்எனக் கண்ட
திருஉரு ஆளர் அநுபவ நிலையும்
சேருமோ? ஆவலோ மெத்த,
அருஉரு ஆகி, அல்லவாய்ச் சமயம்
அளவுஇடா ஆனந்த வடிவே! 9

---

7. பணி அற - செயல் அற. படிமிசை - உலகத்தில்.
8. புன் செயல் மாயை - அஞ்ஞான இருள்.

Koviloor Digital Library



வடிவுஇலா வடிவாய், மனநினைவு அணுகா
மார்க்கமாய், நீக்கரும் சுகமாய்,
முடிவுஇலா வீட்டின் வாழ்க்கைவேண் டினார்க்குஉன்
மோனம்அல் லால்வழி உண்டோ?
படிஇருள் அகலச், சின்மயம் பூத்த
பசுங்கொம்பை அடக்கி,ஓர் கல்ஆல்
அடியிலே இருந்த ஆனந்த அரசே!
அன்பரைப் பருகும்ஆர் அமுதே! 10

## 20. சொல்லற்கு அரிய

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சொல்லற்கு அரிய பரம்பொருளே;
சுகவா ரிதியே; சுடர்க்கொழுந்தே;
வெல்லற்கு அரிய மயலில்எனை
விட்டுஎங்கு ஒளித்தாய்? ஆகெட்டேன்;
கல்லில் பசிய நார்உரித்துக்
கடுகில் பெரிய கடல்அடைக்கும்
அல்லில் கரிய அந்தகனார்க்கு
ஆளாக் கினையோ அறியேனே! 1

அறிவிற்கு அறிவு தாரகம்என்று
அறிந்தே, அறிவோடு அறியாமை
நெறியில் புகுதாது, ஓர்படித்தாய்
நின்ற நிலையும் தெரியாது,
குறிஅற்று, அகண்டா தீதமயக்
கோதுஇல் அமுதே! நினைக்குறுகிப்
பிறிவுஅற்று இருக்க வேண்டாவோ?
பேயேற்கு இனிநீ பேசாயே. 2

1. அல்லில் கரிய அந்தகனார்க்கு – இரவைவிட அதிக கருமையுடைய யமனார்க்கு.

2. அறிவிற்கு அறிவு தாரகம் – சீவனுக்குச் சிவன் ஆதாரம். ஓர்படித்தாய் – ஒரு தன்மைத்தாகி.

Koviloor Digital Library



பேசா அநுபூ தியைஅடியேன்
பெற்றுப் பிழைக்கப் பேர்அருளால்
தேஜோ மயம்தந்து, இனிஒருகால்
சித்தத்து இருளும் தீர்ப்பாயோ?
பாசா டவியைக் கடந்தஅன்பர்
பற்றும் அகண்டப் பரப்புஆன
ஈசா; பொதுவில் நடம்ஆடும்
இறைவா; குறையா இன்னமுதே! 3

இன்பக் கடலில் புகுந்திடுவான்
இரவும் பகலும் தோற்றாமல்,
அன்பில் கரைந்து கரைந்துஉருகி,
அண்ணா அரசே எனக்கூவிப்,
பின்புஉற்று அழும்சேய் எனவிழிநீர்
பெருக்கிப் பெருக்கிப் பித்துஆகித்,
துன்பக் கடல்விட்டு அகல்வேனோ?
சொரூபா னந்தச் சுடர்க்கொழுந்தே! 4

கொழுந்து திகழ்வெண் பிறைஜடிலக்
கோவே; மன்றில் கூத்தாடற்கு
எழுந்த சுடரே; இமயவரை
என்தாய் கண்ணுக்கு இனியானே;
தொழும்தெய் வமும்நீ, குருவும்நீ,
துணைநீ, தந்தை தாயும்நீ,
அழுந்தும் பவம்நீ, நன்மையும்நீ,
ஆவி, யாக்கை நீதானே. 5

தானே அகண்டா காரமயம்
தன்னில் எழுந்து பொதுநடம்செய்
வானே; மாயப் பிறப்புஅறுப்பான்
வந்து,உன் அடிக்கே கரம்கூப்பித்,

---

4. அழும்சேய்என — அழுகின்ற குழந்தை போல.
5. ஜடிலக்கோவே — சடைமுடியை உடைய சிவனே.

Koviloor Digital Library



தேனே; என்னைப் பருகவல்ல
தெள்ஆர் அமுதே; சிவலோகக்
கோனே; எனும்சொல் நினதுசெவி
கொள்ளாது என்னோ? கூறாயே. 6

கூறா நின்ற இடர்க்கவலைக்
குடும்பக் கூத்துள் துளைந்துதடு
மாறா நின்ற பாவியைநீ
வாஎன்று அழைத்தால் ஆகாதோ?
நீறுஆர் மேனி முக்கணுடை
நிமலா; அடியார் நினைவினிடை
ஆறாய்ப் பெருகும் பெருங்கருணை
அரசே; என்னை ஆள்வானே! 7

வானே முதலாம் பெரும்பூதம்
வகுத்துப் புரந்து மாற்றவல்ல
கோனே; என்னைப் புரக்கும்நெறி
குறித்தாய் இலையே கொடியேனைத்
தானே படைத்துஇங்கு என்னபலன்
தன்னைப் படைத்தாய்? உன்கருத்தை
நான்ஏது என்றுஇங்கு அறியேனே;
நம்பி னேன்கண்டு அருள்வாயே. 8

கண்டார் கண்ட காட்சியும்நீ;
காணார் காணாக் கள்வனும்நீ;
பண்டுஆ ருயிர்நீ; யாக்கையும்நீ;
பலஆம் சமயப் பகுதியும்நீ;
எண்தோள் முக்கண் செம்மேனி
எந்தாய்! நினக்கே எவ்வாறு
தொண்டாய்ப் பணிவர்; அவர்பணிநீ
தூட்டிக் கொள்வது எவ்வாறே? 9

---

7. துளைந்து – படிந்து. தடுமாறாநின்ற – திண்டாடுகின்ற. நினைவினிடை – நினைவினுள். 8. புரந்து – காத்து. 9. தூட்டிக்கொள்வது – பெற்றுக்கொள்வது.

Koviloor Digital Library



சூட்டி எனதுஎன் றிடும்சுமையைச்
    சுமத்தி, எனையும் சுமைஆளாக்
கூட்டிப் பிடித்து, வினைவழியே
    கூத்தாட் டினையே, நினதுஅருளால்
வீட்டைக் கருதும் அப்போது,
    வெளியாம் உலக வியப்புஅனைத்தும்
ஏட்டுக்கு அடங்காச் சொப்பனம்போல்
    எந்தாய் இருந்தது என்சொல்வேன்? 10

## 21. வம்பனேன்

வம்பனேன் கள்ளம் கண்டு,
    மன்அருள் வெள்ளர் ஆய
உம்பர்பால் ஏவல் செய்என்று
    உணர்த்தினை; ஓகோ! வானோர்
தம்பிரா னே;நீ செய்த
    தயவுக்கும் கைம்மாறு உண்டோ?
எம்பிரான் உய்ந்தேன் உய்ந்தேன்;
    இனிஒன்றும் குறைவி லேனே. 1

குறைவுஇலா நிறைவாய், ஞானக்
    கோதுஇல் ஆனந்த வெள்ளத்
துறையிலே படிந்து, மூழ்கித்
    துளைந்துநான் தோன்றா வாறு,உள்
ளுறையிலே உணர்த்தி, மோன
    ஒண்சுடர் வைவாள் தந்த
இறைவனே! உனைப்பி ரிந்துஇங்கு
    இருக்கிலேன் இருக்கி லேனே. 2

1. மன் அருள் வெள்ளர் ஆய – நிலைபெற்றுள்ள அருள் கடலினராகிய.

2. துளைந்து – அழுந்தி. உள்ளுறையிலே – மறைவாக. மோன ஒண்சுடர் வைவாள் – ஞான ஒளியாகிய மௌன மென்னும் கூர்மையான வாள்.

Koviloor Digital Library



இருநிலம் ஆதி நாதம்
 ஈறதுஆம் இவைக டந்த
பெருநிலம் ஆய தூய
 பேரொளிப் பிழம்பாய் நின்றும்;
கருதரும் அகண்டா னந்தக்
 கடவுள்!நின் காக்ஷி காண
வருகஎன்று அழைத்தால் அன்றி
 வாழ்வுஉண்டோ வஞ்ச னேற்கே? 3

வஞ்சனை அழுக்காறு ஆதி
 வைத்திடும் பாண்டம் ஆன
நெஞ்சனை; வலிதில் மேல்மேல்
 நெக்குநெக்கு உருகப் பண்ணி,
அஞ்சலி செய்யும் கையும்
 அருவிநீர் விழியும் ஆகத்,
தஞ்சம்என்று இரங்கிக் காக்கத்
 தற்பரா பரம்உ னக்கே! 4

உனக்குநான் அடித்தொண்டு ஆகி,
 உன்அடிக்கு அன்பு செய்ய,
எனக்குநீ தோற்றி, அஞ்சேல்
 என்னும்நாள் எந்த நாளோ?
மனக்கிலே சங்கள் தீர்ந்த
 மாதவர்க்கு இரண்டுஅற்று ஓங்கும்
தனக்குநேர் இல்லா ஒன்றே;
 சச்சிதா னந்த வாழ்வே! 5

வாழ்வுஎன வயங்கி, என்னை
 வசம்செய்து, மருட்டும் பாழ்த்த
ஊழ்வினைப் பகுதி கெட்டு,இங்கு
 உன்னையும் கிட்டு வேனோ?

3. இரு நிலம் ஆதி – பெரிய மண் முதலிய தத்துவங்கள். நாதம் ஈறதுஆம் – நாத தத்துவம் முடிவாக.

4. தற்பரா – தன்னில்தானாயிருப்பவனே

6. வயங்கி – விளங்கி.

Koviloor Digital Library



தாழ்வுஎனும் சமயம் நீங்கித்
    தமைஉணர்ந் தோர்கட்கு எல்லாம்
சூழ்வெளிப் பொருளே, முக்கண்
    ஜோதியே; அமரர் ஏறே! 6

ஏறுவாம் பரிஆம்; ஆடை
    இருங்கலை உரிஆ; என்றும்
நாறுநல் சாந்தம் நீறா;
    நஞ்சமே அமுதாக் கொண்ட
கூறரும் குணத்தோய்! உன்தன்
    குரைகழல் குறுகின் அல்லால்
ஆறுமோ தாப சோபம்;
    அகலுமோ அல்லல் தானே? 7

தானமும் தவமும் யோகத்
    தன்மையும் உணரா என்பால்;
ஞானமும் தெவிட்டா இன்ப
    நன்மையும் நல்கு வாயோ?
பால்நலம் கவர்ந்த தீம்சொல்
    பச்சிளங் கிள்ளை காண,
வானவர் இறைஞ்ச, மன்றுள்
    வயங்கிய நடத்தி னானே! 8

6. தாழ்வு எனும் சமயம் நீங்கி – பயனற்ற வழிமுறைகளை ஒதுக்கி. தமை – தங்களுடைய உண்மையான நிலையை. சூழ் – ஆராயப்படுகின்ற.

7. வாம் – தாவுகின்ற. பரிஆம் – குதிரையாகவும். ஆடை இருங்கலை உரிஆ – பெரிய மானினது தோல் ஆடையாகவும். நஞ்சமே – விடமே. கூறரும் – சொல்லுதற்கு அரிதாகிய. சோபம் – துக்கம்.

8. பச்சிளங் கிள்ளை – பசுமையான இளங்கிளி போன்ற உமாதேவி. வயங்கிய – விளங்கிய. நடத்தினானே – நடன அரசே.

Koviloor Digital Library



நடத்திஇவ் உலகை எல்லாம்
நாத! நீ நிறைந்த தன்மை
திடத்துடன் அறிந்து, ஆனந்தத்
தெள்ளமுது அருந்தி டாதே;
விடத்திரள் அனைய காம
வேட்கையில் அழுந்தி மாயை
ஜடத்தினை மெய்என்று எண்ணித்
தளரவோ தனிய னேனே? 9

தனிவளர் பொருளே; மாறாத்
தண்ணருங் கருணை பூத்த
இனியகற் பகமே; முக்கண்
எந்தையே; நினக்குஅன்பு இன்றி,
நனிபெரும் குடிலம் காட்டும்;
நயனவேல் கரிய கூந்தல்
வனிதையர் மயக்கில் ஆழ்ந்து
வருந்தவோ வம்ப னேனே? 10

## 22. சிவன்செயல்

சிவன்செய லாலே யாதும்
வரும்எனத் தேறேன்; நாளும்
அவம்தரு நினைவை எல்லாம்
அகற்றிலேன்; ஆசை வெள்ளம்
கவர்ந்துகொண்டு இழுப்ப, அந்தக்
கட்டிலே அகப்பட்டு, ஐயோ
பவம்தனை ஈட்டி ஈட்டிப்
பதைக்கின்றேன் பாவி யேனே. 1

---

9. நடத்தி – அசையும்படி செய்து. விடத்திரள் – மிக்க நஞ்சு. ஜடத்தினை – உடம்பை.

10. நனிபெரும் – மிகப் பெரிய. குடிலம் – கொடுமையை.

1. அவம் தரு – கேட்டை விளைவிக்கிற. பவம்தனை – பிறவியை.

Koviloor Digital Library



பாவியேன் இனிஎன் செய்கேன்
பரமனே! பணிந்துஉன் பாதம்
சேவியேன்; விழிநீர் மல்கச்
சிவசிவ என்று தேம்பி
ஆவியே, நிறைய வந்த
அமுதமே என்னேன்; அந்தோ
சாவிபோம் சமயத்து ஆழ்ந்து
ஐகத்திடைத் தவிக்கின் றேனே. 2

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இடைந்துஇடைந்து ஏங்கி மெய்புள கிப்ப
எழுந்துஎழுந்து ஐயநின் சரணம்
அடைந்தனன்; இனிநீ கைவிடேல் உனக்கே
அபயம்என்று அஞ்சலி செய்து,உள்
உடைந்துஉடைந்து எழுது சித்திரப் பாவை
ஒத்துநான் அசைவுஅற நிற்பத்,
தொடர்ந்துநீ எனைஆட் கொள்ளுநாள் என்றோ?
சோதியே ஆதிநா யகனே! 3

ஆதியாய் நடுவாய் அந்தமாய்ப் பந்தம்
யாவும்அற்று அகம்புறம் நிறைந்த
சோதியாய்ச் சுகமாய் இருந்தஎம் பெருமான்!
தொண்டனேன் சுகத்திலே இருக்கப்
போதியா வண்ணம் கைவிடல் முறையோ?
புன்மையேன் என்செய்கேன்; மனமோ
வாதியா நின்றது, அன்றியும் புலன்சேர்
வாயிலோ தீயினும் கொடிதே. 4

2. சாவிபோம் – பாழாகப் போகின்ற. சமயத்து – நெறியில்.

3. இடைந்து இடைந்து – விலகி விலகி. அசைவு அற – அசையாதபடி.

4. மனமோ வாதியாநின்றது – மனம் வாதாடித் துன் புறுத்தியது. புலன்சேர் வாயிலோ – ஐம்புலன்களுக்குரிய ஐம்பொறிகள்.

Koviloor Digital Library


வாயில்ஓர் ஐந்தில் புலன்எனும் வேடர்
வந்துஎனை ஈர்த்து,வெம் காமத்
தீயிலே வெதுப்பி உயிரொடும் தின்னச்,
சிந்தைநைந்து உருகிமெய்ம் மறந்து,
தாயிலாச் சேய்போல் அலைந்துஅலைப் பட்டேன்;
தாயினும் கருணையா மன்றுள்
நாயகம் ஆகி ஒளிவிடும் மணியே
நாதனே ஞானவா ரிதியே! 5

ஞானமே வடிவாய்த் தேடுவார் தேடும்
நாட்டமே; நாட்டத்துள் நிறைந்த
வானமே; எனக்கு வந்துவந்து ஓங்கும்
மார்க்கமே; மருளர்தாம் அறியா
மோனமே; முதலே; முக்திநல் வித்தே;
முடிவிலா இன்பமே செய்யும்
தானமே; தவமே; நின்னைநான் நினைந்தேன்
தமியனேன் தனைமறப் பதற்கே. 6

மறம்மலி உலக வாழ்க்கையே வேண்டும்;
வந்துநின் அன்பர்தம் பணியாம்
அறமது கிடைக்கின், அன்றிஆ னந்த
அற்புத நிஷ்டையின் நிமித்தம்
துறவது வேண்டும்; மௌனியாய் எனக்குத்
தூயநல் அருள்தரின் இன்னம்
பிறவியும் வேண்டும்; யான்எனது இறக்கப்
பெற்றவர் பெற்றிடும் பேறே! 7

பெற்றவர் பெற்ற பெருந்தவக் குன்றே;
பெருகிய கருணைவா ரிதியே;
நற்றவத் துணையே; ஆனந்தக் கடலே;
ஞாதுரு ஞானஞே யங்கள்

5. ஞான வாரிதியே – ஞானக் கடலே. 6. தமியனேன் தனை மறப்பதற்கே – ஆன்ம ஞானம் ஒழித்தல் பொருட்டு. 7. மறம்மலி – தீங்கு மிகுந்த. துறவது வேண்டும் – உலக நினைவு நீங்குதல் வேண்டும்.

Koviloor Digital Library


அற்றவர்க்கு அறாத நட்புடைக் கலப்பே;
அநேகம்ஆம் நின்அடிக்கு அன்பு
கற்றதும், கேள்வி கேட்டதும், நின்னைக்
கண்டிடும் பொருட்டு அன்றோ காணே. 8

அன்றுநால் வருக்கும் ஒளிநெறி காட்டும்
அன்புடை ஜோதியே; செம்பொன்
மன்றுள்முக் கண்ணும் காளகண் டமுமாய்
வயங்கிய வானமே; என்னுள்
துன்றுகூர் இருளைத் துரந்திடும் மதியே;
துன்பமும் இன்பமும் ஆகி
நின்றவா தனையைக் கடந்தவர் நினைவே;
நேசமே நின்பரம் யானே. 9

யான்எனல் காணேன், பூரண நிறைவில்
யாதினும் இருந்தபேர் ஒளிநீ
தான்என, நிற்கும் சமத்துஉற என்னைத்
தன்னவன் ஆக்கவும் தகும்காண்;
வான்என வயங்கி ஒன்றுஇரண்டு என்னா
மார்க்கம்ஆம் நெறிதந்து, மாறாத்
தேன்என ருசித்து,உள் அன்பரைக் கலந்த
செல்வமே; சிற்பர சிவமே! 10

## 23. தன்னை ஒருவர்

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தன்னை ஒருவர்க்கு அறிவுஅரிதாய்த்
தானே தானாய், எங்கும்நிறைந்து,
உன்னற்கு அரிய பரவெளியாய்,
உலவா அமுதாய், ஒளிவிளக்காய்

8. ஞாதுரு ஞான ஞேயங்கள் – காண்போன், காணுதல், காணப்படு பொருள் என்னும் திரிபுடி. அறாத நட்புடை – நீங்காத நட்பினை உடைய. 9. காளகண்டமுமாய் – நீலகண்டமுமாகி. துன்றுகூர் – மிக நிறைந்துள்ள. இருள் – அஞ்ஞானம். 10. சமத்து – நடு நிலையில். தன்னவன் ஆக்கவும் – இறைவனுக்கு உரியவனாகச் செய்து கொள்ளவும்.

Koviloor Digital Library


என்உள் கலந்தாய்; யான்அறியாது
இருந்தாய்; இறைவா இனியேனும்
நின்னைப் பெறுமாறு எனக்குஅருள்ஆம்
நிலையைக் கொடுக்க நினையாயோ? 1

நினையும் நினைவுக்கு எட்டாத
நெறிபெற்று, உணர்ந்த நெறியாளர்
வினையைக் கரைக்கும் பரமஇன்ப
வெள்ளப் பெருக்கே; நினதுஅருளால்
மனைவி புதல்வர் அன்னைபிதா
மாடு வீடுஎன் றிடுமயக்கம்
தனையும் மறந்து,இங்கு உனைமறவாத்
தன்மை வருமோ தமியேற்கே? 2

வரும்போம் என்னும் இருநிலைமை
மன்னாது, ஒருதன் மைத்துஆகிக்,
கரும்போ தேனோ முக்கனியோ
என்ன என்உள் கலந்து,நலம்
தரும்பேர் இன்பப் பொருளே!நின்
தன்னை நினைந்து நெக்குஉருகேன்;
இரும்போ கல்லோ மரமோஎன்
இதயம் யாதுஎன்று அறியேனே. 3

அறியும் தரமோ நான்உன்னை?
அறிவுக்கு அறிவாய் நிற்கையினால்,
பிறியும் தரமோ நீஎன்னைப்
பெம்மா னே;பேர் இன்பமதாய்ச்
செறியும் பொருள்நீ; நின்னை அன்றிச்
செறியாப் பொருள்நான்; பெரும்பேற்றை
நெறிநின்று ஒழுக விசாரித்தால்
நினக்கோ இல்லை, எனக்குஆமே. 4

1. உன்னற்கு அரிய – நினைப்பதற்கு அரியதாகிய. உலவா – கெடாத. 2. தமியேற்கே – அடியவனான எனக்கே. 3. மன்னாது – பொருந்தாமல். 4. ஒழுக விசாரித்தால் – முற்றும் ஆராய்ந்தால்.

Koviloor Digital Library


எனதுஎன் பதும்பொய், யான்எனல்பொய்
எல்லாம் இறந்த இடம்காட்டும்
நினதுஎன் பதும்பொய், நீஎனல்பொய்,
நிற்கும் நிலைக்கே நேசித்தேன்;
மனதுஎன் பதுமோ என்வசமாய்
வாராது, ஐய நின்அருளோ
தனதுஎன் பதுக்கும் இடம்காணேன்;
தமியேன் எவ்வாறு உய்வேனே? 5

உய்யும் படிக்குஉன் திருக்கருணை
ஒன்றைக் கொடுத்தால், உடையாய்பாழ்ம்
பொய்யும் அவாவும் அழுக்காறும்
புடைபட்டு ஓடும்; நன்னெறியாம்
மெய்யும் அறிவு பெறும்பேறும்
விளங்கும்; எனக்குஉன் அடியார்பால்
செய்யும் பணியும் கைகூடும்;
சிந்தைத் துயரும் தீர்ந்திடுமே. 6

சிந்தைத் துயர்என்று ஒருபாவி
சினந்து சினந்து போர்முயங்க,
நிந்தைக்கு இடமாய் ஜகவாழ்வை
நிலைஎன்று உணர்ந்தே நிற்கின்றேன்;
எந்தப் படிஉன் அருள்வாய்க்கும்?
எனக்குஅப் படிநீ அருள்செய்வாய்;
பந்தத் துயர்அற் றவர்க்குஎளிய
பரமா னந்தப் பழம்பொருளே! 7

பொருளைப் பூவைப் பூவையரைப்
பொருள்என்று எண்ணும் ஒருபாவி
இருளைத் துரந்திட்டு, ஒளிநெறியை
என்உள் பதிப்பது என்றுகொலோ?

6. பாழ்ம் பொய்யும் – பாழாகிய உலக வாழ்வும்.
8. பூவை – பூமியை. பூவையரை – மாதரை.

Koviloor Digital Library



தெருளத் தெருள, அன்பர்நெஞ்சம்
தித்தித்து உருகத், தெவிட்டாத
அருளைப் பொழியும் குணமுகிலே!
அறிவுஆ னந்தத்து ஆர் அமுதே! 8

ஆரா அமிர்தம் விரும்பினர்கள்
அறிய விடத்தை அமிர்துஆக்கும்
பேரா னந்தச் சித்தன்எனும்
பெரியோய்; ஆவிக்கு உரியோய்கேள்!
கார்ஆர் கிரக வலையினிடைக்
கட்டுண்டு இருந்த களைகள்எலாம்
ஊரால் ஒருநாள் கைஉணவுஏற்று
உண்டால் எனக்குஇங்கு ஒழிந்திடுமே. 9

எனக்குஎன்று இருந்த உடல்பொருளும்
யானும் நினஎன்று ஈந்தவண்ணம்
அனைத்தும் இருந்தும் இலஆகா;
அருளாய் நில்லாது, அழிவழக்காய்,
மனத்துள் புகுந்து மயங்கவும்,என்
மதிக்குள் களங்கம் வந்ததுஎன்னோ?
தனக்குஒன்று உவமை அறநிறைந்த
தனியே; தன்னம் தனிமுதலே! 10

## 24. ஆசைஎனும்

ஆசைஎனும் பெருங்காற்றூடு இலவம்பஞ்சு
எனவும்மனது அலையும் காலம்
மோசம்வரும்; இதனாலே கற்றதும்கேட்
டதும்தூர்ந்து, முக்திக்கு ஆன

8. தெருளத் தெருள – தெளிவு அடைவதற்கேற்ப.
9. அறிய விடத்தை – அறிந்து கொள்ளும்படி கொடிய நஞ்சினை. கார்ஆர் கிரக வலையினிடை – அஞ்ஞானம் நிறைந்த குடும்ப வலையில். களைகள் எலாம் – வினைப் பயன்கள் யாவும். ஊரால் – ஊர்தோறும். கைஉணவு கைப்பிச்சை. 10. அழிவழக்காய் - கொடிய விவகாரமாக.

சிரா11

Koviloor Digital Library



நேசமும்நல் வாசமும்போய்ப், புலனாய்,இல்
கொடுமைபற்றி நிற்பர்; அந்தோ
தேசுபழுத்து அருள்பழுத்த பராபரமே!
நிராசை இன்றேல் தெய்வம் உண்டோ? 1

இரப்பான்அங்கு ஒருவன்அவன், வேண்டுவகேட்டு
அருள்செய்என, ஏசற் றேதான்
புரப்பான்தன் அருள்நாடி இருப்பதுபோல்,
எங்கும்நிறை பொருளே கேளாய்!
மரப்பான்மை நெஞ்சினன்யான், வேண்டுவகேட்டு
இரங்குஎனவே, மௌனத் தோடுஅந்
தரப்பான்மை அருள்நிறைவில் இருப்பதுவோ?
பராபரமே சகஜ நிஷ்டை. 2

கலிவிருத்தம்

சாட்டைஇல் பம்பர ஜாலம் போல்எலாம்
ஆட்டுவான் இறைஎன அறிந்து நெஞ்சமே!
தேட்டம்ஒன்று அற,அருள் செயலில் நிற்றியேல்,
வீட்டறம் துறவறம் இரண்டும் மேன்மையே. 3

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தன்நெஞ்சம் நினைப்புஒழியாது, அறிவிலிநான்
ஞானம்எனும் தன்மை பேச,
உன்நெஞ்சம் மகிழ்ந்துஒருசொல் உரைத்தனையே;
அதனைஉன்னி உருகேன் ஐயா!
வன்நெஞ்சோ, இரங்காத மரநெஞ்சோ,
இருப்புநெஞ்சோ, வைரம் ஆன
கல்நெஞ்சோ, அலதுமண்ணாங் கட்டிநெஞ்சோ,
எனதுநெஞ்சம் கருதில் தானே. 4

---

1. தூர்ந்து – வீணாகி. நல் வாசமும் – புண்ணியத் தலத்தில் வாழ்ந்திருப்பதும். 2. ஏசற்றே – பழிப்பற்றே. அந்தரப்பான்மை – ஆகாயத்தின் தன்மை அமைந்த. சகஜ நிஷ்டை–தன் இயல்போடு பொருந்திய ஆன்மீகப் பெரு நிலை. 3. பம்பர ஜாலம் போல் – பம்பர மாயம் போல. தேட்டம் ஒன்று அற – கவலை ஏதும் இல்லாது. 4. உன்னி – நினைந்து.

Koviloor Digital Library



### கலிவிருத்தம்

வாழி சோபனம்! வாழிநல் அன்பர்கள்!
சூழ வந்துஅருள் தோற்றமும் சோபனம்!
ஆழி போல்அருள் ஐயன் மௌனத்தால்
ஏழை யேன்பெற்ற இன்பமும் சோபனம்! 5

### கலிநிலைத்துறை

கொடுக்கின் றோர்கள்பால் குறைவையாது;
யான்எனும் குதர்க்கம்
விடுக்கின் றோர்கள்பால் பிரிகிலாது;
உள்அன்பு விடாதே
அடுக்கின் றோர்களுக்கு இரங்கிடும்;
தண்தமிழ் அலங்கல்
தொடுக்கின் றோர்களைச் சோதியா
ததுபரம் ஜோதி. 6

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

உலக மாயையி லேஎளி யேன்தனை
உழல விட்டனை யே,உடை யாய்அருள்
இலகு பேரின்ப வீட்டினில் என்னையும்
இருத்தி வைப்பதுஎக் காலம்சொ லாய்? எழில்
திலகம் வாள்நுதல் பைந்தொடி கண்இணை
தேக்க, நாடகம் செய்து,அடி யார்க்குஎலாம்
அலகுஇ லாவினை தீர்க்கத் துஜங்கட்டும்
அப்ப னே;அருள் ஆனந்த ஜோதியே! 7

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

முன்னிலைச்சுட்டு ஒழிதிஎனப் பல்காலும்
நெஞ்சேநான் மொழிந்தே னே,நின்
தன்நிலையைக் காட்டாதே, என்னைஒன்றாச்
சூட்டாதே, சரண்நான் போந்த

---

6. அடுக்கின்றோர்களுக்கு – சார்ந்திருப்பவர்களுக்கு. தண்தமிழ் அலங்கல் – இனிய தமிழ்ப் பாமாலை.

7. அருள்இலகு – உன் திருவருளால் விளங்குகின்ற. கண் இணை – இருவிழிகள்.

Koviloor Digital Library


அந்நிலையே நிலை;அந்த நிலையிலே
சித்திமுக்தி அனைத்தும் தோன்றும்;
நன்னிலைஈது அன்றிஇலை சுகம்என்றே
சுகர்முதலோர் நாடி னாரே. 8

அத்வைதம் பெறும்பேறுஎன்று அறியாமல்,
யான்எனும்பேய் அகந்தை யோடு,
மத்தமதி யினர்போல மனம்கிடப்ப
இன்னம்இன்னம் வருந்து வேனோ?
சுத்தபரி பூரணமாய், நின்மலமாய்,
அகண்டிதமாய்ச், சொரூபா னந்தச்
சக்திகள்நீங் காதவணம் தன்மயமாய்,
அருள்பழுத்துத் தழைத்த ஒன்றே! 9

தந்தை தாயும்நீ; என்உயிர்த்
துணையும்நீ; சஞ்சலம் அதுதீர்க்க
வந்த தேசிக வடிவுநீ;
உனைஅலால் மற்றுஒரு துணைகாணேன்;
அந்தம் ஆதியும் அளப்பரும்
ஜோதியே! ஆதியே; அடியார்தம்
சிந்தை மேவிய தாயுமா
னவன்எனும் சிரகிரிப் பெருமானே! 10

காதில் ஓலையை வரைந்து,மேல்
குமிழையும் கறுவி;வேள் கருநீலப்
போது போன்றிடும் கண்ணியர்
மயக்கில்எப் போதுமே தளராமல்,

8. முன்னிலைச் சுட்டு ஒழிதி – காணப்படு பொருளைத் தவிர்ப்பாயாக. என்னை ஒன்றாச் சூட்டாதே – எனக்கு ஆன்ம ஞானம் நல்காதே.

9. மத்த மதியினர் போல – பித்துப் பிடித்தவர் போன்று. சக்திகள் நீங்காத வணம் – மகிமைகள் யாவும் நிறைந்துள்ள.

10. தேசிக வடிவு நீ – குருமூர்த்தியாய் இருப்பவன் நீ.

11. குமிழையும் – குமிழம் பூவினை ஒத்த நாசியையும்.

Koviloor Digital Library



மாது காதலி, பங்கனை,
அபங்கனை, மாடமா ளிகைசூழும்
சேது மேவிய ராமநா
யகன்தனைச் சிந்தைசெய் மடநெஞ்சே! 11

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அண்டமுமாய்ப் பிண்டமுமாய் அளவி லாத
ஆருயிருக்கு ஓர்உயிராய் அமர்ந்தாய் ஆனால்
கண்டவர்ஆர்? கேட்டவர்ஆர்? உன்னால் உன்னைக்
காண்பதுஅல்லால் என்அறிவால் காணப் போமோ?
வண்துளபம் மணிமார்பன் புதல்வ னோடும்
மனைவியொடும் குடியிருந்து வணங்கிப் போற்றும்
புண்டரிக புரத்தினில்,நா தாந்த மௌன
போதாந்த நடம்புரியும் புனித வாழ்வே! 12

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பொறியில் செறிஐம் புலக்கனியைப்
புந்திக் கவரால் புகுந்துஇழுத்து,
மறுகிச் சுழலும் மனக்குரங்கு
மாள வாளா இருப்பேனோ?
அறிவுக்கு அறிவாய்ப், பூரணமாய்,
அகண்டா னந்த மயம்ஆகிப்,
பிறிவற்று இருக்கும் பெருங்கருணைப்
பெம்மா னேஎம் பெருமானே! 13

உரைஉணர்வு இறந்து தம்மை
உணர்பவர் உணர்வின் ஊடே
கரைஇலா இன்ப வெள்ளம்
காட்டிடும் முகிலே! மாறாப்

கறுவி—சினந்து. வேள்—மன்மதனுடைய. கருநீலப்போது—நீல நிறமுடைய மலரை. அபங்கனை—பிளவுபடாதவனை. சேது மேவிய—இராமேச்சரத்தில் எழுந்தருளிய. 12. வண் துளபம்—வளப்பம் வாய்ந்த துளசிமாலை. மணி—கௌத்துவம் என்னும் மணி. 13. செறி—தொங்குகின்ற. புந்திக்கவரால்—அறிவு என்னும் மரக்கிளைகளில். மறுகி—மயங்கி.

Koviloor Digital Library



பரைஎனும் கிரணம் சூழ்ந்த
பானுவே! நின்னைப் பற்றித்
திரைஇலா நீர்போல் சித்தம்
தெளிவனோ சிறிய னேனே? 14

கேவல சகலம் இன்றிக்,
கீழொடு மேலாய், எங்கும்
மேவிய அருளின் கண்ணாய்
மேவிட, மேலாய் இன்பம்
தாவிட, இன்பா தீதத்
தனியிடை இருத்தி வைத்த
தேஎனும் மௌனி செம்பொன்
சேவடி சிந்தை செய்வாம். 15

நேற்றுஉளார் இன்று மாளா
நின்றனர்; அதனைக் கண்டும்
போற்றிலேன் நின்னை; அந்தோ
போக்கினேன் வீணே காலம்;
ஆற்றிலேன்; அகண்டா னந்த
அண்ணலே! அளவில் மாயைச்
சேற்றிலே இன்னம் வீழ்ந்து
திளைக்கவோ சிறிய னேனே? 16

கலிநிலைத்துறை

போதம் என்பதே விளக்குஒவ்வும்;
அவித்தைபொய் இருள்ஆம்;
தீதுஇ லாவிளக்கு எடுத்துஇருள்
தேடவும் சிக்காது;
ஆத லால்அறி வாய்நின்ற
இடத்து,அறி யாமை
ஏதும் இல்லைஎன்று எம்பிரான்
சுருதியே இயம்பும். 17

14. பரை–உமையாகிய. 15. கேவலம்–மறப்பும். சகலம்–நினைப்பும். தாவிட – சிறக்கவும். தே எனும் – தெய்வம் என்கின்ற. 16. மாளாநின்றனர் – இறக்கின்றனர்.
17. போதம் – ஆன்ம ஞானம். அவித்தை – அஞ்ஞானம்

Koviloor Digital Library



சுருதி யே,சிவா கமங்களே,
உங்களால் சொல்லும்
ஒருத னிப்பொருள் அளவைஈது
என்னவாய் உண்டோ?
பொருதி ரைக்கடல் நுண்மணல்
எண்ணினும், புகலக்,
கருத எட்டிடா நிறைபொருள்
அளவையார் காண்பார்? 18

மின்னைப் போன்றன அகிலம்என்று
அறிந்து,மெய்ப் பொருளாம்
உன்னைப் போன்றநற் பரம்பொருள்
இல்லைஎன்று ஓர்ந்து,
பொன்னைப் போன்றநின் போதம்கொண்டு,
உன்பணி பொருந்தா
என்னைப் போன்றுஉள ஏழையர்
ஐயஇங்கு எவரே? 19

தாயும் தந்தையும் எனக்குஉறவு
ஆவதும் சாற்றின்,
ஆயும் நீயும்நின் அருளும்நின்
அடியரும் அன்றோ?
பேய னேன்திரு அடிஇணைத்
தாமரை பிடித்தேன்;
நாய னே,எனை ஆள்உடை
முக்கண்நா யகனே! 20

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

காந்தமதை எதிர்காணில் கருந்தாது
செல்லும்;அந்தக் காந்தத்து ஒன்றாது
ஏய்ந்தஇடம் எங்கேதான் அங்கேதான்
சலிப்புஅறவும் இருக்கு மாபோல்

19. உன் பணி பொருந்தா என்னைப் போன்று – தேவரீர் திருத்தொண்டில் ஈடுபடாத என்னைப் போன்று.

21. கருந்தாது – இரும்பு.

Koviloor Digital Library



சாந்தபதப் பரம்பொருளே! பற்றுபொருள்
இருக்குமத்தால் சலிக்கும் சித்தம்;
வாய்ந்தபொருள் இல்லைஎனில் பேசாமை
நின்றநிலை வாய்க்கும் அன்றே. 21

கலிநிலைத்துறை

பொற்புஉ றும்கருத் தேஅக
மாய்அதில் பொருந்தக்,
கற்பின் மங்கையர் எனவிழி
கதவுபோல் கவினச்,
சொற்ப னத்தினும் சோர்வுஇன்றி
இருந்தநான் சோர்ந்து
நிற்ப தற்குஇந்த வினைவந்த
வாறுஎன்கொல் நிமலா! 22

வந்த வாறுஇந்த வினை,வழி
இது,என மதிக்கத்
தந்த வாறுஉண்டோ உள்உணர்வு?
இலை,அன்றித் தமியேன்
நொந்த வாறுகண்டு இரங்கவும்
இலை,கற்ற நூலால்
எந்த வாறுஇனித் தற்பரா!
உய்குவேன் ஏழை. 23

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சொல்லாலும் பொருளாலும் அளவை யாலும்
தொடரஒண்ணா அருள்நெறியைத் தொடர்ந்து நாடி,
நல்லார்கள் அவையகத்தே இருக்க வைத்தாய்;
நன்னர்நெஞ்சம் தன்நலமும் நணுகு வேனோ?

---

22. பொற்பு உறும் – அழகினையுடைய.

24. அளவையாலும் – யூகத்தாலும். நன்னர் நெஞ்சம் தன் – நல்ல மனத்தினுடைய. இல்லாளியாய் – இல்லறத் தானாய். ஈன்றிட்டு – தோன்றச் செய்து.

Koviloor Digital Library



இல்லாளி யாய்,உலகோடு உயிரை ஈன்றிட்டு,
எண்ணரிய யோகினுக்கும் இவனே என்னக்
கல்ஆலின் கீழ்இருந்த செக்கர் மேனிக்
கற்பகமே; பராபரமே; கயிலை வாழ்வே! 24

ஜாக்கிரமா நுதலினில், இந் திரியம் பத்தும்,
சத்தாதி, வசனாதி, வாயு பத்தும்,
நீக்கம்இல்அந் தக்கரணம், புருஷ னோடு
நின்றதுமுப் பான்ஐந்து, நிலவும் கண்டத்து
ஆக்கியசொப் பனம்அதனில் வாயு பத்தும்,
அடுத்தனசத்து ஆதி,வச னாதி ஆக
நோக்குகர ணம்புருடன் உடனே கூட,
நுவல்வர்இரு பத்தைந்தாம் நுண்ணி யோரே. 25

சுஷுப்திஇத யம்தனில்பி ராணம், சித்தம்,
சொல்லரிய புருஷனுடன் மூன்றது ஆகும்;
வழுத்தியநா பியில் துரியம் பிராண னோடு
மன்னுபுரு ஷனும்கூட வயங்கா நிற்கும்,
அழுத்திடும்மூ லம்தன்னில் துரியா தீதம்
அதனிடையே புருஷன்ஒன்றி அமரும்; ஞானம்
பழுத்திடும்பக் குவர்அறிவர் அவஸ்தை ஐந்தில்
பாங்குபெறக் கருவிநிற்கும் பரிசு தானே. 26

கலிநிலைத்துறை

இடத்தைக் காத்திட்ட சுவாஎனப்
புன்புலால் இறைச்சி
ஜடத்தைக் காத்திட்ட நாயினேன்,
உன்அன்பர் தயங்கும்

25. ஜாக்கிரமா – விழிப்பு நிலையில். 26. சுஷுப்தி – கனவற்ற உறக்கத்தில். வழுத்திய – சொல்லப்பட்ட. அவஸ்தை ஐந்தில் – ஐந்து அனுபவ நிலையில். பாங்கு பெற – இயல்பான நிலையில். கருவி நிற்கும் பரிசு – கருவிகள் ஓய்ந்து போன மேலாம் நிலை. 27. சுவா என – நாய் போல. ஜடத்தை – உடலை. தயங்கும் – வசிக்கும்.

Koviloor Digital Library



மடத்தைக் காத்திட்ட சேடத்தால்
விசேஷமாய் வாழ,
விடத்தைக் காத்திட்ட கண்டத்தோய்!
நின்அருள் வேண்டும். 27

வாத னைப்பழக் கத்தினால்
மனம்,அந்த மனத்தால்
ஓத வந்திடும் உரை,உரைப்
படிதொழில் உளவாம்,
ஏதம் அம்மனம் மாயைஎன்
றிடில்,கண்ட எல்லாம்
ஆத ரம்செயாப் பொய்,அதற்கு
ஐயம்உண் டாமோ? 28

ஐய வாதனைப் பழக்கமே
மனம்நினை வதுதான்;
வையம் மீதினில் பரம்பரை
யாதினும் மருவும்
மெய்யில் நின்று,ஒளிர் பெரியவர்
சார்புற்று விளங்கிப்,
பொய்யது என்பதை ஒருவி,மெய்
உணருதல் போதம். 29

குலம்இ லான்,குணம், குறிஇலான்,
குறைவுஇலான், கொடிதுஆம்
புலம்இ லான்,தனக்கு என்னஓர்
பற்றுஇலான், பொருந்தும்
இலம்இ லான்மைந்தர் மனைவிஇல்
லான்எவன்? அவன்சஞ்
சலம்இ லான்,முக்தி தரும்பர
சிவன்எனத் தகுமே. 30

27. சேடத்தால் – நல்வினைப் பயனால்.

28. வாதனை – கன்மம். ஏதம் அம்மனம் – குற்றமுடைய அம் மனமானது. ஆதரம் செயா – விரும்பத்தகாத.
29. போதம் – ஞானம். 30. குலம் இலான் – குடி இல்லாத வனும். இலம் இலான் – வீடு இல்லாதவனும்.

Koviloor Digital Library



கடத்தை மண்எனல் உடைந்தபோ
    தோ? இந்தக் கரும
ஜடத்தைப் பொய்எனல் இறந்தபோ
    தோசொலத் தருமம்;
விஷத்தை நல்லமிர் தாஉண்டு,
    பொன்பொது வெளிக்கே
நடத்தைக் காட்டி, எவ் உயிரையும்
    நடப்பிக்கும் நலத்தோய்! 31

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

நான்எனவும் நீஎனவும் இருதன்மை
    நாடாமல், நடுவே சும்மா
தான்அமரும் நிலைஇதுவே சத்தியம்சத்
    தியம்என,நீ தமிய னேற்கு
மோனகுரு ஆகியும்கை காட்டினையே,
    திரும்பவும்நான் முளைத்துத் தோன்றி,
மானதமார்க் கம்புரிந்துஇங்கு அலைந்தேனே;
    பரந்தேனே; வஞ்ச னேனே. 32

தன்மயம், சுபாவம், சுத்தம்,
    தண்அருள் வடிவம், சாந்தம்,
மின்மயம் ஆன அண்ட
    வெளிஉரு ஆன பூர்த்தி,
என்மயம் எனக்குக் காட்டாது
    எனைஅப கரிக்க வந்த
சின்மயம், அகண்டா காரம்,
    தக்ஷிணா திக்க மூர்த்தம். 33

---

31. கடத்தை – மண் குடத்தை. ஜடத்தை – சரீரத்தினை. பொன்பொது – பொன்னம்பலம். வெளிக்கே – ஞானவெளியில்.

32. மானத மார்க்கம் – மனம்போன வழியே.

Koviloor Digital Library



### கலிநிறைத்துறை

சிற்ற ரும்புஅன சிற்றறி
வாளனே! தெளிந்தால்
மற்றுஅ ரும்புஎன, மலர்எனப்,
பேரறிவு ஆகிக்,
கற்றுஅ ரும்பிய கேள்வியால்
மதித்திடக், கதிச்சீர்
முற்றுஅ ரும்பிய மௌனியாய்ப்,
பரத்திடை முளைப்பான். 34

மயக்கு சிந்தனை, தெளிவுஎன,
இருநெறி வகுப்பால்
நயக்கும் ஒன்றன்பால் ஒன்றுஇலை
எனல்நல வழக்கே;
இயக்கம் உற்றிடும் மயக்கத்தில்
தெளிவுஉறல் இனிதுஆம்;
பயக்க வல்லதுஓர் தெளிவுஉடை
யவர்க்குஎய்தல் பண்போ? 35

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருள்வடிவு ஏழும் மூர்த்தம்;
அவைகள்சோ பானம் என்றே
சுருதிசொல் லியவாற் றாலே
தொழும்தெய்வம் எல்லாம் ஒன்றே;
மருள்எனக்கு இல்லை முன்பின்
வரும்நெறிக்கு; இவ்வ ழக்குத்
தெருளின்முன் னிலைஆம் உன்னைச்
சேர்ந்துயான் தெளிகின் றேனே. 36

34. கதிச்சீர் முற்று அரும்பிய – நற்கதிக்கு உரிய சிறந்த குணங்களெல்லாம் வாய்த்த. முளைப்பான் – போய்ச் சேருவான். 35. இயக்கம் உற்றிடும் – சஞ்சரிக்கின்ற. 36. சோபானம் – படிகள். தெருளின் – தெளிவாகிய. முன்னிலை ஆம் உன்னை – கண்ணெதிரே விளங்குகின்ற தேவரீரை.

Koviloor Digital Library



எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

எத்தனைப் பிறப்போ, எத்தனை இறப்போ,
எளியனேற்கு இதுவரை அமைத்தது;
அத்தனை எல்லாம் அறிந்தநீ அறிவை;
அறிவிலி அறிகிலேன்; அந்தோ
சித்தமும் வாக்கும் தேகமும் நினவே;
ஜென்மமும் இனிஎனால் ஆற்றா;
வைத்திடுஇங்கு என்னை நின்அடிக் குடியா;
மறைமுடி இருந்தவான் பொருளே! 37

வான்பொருள் ஆகி, எங்கும்நீ இருப்ப,
வந்துஎனைக் கொடுத்து,நீ ஆகாது,
ஏன்பொருள் போலக் கிடக்கின்றேன்; முன்னை
இருவினை வாதனை அன்றோ?
தீன்பொருள் ஆன அமிர்தமே, நின்னைச்
சிந்தையில் பாவனை செய்யும்
நான்பொருள் ஆனேன்; நல்லநல் அரசே
நான்இறந்து இருப்பது நாட்டம். 38

நாட்டம்மூன்று உடைய செந்நிற மணியே;
நடுவுறு நாயக விளக்கே;
கோட்டம்இல் குணத்தோர்க்கு எளியநிர்க் குணமே;
கோதுஇலா அமிர்தமே; நின்னை
வாட்டம்இல் நெஞ்சம் கிண்ணமாச் சேர்த்து,
வாய்மடுத்து அருந்தினேன்; ஆங்கே
பாட்டுஅளி நறவம் உண்டுஅயர்ந் ததுபோல்
பற்றுஅயர்ந்து இருப்பதுஎந் நாளோ? 39

---

37. மறைமுடி இருந்த வான்பொருளே – மறையின் முடியாக விளங்கும் பொருளே. 38. ஏன் பொருள் போலக் கிடக்கின்றேன் – நான் அறிவற்றுக் கிடப்பதற்குக் காரணம் யாது? தீன் பொருள் ஆன – பருகுவதற்குரிய பொருளாகிய. நான் இறந்து இருப்பது நாட்டம் – நான் என்னும் அறிவை ஒழிப்பது என் குறிக்கோள். 39. நாட்டம் – கண்கள். பாட்டு அளி – இசை பாடும் வண்டு. நறவம் – தேன்.

Koviloor Digital Library



என்னுடை உயிரே; என்உளத்து அறிவே;
என்னுடை அன்புஎனும் நெறியாய்;
கன்னல்முக் கனி,தேன், கண்டு,அமிர்து என்னக்
கலந்து,எனை மேவிடக் கருணை
மன்னிய உறவே; உன்னைநான் பிரியா
வண்ணம்,என் மனம்எனும் கருவி
தன்னது வழியற்று, என்உழைக் கிடப்பத்
தண்அருள் வரமது வேண்டும். 40

## 25. எனக்கு எனச் செயல்

### கலிநிலைத்துறை

எனக்குஎ னச்செயல் வேறுஇலை,
யாவும்இங்கு ஒருநின்
தனக்குஎ னத்தகும்; உடல்பொருள்
ஆவியும் தந்தேன்;
மனத்த கத்துஉள அழுக்குஎலாம்
மாற்றி,எம் பிரான்நீ
நினைத்தது எப்படி, அப்படி
அருளுதல் நீதம். 1

உளவுஅ றிந்துஎலாம் நின்செயல்
ஆம்என உணர்ந்தோர்க்கு
அளவுஇல் ஆனந்தம் அளித்தனை;
அறிவுஇலாப் புன்மைக்
களவு நாயினேற்கு இவ்வணம்
அமைத்தனை; கருத்துத்
தளரும் தன்மைஇங்கு ஆரொடு
புகலுவேன் தக்கோய்! 2

40. கலந்து எனைமேவிட – என்னோடு கூடி வாழ. தன்னது வழியற்று – தன் போக்கில் போகாது. என் உழைக் கிடப்ப – என்னிடத்து உறுதியாகத் தங்க. 2. களவு நாயினேற்கு – கள்ள மனம் கொண்ட நாய் போன்ற எனக்கு. கருத்துத் தளரும் தன்மை – ஊக்கம் இல்லாத பாங்கை.

Koviloor Digital Library



என்னைத் தான்இன்ன வண்ணம்என்று
அறிகிலா ஏழை,
தன்னைத் தான்அறிந் திடஅருள்
புரிதியேல், தக்கோய்!
பின்னைத் தான்நின்தன் அருள்பெற்ற
மாதவப் பெரியோர்
நின்னைத் தான்நிகர் ஆர்?என
வாழ்த்துவர் நெறியால். 3

ஏதம் இன்றித்தன் அடியிணைக்கு
அன்புதான் ஈட்டும்
காதல் அன்பர்க்குக் கதிநிலை
ஈதுஎனக் காட்டும்
போத, நித்திய; புண்ணிய;
எண்ணரும் புவன
நாத; தற்பர; நான்எவ்வாறு
உய்குவேன்? நவிலாய். 4

வேதம் எத்தனை? அத்தனை
சிரத்தினும் விளங்கும்
பாத; நித்திய; பரம்பர;
நிரந்தர; பரம;
நாத; தற்பர; சிற்பர
வடிவமாய் நடிக்கும்
நீத; நிர்க்குண! நினைஅன்றி
ஒன்றும்நான் நினையேன். 5

---

3. நின்னைத்தான் நிகர்ஆர் — உனக்கு ஒப்பாவார் யாரும் இல்லை.

4. ஏதம் இன்றி — குற்றம் இல்லாமல். கதி நிலை — முக்திப்பேறு. போத — அறிஞனே. தற்பர — தன்னில் தானாய் இருப்பவனே.

5. சிரத்தினும் விளங்கும் — மறைகளின் முடியாக விளங்குகின்ற.

Koviloor Digital Library



நெறிகள் தாம்பல பலவுமாய்,
அந்தந்த நெறிக்குஆம்
செறியும் தெய்வமும் பலபல
ஆகவும், செறிந்தால்
அறியும் தன்மைஇங்கு ஆர்? உனை
அறிவினால் அறிந்தோர்
பிறியும் தன்மைஇல் லாவகை
கலக்கின்ற பெரியோய்! 6

பெரிய அண்டங்கள் எத்தனை
அமைத்து,அதில் பிறங்கும்
உரிய பல்லுயிர் எத்தனை
அமைத்துஅவைக்கு உறுதி
வருவது எத்தனை அமைத்தனை,
அமைத்துஅருள் வளர்க்கும்
அரிய தத்துவ! எனக்குஇந்த
வண்ணம்ஏன் அமைத்தாய்? 7

கணம தேனும்நின் காரணம்
தன்னையே கருத்தில்
உணரும் மாதவர்க்கு ஆனந்தம்
உதவினை; ஒன்றும்
குணம்இ லாதபொய் வஞ்சனுக்கு
எந்தை;நிர்க் குண;மா
மணம்உ லாம்மலர்ப் பதம்தரின்
யார்உனை மறுப்பார்? 8

6. அறிவினால் அறிந்தோர் – மெய்ஞ்ஞானிகள். கலக்கின்ற – ஞானிகள் மூலம் வெளிப்படுகின்ற.

7. பிறங்கும் – விளங்குகின்ற. அவைக்கு உறுதி வருவது எத்தனை – அவை நிலைபெற்றிருப்பதற்கான சூழ்நிலைகள் எத்தனை?

8. மாதவர்க்கு – சிறந்த தவமுடையார்க்கு. பொய் வஞ்சனுக்கு – தீயவனான எனக்கு.

Koviloor Digital Library


கன்னல், முக்கனி, கண்டு,தேன்,
சருக்கரை கலந்தது
என்ன, முக்தியில் கலந்தவர்க்கு
இன்பமாய் இருக்கும்
நன்ன லத்தநின் நற்பதம்
துணைஎன நம்பச்
சொன்ன வர்க்கு,எனால் ஆம்கைம்மாறு
இல்லை;என் சொல்வேன்? 9

தந்தை, தாய்,தமர், மகவுஎனும்
அவைஎலாம் ஜகத்தில்
பந்தம்ஆம் என்றே, அருமறை
வாயினால் பகர்ந்த
எந்தை நீ,எனை இன்னம்அவ்
அல்லலில் இருத்தில்
சிந்தை தான்தெளிந்து எவ்வணம்
உய்வணம்? செப்பாய். 10

துய்யன், தண்அருள் வடிவினன்,
பொறுமையால் துலங்கும்
மெய்யன் என்று,உனை ஐயனே
அடைந்தனன்; மெத்த
நொய்யன், நுண்ணிய அறிவிலன்,
ஒன்றைநூறு ஆக்கும்
பொய்யன், என்றுஎனைப் புறம்விடின்
என்செய்வேன்? புகலாய். 11

ஒன்ற தாய்ப்,பல வாய்,உயிர்த்
திரட்குஎலாம் உறுதி
என்ற தாய்,என்றும் உள்ளதாய்,
எவற்றினும் இசைய

9. நன்னலத்த – மேலாம் பெருமை உடைய.
10. தமர் – உறவினர். இருத்தில் – அழுத்தினால்.
11. துய்யன் – தூயன். நொய்யன் – அற்பன்.

நா.12

Koviloor Digital Library

நின்ற தாய்,நிலை நின்றிடும்
அறிஞ!என் நெஞ்சம்
மன்ற தாய்,இன்ப உருக்கொடு
நடித்திடின் வாழ்வேன். 12

தனிஇ ருந்து,அருள் சஹஜமே
பொருந்திடத் தமியேற்கு
இனிஇ ரங்குதல் கடன்,இது
சமயம்,என் இதயக்
கனிவும் அப்படி ஆயினது;
ஆதலால் கருணைப்
புனித! நீயறி யாததுஒன்று
உள்ளதோ? புகலாய். 13

திருந்து சீர்அடித் தாமரைக்கு
அன்புதான் செய்யப்
பொருந்து நாள்,நல்ல புண்ணியம்
செய்யும்நாள்; பொருந்தாது
இருந்த நாள்,வெகு தீவினை
இழைத்தநாள்; என்றால்
அருந்த வா!உனைப் பொருந்துநாள்
எந்தநாள் அடிமை? 14

பின்னும், முன்னுமாய், நடுவுமாய்
யாவினும் பெரியது
என்னும் தன்மையாய், எவ்வுயிர்த்
திரளையும் இயக்கி,
மன்னும் தண்அருள் வடிவமே!
உனக்குஅன்பு வைத்தும்
துன்னும் இன்னல்ஏன்? யான்எனும்
அகந்தைஏன்? சொல்லாய். 15

12. மன்றதாய் – சபையாகக்கொண்டு
15 துன்னும் – மிகுதியான.

KOVILOOR ANDAVAR
A. No. 44039

Koviloor Digital Library


மின்னை அன்னபொய் வாழ்க்கையே
நிலைஎன மெய்ஆம்
உன்னை நான்மறந்து, எவ்வணம்
உய்வணம் உரையாய்;
முன்னை வல்வினை வேர்அற
முடித்து,என்றும் முடியாத்
தன்னைத் தன்அடி யார்க்குஅருள்
புரிந்திடும் தக்கோய்! 16

எம்ப ராபர, எம்உயிர்த்
துணைவ!என்று இறைஞ்சும்
உம்பர் இம்பர்க்கும் உளக்கணே
நடிக்கின்றாய்; உன்தன்
அம்பொன் மாமலர்ப் பதத்தையே
துணைஎன அடிமை
நம்பி னேன்;இனிப் புரப்பதுஎக்
காலமோ? நவிலாய். 17

பாடி, ஆடி,நின்று இரங்கி,நின்
பதமலர் முடிமேல்
சூடி வாழ்ந்தனர் அமல!நின்
அடியர்;யான் தொழும்பன்
நாடி யே,இந்த உலகத்தை
மெய்என நம்பித்,
தேடி னேன்வெறும் தீமையே,
என்இனிச் செய்வேன்? 18

களவு, வஞ்சனை, காமம்என்று
இவைஎலாம் காட்டும்
அளவு மாயைஇங்கு ஆர்எனக்கு
அமைத்தனர்? ஐயா!

16. மின்னை அன்ன – மின்னலை ஒத்த.

17. உம்பர் – வானுலகினர். இம்பர்க்கும் – மண்ணுலகினர்க்கும். உளக்கணே (உளக்கண்ணே) – மனத்தில்.

Koviloor Digital Library



உளவிலே எனக்கு உள்ளவாறு
உணர்த்தின்,உன் அடிமை
வளரும் மாமதி போல்மதி
தளர்வுஇன்றி வாழ்வேன். 19

வான நாயக, வானவர்
நாயக, வளம்கூர்
ஞான நாயக, நான்மறை
நாயக. நலம்சேர்
மோன நாயக, நின்அடிக்கு
அன்புஇன்றி முற்றும்
நீன னாய்,அகம் வாடவோ
என்செய்வேன்? செப்பாய். 20

ஏதம் அற்றவர்க்கு இன்பமே
பொழிகின்ற இறையே!
பாத கக்கருங் கல்மனம்
கோயிலாப் பரிந்து
சூதுஅ கத்தனா, யாதினும்
இச்சைமேல் தோன்றும்
வாத னைக்குஇடம் ஆயினேன்;
எவ்வணம் வாழ்வேன்? 21

தெளிவொடு ஈகையோ அறிகிலான்,
அறிவு இலான், சிறிதும்
அளிஇ லான்,இவன் திருவருட்கு
அயல்என அறிந்தோ
எளியன் ஆக்கினை; என்செய்வேன்
என்செய்வேன்? எல்லா
ஒளியு மாய்,நின்ற வெளியுமாய்,
யாவும்ஆம் உரவோய்! 22

19. உளவிலே — மறைவாக.

21. ஏதம் அற்றவர்க்கு — குற்றம் நீங்கினவர்களுக்கு.

22. அளி இலான் — இரக்கமில்லாதவன்.

Koviloor Digital Library



கண்ணின் உள்மணி என்னவே
    தொழும்அன்பர் கருத்துள்
நண்ணு கின்றநின் அருள்எனக்கு
    எந்தநாள் நணுகும்?
மண்ணும், விண்ணும்,மற்று உள்ளன
    பூதமும், மாறாப்
பெண்ணும், ஆணுமாய், அல்லவாய்
    நிற்கின்ற பெரியோய்! 23

ஜகம்எ லாம்தனி புரந்தனை;
    தகவுடைத் தக்கோர்
அகம்எ லாம்நிறைந்து ஆனந்தம்
    ஆயினை; அளவில்
மகம்எ லாம்புரிந் தோரைவாழ்
    வித்தனை; மாறா
இகம்எ லாம்எனைப் பிறந்திடச்
    செய்ததுஏன்? எந்தாய்! 24

ஏய்ந்த நல்லருள் பெற்றவர்க்கு
    ஏவலாய் எளியேன்,
வாய்ந்த பேரன்பு வளர்க்கவும்
    கருணைநீ வளர்ப்பாய்;
ஆய்ந்த மாமறை எத்தனை
    அத்தனை அறிவால்
தோய்ந்த பேர்கட்கும் தோன்றிலாத்
    தோன்றலாம் தூயோய்! 25

தக்க நின்அருள் கேள்வியோ
    சிறிதுஇன்றித், தமியேன்
மிக்க தெய்வமே! நின்இன்ப
    வெள்ளத்தில் வீழேன்!

---

24. மகம் எலாம் – யாகங்கள் எல்லாவற்றையும்.

25. ஏய்ந்த – பொருந்திய. தோன்றிலா – காணப்படாத. தோன்றலாம் – பெரியோனாகிய.

Koviloor Digital Library



ஒக்கல், தாய்,தந்தை, மகவுஎனும்
பாசக்கட் டுடனே
துக்க வெள்ளத்தில் ஆழ்கின்றேன்;
என்செய்வான் துணிந்தேன்? 26

பவம்பு ரிந்திடும் பாவியேற்கு
அருள்நிலை பதியத்,
தவம்செ யும்படி தயவுசெய்
தருள்வதே தருமம்;
அவம்பு ரிந்திடார்க்கு ஆனந்த
அமிர்தத்தை அளிக்க,
நவம்கொள் தத்துவத் திரைஎறி
கடல்எனும் நலத்தோய்! 27

உற்று உணர்ந்து,எலாம் நீஅலது
இல்லைஎன்று, உனையே
பற்று கின்றனர்; எந்தை!நின்
அடியர்,யான் பாவி
முற்றும் மாயம்ஆம் ஜகத்தையே
மெய்என, முதல்தான்
அற்றுஇ ருந்திடத் தொழில்செய்வான்
தனிநிகர் ஆனேன். 28

## 26. மண்டலத்தின்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

மண்டலத்தின் மிசைஒருவன் செய்தவித்தை
அகோஎனவும், வார ணாதி
அண்டமவை அடுக்குஅடுக்காய் அந்தரத்தில்
நிறுத்தும்அவ தானம் போல,

---

26. ஒக்கல் – சுற்றத்தினர். 27. பவம் புரிந்திடும் – பிறவிக்குக் காரணமான செயலில் ஈடுபடும். தத்துவத்திரை எறி – தத்துவமாகிய அலைகள் வீசுகின்ற. 28. உற்று உணர்ந்து – முற்றிலும் ஆராய்ந்து. முதல்தான் அற்று இருந் திட – கைப்பொருள் அனைத்தையும் இழந்துவிடுமாறு.

Koviloor Digital Library



எண்தரும்நல் அகிலாண்ட கோடியைத்தன்
அருள்வெளியில் இலக வைத்துக்
கொண்டுநின்ற அற்புதத்தை, எவராலும்
நிச்சயிக்கக் கூடா ஒன்றை; 1

ஒன்றுஇரண்டாய் விவகரிக்கும் விவகாரம்
கடந்து,ஏழாம் யோக பூமி
நின்று,தெளிந் தவர்பேசா மௌனநியா
யத்தைநிறை நிறைவைத் தன்னை
அன்றிஒரு பொருள்இலதாய், எப்பொருட்கும்
தான்முதலாய், அசலம் ஆகி,
என்றும்உள்ள இன்பத்தைத், தண்என்ற
சாந்தபத இயற்கை தன்னை; 2

பதம்மூன்றும் கடந்தவர்க்கு மேலான
ஞானபதப் பரிசு காட்டிச்,
சதம்ஆகி, நிராலம்ப சாக்ஷியதாய்.
ஆரம்பத் தன்மை ஆகி,
விதம்யாவும் கடந்துஅவித்தை எனும்இருளைக்
கீண்டுஎழுந்து, விமலம் ஆகி,
மதம்ஆறும் காணாத ஆனந்த
சாகரத்தை, மௌன வாழ்வை; 3

1. வித்தை – மாயவித்தை. அகோஎனவும் – வியப்பு எனவும். வாரணாதி அண்டமவை – கோழி முதலியவற்றின் முட்டைகளை. அவதானம்போல – சாமர்த்தியம் போல. எண்தரும் – நினைக்கத்தக்க. அருள்வெளியில் – பரவெளியில்.

2. ஏழாம் யோக பூமி – பிரபஞ்சத்திற்கப்பாலுள்ள ஞான நிலை. அசலம்ஆகி – அசைவற்றது ஆகி.

3. பதம் மூன்றும் – நனவு, கனவு, உறக்கமாகிய மூன்று நிலைகளையும். சதம்ஆகி – யாண்டும் உளதாகி. நிராலம்ப – பற்றுக்கோடு இல்லாத. அவித்தை – அஞ்ஞானம். கீண்டு – பிளந்து.

Koviloor Digital Library



வாழ்வுஅனைத்தும் தந்தஇன்ப மாகடலை,
நல்அமிர்தை, மணியைப், பொன்னைத்,
தாழ்வுஅறஎன் உளத்துஇருந்த தத்துவத்தை,
அத்வைத சாரம் தன்னைச்,
சூழ்பெரும்பே ரொளியை,ஒளி பரந்தபர
வெளியை,இன்பச் சுகத்தை, மாறாது
ஏழ்உலகும் கலந்து,இன்றாய், நாளையாய்,
என்றும்ஆம் இயற்கை தன்னை; 4

தன்னைஅறிந் தவர்தம்மைத் தான்ஆகச்
செய்தருளும் சமத்தை, லோகம்
மின்னைநிகர்த் திடஅழியாச் சொரூபானந்
தச்சுடரை, வேதம் ஆதி
என்னைஅறிவு அரிதுஎன்னச், சமயகோ
டிகள் இடைய, இடையறாத
பொன்னைவிரித் திடும்உலகத்து உம்பரும்இம்
பரும்பரவும் புனித மெய்யை; 5

பரவரிய பரசிவமாய், அதுஎனலாய்,
நான்எனலாய்ப், பாச ஜாலம்
விரவிநின்ற விசித்திரத்தை, ஐக்யபதத்து
இனிதுஇருந்த விவேகம் தன்னை,
இரவுபகல் நினைப்புமறப்பு எனும்தொந்தம்
அறியார்கள் இதயம் வேதச்
சிரம்எனவாழ் பராபரத்தை, ஆனந்தம்
நீங்காத சிதாகா சத்தை; 6

5. சமத்தை – திறமையை. மின்னை – மின்னலை. சமயகோடிகள் இடைய – சமயங்கள் பலவும் காணாது பின் வாங்கவும். உம்பரும் – தேவர்களும். இம்பரும் – மனிதர்களும். 6. பரவரிய – போற்றுதற்கு அரிய. பாச ஜாலம் – பாசக் கூட்டத்தால். விரவிநின்ற – காரியப்பட்டுள்ள. விசித்திரத்தை – அதிசயத்தை. ஐக்ய பதத்து – இணைந்த நிலையில். தொந்தம் – தொடர்பினை. வாழ் – அதனிடத்து விளங்குகின்ற.

Koviloor Digital Library



அத்வைத அநுபவத்தை, அனந்தமறை
இன்னம்இன்னம் அறியேம் என்னும்
நித்தியத்தை, நிராமயத்தை, நிர்க்குணத்தைத்,
தன்அருளால் நினைவுக்கு உள்ளே
வைத்துவைத்துப் பார்ப்பவரைத் தான்ஆக
எந்நாளும் வளர்த்துக் காக்கும்
சித்தினை,மாத் தூவெளியைத், தன்மயமாம்
ஆனந்தத் தெய்வம் தன்னை; 7

தன்னிலே தான்ஆக நினைந்து,கனிந்து,
அவிழ்ந்து,சுக சமாதி ஆகப்,
பொன்னிலே பணிபோலும் மாயைதரும்
மனமே!உன் புரைகள் தீர்ந்தாய்
என்னினோ யான்பிழைப்பேன்; எனக்குஇனியார்
உன்போல்வார் இல்லை இல்லை;
உன்னிலோ திருவருளுக்கு ஒப்பாவாய்;
என்உயிர்க்கோர் உறவும் ஆவாய். 8

உறஉடலை எடுத்தவரில், பிரமாதி
யேனும்உனை ஒழிந்து தள்ளற்கு
அறவும்அரிது அரிதுஅன்றோ, இகபரமும்
உன்னைஅன்றி ஆவது உண்டோ?
வறிதில்உன்னை அசத்துஎன்னல் வழக்குஅன்று,
சத்துஎனவும் வாழ்த்து வேன்;என்
சிறுமைகெடப் பெருமையின்நின் ஜென்மதே
யத்தினில்நீ செல்லல் வேண்டும். 9

7. நிராமயத்தை – நோயில்லாததை. சித்தினை – அறிவுப்பொருளை.

8. புரைகள் – குற்றங்கள். உன்னிலோ – எண்ணிப் பார்த்தாலோ.

9. உற – மிகவும். உனைஒழிந்து – மனமே உன்னை நீக்கி. வறிதில் – வீணே. அசத்துஎன்னல் – அறிவற்ற பொருள் என்று சொல்லுதல்.

Koviloor Digital Library



வேண்டியநாள் என்னோடும் பழகியநீ,
எனைப்பிரிந்த விசாரத் தாலே
மாண்டுகிடக் கினும்,அந்த எல்லையையும்
பூரணமாய் வணக்கம் செய்வேன்;
ஆண்டகுரு மௌனிதன்னால் யான்எனதுஅற்று
அவன்அருள்நான் ஆவேன்; பூவில்
காண்தகஎண் சித்திமுக்தி எனக்குஉண்டுஆம்;
உன்னால்என் கவலை தீர்வேன். 10

தீராத என்ஜனன வழக்குஎல்லாம்
தீரும்இந்த ஜனனத் தோடே,
யாரேனும் அறிவுஅரிய ஜீவன்முக்தி
உண்டாகும், ஐய, ஐயோ!
காரேனும், கற்பகப்பூங் காவேனும்,
உனக்குஉவமை காட்டப் போமோ?
பார்ஆதி ஆகஎழு மண்டலத்தில்
நின்மகிமை பகர லாமோ? 11

## 27. பாயப்புலி

### கட்டளைக் கலித்துறை

பாயப் புலிமுனம் மான்கன்றைக்
காட்டும் படி,அகில
மாயைப் பெரும்படைக் கேஇலக்
காஎனை வைத்தனையோ?

---

10. வேண்டிய நாள் – பல நாட்களாக. மாண்டு கிடக்கினும் – மனமே நீ மடிந்து போனாலும். ஆண்ட – என்னை ஆட்கொண்ட. பூவில் – உலகில். காண்தக – வெளிப்படையாய். எண் சித்தி – எட்டுவகைச் சித்திகள்.

11. பார்ஆதி ஆக – பூமி முதலாக உள்ள. எழு மண்டலத்தில் – ஏழு ஞான பூமிகளில்.

1. பாயப்புலிமுனம் – பாய்கின்ற அந்தப் புலியின் எதிரில். பெரும்படைக்கே – பெரிய எதிரிக்கே. இலக்கா எனை வைத்தனையோ – பலியாக என்னை வைத்துள்ளாயோ.

Koviloor Digital Library



நீளப் படிவகுத் தாலும்நன்
றே,நின் பெருங்கருணை
தாய்ஒத்து அடியர்க்கு அருள்சச்சி
தானந்த தற்பரமே! 1

தற்பரம் ஆம்சிற் பரம்ஆகி,
மன்றம் தனில்நடித்து
நிற்பர்;அம் போருகன், மால்பணி
நீதர்,என் நெஞ்சகம்ஆம்
கல்பரந் தாங்கு கரைந்திட,
வான்ஒத்த காட்சிநல்கும்
பொற்புஅர மாய்,என் வினைக்கருந்
தாதைப் பொடிசெய்ததே. 2

செய்யும் தவம்சற்றும் இல்லாத
நான்,உன் திருஅடிக்கே
கொய்யும் புதுமலர் இட்டு,மெய்
அன்பர் குழாத்துடனே
கையும் சிரமிசை கூப்பிநின்று,
ஆடிக், கசிந்துஉருகி,
உய்யும் படிக்குஅருள் செய்வதுஎன்
றோ? புலி யூர்அத்தனே! 3

அத்தனைச் சிற்றம் பலவனை,
என்உயிர் ஆகிநின்ற
சுத்தனைச், சுத்த வெளிஆ
னவனைச், சுகவடிவுஆம்

---

2. தற்பரம்ஆம் – தன்னில்தானே பூரித்து நிற்கும். சிற் பரம் ஆகி – ஞானச் சுடராகி. மன்றம் தனில் – சிற்றம்பலத் தில். அம்போருகன் – தாமரை மீது வீற்றிருக்கும் பிரம்ம னும். பணி – வணங்கத்தக்க. நீதர் – பாங்கை உடையவர். கல்பரந்தாங்கு – கல் பரப்பப்பட்டது போன்று. பொற்பு அரமாய் – அழகிய அராவுதற்குரிய அரம் என்னும் கருவி யாகி. கருந்தாதை – இரும்பை. 3. புலியூர் அத்தனே – சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் தந்தையே.

Koviloor Digital Library



நித்தனை, நித்த நிராதாரம்
ஆகிய நின்மலனை,
எத்தனை நாள்செல்லு மோ? மன
மே! கண்டு இறைஞ்சுதற்கே. 4

கண்டார் உளத்தினில் கால்ஊன்றிப்
பெய்யும் கருணைமுகில்;
அண்டார் புரத்துக்கும் அன்பர்
வினைக்கும் அசனி;தன்னைக்
கொண்டாடி னார்முனம் கூத்துஆடும்
மத்தன்தன் கோலம்எல்லாம்
விண்டால்,அம் மாஒன்றும் காணாது
வெட்ட வெறுவெளியே! 5

வெளியான நீஎன் மனவெளி
யூடு விரவின்,ஐயா
ஒளிஆரும் கண்ணும் இரவியும்
போல்நின்று உலாவுவன்காண்;
அளிஆரும் கொன்றைச் சடைஆட,
அம்புலி ஆடக்,கங்கைத்
துளிஆட, மன்றுள் நடம்ஆடும்
முக்கண் சுடர்க்கொழுந்தே! 6

4. நித்த நிராதாரம் ஆகிய – யாண்டும் தன்னில் தானாக இருக்கின்ற.

5. கால் ஊன்றிப் பெய்யும் கருணைமுகில் – நின்று அருள்மழை பொழிகின்ற அருள் மேகம். அண்டார் புரத்துக்கும் – பகைவர்களுடைய முப்புரங்களுக்கும். அசனி தன்னை – இடியாகிய இறைவனை. மத்தன் தன் கோலம் எல்லாம் – பித்தனுடைய அடையாளங்களை யெல்லாம். விண்டால் – சொல்லலாம் என்றால்.

6. வெளியான நீ – அறிவுப் பெருவெளியாகிய நீ.

Koviloor Digital Library


கொழுந்தாது உறைமலர்க் கோதையர்
மோகக் குரைகடலில்
அழுந்தாத வண்ணம்நின் பாதப்
புணைதந்து அருள்வதுஎன்றோ?
எழுந்துஆ தரவுசெய், எம்பெரு
மான்என்று இறைஞ்சிவிண்ணோர்
தொழும்தா தையே;வெண் பொடிபூத்த
மேனிச் சுகப்பொருளே! 7

சுகம்ஆகும் ஞானம்; திருமேனி
யாம்நல்ல தொண்டர்தங்கள்
அகமே;பொன் கோயில் எனமகிழ்ந்
தேமன்றுள் ஆடியகற்
பகமே;உன் பொன்அடி நீழல்கண்
டால்அன்றிப், பாவிக்குஇந்த
ஜெகமாயை ஆன அருங்கோடை
நீங்கும் திறம்இலையே. 8

நீங்காது உயிருக்கு உயிர்ஆகி
நின்ற நினைஅறிந்தே,
தூங்காமல் தூங்கின்அல் லாதே
எனக்குச் சுகமும்உண்டோ?
ஓங்காரம் ஆம்ஐந்து எழுத்தால்
புவனத்தை உண்டுபண்ணிப்,
பாங்காய் நடத்தும் பொருளே;
அகண்ட பரசிவமே! 9

7. கொழுந்தாது உறை – செழுமையான மகரந்தம் பொருந்திய. மோகக் குரை கடலில் – ஆசையாகிய ஓலமிடு கிற கடலில். நின்பாதப்புணை – உன் திருவடியாகிய மரக்கலத்தினை.

9. நினை அறிந்தே – சிவஞானத்தைப் பெற்றே. தூங்காமல் தூங்கின் அல்லாதே – யோக நித்திரை பெறா விடில். ஐந்து எழுத்தால் – நமசிவாய என்னும் ஐந்து எழுத் தால்.

Koviloor Digital Library


சிவம்ஆதி, நான்முகக் கோவந்த
மாமறை செப்புகின்ற
நவமாய் இலங்கிய ஒன்றே;
இரண்டுஅற்ற நன்மைபெறாது,
அவமே தரும்ஐம் புலப்பொறிக்
கேஎன் அறிவுபொல்லாப்
பவமே விளைக்கஎன் றோ,வெளி
மான்எனப் பாய்ந்ததுவே. 10

ஆறுஒத்து இலங்கு சமயங்கள்
ஆறுக்கும் ஆழ்கடலாய்,
வீறிப் பரந்த பரம்ஆன
ஆனந்த வெள்ளம்ஒன்று,
தேறித் தெளிந்து, நிலைபெற்ற
மாதவர் சித்தத்திலே
ஊறிப் பரந்து,அண்ட கோடிஎல்
லாம்நின்று உலாவியதே. 11

நடக்கினும் ஓடினும் நிற்கினும்
வேறுஒரு நாட்டம்இன்றிக்
கிடக்கினும் செவ்விது இருக்கினும்
நல்அருள் கேள்வியிலே
தொடக்கும்என் நெஞ்சம்; மனம்அற்ற
பூரணத் தொட்டிக்குளே
முடக்குவன் யான்;பர மானந்த
நித்திரை மூடிடுமே. 12

---

10. அவமே தரும் – பயனற்றதையே கொடுக்கும். ஐம்புலப் பொறி – ஐயறிவுக்குரிய ஐம்பொறி. பவமே விளைக்க என்றோ – பிறவியையே உண்டு பண்ணுவ தற்குத் தானோ. வெளி மான் என – வேகம் வாய்ந்த மான் போன்று. 11. வீறிப் பரந்த – மேம்பட்டுப் பரவிய. தேறித் தெளிந்து – தெற் றெனத் தெளிந்து. 12. தொடக்கும் என் நெஞ்சம் – என் மனமானது கட்டுப்பட்டுக் கிடக்கும். பூரணத் தொட்டிக்குளே – நிறைநிலையிலே. முடக்குவன் யான் – நான் திளைத்திருப்பேன். நித்திரை மூடிடுமே – யோக நித்திரை வாய்க்கும்.

எண்ணாதது எண்ணிய நெஞ்சே!
துயர்ஒழி, என்இரண்டு
கண்ணே உறங்குக, என்ஆணை,
முக்கண் கருணைப்பிரான்
தண்ஆர் கருணை மவுனத்தி
னால்முக்தி சாதிக்கலாம்;
நண்ணாதது ஒன்றுஇல்லை எல்லா
நலமும் நமக்குஉளவே. 13

நான்என்று ஒருமுதல் உண்டுஎன்ற
நான்தலை நாண,என்உள்
தான்என்று ஒருமுதல் பூரணம்
ஆகத் தலைப்பட்டு,ஒப்புஇல்
ஆனந்தம் தந்து,என் அறிவைஎல்
லாம்உண்டு, அவசம்நல்கி,
மோனம் தனைவிளைத் தால்இனி
யாது மொழிகுவதே?• 14

தானம் தவம்சற்றும் இல்லாத
நான்,உண்மை தான்அறிந்து,
மோனம் பொருள்எனக் கண்டிடச்.
சற்குரு மோனனுமாய்த்,
தீனன் தனக்குஇங்கு இரங்கினை
யே,இனிச் சிந்தைக்குஎன்றும்
ஆனந்தம் தான்அல்ல வோ? பர
மே;சச்சி தானந்தமே! 15

எனக்குஓர் சுதந்தரம் இல்லைஅப்
பா;எனக்கு எய்ப்பில்வைப்பாய்
மனக்கோது அகற்றும் பரம்பொரு
ளே!என்னை வாழ்வித்திட

13. தண்ஆர் கருணை – நலம் நிறைந்த அருள். நண்ணாதது ஒன்று இல்லை – கிடைக்கப் பெறாதது ஏதுமில்லை. 14. உண்டு அவசம் நல்கி – தன்னகத்து அடக்கித் தன்மயம் ஆக்கி.

Koviloor Digital Library


நினக்கே பரம்;நின்னை நீங்காத
பூரண நீள்கருணை
தனக்கே பரம்;இனிச் சும்மா
இருக்கத் தகும்என்றுமே. 16

இடம்பெறு வீடும்,மின் னார்,சேய்,
ஐகமும், இருநிதியும்
உடம்பைவிட்டு ஆருயிர் போம்போது
கூடி உடன்வருமோ?
மடம்பெறு மாயை மனமே!
இனிஇங்கு வா!மவுனி
திடம்பெற வைத்த மவுனம்
சகாயம் தெரிந்துகொள்ளே. 17

நாற்ற ஐடலத்தை, ஒன்பது
வாசல் நடைமனையைச்,
சோற்றுப் பசையினை, மும்மலப்
பாண்டத் தொடக்குஅறையை,
ஆற்றுப் பெருக்குஅன்ன கன்மப்
பெருக்கை, அடர்கிருமிச்
சேற்றைத் துணைஎன்ற நாய்க்கும்உண்
டோகதி சேர்வதுவே? 18

பொய்ஆர் உலகம் நிலைஅல்ல,
கானல் புனல்எனவே
மெய்யா அறிந்துஎன்ன? என்னால்
இதனை விடப்படுமோ?

---

16. எய்ப்பில் வைப்பாய் – தளர்வில் தாங்குபவன் ஆகி. மனக் கோது அகற்றும் – உள்ளத்தின் கீழ்மையை நீக்கும்.

17. இடம் பெறு வீடும் – பெரிய இல்லமும். மின்னார் – மாதர்கள். இருநிதியும் – மிகுந்த செல்வமும்.

18. பாண்டத் தொடக்கு அறையை – பாண்டமாகிய அழுக்கு வீட்டினை. அடர்கிருமிச் சேற்றை – நெருங்கிய புழுக்களை உடைய சேற்றினை.

Koviloor Digital Library


கையால் மவுனம் தெரிந்தே,கல்
ஆல்நிழல் கண்இருந்த
ஐயா;அப் பா;என் அரசே;முக்
கண்ணுடை ஆர்அமுதே! 19

ஆரா அமுதுஎன மோனம்
வகித்துக்கல் லால்நிழற்கீழ்ப்
பேராது நால்வ ருடன்வாழ்முக்
கண்ணுடைப் பேரரசே!
நீராய் உருகஉள் அன்புதந்
தே,சுக நிஷ்டையைநீ
தாரா விடின்,என் பெருமூச்சுத்
தான்அத் தனஞ்ஜயனே. 20

வாய்உண்டு வாழ்த்த; மவுனம்செய்
போது மவுனஅருள்
தாய்உண்டு; சேய்என்ன என்னைப்
புரக்கச் சதானந்தம்ஆம்
நீஉண்டு; நின்னைச் சரண்புக
நான்உண்டு;என் நெஞ்சம்ஐயா!
தீஉண்டு இருந்த மெழுகுஅல
வோகதி சேர்வதற்கே. 21

கல்லால் எறிந்தும்,கை வில்லால்
அடித்தும், கனிமதுரச்
சொல்லால் துதித்தும்,நல் பச்சிலை
தூவியும், தொண்டர்இனம்
எல்லாம் பிழைத்தனர்; அன்புஅற்ற
நான்இனி ஏதுசெய்வேன்;
கொல்லா விரதியர் நேர்நின்ற
முக்கண் குருமணியே! 22

19. கானல் புனல் – கானல் நீர் போன்ற மாயத் தோற்றம். கையால் மவுனம் தெரிந்தே – சின் முத்திரையால் விளக்கி. 20. அத்தனஞ்ஜயனே – தலை வெடித்து வெளியேறும் காற்று. 21. தீ உண்டு இருந்த மெழுகு அலவோ – தீயினால் காய்ச்சிய மெழுகு அல்லவா?

முன்னிலைச் சுட்டுஒழி நெஞ்சே!நின்
போதம் முளைக்கில்ஐயோ
பின்னிலை ஜன்மம் பிறக்கும்;கண்
டாய்இந்தப் பேய்த்தனம்ஏன்?
தன்னிலை யேநில்லு; தானே
தனிச்சச்சி தானந்தம்ஆம்
நன்னிலை வாய்க்கும்;எண் சித்தியும்
காணும்; நமதுஅல்லவே. 23

சொல்லால் மவுனம் மவுனம்என்
றேசொல்லிச் சொல்லிக்கொண்டது
அல்லால், மனம்அறப் பூரண
நிஷ்டையில் ஆழ்ந்ததுஉண்டோ?
கல்லாத மூடன் இனிஎன்செய்
வேன்;ஜகத் காரணம்ஆம்
வல்லாளன் ஆன மவுன
சதானந்த மாகடலே! 24

ஆரணம் ஆகமம் எல்லாம்
உரைத்த அருள்மவுன
காரண மூலம்,கல் ஆல்அடிக்
கேஉண்டு; காணப்பெற்றால்,
பார்,அணங் கோடு சுழல்நெஞ்சம்
ஆகிய பாதரசம்
மாரண மாய்விடும்; எண்சித்தி
முக்தியும் வாய்த்திடுமே. 25

---

23. முன்னிலைச் சுட்டு ஒழி – காட்சிக்குரியவற்றைக் கருத்தில் வாங்காதே. பின்னிலை – பிறகு. தன்னிலையே நில்லு – ஆன்மவடிவத்தில் நிலைத்திரு.

24. வல்லாளன் ஆன – வல்லவனாகிய.

25. காரண மூலம் – ஆதாரமான முதற் பொருள். பார் அணங்கோடு – நிலத்தோடும் மாதரோடும். நெஞ்சம் ஆகிய பாதரசம் – மனமாகிய பாதரசம். மாரணமாய்விடும் – ஒழிந்துபட்டுப்போம்.

Koviloor Digital Library


சித்த மவுனி, வடபால்
மவுனி,நம் தீபகுண்ட
சுத்த மவுனி எனும்மூவ
ருக்கும் தொழும்புசெய்து,
சத்த மவுன முதல்மூன்று
மௌனமும் தான்படைத்தேன்;
நித்த மவுனம்அல் லால்அறி
யேன்மற்றை நிஷ்டைகளே. 26

கண்டேன் நினதுஅருள்; அவ்அரு
ளாய்நின்று காண்பதுஎல்லாம்
உண்டே; அதுவும் நினதுஆக்கி
னேன்;உவட் டாதஇன்பம்
மொண்டே அருந்தி இளைப்புஆறி
னேன்;நல்ல முக்திபெற்றுக்
கொண்டேன்; பராபர மே!எனக்கு
ஏதும் குறைவுஇல்லையே. 27

மேல்கொண்ட வாயுவும் கீழ்ப்பட
மூலத்து வெந்தழலைச்
தூல்கொண்ட மேகம் என,ஊமை
நின்று சொரிவதைஎன்
னால்கண்டது அன்று; மவுனோப
தேசிஅ ளிக்கைஇனிப்
பால்கண்டு கொண்டனன்; மேலே
அமிர்தம் பருகுவனே. 28

26. தொழும்பு செய்து – தொண்டு புரிந்து.

27. கண்டேன் – அனுபூதியில் பெற்றேன். உவட்டாத இன்பம் – தெவிட்டாத பேரின்பம்.

28. மேல் கொண்ட வாயுவும் – மேல்நோக்கிச் செல்லும் பிராணனும். அளிக்கை – கிருபை வைத்ததினால். இனிப்பால் கண்டுகொண்டனன் – உடலில் இருக்கும் பொழுதே அனுபூதியில் கண்டுகொண்டேன்.

Koviloor Digital Library



சொல்லால், தொடர்பொரு ளால்,தொட
ராப்பரம் ஜோதி! நின்னை
வல்லாளர் கண்ட வழிகண்டி
லேன்;ஜக மார்க்கத்திலும்
செல்லாதுஎன் சிந்தை, நடுவே
கிடந்து, திகைத்து, விம்மி,
அல்ஆன தும்பகல் ஆனதும்
வாய்விட்டு அரற்றுவனே. 29

அறியாத என்னை அறிவாயும்
நீஎன்று, அகம்புறமும்
பிறியாது, அறிவித்த பேரறிவு
ஆம்சுத்தப் பேரொளியோ?
குறியாத ஆனந்தக் கோவோ
அமுதுஅருள் குண்டலியோ?
சிறியேன் படும்துயர் கண்டுகல்
ஆல்நிழல் சேர்ந்ததுவே. 30

எல்லாம் உதவும் உனை,ஒன்றில்
பாவனை யேனும்செய்து,
புல்ஆ யினும்ஒரு பச்சிலை
ஆயினும் போட்டுஇறைஞ்சி
நில்லேன்;நல் யோக நெறியும்செ
யேன்;அருள் நீதிஒன்றும்
கல்லேன்;எவ் வாறு பரமே
பரகதி காண்பதுவே? 31

29. வல்லாளர் கண்ட வழி – நிறைஞானிகள் தரிசித்த விதம். ஜக மார்க்கத்திலும் – பிரபஞ்ச வழியிலும்.

30. அறிவாயும் நீ என்று – தேவரீர்தானே அறிந்து கொள்கிறீர் என்று. அமுதுஅருள் குண்டலியோ – அருளமுதம் அருள்கின்ற பராசக்தியோ.

31. ஒன்றில் பாவனையேனும் செய்து – ஒரு வடிவத்தில் நிலை நிறுத்தி.

Koviloor Digital Library



ஒன்றும் தெரிந்திட இல்லை;என்
உள்ளத்து ஒருவ!எனக்கு
என்றும் தெரிந்த இவை;அவை
கேள்!இர வும்பகலும்
குன்றும் குழியும் வனமும்
மலையும் குரைகடலும்
மன்றும் மனையும் மனம்ஆதி
தத்துவ மாயையுமே. 32

பழுதுஉண்டு, பாவையர் மோக
விகாரப் பரவையிடை
விழுகின்ற பாவிக்கும், தன்தாள்
புணையை வியந்துஅளித்தான்;
தொழுகின்ற அன்பர் உளம்களி
கூரத் துலங்கும்மன்றுள்
எழுகின்ற ஆனந்தக் கூத்தன்,என்
கண்மணி, என்அப்பனே. 33

அழுக்குஆர்ந்த நெஞ்சுஉடை யேனுக்கு,ஐ
யாநின் அருள்வழங்கின்
இழுக்குஆகும் என்றுஎண்ணி யோஇரங்
காத இயல்புகண்டாய்;
முழுக்காதல் ஆகி, விழிநீர்
பெருக்கிய முக்தர்எனும்
குழுக்காண நின்று, நடம்ஆடும்
தில்லைக் கொழுஞ்சுடரே! 34

32. என் உள்ளத்து ஒருவ – என் மனத்தில் வீற்றிருக்கும் ஒப்பற்றவனே.

33. பழுது உண்டு – துன்பம் உற்று. பாவையர் மோக விகாரப்பரவை இடை – மாதர்களின் காமக் கொந்தளிப்பு உடைய கடலில். தன்தாள் புணையை – தேவரீர் திருவடியாகிய மரக்கலத்தினை.

34. அழுக்கு ஆர்ந்த – மாசு படிந்துள்ள. குழுக்காண – ஞானியர் கூட்டம் தரிசிக்க.

Koviloor Digital Library



ஆலம் படைத்த விழியார்கள்
மால்கொண்டு, அவர்செய்இந்த்ர
ஜாலம் படைத்துத் தளர்ந்தனை
யே,என்றும் தண்அருள்கூர்
கோலம் படைத்துக்,கல் ஆல்அடிக்
கீழ்வைகும் கோவுக்கு,அன்புஆம்
காலம் படைக்கத் தவம்படை
யாதுஎன்கொல் கல்நெஞ்சமே! 35

சும்மா இருக்கச் சுகம்சுகம்
என்று சுருதிஎல்லாம்
அம்மா நிரந்தரம் சொல்லவும்,
கேட்டும், அறிவுஇன்றியே
பெம்மான் மவுனி மொழியையும்
தப்பி,என் பேதைமையால்
வெம்மாயக் காட்டில் அலைந்தேன்; அந்
தோஎன் விதிவசமே. 36

தினமே செலச்செல, வாழ்நாளும்
நீங்க, ஜெகத்து இருள்சொப்
பனமே எனவெளி கண்டே
இருக்கவும், பாசபந்த
இனமே துணைஎன்று இருந்தோம்;
நமன்வரின் என்செய்குவோம்;
மனமே!நம் போலஉண் டோசுத்த
மூடர்இவ் வையகத்தே? 37

35. ஆலம் படைத்த – நஞ்சு பொருந்திய. மால் கொண்டு – ஆசை பூண்டு. அவர் செய் இந்த்ர ஜாலம் படைத்து – அவர்கள் காட்டுகின்ற சூழ்ச்சிக்கு உள்ளாகி. கல் ஆல் அடிக் கீழ் வைகும் – ஆலமரத்தடியில் எழுந்தருளி யிருக்கின்ற. 36. நிரந்தரம் சொல்லவும் – இடைவிடாது புகட்டிக் கொண்டிருக்கவும். பெம்மான் மவுனி – போற்று தற்குரிய மௌன குருவின். வெம்மாயக் காட்டில் – கொடிய பொருளற்ற தோற்றமாகிய அடவியில். 37. ஜெகத்து இருள் – பிரபஞ்சம் என்னும் அஞ்ஞான இருள். பாச பந்த இனமே – பிணிக்கின்ற பாசக்கூட்டமே.

Koviloor Digital Library



கடல்எத் தனை,மலை எத்தனை,
அத்தனை கன்மம்;அதற்கு
உடல்எத் தனை,அத் தனைகடல்
நுண்மணல் ஒக்கும்;இந்த
ஜடலத்தை நான்விடும் முன்னே
உனைவந்து சார,இருள்
படலத்தை மாற்றப் படாதோ?
நிறைந்த பராபரமே! 38

நினையும் நினைவும் நினைஅன்றி
இல்லை; நினைத்திடுங்கால்
வினைஎன்று ஒருமுதல் நின்னைஅல்
லாது விளைவதுஉண்டோ?
தனையும் தெளிந்து,உன்னைச் சார்ந்தோர்கள்
உள்ளச்செந் தாமரைஆம்
மனையும்,பொன் மன்றமும் நின்றுஆடும்
ஜோதி மணிவிளக்கே! 39

உள்ளத் தையும்இங்கு எனையும்நின்
கையினில் ஒப்புவித்தும்,
கள்ளத்தைச் செய்யும் வினையால்
வருந்தக் கணக்கும்உண்டோ?
பள்ளத்தில் வீழும் புனல்போல்
படிந்து,உன் பரமஇன்ப
வெள்ளத்தின் மூழ்கினர்க் கேஎளி
தாம்தில்லை வித்தகனே! 40

கள்ளம் பொருந்தும் மடநெஞ்ச
மே!கொடுங் காலர்வந்தால்
உள்அன்பு அவர்கட்குஉண் டோஇல்லை
யே;உலகு ஈன்றஅன்னை

38. இருள் படலத்தை – ஆணவச் செறிவை.
39. பொன் மன்றமும் – பொன்னம்பலத்திலும்.
40. தில்லை வித்தகனே – சிதம்பரத்தில் மேவிய ஞான வடிவானவனே.

Koviloor Digital Library



வள்ளம் பொருந்தும் மலர்அடி
  காண,மன்று ஆடும்இன்ப
வெள்ளச்செம் பாதப் புணையேஅல்
  லால்கதி வேறுஇல்லையே. 41

தன்மயம் ஆனசு பாவத்தில்
  மெள்ளத் தலைப்படுங்கால்,
மின்மயம் ஆன ஜகம்யாது
  உரைத்துஎன்? வெளியில்உய்த்த
சின்மய முத்திரைக் கையேமெய்
  ஆகத் தெளிந்தநெஞ்சே!
நின்மயம், என்மயம் எல்லாம்
  நிறைந்த நிராமயமே. 42

ஆயும் கலையும் சுருதியும்
  காண்டற்கு அரியஉனைத்
தோயும் படிக்குக் கருணைசெய்
  வாய்;சுக வான்பொருளே!
தாயும் பிதாவும் தமரும்
  குருவும் தனிமுதலும்
நீயும் பரையும்என் றேஉணர்ந்
  தேன்;இது நிச்சயமே. 43

அல்லும் பகலும் உனக்கே
  அபயம் அபயம்என்று
சொல்லும்சொல் இன்னம் தெரிந்ததுஅன்
  றோ? துதிப் பார்கள்மனக்

41. வள்ளம் பொருந்தும் மலர் அடி – கிண்ணம் போன்று காணப்படுகிற தாமரை அனைய திருவடி. இன்ப வெள்ளச் செம்பாதப் புணையே அல்லால் – பேரின்பக் கடலாகிய இறைவனுடைய திருவடிகளாகிய தெப்பமே யன்றி. 42. மின்மயம்ஆன ஜகம் – மின்னலைப்போன்ற பிரபஞ்சம். 43. உனைத் தோயும்படிக்கு – தேவரீரை அடையும்படிக்கு. நீயும் பரையும் – சிவனாகிய நீயும் உன் சக்தியும்.

Koviloor Digital Library



கல்லும் கரைக்கும் மவுனா!
உனது கருணைஎன்பால்
செல்லும் பொழுதுஅல்ல வோசெல்லு
வேன்;அந்தச் சிற்சுகத்தே. 44

எல்லாம் சிவன்செயல் என்றுஅறிந்
தால்,அவன் இன்னருளே
அல்லால் புகல்இடம் வேறும்உண்
டோ? அது வேறிலையா
நில்லாய்;உன் னால்தமி யேற்குக்
கதிஉண்டு;இந் நீள்நிலத்தில்
பொல்லா மயக்கத்தில் ஆழ்ந்துஆவது
என்ன புகல்நெஞ்சமே! 45

ஒளியே, ஒளியின் உணர்வே,
உணர்வின் உவகைபொங்கும்
களியே, களிக்கும் கருத்தே,
கருத்தைக் கவளம்கொண்ட
வெளியே, வெளியின் விளைசுக
மே,சுகர் வீறுகண்டும்
தெளியேன்; தெளிந்த வரைப்போற்றி
டேன்; என்ன செய்குவனே? 46

மறக்கின்ற தன்மை இறத்தல்ஒப்பு
ஆகும்; மனமதுஒன்றில்
பிறக்கின்ற தன்மை பிறத்தல்ஒப்பு
ஆகும்;இப் பேய்ப்பிறவி
இறக்கின்ற எல்லைக்கு அளவுஇல்லை
யே;இந்த ஜன்மஅல்லல்
துறக்கின்ற நாள்எந்த நாள்? பர
மே!நின் தொழும்பனுக்கே. 47

46. சுகர் வீறு கண்டும் – சுகப்ரம்மத்தின் பெருமையினை நூல்களில் படித்தும்.

Koviloor Digital Library



காட்டிய அந்தக் கரணமும்,
மாயைஇக் காயம்என்று
சூட்டிய கோலமும், நானா
இயங்கத், துறைஇதனுள்
நாட்டிய நான்,தனக்கு என்றுஓர்
அறிவுஅற்ற நான்,இவற்றைக்
கூட்டிநின்று ஆட்டினை யே;பர
மே!நல்ல கூத்துஇதுவே. 48

பொல்லாத மாமர்க் கடமன
மே!எனைப் போல்அடுத்த
எல்லாவற் றையும்பற்றிக் கொண்டனை
யே;என்னை? நின்மயமா
நில்லாய் அருள்வெளி நீ;நான்நிற்
பேன்அருள் நிஷ்டைஒரு
சொல்லால் பதிந்து; பரிபூர
ணானந்தம் தோய்குவனே. 49

வாராய்நெஞ் சே!உன்தன் துன்மார்க்கம்
யாவையும் வைத்துக்கட்டு;இங்கு
ஆராய்; அடிக்கடி சுற்றுகின்
றாய்;உன் அவலமதிக்கு
ஓர்ஆ யிரம்புத்தி சொன்னாலும்
ஓர்கிலை; ஓகெடுவாய்;
பாராய்; உனைக்கொல்லு வேன்;வெல்லு
வேன்;அருள் பாங்குகொண்டே. 50

மாதத்தி லேஒரு திங்கள்உண்
டாகி மடிவதைநின்
போதத்தி லேசற்றும் வைத்திலை
யே;வெறும் புன்மைநெஞ்சே!

---

49. மாமர்க்கட மனமே – பெரிய குரங்கு போன்ற நெஞ்சமே. நின்மயமா – அருளைச் சார்ந்து.

50. யாவையும் வைத்துக்கட்டு – எல்லாவற்றையும் ஒதுக்கித் தள்ளு. உன் அவல மதிக்கு – உன்னுடைய தீய புத்திக்கு.

Koviloor Digital Library



வேதத்தி லே,தர்க்க வாதத்தி
லேவிளங் காது;விந்து
நாதத்தி லேஅடங் காதுஅந்த
வான்பொருள்; நாடிக்கொள்ளே. 51

எங்கும் வியாபித்து உணர்வாய்;
உனக்குஎன் இதயத்துஉள்ளே
தங்கும் துயரம் தெரியாத
வண்ணம் தடைசெய்ததுஆர்?
அங்கம் குழைந்துஉள் உருகும்அன்
பாளர்க்கு அணைகடந்து
பொங்கும் கருணைக் கடலே!சம்
பூரண போதத்தனே! 52

வையக மாதர் சுகத்தையும்
பொன்னையும் மாயைமல
மெய்யையும் மெய்என்று, நின்அடி
யார்தம் விவேகத்தையும்
ஐயம்இல் வீட்டையும் மெய்ந்நூலை
யும்பொய்ய தாகஎண்ணும்
பொய்யர்தம் நட்பை விடுவதுஎன்
றோ? பரி பூரணமே! 53

அளியும் கனியொத்து, அருவினை
யால்நொந்து அயர்வுறுவேன்;
தெளியும் படிக்குப் பரிபாக
காலமும் சித்திக்குமோ?

51. விந்து நாதத்திலே – பீஜ மந்திரத்திலும். அடங்காது அந்த வான்பொருள் - பிறபொருளுக்குக் கட்டுப்படாது.

52. சம்பூரண போதத்தனே – பரிபூரண ஞான சொரூபனே.

53. மெய்யையும் மெய் என்று – உடலையும் நிலை பெற்றதென்று. ஐயம் இல் வீட்டையும் – சந்தேகத்துக்கு இடமில்லாத முக்தியையும்.

54. அளியும் கனி ஒத்து – கனிந்த கனி போன்று. அருவினையால் – கொடிய வினையினால்.

Koviloor Digital Library



ஒளியும் கருணையும் மாறாத
இன்பமும் ஓர்உருவாய்
வெளிவந்து, அடியர் களிக்கநின்று
ஆடும் விழுப்பொருளே! 54

அடையார் புரம்செற்ற தேவே!நின்
பொன்அடிக்கு அன்புசற்றும்
படையாத என்னைப் படைத்து,இந்தப்
பாரில் படர்ந்தவினைத்
தடையால் தளையிட்டு, நெஞ்சம்புண்
ணாகத் தளரவைத்தாய்;
உடையாய் உடைய படிஅன்றி,
யான்செய்தது ஒன்றுஇலையே. 55

ஆடும் கறங்கும் திரிகையும்
போல அலைந்துஅலைந்து,
காடும் கரையும் திரிவதுஅல்
லால்,நின் கருணைவந்து
கூடும் படிக்குத் தவம்முய
லாத கொடியர்,எமன்
தேடும் பொழுதுஎன்ன செய்வார்?
பரானந்த சிற்சுடரே! 56

கற்றும் பலபல, கேள்விகள்
கேட்டும், கறங்குஎனவே
சுற்றும் தொழில்கற்றுச், சிற்றின்பத்
தூடு சுழலின்என் ஆம்?

55. அடையார் புரம் செற்ற தேவே – பகைவர்களுடைய திரிபுரங்களை எரித்த இறைவா. வினைத்தடையால் – கர்மபந்தத்தினால். தளை இட்டு – விலங்கு போட்டு.

56. ஆடும் கறங்கும் திரிகையும் போல – வானத்தில் பறக்கின்ற காற்றாடியையும் குயவனது சக்கரத்தையும் போல.

57. கறங்கு எனவே – காற்றாடியைப் போலவே.

Koviloor Digital Library



குற்றம் குறைந்து குணம்மே
　　லிடும்அன்பர் கூட்டத்தையே
முற்றும் துணைஎன நம்புகண்
　　டாய்;சுத்த மூடநெஞ்சே! 57

நீஎன நான்என வேறுஇல்லை
　　என்னும் நினைவுஅருளத்,
தாய்என மோன குருஆகி
　　வந்து, தடுத்து,அடிமைச்
சேய்எனக் காத்தனை யே;பர
　　மே!நின் திருவருளுக்
கேஎன செய்யும்கைம் மாறுஉள
　　தோ?சுத்த ஏழையனே! 58

ஆத்திரம் வந்தவர் போல்அலை
　　யாமல், அரோகதிட
காத்திரம் தந்துஎன்னை யேஅன்னை
　　போலும் கருணைவைத்து,இம்
மாத்திரம் முன்நின்று உணர்த்தினை
　　யே;மவு னாஇனிநான்
சாத்திரம் சொன்ன படிஇயம
　　ஆதியும் சாதிப்பனே. 59

## 28. உடல் பொய்யுறவு

### நேரிசை வெண்பா

உடல்,பொய் உறவுஆயின் உண்மைஉறவு ஆகக்
கடவார்ஆர்? தண்அருளே கண்டாய்; – திடமுடனே
உற்றுப்பார்; மோனன் ஒருசொல்லே உண்மை;நன்றாய்ப்
பற்றிப்பார்; மற்றஎல்லாம் பாழ். 1

---

59. அரோகம் – நோயின்மை. இயம ஆதியும் – இயமம் முதலான யோகசாதனங்களையும்.

1. உறவு ஆகக் கடவார் யார்? - உறவு ஆயினார் யாவர்?

Koviloor Digital Library


பார்ஆதி பூதம்எல்லாம் பார்க்குங்கால், அப்பரத்தின்
சீர்ஆக நிற்கும் திறம்கண்டாய்; — நேர்ஆக
நிற்கும் திருவருளில் நெஞ்சே!யாம் நிற்பதுஅல்லால்
கற்கும்நெறி யாதுஇனிமேல்? காண். 2

மெய்ஆன தன்மை விளங்கினால் யார்க்கேனும்
பொய்ஆன தன்மை பொருந்துமோ? — ஐயாவே!
மன்னும்நி ராசைஇன்னம் வந்ததுஅல்ல; உன்அடிமை
என்னும்நிலை எய்தும்ஆறு என்? 3

அறியாமை மேலிட்டு அறிவுஇன்றி நிற்கும்
குறியேற்கு, அறிவுஎன்ற கோலம் — வறிதேஆம்;
நீஉணர்த்த நான்உணரும் நேசத்தா லோ,அறிவுஎன்
றேஎனக்குஓர் நாமம்இட்ட தே. 4

ஏதுக்குச் சும்மா இரு,மனமே! என்றுஉனக்குப்
போதித்த உண்மைஎங்கே போகவிட்டாய்? — வாதுக்கு
வந்துஎதிர்த்த மல்லரைப்போல் வாதாடி னாயே,உன்
புந்திஎன்ன? போதம்என்ன? போ. 5

ஜகம்அனைத்தும் பொய்எனவே தான்உணர்ந்தால், துக்க
சுகம்அனைத்தும் பொய்அன்றோ? சோராது — இகபரத்தும்
விட்டுப் பிரியாத மேலான அத்வைதக்
கட்டுக்குள் ஆவதுஎன்றோ? காண். 6

---

3. மன்னும் நிராசை இன்னம் வந்தது அல்ல — உறுதியான வைராக்கியம் இன்னும் வாய்க்கவில்லை.

4. அறிவு இன்றி நிற்கும் குறியேற்கு — அறிவின்றி வாழ்தலைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள எனக்கு. அறிவு என்ற கோலம் வறிதேஆம் — அறிவுடையன் என்ற மனித வடிவம் பொருளற்றதாகும்.

6. அத்வைத கட்டுக்குள் ஆவது என்றோ? இரண்டற்றது என்னும் ஆணையில் அடங்கியிருத்தல் எக்காலமோ?

 Koviloor Digital Library 

கற்கண்டோ, தேனோ, கனிரசமோ, பாலோ,என்
சொற்குஅண்டாது ஏதுஎனநான் சொல்லுவேன்? —
வில்கண்ட
வானமதி காண மவுனிமவு னத்துஅளித்த
தானம்அதில் ஊறும்அமிர் தம். 7

கேட்டலுடன், சிந்தித்தல், கேடுஇலா மெய்த்தெளிவால்,
வாட்டமறா உற்பவநோய் மாறுமோ? — நாட்டமுற்று
மெய்ஆன நிஷ்டையினை மேவினர்கட்கு அன்றோதான்
பொய்ஆம் பிறப்புஇறப்புப் போம். 8

மாயா ஜகத்தை மதியாதார், மண்முதலா
யேஆன தத்துவத்தில் எய்துவரோ? — நேயானு
பூதிநிலை நிற்கப் பொருந்துவர்கள்; அன்னவர்தம்
நீதியையே ஓர்;மனமே நீ. 9

இகம்முழுதும் பொய்எனவே ஏய்ந்துஉணர்ந்தால், ஆங்கே
மிகவளர வந்தஅருள் மெய்யே; — அகம் நெகிழப்
பாரீர்; ஒருசொல் படியே அனுபவத்தைச்
சேரீர்; அதுவே திறம். 10

ஆரணங்கள், ஆகமங்கள் யாவுமே ஆனந்த
பூரணமே உண்மைப் பொருள்என்னும் — காரணத்தை
ஓராயோ? உள்உள்ளே உற்றுஉணர்ந்துஅவ்
உண்மையினைப்
பாராயோ? நெஞ்சே! பகர். 11

7. என் சொற்கு அண்டாது — என் வார்த்தைக்கு எட்டாது. வில்கண்ட — ஒளி பொருந்திய. வானமதி காண — உயர்ந்த சந்திரமண்டலத்தைத் தரிசிக்க. 8. வாட்டம் அறா உற்பவ நோய் — தளர்ச்சி நீங்காத பிறவிப்பிணி. மேவினர்கட்கு அன்றோ — அடைந்தவர்களுக்கு அன்றோ. 9. நேயானுபூதி நிலை நிற்க — அன்பான சிவானுபூதியில் நிலைத்திருக்க. 10. ஏய்ந்து உணர்ந்தால் — பொருந்தி அறிந்தால். மிக வளர வந்த அருள் — யாண்டும் பெருகுகிற திருவருள். 11. ஆரணங்கள் — வேதங்கள். உள்உள்ளே — உள்ளத்தினுள்ளே.

Koviloor Digital Library


நேராய்அம் மௌனநிலை நில்லாமல், வாய்பேசி
ஆராய் அலைந்தீர்நீர்; ஆகெடுவீர்; — தேரீர்;
திரைஉந்து இரையும்நதிச் சென்னியனை நாவால்
கரையும்; கரையும்மனக் கல். 12

அற்ப மனமே! அகிலவாழ்வு அத்தனையும்
சொற்பனம்கண் டாய்;உண்மை சொன்னேன்நான்; — கற்பனைஒன்று
இல்லா இடத்தே, எனைச்சும்மா வைத்திருக்கக்
கல்லாய்நீ தான்ஓர் கவி. 13

ஏதும் திருவருளின் இச்சைஆம் என்றுஎன்றுஎப்
போதும் பொருந்தும் புனிதர்பால் — தீதுநெறி
செல்லுமோ? செல்லாதே; செல்லும்இடம் இன்பம்அலால்
சொல்லுமோ வேதத் தொனி. 14

கல்லேறும் சில்லேறும் கட்டியே றும்போலச்
சொல்ஏறப் பாழ்த்த துளைச்செவிகொண்டு — அல்ஏறு
நெஞ்சன்என நிற்கவைத்தாய்; நீதியோ? தற்பரமே!
வஞ்சன்அல்லேன்; நீயே மதி. 15

---

12. ஆராய் அலைந்தீர் நீர் — உங்களை யாரென்று கருதித் திண்டாடினீர்கள். தேரீர் — ஆராயுங்கள். திரைஉந்து இரையும் நதி — அலைவீசி ஒலிக்கின்ற கங்கை ஆறு. சென்னியனை — தலையையுடையவனை. கரையும் மனக்கல் — கல்போன்ற நெஞ்சம் உருகும்.

14. இச்சைஆம் என்றுஎன்று — திருவுளப்பாங்கு என்று எண்ணி எண்ணி. வேதத்தொனி — வேத வாக்கு.

15. கல்லேறும் — கல் எறிதலையும். சில்லேறும் — ஓடு எறிதலையும். கட்டியேறும் — மண்ணாங்கட்டி எறிதலையும். சொல் ஏற — சொல்வதையெல்லாம் கேட்டுக்கொள்ளுகிற. அல்ஏறுநெஞ்சன் — அஞ்ஞானத்தை வாங்கிக்கொள்ளும் மனத்தையுடையவன். வஞ்சன் அல்லேன் — அடியேன மோசமானவன் அல்லேன்.

அப்பொருளும் ஆன்மாவும் ஆரணநூல் சொன்னபடி
தப்புஇல்லாச் சித்துஒன்று ஆம் ஞானியினால் — எப்படியும்
தேரில் துவைதம்; சிவாகமமே சொல்லும்நிஷ்டை
ஆரும்இடத்து அத்துவிதம் ஆம்.

வேதம் முதலாய் விளங்கும் சிவவடிவுஆம்
போத நிலையில் பொருந்தாமல் — மோகாதி அல்லலிலே மூழ்கினையே நெஞ்சே இது
தேகாதி மெய்யோ தெளி.

நோக்கற்கு அரிதுஆன நுண்ணியவான் மோனநிலை
தாக்கற்கு உபாயம் தனைத்தேரான் — ஆக்கும்உயிர்
அத்தனைக்கும் நான்அடிமை ஆதலினால்
நான்எனதுஎன்று
இத்தனைக்கும் பேச்இடம் இல்லை.

ஒன்றும்அற நில்என்று உணர்த்தியநம் மோனகுரு
தன்துணைத்தாள் நீடூழி தாம்வாழ்க — என்றும்என்றே
திக்குஅனைத்தும் கைகுவிக்கும் சின்மயர்க்கும் தன்மயர்க்கே
கைக்குவரும் இன்பக் கனி.

மனத்தாலும் வாக்காலும் மன்னஒண்ணா மோன
இனத்தாரே நல்லஇனத்தார் — கனத்தபுகழ்
கொண்டவரும் அன்னவரே [illegible]
கண்டவரும் அன்னவரே காண்.

---

அப்பொருளும் — அந்தப் பரம்பொருளும். ஆன்மாவும் — ஜீவாத்மாவும். சித்து ஒன்றாம் — சைதன்யத்தால் ஒன்றாகும். ஞானியினால் — செம்மையான அறிவினால். நிஷ்டை ஆரும் இடத்து — சமாதிநிலை கூடும் இடத்து. போதநிலையில் — சுத்தம் போதத்தில். மிகு குற்றம் நிறைந்திருக்கின்ற. மோகாதி அல்லலிலே — மயக்கம் முதலிய துன்பங்களிலே. 18. வான்மோனநிலை — மேலான மௌன வடிவந் தன்னை. தாக்கற்கு — அடைதற்கு. 19. ஒன்றும் அறநில் — மனத்தைக் காலியிடமாகச் செய். துணைத்தாள் — இரண்டு திருவடிகள். 20. மன்னஒண்ணா — அடைய முடியாத.

Koviloor Digital Library


கண்ஒளியே; மோனக் கரும்பே; கவலை அறப்
பண்ஒளிக்கும் உள்ஒளியாம் பான்மையினை — நண்ணிட,உன்
சித்தம் இரங்கிலதுஎன்? சித்தம் தெளியாவேறு
இத்தனைக்கும் ஆதரவும் இல். 21

அறியாமை சாரின் அதுவாய்; அறிவுஆம்
நெறிஆன போதுஅதுவாய் நிற்கும்; — குறியால்
சதசத்து அருள்உணர்த்தத், தான்உணரா நின்ற
விதம்உற்று, அறிவுஎனும்பேர் மெய். 22

குரு,லிங்க, ஜங்கமமாக் கொண்டதிரு மேனி,
கருஒன்று மேனிநம்பால் காட்டாது — அருள்என்று
கண்டவர்க்கே ஆனந்தம் கண்டுகொளல் ஆம்;அலது
கொண்டவர்க்குஇங்கு என்னகிடைக் கும். 23

புலியின் அதள்உடையான்; பூதப் படையான்;
பலிஇரந்தும் எல்லாம் பரிப்பான்; — மலிபுனல்சேர்
பொன்முடியான்; முக்கண் புனிதன் சரண்புகுந்தோர்க்கு
என்முடியாது? ஏதும்உள தே. 24

சொல்லுக்கு அடங்காச் சுகப்பொருளை நாம்எனவே
அல்லும் பகலும் அரற்றுவதுஎன்? — நல்லசிவ
ஞானமயம் பெற்றோர்கள் நாம்இல்லை என்பர்;அந்தோ
மோனமயம் ஆன முறை. 25

---

21. கவலை அறப்பண் — சஞ்சலத்தை நீக்குகின்ற. ஒளிக்கும் உள் ஒளியாம் பான்மையினை — மனசாட்சியாய் அமைந்திருக்கும் பேரறிவுப் பொருளின் சொரூபத்தை. ஆதரவும் இல் — ஆதாரம் இல்லை. 22. அறியாமை சாரின் — அறியாமையோடு கூடினால். சதசத்து (சத்து + அசத்து)— சேதனத்தையும், ஜடத்தையும். 23. ஜங்கமமா — சிவனடியார் களாகவும். கரு ஒன்று மேனி — அஞ்ஞானத்தில் பிறந்த வடிவம். அலது — உண்மையுணராமல். 24. புலியின் அதள் உடையான் — புலியினுடைய தோலை ஆடையாக உடைய வன். பலி இரந்தும் எல்லாம் பரிப்பான் — பிச்சை ஏற்றும் உலகனைத்தையும் தாங்குவான். மலிபுனல் சேர் — நிறைந்த கங்கையை அணிந்த.

Koviloor Digital Library



ஐயா; அருணகிரி அப்பா; உனைப்போல
மெய்ஆக ஓர்சொல் விளம்பினர்யார்? — வையகத்தோர்
சாற்றரிதுஎன்று ஏசற்றார்; தன்அனையாய், முக்கண்எந்தை
நாற்றிசைக்கும் கைகாட்டி னான். 26

காதுஅற்றுப் போனமுறி கட்டிவைத்தால் ஆவதுஉண்டோ?
நீதுஅற்ற காயமும்அச் செய்கையே; — போதமாய்
நிற்பர்அல்லால் இச்சகத்தில் நேரார்கள்; நேர்ந்திடினும்
தற்பரமாக் கண்டிருப்பார் தாம். 27

வெள்ளம் குலாவுசடை வெள்ளக் கருணையினான்
கள்ளம் குலாவுவஞ்சக் கள்ளனேன் — உள்ளத்தில்
இல்லன்என்றால், அன்னவன்தான் எங்கும் வியாபகத்தான்
அல்லன்என்றும் சொல்லவழக்கு ஆம். 28

தத்துவப்பே யோடே தலைஅடித்துக் கொள்ளாமல்
வைத்த அருள்மோன வள்ளலையே — நித்தம்அன்பு
பூணக் கருதும்நெஞ்சு; போற்றக் கரம்எழுப்பும்;
காணத் துடிக்கும்இரு கண். 29

தொல்லைவினைக்கு ஈடாய்ச் சுழல்கின்ற நான்ஒருவன்
எல்லைஇலா நின்கருணை எய்துவனோ? — வல்லவன்ஆம்
மோன குருவே! முழுதினையும் தான்உணர்ந்த
ஞான குருவே! நவில். 30

---

26. சாற்றரிது என்று ஏசற்றார் — சொல்ல முடியாது என்று இளைத்துப் போனார்கள். தன் அனையாய் — தனக்கு ஒப்பாக இருப்பவனே. கை காட்டினான் — சின் முத்திரையைக் காட்டினான்.

27. காது அற்றுப்போன — துளை கெட்டுப் போன. முறி — எழுதுதற்கு உரிய ஓலை. போதமாய் — ஞான வடிவமாய். இச்சகத்தில் நேரார்கள் — இவ்வுலகத்தில் ஒட்ட மாட்டார்கள். தற்பரமாக் கண்டிருப்பார்தாம் — பரபோதத்திலே திளைத்திருப்பார்.

28. வெள்ளக் கருணையினான் — கருணைக் கடலாய் இருப்பவன். வியாபகத்தான் அல்லன் — நிறைபொருள் அல்லன்.

Koviloor Digital Library



மூன்றுகண்ணா, முத்தொழிலா, மும்முதலா, மூவுலகும்
தோன்றக் கருணைபொழி தோன்றலே, — ஈன்றஅன்னை
தன்னைப்போல் அன்பு தழைத்தோய்; ஒருதெய்வம்
உன்னைப்போல் உண்டோ? உரை. 31

நேசிக்கும் சிந்தை நினைவுக்குள் உன்னைவைத்துப்
பூசிக்கும்; தான்நிறைந்து பூரணமாய் — யோசித்து
நின்றதுஅல்லால், மோனா! நிருவிகற்ப நிஷ்டைநிலை
என்றுவரு மோ? அறியே னே. 32

அறிவில் அறியாமை அற்று அறிவாய் நின்று
பிறிவுஅறஆ னந்தமயும் பெற்றுக் — குறிஅவிழ்ந்தால்
அன்றைக்கு உடல்வேண்டேன்; ஐயா! இவ் ஆக்கையையே
என்றைக்கும் வேண்டுவனே யான். 33

உடலைப் பழித்து, இங்கு உணவும் கொடாமல்,
விடவிடவே நாடுவரோ மெய்யைப் — படபடஎன
வேண்டுவேன் இந்தஉடல் மெய்உணராப் பொய்யன்நான்;
ஆண்டநீ தானே அறி. 34

அறியாயோ என்னையும்நீ, ஆண்டநீ சுத்த
வெறியாய் மயங்கவும்ஏன் விட்டாய்? — நெறிமயங்கிக்
குன்றும் செடியும் குறுகுமோ? ஐயாவே!
கன்றுகெட்டால் தாய்அருகே காண். 35

---

31. முமமுதலா — மும்மூர்த்திகளைத் தன்னிடத்தில் வைத்திருப்பவனே.

33. குறி அவிழ்ந்தால் — எண்ணம் ஒடுங்கினால். இவ் ஆக்கையையே — இந்த ஞானசொருபத்தையே.

34. விடவிடவே நாடுவரோ — ஒதுக்கித்தள்ள விரும்புவரோ? படபடஎன — விரைவாக.

35. நெறி மயங்கிக் குன்றும் செடியும் குறுகுமோ — வழிதவறிக் குன்றுகளையும் செடிகளையும் நோக்கிப் போய்க் கன்றைக் கண்டுபிடிக்குமோ. கன்று கெட்டால் — கன்றானது காணாமல் போய்விட்டால்.

Koviloor Digital Library



ஏதுக்கு உடல்சுமைகொண்டு ஏன்இருந்தேன்? ஐயனே!
ஆதிக்கம் மோனம் அருள்தாயே! — ஜோதிஆம்
மன்னா! நிருவிகற்ப ஆனந்த நிஷ்டையிலே
பின்னம்அற நில்லாத பின். 36

பின்னும் உடல்சுமையாப் பேசும் வழக்குஅதனால்;
என்னபலன்? நாம்உற்று இருந்தோமே — அன்னதனால்;
ஆனந்தம் தானேதான் ஆகும்;எம் ஐயனே!
ஏன் இந்தத் துன்பம் இனி? 37

துன்பக் கடலில் துளைந்ததுஎலாம் தீர்ந்ததே,
இன்பக் கடலில் இரும்என்ன, — அன்பில்
கரைந்து கரைந்துஉருகிக் கண்அருவி காட்ட,
விரைந்துவரும் ஆனந்த மே. 38

கரைந்து கரைந்துஉருகிக் கண்ணீர்ஆ றாக,
விரைந்தே நிருவிகற்பம் எய்த, — நிரந்தரமும்
நின்னையே சிந்திக்க நீகொடுத்தாய்; மோனா!நான்
என்னைமுழு தும்கொடுத்தே னே. 39

அல்லும் பகலும்பே ரன்புடனே தான்இருந்தால்
கல்லும் உருகாதோ? கல்நெஞ்சே! — பொல்லாத
தப்புவழி ஏன்நினைத்தாய்? சந்ததமும் நீ இறந்த
எய்ப்பிலே ஆனந்த மே. 40

கொடுத்தேனே என்னைக் கொடுத்தவுடன் இன்பம்
மடுத்தேனே; நீடூழி வாழ்ந்தே — அடுத்தேனே;
பெற்றேனே; பெற்றுப் பிழைத்தேனே; ஜன்மஅல்லல்
இற்றேனே ஏழைஅடி யேன். 41

---

36. பின்னம் அற — பிரிவு அற.

38. துளைந்தது எலாம் — திளைத்தது எல்லாம்.

40. சந்ததமும் — எக்காலமும். எய்ப்பிலே — நிலையிலே.

41. ஜன்மஅல்லல் இற்றேனே — பிறவித் துன்பத்தை ஒழித்தேனே.

Koviloor Digital Library



பெற்றோம் பிறவாமை; பேசாமை யாய்இருக்கக்
கற்றோம் எனஉரைக்கக் காரியம்ஏன்? — சற்றேனும்
நீக்குஅற்ற இன்ப நிலைபொருந்தி, ஏசற்று,
வாக்குஅற்றால் பேசுமோ வாய். 42

காலன் தனைஉதைத்தான்; காமன் தனைஎரித்தான்;
பாலன் பசிக்குஇரங்கிப் பால்கடலை — ஞாலம்மெச்சப்
பின்னே நடக்கவிட்டான் பேரருளை நாடாதார்க்கு
என்னே நடக்கை இனி? 43

விண்அருவி மேன்மேல் விளங்குவபோ லேஇரண்டு
கண்அருவி வெள்ளமொடு, கைகூப்பித் — தண்அமிர்த
வெள்ளமே; ஆனந்த வெற்பே எனத்தொழுவோர்
உள்ளமே ஞான ஒளி. 44

பிள்ளைமதிச் செஞ்சடையான்; பேசாப் பெருமையினான்;
கள்அவிழும் பூங்கொன்றைக் கண்ணியான் — உள்ளபடி
கல்ஆலின் கீழ்இருந்து கற்பித்தான் ஓர்வசனம்
எல்லாரும் ஈடேற வே. 45

புலன்ஐந்தும் தானே பொர,மயங்கிச், சிந்தை
அலமந்து, உழலும் அடிமை — நலம்மிகுந்த
சித்துஆன மோன சிவனே!நின் சேவடிக்கே
பித்துஆனால் உண்டோ பிறப்பு? 46

நிறைகுடம்தான் நீர்கொளுமோ? நிச்சயமா மோன
முறைஉணர்ந்தார் யாதை முயல்வார்? — பிறைஅணிந்த
மிக்ககயி லாயமலை வித்தகனே; வேதியனே;
செக்கர்அணி மேனியனே! செப்பு. 47

---

42. ஏசற்று — பழியற்று.

44. ஆனந்த வெற்பே — ஆனந்த மலையே.

45. பிள்ளைமதி — இளம்பிறை. பேசாப் பெருமையினான் — வாக்குக்கு எட்டாத மகத்துவத்தை உடையவன். ஓர் வசனம் — மகா வாக்கியத்தை.

46. தானே பொர — வலியவந்து தாக்குதலால்.

47. நிச்சயமா மோனமுறை — யாண்டும் இருக்கின்ற மௌன நிலையினை. செக்கர் அணி - செம்மை வாய்ந்த.

Koviloor Digital Library


துங்கம்மழு மான்உடையாய்; சூலப் படைஉடையாய்;
திங்கள்அணி செஞ்சடையாய்; சேஉடையாய்; — மங்கைஒரு
பால்உடையாய்; செங்கண் பணியாய்;என்
சென்னியின்மேல்
கால்உடையாய்; நீயே கதி. 48

இனிய கருணைமுகில் எம்பிரான்; முக்கண்
கனி;அமிர்த வாரி;இன்பக் கட்டி; — தனிமுதல்வன்;
நித்தன்; பரமன்; நிமலன்;நிறை வாய்நிறைந்த
சுத்தன்;நமக்கு என்றும் துணை. 49

நீதியாய்க், கல்ஆலின் நீழலின்கீ ழேஇருந்து,
போதியா உண்மைஎல்லாம் போதித்தான்; — ஏதில்
சனகாதி ஆய தவத்தோர்க்கு ஞான
தினகரன்ஆம் மௌன சிவன். 50

தேகச் செயல்தானும் சிந்தையுட னேகுழையில்,
யோகநிலை ஞானிகளுக்கு ஒப்புவதோ? — மோகநிலை
அல்லலிலே வாழ்வாரோ? அப்பனே! நீஅற்ற
எல்லையிலே சும்மா இரு. 51

சும்மா இருக்கச் சுகம்உதயம் ஆகுமே;
இம்மாயா யோகம்இனி ஏன்அடா? — தம்அறிவின்
சுட்டாலே ஆகுமோ? சொல்லவேண் டாம்;கன்ம
நிஷ்டா; சிறுபிள்ளாய் நீ! 52

48. துங்கம்மழு—தூய்மையான மழு. சேஉடையாய்—காளை வாகனத்தை உடையவனே. செங்கண் பணியாய்—செந்நிறமான கண்களைக் கொண்ட பாம்பினை உடையவனே. 49. அமிர்தவாரி — அமிர்தக் கடல். 50. ஏதில்— குற்றமில்லாத. ஞானதினகரன்ஆம்—ஞான சூரியனாம்.
51. சிந்தையுடனே குழையில்—உள்ளத்துடன் கலந்து குழைந்துவிடுமானால். மோகநிலை அல்லலிலே வாழ்வாரோ? — ஆசைக்கு வசப்பட்டுத் துன்பப்படுவாரோ? அப்பனே—மனமாகிய அப்பனே. நீ அற்ற எல்லையிலே—மனமாகிய நீ ஒடுங்கிப்போன இடத்திலே. 52. இம் மாயா யோகம் —மாயாகாரியமாகிய இப்பிரபஞ்சத்தில் சேருதல். தம் அறிவின் சுட்டாலே ஆகுமோ—உலக அறிவைக் கொண்டு அதை அடையமுடியுமோ? கன்ம நிஷ்டா—வினையில் மூழ்கியவனே

Koviloor Digital Library



நீஅற்ற அந்நிலையே நிஷ்டை;அதில் நீ இலையேல்
வாய்அற் றவனே மயங்காதே; — போய்அற்று
இருந்தாலும் நீபோகாய்; என்றும்உள்ளாய்; சும்மா
வருந்தாதே; இன்பம்உண்டு வா. 53

வாவாஎன்று இன்பம் வரஅழைக்கும் கண்ணீரோடு
ஆஆஎன் றேஅழுத அப்பனே! — நீவாடா;
எல்லாம் நமக்குஎனவே ஈந்தனையே, ஈந்தபடி
நில்லாய்; அதுவே நிலை. 54

நில்லாப் பொருளை நினையாதே; நின்னைஉள்ளோர்
சொல்லாப் பொருள்திரளைச் சொல்லாதே; — கல்லாத
சிந்தை குழைந்து,சுகம் சேரக் குருஅருளால்
வந்தவழி நல்ல வழி. 55

வழிஇதுஎன்றும், அல்லா வழிஇதுஎன்றும், சொல்லில்
பழிபழிஆம்; நல்அருளால் பார்த்துஓர் — மொழிஉனக்கே
ஏற்றிருக்கச் சொன்னஅன்றே எங்கும் பெருவெளிஆம்;
பார்த்தஇடம் எல்லாம்நீ பார். 56

பார்அனைத்தும் பொய்எனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல்
ஆரும் துறக்கை அரிதுஅரிது; — நேரே
மனத்துறவும் அப்படியே; மாணா! இவற்றில்
உனக்குஇசைந்த வாறுஒன்றே ஓர். 57

ஓராம லே,ஒருகால் உன்னாமல், உள்ஒளியைப்
பாராமல், உள்ளபடி பார்த்திருந்தால் — வாராதோ
பத்துத் திசையும் பரந்துஎழுந்து ஆனந்தவெள்ளம்
தத்திக் கரைபுரண்டு தான். 58

---

53. நீ அற்ற அந்நிலையே நிஷ்டை — மனம் போன இடமே சமாதி. போய் அற்று இருந்தாலும் — யோகநிலையில் போய்ச் செயலற்றிருந்தாலும். நீ போகாய் — நீ அழிந்துபட்டுப் போகமாட்டாய்.

58. ஓராமலே — [illegible] ஆராய்ச்சி [illegible]. உன்னாமல் — சிந்தனையுற்றிருந்தும்.

Koviloor Digital Library


தான்ஆன தன்மைவந்து தாக்கினால் அவ்இடத்தே
வான்ஆதி மாயை வழங்காதோ? – ஞானாகேள்!
உன்உள்ளே தோன்றா உறவுஆகி நின்றதுஎன
என்உள்ளே என்றும் இரு. 59

என்னைஉன்னை இன்னதுஇது என்னாமல் நிற்கும்நிலை
தன்னை,அருள் என்ற தருணத்தில், – அன்னைபெற்ற
பிள்ளைக்கும் சொல்லாத பெற்றிகண்டாய்; ஐயனே!
உள்ளத்தின் உள்ளே உணர். 60

சொன்னவர்தாம் நிஷ்டை தொகுத்திரார்; நிஷ்டையிலே
மன்னினவர் போதியார்; மாமவுனன் – தன்உள்
விருப்புஆகக் கைகாட்டி மிக்கவடம் நீழல்
இருப்பான் நிருவிகற்பத் தே. 61

இந்த நிருவிகற்பத்து எந்தை இருக்கநிஷ்டை,
சிந்தைநீ தேறாய்; ஜெகம்அனைத்தும் – வந்ததொடர்ப்
பாடுகெட அன்றோஓர் பாத்திரத்துக்கு ஆடல்அல்லால்,
ஆடுவதுஏன்? ஆட்டும் அவன். 62

அவனே பரமும்; அவனே குருவும்;
அவனே அகிலம் அனைத்தும்; – அவனேதாம்
ஆனவரே சொன்னால்; அவரே குருஎனக்கு;
நான்அவனாய் நிற்பதுஎந்த நாள்? 63

நாள்அவங்கள் போகாமல், நாள்தோறும் நம்தமையே
ஆளவந்தார் தாளின்கீழ் ஆள்புகுந்தாய்; – மீளஉன்னைக்
காட்டாமல் நிற்கும் கருத்துஅறிந்தால், நெஞ்சே!உன்
ஆள்தான்நான் ஐயம்இல்லை ஆல். 64

---

60. சொல்லாத பெற்றி – வாக்குக்கு எட்டாத ஆத்ம நிலை.

62. வந்த தொடர்ப்பாடு கெட – விளைந்துள்ள வியவகாரத்தை நீக்குதற்கு. ஓர் பாத்திரத்துக்கு – வெறும் விளையாட்டாக.

64. நாள் அவங்கள் போகாமல் – காலம் வீணில் கழியாமல்.

Koviloor Digital Library



யான்தான் எனல்அறவே ஓன்பதிஷ்டை என்றுஅருணைக்
கோன்தான் உரைத்தமொழி கொள்ளாயோ? — தோன்றி
இழுக்கடித்தாய்; நெஞ்சேநீ! என்கலைகள் சோர,
அழுக்குஅடிக்கும் வண்ணார்போ லாய். 65

எங்கும் சிவமே; இரண்டுஅற்று நிற்கில்நெஞ்சே!
தங்கும் சுகம்;நீ சலியாதே; — அங்குஇங்குஎன்று
எண்ணாதே; பாழில் இறந்து பிறந்துஉழலப்
பண்ணாதே; யான்உன் பரம். 66

மெய்யைப்பொய் என்றிடஷம், மெய்அணையாப் பொய்ந்நெஞ்சே!
பொய்யைத்தான் மெய்எனவும் போகுமோ? — ஐயம்அறத்
தன்மயத்தை மெய்எனவே சார்ந்தனையேல், ஆனந்தம்
என்மயமும் நின்மயமு மே. 67

பூங்கா வனநிழலும், புத்தமுதும், சாந்தபதம்
வாங்காத ஆனந்த மாமழையும் — நீங்காவாம்;
சொல்இறந்து மாண்டவர்போல் தூமவுன பூமியில்,நான்
இல்லைஎன நின்ற இடம். 68

இடம்கானம், நல்லபொருள் இன்பம், எனக்குஏவல்
அடங்காக் கருவி, அனைத்தும் — உடன்உதவ
மந்தார தாருஎன வந்து, மவுனகுரு
தந்தான்ஓர் சொற்கொண்டு தான். 69

---

65. அருணைக்கோன்தான் — அருணகிரிநாதர்தான். என் கலைகள் சோர — என் உடைகள் நழுவும்படி. 66. யான் உன்பரம் — நான் உனக்கு அடைக்கலமாவேன். 67. மெய் அணையாப் பொய்ந் நெஞ்சே — மெய்யை நாடாத கற்பனை மனமே. 68. புத்தமுதும் — புதிய தேவாமிர்தமும். வாங்காத ஆனந்தமாமழையும் — தடையற்ற ஆனந்தமயமான இன்ப மழையும். தூமவுன பூமியில் — சுத்தமான மௌன நிலையில். நான் இல்லைஎன நின்ற இடம் — அகங்காரம் அற்றுப் போன இடத்தில். 69. இடம் கானம் — வசிக்கும் இடம் வனம். எனக்கு ஏவல் அடங்காக்கருவி — எனக்கு வேலையாளா யிருப்பது அடங்காத மனது. மந்தாரதாரு என — மந்தார மரத்தைப் போல.

Koviloor Digital Library



தானம் தவம்ஞானம் சாற்றரிய சித்திமுக்தி
ஆனவைஎல் லாம்தாமே ஆகுமே; — மோனகுரு
சொன்னஒரு சொல்லால் சுகமா இரு;மனமே!
இன்ன மயக்கம்உனக்கு ஏன்? 70

உன்னை, உடலை, உறுபொருளைத் தாஎனவே
என்னை அடிமைக்கு இருத்தினான் — சொன்னஒரு
சொல்லை மறவாமல் தோய்ந்தால்,நெஞ் சே!உன்னால்
இல்லை பிறப்பதுஎனக் கே. 71

எனக்கும் உனக்கும்உறவு இல்லைஎனத் தேர்ந்து,
நினைக்கஅரிது ஆனஇன்ப நிஷ்டை — தனைக்கொடுத்தே
ஆசான் மவுனி அளித்தான்;நெஞ் சே!உனைஓர்
காசா மதியேன்நான் காண். 72

ஆனந்த மோனகுரு ஆம்எனவே, என்அறிவில்
மோனம் தனக்குஇசைய முற்றியதால்; — தேன்உந்து
சொல்எல்லாம் மோனம்; தொழில்ஆ தியும்மோனம்;
எல்லாம்நல் மோனவடி வே. 73

எல்லாமே மோனநிறைவு எய்துதலால், எவ்விடத்தும்
நல்லார்கள் மோனநிலை நாடினார்; — பொல்லாத
நான்எனஇங்கு ஒன்றை நடுவே முளைக்கவிட்டு,இங்கு
ஏன்அலைந்தேன்; மோனகுரு வே! 74

மோன குருஅளித்த மோனமே ஆனந்தம்;
ஞானம் அருளும்அது, நானும்அது, — வான்ஆதி
நின்ற நிலையும்அது, நெஞ்சப் பிறப்பும்அது
என்றுஅறிந்தேன் ஆனந்த மே. 75

---

71. தோய்ந்தால் — பின்பற்றி ஒழுகினால்.
73. தேன் உந்து — தேன்போன்று சுவைக்கின்ற. தொழில் ஆதியும் — கர்மங்கள் யாவும்.
75. நெஞ்சப் பிறப்பும் அது — மனம் உருவெடுப்பதற்கு ஏதுவ்ாயிருப்பதும் சிவானந்தமே.

Koviloor Digital Library



அறிந்த அறிவுஎல்லாம் அறிவுஅன்றி இல்லை;
மறிந்தமனம் அற்ற மவுனம் — செறிந்திடவே
நாட்டினான்; ஆனந்த நாட்டில் குடிவாழ்க்கை
கூட்டினான் மோன குரு. 76

குருஆகித் தண்அருளைக் கூறுமுன்னே, மோனா!
உரு,நீடு உயிர்,பொருளும் ஒக்கத் — தருகஎன
வாங்கினையே; வேறும்உண்மை வைத்திடவும் கேட்டிடவும்
ஈங்குஒருவர் உண்டோ இனி? 77

இனிய கருப்புவட்டை என்நாவில் இட்டால்
நனிஇரதம் மாறாது; நானும் — தனிஇருக்கப்
பெற்றிலேன் மோனம்; பிறந்தஅன்றே மோனம்அல்லால்
கற்றிலேன் ஏதும் கதி. 78

ஏதுக்கும் சும்மா இருநீ எனஉரைத்த
சூதுக்கோ, தோன்றாத் துணைஆகிப், — போதித்து,
நின்றதற்கோ என்ஐயா! நீக்கிப் பிரியாமல்
கொன்றதற்கோ பேசாக் குறி. 79

குறியும் குணமும்அறக் கூடாத கூட்டத்து
அறிவுஅறிவாய் நின்றுவிட, ஆங்கே — பிறிவுஅறவும்
சும்மா இருத்திச், சுகம்கொடுத்த மோன!நின்பால்
கைம்மாறு நான்ஒழிதல் காண். 80

76. மறிந்த மனம் அற்ற — தடைப்பட்ட மனம் இறந்து போன. 77. உரு நீடுஉயிர் பொருளும் ஒக்க — உடலும் நித்திய உயிரும் பொருளும் ஆகிய அத்தனையும். 78. நனி இரதம் மாறாது — மிகையான சுவை நீங்காது. 79. சூதுக்கோ — தந்திரத்துக்கோ. பிரியாமல் கொன்றதற்கோ — பரத்தினின்று வேறுபடாது இருக்கும்படி மாயையின் செயலை அடக்கியதற்கோ. பேசாக்குறி — சின்முத்திரை. 80. குறியும் குணமும் அற — பிரபஞ்ச விகாரங்கள் ஒழிய. கூடாத கூட்டத்து — சீவாத்மாவும், பரமாத்மாவும் புதிதாக ஒன்றுபடாத இயல்பு நிலை. அறிவு அறிவாய் நின்றுவிட — பொருள் முற்றிலும் தன்மயமாய் இருந்துவிட. பிறிவு அறவும் — நீக்கமில்லாமலும். மோன — மௌன தேசிகனே. நின்பால் கைம்மாறு நான் ஒழிதல் காண் — ஆன்ம அறிவை ஒடுக்குவது உனக்கு நான் வழங்கும் குரு காணிக்கையாம்.

Koviloor Digital Library



நான்தான் எனும்மயக்கம் நண்ணுங்கால், என்ஆணை
வான்தான் எனநிறைய மாட்டாய்நீ; — ஊன்றாமல்
வைத்தமவு னத்தாலே மாயை மனம்இறந்து
துய்த்துவிடும் ஞான சுகம். 81

ஞானநெறிக்கு ஏற்றகுரு; நண்ணரிய சித்திமுக்தி
தானம் தருமம் தழைத்தகுரு; — மானமொடு
தாய்எனவும் வந்துஎன்னைத் தந்தகுரு; என்சிந்தை
கோயில்என வாழும் குரு. 82

சித்தும் ஜடமும் சிவத்தைவிட இல்லைஎன்ற
நித்தன் பரமகுரு நேசத்தால், — சுத்தநிலை
பெற்றோமே நெஞ்சே! பெரும்பிறவி சாராமல்
கற்றோமே மோனக் கரு. 83

## 29. ஏசற்ற அந்நிலை

### கொச்சகக் கலிப்பா

ஏசற்ற அந்நிலையே எந்தைபரி பூரணமாய்,
மாசுஅற்ற ஆனந்த வாரி வழங்கிடுமே;
ஊசல் சுழல்போல் உலகநெறி வாதனையால்
பாசத்துள் செல்லாதே பல்காலும்; பாழ்நெஞ்சே! 1

பாழ்ஆகி அண்டப் பரப்பைஎலாம் வாய்மடுத்தும்
ஆழ்ஆழி இன்பத்து அழுந்தப் படியாயோ?
தாழாயோ எந்தைஅருள் தாள்கீழ்நெஞ் சே! எனைப் போல்
வாழாது வாழ்ந்து, அழியா வண்ணம் இருப்பாயே. 2

81. நண்ணுங்கால் – பொருந்துமிடத்து. 82. நண்ணரிய – அடைதற்கு அரிய. மானமொடு – பெருமையுடன். 83. கற்றோமே மோனக்கரு – மௌன வித்தையை அல்லது பரவித்தையைக் கற்றுக்கொண்டோம்.

1. ஏசற்ற அந்நிலையே – குற்றமில்லாத அந்த மௌன நிலையிலேயே. ஆனந்தவாரி – சிவானந்தப் பெருக்கை.

2. வாய்மடுத்தும் – உள்ளடக்கியும். ஆழ் ஆழி இன்பத்து – ஆழ்ந்த ஆனந்தக்கடலில். வாழாது வாழ்ந்து – உலகில் ஒட்டாது பரநாட்டத்தில் வாழ்ந்திருந்து.

Koviloor Digital Library



இருப்பாய் இருந்திடப்,பே ரின்பவெளிக் கேநமக்குக்
குருப்பார்வை அல்லாமல் கூடக் கிடைத்திடுமோ?
அருள்பாய் நமக்குஆக ஆளவந்தார் பொன்அடிக்கீழ்
மருள்பேயர் போல்இருக்க வாகண்டாய்; வஞ்சநெஞ்சே! 3

வஞ்சமோ? பண்டைஉள வாதனையால் நீ அலைந்து
கொஞ்சம்உற்றாய்; உன்னைக் குறைசொல்ல
வாயும்உண்டோ?
அஞ்சல்அஞ்சல் என்றுஇரங்கும் ஆனந்த மாக்கடல்கீழ்
நெஞ்சமே! என்போல நீ அழுந்த வாராயோ? 4

வாரா வரவாய் வடம்நிழல்கீழ் வீற்றிருந்த
பூராயம் நம்மைப் புலப்படுத்த வேண்டிஅன்றோ?
ஓராயோ; நெஞ்சே! உருகாயோ; உற்றிருந்து
பாராயோ; அவ்வுருவைப் பார்க்கநிறை வாய்விடுமே. 5

வாயாதோ இன்பவெள்ளம்? வந்துன் வழியாகப்
பாயாதோ? நானும் பயிராய்ப் பிழையேனோ?
ஓயாமல் உன்னி உருகு;நெஞ்சே! அந்நிலைக்கே
தாய்ஆன மோனன்அருள் சந்திக்க வந்திடுமே. 6

வந்த வரவைமறந்து,உலகாய் வாழ்ந்து,கன்ம
பந்தம்உற உன்னைப் படிப்பிக்கக் கற்றவர்யார்?
இந்தமதி ஏன்உனக்குஇங்கு? என்மதிகேள் என்னாலே
சந்ததம்நெஞ் சே!பரத்தில் சாரின்இன்பம் உண்டாமே. 7

3. இருப்பாய் இருந்திட – வைப்பு நிதியாய் அமைய. ஆளவந்தார் – ஆட்கொள்ள வந்தவர். மருள்பேயர் போல் – மயக்கத்தால் பேய் பிடித்தவர் போன்று.

4. வாதனையால் – தொடர்ச்சியால். கொஞ்சம் உற்றாய் – இழிகுணத்தை அடைந்தாய். அஞ்சல் அஞ்சல் என்று – பயப்படாதே, பயப்படாதே என்று. நீ அழுந்த வாராயோ? – நீ மூழ்க வரமாட்டாயோ?

5. வாரா வரவாய் – வருதற்கு அரிய வரவாகி. பூராயம் – உண்மைநிலை. 7. உன்னைப் படிப்பிக்கக் கற்றவர் யார் – உனக்குக் கற்றுத் தந்தவர் யார். என் மதிகேள் – நான் சொல்லுகிறபடி நட.

Koviloor Digital Library



இன்பமய மாய்உலகம் எல்லாம் பிழைப்பதற்குஉன்
அன்புநிலை என்பார்; அதுவும்நினை அன்றிஉண்டோ?
உன்புலத்தை ஓரின்அருட்கு ஒப்பாவாய்; நெஞ்சே!நீ
தென்புலத்தா ரோடுஇருந்து செய்பூசை கொண்டருளே. 8

அருளேஓர் ஆலயமா; ஆனந்த மாய்இருந்த
பொருளோடு யான்இருக்கப் போய்ஒளித்த நெஞ்சே!நீ
மருள்தீர் முயல்கோடோ; வான்மலரோ; பேய்த்தேரோ;
இருள்தீர நீஉறைந்தது எவ்விடமோ? காணேனே. 9

எவ்விடத்தும் பூரணம்ஆம் எந்தைபிரான் தண்அருளே;
அவ்விடத்தே உன்னை நெஞ்சே ஆராயின் கண்டிலனே;
அவ்விடத்து மாயையிலே மாண்டனையோ? அவ்விடமும்
செவ்விடமே; நீயும் ஜெனனம்அற்று வாழியவே! 10

## 30. காடும் கரையும்

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

காடும் கரையும் மனக்குரங்கு
 கால்விட்டு ஓட, அதன்பிறகே
ஓடும் தொழிலால் பயன்உளதோ?
 ஒன்றாய்ப், பலவாய், உயிர்க்குஉயிராய்
ஆடும் கருணைப் பரஞ்ஜோதி
 அருளைப் பெறுதற்கு அன்புநிலை
தேடும் பருவம் இதுகண்டீர்;
 சேர வாரும் ஜகத்தீரே! 1

8. உன் புலத்தை ஓரின் – உன் அறிவை ஆராய்ந்து பார்த்தால். தென்புலத்தாரோடு இருந்து – மடிந்து பட்டுப் போய். 9. மருள்தீர் – மயக்கமற்ற. முயல்கோடோ – முயற்கொம்போ. வான்மலரோ – வானவெளியில் மயக்கத்தால் தென்படுகின்ற பூவோ. பேய்த்தேரோ – தோற்றத் தளவில் உள்ள கானல் நீரோ. 10. அவ் இடமும் – மாயை போன்று தென்பட்டதும். செவ்விடமே – உண்மையில் அருள் நிலையின் தோற்றமாம்.

1. ஆடும் கருணைப் பரஞ்ஜோதி – தில்லைக் கூத்தனான அருள் ஒளியின்.

Koviloor Digital Library



சைவ சமய மேசமயம்;
　　சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி
　　காட்டும்; இந்தக் கருத்தைவிட்டுப்,
பொய்வந்து உழலும் சமயநெறி
　　புகுத வேண்டாம்; முக்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
　　சேர வாரும் ஜகத்தீரே! 2

காகம் உறவு கலந்துஉண்ணக்
　　கண்டீர்; அகண்டா காரசிவ
போகம் எனும்பே ரின்பவெள்ளம்
　　பொங்கித் ததும்பிப் பூரணமாய்,
ஏக உருவாய்க் கிடக்குதுஐயோ;
　　இன்புற் றிடநாம் இனிஎடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
　　சேர வாரும் ஜகத்தீரே! 3

## 31. எடுத்த தேகம்

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

எடுத்த தேகம், பொருள்,ஆவி மூன்றும்நீ;
　　எனக்குஒன்று இல்லை என,மோன நன்னெறி
கொடுத்த போது கொடுத்ததுஅன் றோ? பினும்
　　குளறி நான்என்று கூத்தாட மாயையை
விடுத்த வாறும்,கண் ணீரொடு கம்பலை
　　விலகு மாறும்,என் வேட்கைப்ர வாகத்தைத்
தடுத்த வாறும் புகலாய்; சிரகிரித்
　　தாயு மான தயாபர மூர்த்தியே! 1

2. சமயாதீதப் பழம்பொருளை – சமயங்களுக்கு எட்டாத முதல்வனை. மன்றுள் – சிதம்பரத்தில். இந்தக் கருத்தை விட்டு – இந்த உண்மையினின்று பிசகி. பொய் வந்து உழலும் சமயநெறி – தத்துவத்தினின்று தவறும் போலிச் சமய நெறிகளில்.

Koviloor Digital Library



நோயும் வெம்கலிப் பேயும் தொடர,நின்
நூலில் சொன்ன முறைஇய மாதிநான்
தோயும் வண்ணம் எனைக்காக்கும் காவலும்;
தொழும்பு கொள்ளும் சுவாமியும் நீகண்டாய்;
ஓயும் ஜன்மம் இனி,அஞ்சல் அஞ்சல்என்று
உலகம் கண்டு தொழ,ஓர் உருவிலே
தாயும் தந்தையும் ஆனோய்; சிரகிரித்
தாயு மான தயாபர மூர்த்தியே! 2

## 32. முகம்எலாம்

### கலிநிலைத்துறை

முகம்எ லாம்கணீர் முத்துஅரும் பிடச்,செங்கை முகிழ்ப்ப,
அகம்எ லாம்குழைந்து ஆனந்தம் ஆக,நல் அறிஞர்
இகம்எ லாம்தவம் இழைக்கின்றார்; என்செய்கோ ஏழை?
ஜகம்எ லாம்பெற நல்லருள் உதரமாச் சமைந்தோய்! 1

## 33. திடம் உறவே

### கொச்சகக் கலிப்பா

திடம்உறவே நின்அருளைச் சேர்த்து,என்னைக் காத்துஆள
கடன்உனக்குஎன்று எண்ணி,நின்னைக் கைகுவித்தோன்
நான்அலனோ?
அடைவுகெட்ட பாழ்மாயை ஆழியிலே இன்னம்அல்லல்
படமுடியாது; என்ஆவிப் பற்றே பராபரமே! 1

ஆராமை கண்டுஇங்கு அருள்குருவாய் நீஒருகால்
வாராயோ? வந்து வருத்தம்எல்லாம் தீராயோ?
பூராயம் ஆகஅருள் பூரணத்தில் அண்டமுதல்
பார்ஆதி வைத்த பதியே; பராபரமே! 2

---

2. வெம்கலிப் பேயும் – கொடிய வறுமையாகிய பிசாசும். தோயும் வண்ணம் – அனுபவிக்குமாறு. தொழும்பு கொள்ளும் – என்னைஅடிமையாகக்கொள்ளும்.

1. நல்லருள் உதரமாச் சமைந்தோய் – திருவருளையே வயிறாக வைத்திருப்பவனே.

1. அடைவு கெட்ட – ஒழுங்கு தவறிய. ஆழியிலே – கடலிலே. என்ஆவிப் பற்றே – என் உயிருக்கு ஆதாரமே.

Koviloor Digital Library



வாழாது வாழ, உனை வந்துஅடைந்தோர் எல்லாரும்
ஆழ்ஆழி என்னஅருள் ஆனார்; அழுக்காற்றோடு
ஏழாய் எனஉலகம் ஏசும்;இனி நான்ஒருவன்
பாழ்ஆகா வாறுமுகம் பார்நீ பராபரமே! 3

உள்ளத்தின் உள்ளே ஒளித்து,என்னை ஆட்டுகின்ற
கள்ளக் கருணையையான் காணும் தரம்ஆமோ?
வெள்ளத்தை மாற்றி, விடக்குஉண்பார் நஞ்சுஊட்டும்
பள்ளத்தின் மீன்போல் பதைத்தேன்; பராபரமே! 4

வாவிக் கமலமலர் வண்டாய்த் துவண்டுதுவண்டு
ஆவிக்குள் நின்றஉனக்கு அன்புவைத்தார்க்கு
அஞ்சல்என்பாய்;
பூவிற்கும் வான்கடையில் புல்விற்போர் போலஒன்றைப்
பாவிக்க மாட்டேன் பதியே! பராபரமே! 5

விண்ஆறு வெற்பின் விழுந்தாங்கு என்மார்பில்
கண்ஆறு பாய்ச்சிடும்என் காதல்வெள்ளம் கண்டிலையோ?
தண்நாறு சாந்தபதத் தற்பரமே! நால்வேதப்
பண்நாறும் இன்பப் பதியே! பராபரமே! 6

---

2. ஆராமை கண்டு – அடியேன் அறியாமையைப் பார்த்து. பூராயம்ஆக – முழுமையாக. பார்ஆதி வைத்த – மண் முதலிய ஐந்து பூதங்களை வகுத்தருளிய.

3. வாழாது வாழ – சிறுநெறி செல்லாது பெரு நெறியைக் கடைப்பிடித்து வாழ. ஆழ்ஆழி – ஆழமான கடல். அழுக்காற்றோடு ஏழாய் என – பொறாமையோடு கூடிய அறிவிலி என்று.

4. தரம் ஆமோ – தகுதி ஆகுமோ. விடக்கு – இறைச்சி, ஊன்.

5. வான் கடையில் – பெரிய கடையில். ஒன்றை – உன்னையன்றி வேறுபொருளை.

6. விண்ஆறு – வான கங்கை. வெற்பின் – மலையில. கண்ஆறு – கண்ணீராகிய ஆறு. தண்நாறு – குளிர்ச்சியே தோன்றும். நால்வேதப் பண்நாறும் – நான்கு வேத இசைகளுள்ளும் ஒளிர்கின்ற.

Koviloor Digital Library



கூடியநின் சீர்அடியார் கூட்டம்என்றோ வாய்க்கும்என
வாடியஎன் நெஞ்சும்முக வாட்டமும்நீ கண்டிலையோ?
தேடியநின் சீர்அருளைத் திக்குஅனைத்தும் கைகுவித்துப்
பாடியநான் கண்டாய்; பதியே! பராபரமே! 7

நெஞ்சத்தி னூடே நினைவாய், நினைவூடும்
அஞ்சல்என வாழும்என்து ஆவித் துணைநீயே!
சஞ்சலம்மாற் றினை;இனிமேல் தாய்க்குஉபசா ரம்புகன்று
பஞ்சரிக்க நான்ஆர்? பதியே! பராபரமே! 8

புத்திநெறி ஆகஉனைப் போற்றிப் பலகாலும்
முக்திநெறி வேண்டாத மூடனேன் ஆகெடுவேன்;
சித்திநெறிக்கு என்கடவேன்? சீர்அடியார்க்கு ஏவல்செயும்
பக்திநெறிக் கேனும்முகம் பார்நீ; பராபரமே! 9

கண்டுஅறியேன்; கேட்டுஅறியேன்; காட்டும்நினை யேஇதயம்
கொண்டுஅறியேன்; முக்தி குறிக்கும் தரமும்உண்டோ?
தொண்டுஅறியாப் பேதமையேன் சொல்லேன்நின்
தொன்மைஎலாம்;
பண்டுஅறிவாய் நீயே பகராய்; பராபரமே! 10

## 34. தன்னை

தன்னை அறியத், தனதுஅருளால் தான்உணர்த்தும்
மன்னைப் பொருள்எனவே வாழாமல் பாழ்நெஞ்சே!
பொன்னைப் புவியை,மடப் பூவையரை மெய்எனவே
என்னைக் கவர்ந்துஇழுத்திட்டு என்னபலன் கண்டாயோ?

## 35. ஆக்குவை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஆக்குவை மாயை யாவும்;
  நொடியினில் அவற்றை மாள
நீக்குவை; நீக்கம் இல்லா
  நினைப்பொடு மறப்பும் மாற்றி,

8. சஞ்சலம் மாற்றினை— விசனத்தைப் போக்கினாய். பஞ்சரிக்க — பாராட்டுதற்கு. 10. பண்டு அறிவாய் நீயே — முன்பே அறிந்துள்ள தேவரீரே.

1. மன்னை — இறைவனை.

Koviloor Digital Library



போக்கொடு வரவும் இன்றிப்
புனிதநல் அருள்ஆ னந்தம்
தாக்கவும் செய்வாய் அன்றோ?
சச்சிதா னந்த வாழ்வே! 1

## 36. கற்புறுசிந்தை

கற்புறு சிந்தை மாதர்
கணவரை அன்றி வேறுஓர்
இல்புறத் தவரை நாடார்;
யாங்களும் இன்ப வாழ்வும்
தன்பொறி ஆக நல்கும்
தலைவநின் அலது,ஓர் தெய்வம்
பொற்புஉறக் கருதோம் கண்டாய்;
பூரணா னந்த வாழ்வே! 1

முருந்துஇள நகையார் பார
முலைமுகம் தழுவிச், செவ்வாய்
விருந்துஅமிர்து எனஅ ருந்தி,
வெறியாட்டுக்கு ஆளாய், நாளும்
இருந்தலோ காய தப்பேர்
இனத்தனாய் இருந்த ஏழை
பொருந்தவும் கதிமேல் உண்டோ?
பூரணா னந்த வாழ்வே! 2

1. ஆக்குவை – படைப்பாய். மாள நீக்குவை – ஒழியும்படி துடைப்பாய். மறப்பும் மாற்றி – மறதியையும் ஒழித்து.

1. தன்பொறிஆக – தன் செல்வமாக. பொற்பு உற – பொலிவு அடைதல் பொருட்டு.

2. முருந்து இள நகையார் – மயில் இறகின் அடி போன்ற சிறிய பல் வரிசையையுடைய மாதரது. பார முலைமுகம் தழுவி – பெரிய முலைமுகட்டைத் தழுவிக் கொண்டு. செவ்வாய் – சிவந்த உதடு. வெறியாட்டுக்கு – பொருளற்ற செயலுக்கு. லோகாயதப்பேர் – உலகப் பற்றுடையோர் என்னும் பேர் பூண்ட.

Koviloor Digital Library



தீதுஎலாம் ஒன்றும்ஆம் வன்மை
செறிந்து,இருள் படலம் போர்த்த
பாதகச் சிந்தை பெற்ற
பதகன்,உன் பாத நீழல்
ஆதரவு அடைய உள்ளன்பு
அருள்கிலை ஆயின், மற்றுயார்
போதனை செய்ய வல்லார்?
பூரணா னந்த வாழ்வே! 3

நாதனை, நாதா தீத
நண்பனை, நடுவாய் நின்ற
நீதனைக் கலந்து நிற்க
நெஞ்சமே நீவா என்றால்;
வாதனை பெருக்கி, என்னை
வசம்செய்து, மனம்துன் மார்க்க
போதனை செய்தல் நன்றோ?
பூரணா னந்த வாழ்வே! 4

எண்ணிய எண்ணம் எல்லாம்,
இறப்புமேல் பிறப்புக்கு ஆசை
பண்ணி,என் அறிவை எல்லாம்
பாழ்ஆக்கி, எனைப்பாழ் ஆக்கும்
திண்ணிய வினையைக் கொன்று,
சிறியனை உய்யக் கொண்டால்
புண்ணியம் நினக்கே அன்றோ?
பூரணா னந்த வாழ்வே! 5

பக்திநீ; பக்திக்கு ஆன
பலனும்நீ; பலவாச் சொல்லும்
சித்திநீ; சித்தர் சித்தித்
திறமும்நீ; திறம்ஆர் மோன

3. பதகன் – பாவியாகிய நான்.

4. நீதனை – நீதிமானை. வாதனை பெருக்கி – உலகப்போக்கை வளர்த்து.

6. பக்திநீ – அன்புருவாய் இருப்பவன் நீயே. சித்தி நீ – பண்பாடும் நீயே. புத்தி நீ – வாலறிவுப்பொருளும் நீயே

Koviloor Digital Library



முக்திநீ; முக்திக்கு ஆன
முதலும்நீ; முதன்மை ஆன
புத்திநீ; எனக்குஒன்று உண்டோ?
பூரணா னந்த வாழ்வே! 6

தாயினும் இனிய நின்னைச்
சரண்என அடைந்த நாயேன்
பேயினும் கடையன் ஆகிப்,
பிதற்றுதல் செய்தல் நன்றோ?
தீயிடை மெழுகாய் நொந்தேன்;
தெளிவுஇலேன்; வீணே காலம்
போயினது; ஆற்ற கில்லேன்;
பூரணா னந்த வாழ்வே! 7

## 37. மலைவளர்காதலி

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பதிஉண்டு, நிதிஉண்டு, புத்திரர்கள், மித்திரர்கள்,
பக்கம்உண்டு, எக்காலமும்
பவிசுஉண்டு, தவிசு உண்டு, திருஷ்டாந்தம் ஆகயம
படர்எனும் திமிரம்அணுகாக்
கதிஉண்டு, ஞானம்ஆம் கதிர்உண்டு, சதிர்உண்டு,
காயசித் திகளும்உண்டு,
கறைஉண்ட கண்டர்பால் அம்மைநின் தாளில்
கருத்துஒன்றும் உண்டாகுமேல்;

1. பதிஉண்டு – இருப்பிடம் இருக்கிறது. பக்கம் உண்டு – உறவினர் உளர். பவிசு உண்டு – திறமை இருக்கிறது. தவிசு உண்டு – நல்ல உறக்கம் இருக்கிறது. திருஷ்டாந்தம் ஆக – உண்மையாகவே. திமிரம் – அஞ்ஞான இருள். கதி உண்டு – வீடுபேறு உள்ளது. ஞானம் ஆம் கதிர் உண்டு – ஞானமாகிய கதிரவன் ஒளி இருக்கிறது. சதிர் உண்டு – தகைமை இருக்கிறது. காயசித்திகளும் உண்டு – உடலைப் பாதுகாக்கும் நெறிகளும் உண்டு. கறைஉண்ட கண்டர் – நஞ்சு உண்ட கழுத்தர், நீலகண்டர்.

Koviloor Digital Library



நதிஉண்ட கடல்எனச் சமயத்தை உண்டபர
ஞானஆ னந்தஒளியே!
நாதாந்த ரூபமே! வேதாந்த மோனமே!
நான்எனும் அகந்தைதீர்த்துஎன்
மதிஉண்ட மதிஆன மதிவதன வல்லியே!
மதுசூ தனன்தங்கையே!
வரைராஜ னுக்கு இருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே! 1

தெட்டிலே, வலியமட மாதர்வாய் வெட்டிலே,
சிற்றிடையி லே,நடையிலே,
சேல்ஒத்த விழியிலே, பால்ஒத்த மொழியிலே,
சிறுபிறை நுதல்கீற்றிலே,
பொட்டிலே, அவர்கட்டு பட்டிலே, புனைகந்த
பொடியிலே, அடியிலே,மேல்
பூரித்த முலையிலே, நிற்கின்ற நிலையிலே
புந்திதனை நுழையவிட்டு
நெட்டிலே அலையாமல்; அறிவிலே, பொறையிலே,
நின்அடியர் கூட்டத்திலே,
நிலைபெற்ற அன்பிலே, மலைவுஅற்ற மெய்ஞ்ஞான
ஞேயத்தி லே,உன்இருதாள்

---

மதிஆன – பேரறிவாய் உள்ள. மதி வதனவல்லியே – முழு நிலவுக்கு நிகரான முகத்தையுடைய பூங்கொடி போன்றவளே. 16. மதுசூதனன் தங்கையே – நாராயண னுக்குத் தங்கையே. வரை ராஜனுக்கு – மலை அரசனுக்கு. மலை வளர் – இமவானிடம் வளர்ந்த.

2. தெட்டிலே – வஞ்சகத்திலும். வாய்வெட்டிலே – வாயின் சொல் திறமையிலும். புனைகந்த பொடியிலே – பூசப்பட்ட நறுமணப் பொடியிலும். புந்திதனை நுழைய விட்டு – அறிவைப் பறிகொடுத்து. நெட்டிலே – மனம்போன போக்கிலே. பொறையிலே – தன் அடக்கத்திலே. மலைவு அற்ற – மயக்கம் இல்லாத. உன் இருதாள் மட்டிலே – உன் இரண்டு திருவடிகளின் நாட்டத்தில் மட்டுமே. வளம் மருவு தேவை அரசே – செழிப்பு நிறைந்த இராமேச்சரத்தின் தலைவியே.

Koviloor Digital Library



மட்டிலே மனதுசெல நினதுஅருளும் அருள்வையோ?
வளம்மருவு தேவைஅரசே!
வரைரா ஜனுக்குஇருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே! 2

பூதமுதல் ஆகவே நாதபரி யந்தமும்
பொய்என்று எனைக்காட்டி,என்
போதத்தின் நடுவாகி, அடிஈறும் இல்லாத
போதபூ ரணவெளிக்குள்
ஏதும்அற நில்என்று உபாயமா வைத்துநினைவு
எல்லாம்செய் வல்லசித்தாம்
இன்பஉரு வைத்தந்த அன்னையே! நின்னையே
எளியேன் மறந்துஉய்வனோ?
வேதமுதல் ஆனநல் ஆகமத் தன்மையை
விளக்கும்உள் கண் இலார்க்கும்,
மிக்கநின் மகிமையைக் கேளாத செவிடர்க்கும்,
வீறுவா தம்புகலும்வாய்
வாதநோ யாளர்க்கும் எட்டாத முக்கணுடை
மாமருந்துக்கு அமிர்தமேஸ
வரைரா ஜனுக்குஇருகண் மணியாய் உதித்த மலை
வளர்காத லிப்பெண் உமையே! 3

மிடிஇட்ட வாழ்க்கையால் உப்புஇட்ட கலம்எனவும்
மெய்எலாம் உள்உடைந்து,
வீறுஇட்ட செல்வர்தம் தலைவாயில் வாசமாய்
வேதனைகள் உறவேதனும்

3. நாதபரியந்தமும் – ஓசைப் பொருள் வரையிலும். என்போதத்தின் நடுவாகி – என் அறிவின் இருப்பிடம் ஆகி. அடிஈறும் இல்லாத – துவக்கமும் முடிவும் இல்லாத. ஏதும்அற நில் என்று – நிலையற்றவைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தன்மயமாய் இரு என்று. சித்தாம் – ஞானமாகிய. உள்கண் இலார்க்கும் – ஞானக்கண் இல்லாதவர்க்கும். வீறுவாதம் புகலும் – பொருளற்ற வீண் பேச்சுப் பேசும். வாத நோயாளர்க்கும் – விதண்டாவாதம் பேசுபவர்க்கும். முக்கண் உடை – மூன்று கண்களை உடைய. மாமருந்துக்கு அமிர்தமே – சிவனுக்கு அமுதம் போன்றவளே.

Koviloor Digital Library



துடிஇட்ட வெவ்வினையை ஏவினான்; பாவிநான்
தொடர்இட்ட தொழில்கள்எல்லாம்
துண்டுஇட்ட சாண்கும்பி யின்பொருட் டாயதுஉன்
தொண்டர்பணி செய்வதுஎன்றோ?
அடிஇட்ட செந்தமிழின் அருமைஇட்டு ஆரூரில்
அரிவைஒர் பரவைவாயில்
அம்மட்டும் அடிஇட்டு நடைநடந் தருள்அடிகள்
அடிஈது முடிஈது என
வடிஇட்ட மறைபேசு பச்சிளங் கிள்ளையே!
வளம்மருவு தேவைஅரசே!
வரைரா ஜனுக்குஇருகண் மணியாய் உதித்துமலை
வளர்காத லிப்பெண்உமையே! 4

பூரணி, புராதனி, சுமங்கலை, சுதந்தரி,
புராந்தகி, த்ரயம்பகி,எழில்
புங்கவி, விளங்குசிவ சங்கரி, ஸஹஸ்ரதள
புஷ்பமிசை வீற்றிருக்கும்
நாரணி, மனாதீத நாயகி, குணாதீத
நாதாந்த சக்திஎன்றுஉன்
நாமமே உச்சரித் திடும்அடியர் நாமமே
நான்உச்ச ரிக்கவசமோ?

---

4. மிடி இட்ட – வறுமை நிறைந்த. வீறு இட்ட செல்வர் தம் – மிகப்பெரிய பணக்காரருடைய. வேதனும் – பிரம்ம தேவனும். துடிஇட்ட வெவ்வினையை – பதைப்பதற்கு உரிய கொடிய நோயை. துண்டுஇட்ட – துண்டிக்கப்பட்ட. சாண் கும்பியின் பொருட்டு – ஒரு சாண் அளவுள்ள வயிற்றுக் காக. அடிஇட்ட – பழைய. நடை நடந்தருள் அடிகள் – நடந்து சென்று அருள்புரிந்த சிவனார். அடி ஈது முடி ஈது – இது பாதம் இது தலை. வடிஇட்ட மறை – தெளிவுபடுத் திய வேதங்கள்.

5. புராந்தகி – முப்புரங்களை அழித்தவள். த்ரயம்பகி – முக்கண்ணை உடையவள். ஆர் அணிசடைக்கடவுள் – ஆத்திமாலை அணிந்துள்ள சடையினையுடைய சிவனார். ஆரணி – வேதநாயகி. வார் அணியும் – கச்சை அழகு செய்யும்.

நா. 16.

Koviloor Digital Library



ஆஆூர்அணி சடைக்கடவுள ஆரணி எனப்புகழ
அகிலாண்ட கோடிஈன்ற
அன்னையே! பின்னையும் கன்னிஎன மறைபேசும்
ஆனந்த ரூபமயிலே!
வார்அணியும் இருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளம்மருவு தேவைஅரசே!
வரைராஜனுக்குஇருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே! 5

பாகமோ பெறஉனைப் பாடஅறி யேன்;மல
பரிபாகம் வரவும்மனதில்
பண்புமோ சற்றும்இலை; நியமமோ செய்திடப்
பாவியேன் பாபரூப
தேகமோ திடம்இல்லை; ஞானமோ கனவிலும்
சிந்தியேன்; பேரின்பமோ
சேரஎன் றால்கள்ள மனதுமோ மெத்தவும்
சிந்திக்குது என்செய்குவேன்?
மோகமோ, மதமோ, குரோதமோ, லோபமோ,
முற்றுமாற் சரியமோதான்
முறியிட்டு எனைக்கொள்ளும்; நிதியமோதேடஎனில்
மூசுவரி வண்டுபோல
மாகம்ஓ டவும்வல்லன்; எனைஆள வல்லையோ?
வளம்மருவு தேவைஅரசே!
வரைரா ஜனுக்குஇருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே! 6

தூள்ஏறு தூசுபோல் வினைஏறு மெய்எனும்
தொக்கினுள் சிக்கிநாளும்
சுழல்ஏறு காற்றினிடை அழல்ஏறு பஞ்சுஎனச்
சூறையிட்டு அறிவைஎல்லாம்,

---

6. நியமமோ செய்திட – ஒழுக்கத்தை முறையாகக் கையாள. மோகமோ – மயக்கமோ. மதமோ – தற்பெருமையோ. லோபமோ – ஈயாமையோ. மாற்சரியமோ – பொறாமையோ. முறியிட்டு – முறி ஓலை எழுதி. நிதியமோ – பொருளையோ. மூசுவரிவண்டு போல – மலர்களில் மொய்க்கும் அழகான வண்டுபோல. மாகம் ஓடவும் வல்லன் – வானத்தில் செல்லவும் வல்லேன்.

Koviloor Digital Library


நாள்ஏற நாள்ஏற வார்த்திகம் எனும்கூற்றின்
நட்புஏற உள்உடைந்து,
நயனங்கள் அற்றதுஓர் ஊர்ஏறு போலவே
நானிலம் தனில்அலையவோ?
வேள்ஏறு தந்தியைக் கனதந்தி யுடன்வென்று,
விரைஏறு மாலைடி,
விண்ஏறு மேகங்கள் வெற்புஏறி மறைவுஉற
வெருட்டிய கருங்கூந்தலாய்!
வாள்ஏறு கண்ணியே! விடைஏறும் எம்பிரான்
மனதுக்கு இசைந்தமயிலே!
வரைரா ஜனுக்குஇருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே! 7

பூதமொடு பழகிவளர் இந்திரியம் ஆம்பேய்கள்,
புந்திமுதல் ஆனபேய்கள்,
போராடு கோபாதி ராக்ஷசப் பேய்கள்என்
போதத்தை ஊடுஅழித்து,
வேதனை வளர்த்திடச் சதுர்வேத வஞ்சன்
விதித்தான்;இவ் அல்லல்எல்லாம்
வீழும் படிக்குஉனது மௌனமந்த் ராதிக்ய
வித்தையை வியந்து அருள்வையோ?

---

7. நாள் ஏறு – அழுக்கு என்னும் அணுக்கள் அடைந்த. தூசுபோல் – ஆடை போன்று. தொக்கினுள் – தோல் பையினுள்ளே. அழல் ஏறு – நெருப்புப்பட்ட வார்த்திகம் எனும் – முதுமை என்று சொல்லப்பட்ட கூற்றின் நட்புஏற – எமனுடைய தொடர்பு அதிகரிக்க. உள்உடைந்து – மனங்கலங்கி. ஊர் ஏறுபோலவே – ஊர்க்காளை போலவே. வேள் ஏறு தந்தியை – மன்மதனுக்கு வாகனமாயிருக்கும் இருளாகிய யானையை. கனதந்தியுடன் – பருத்த யானை யோடு. விரை ஏறுமாலை – வாசனை மிகுந்த மலர்மாலை. வாள் ஏறு கண்ணியே – வாள் போன்ற கூர்மையான கண் களை யுடையவளே. விடைஏறும் எம்பிரான் – காளை ஊர்தியை யுடைய எம் தலைவன்.

8. புந்தி முதல்ஆன பேய்கள் – தீயபுத்தி முதலிய பேய்கள். சதுர்வேத வஞ்சன் – நான்மறைப் பிரம்மதேவன்.

Koviloor Digital Library


நாதவடிவு ஆகிய மஹாமந்த்ர ரூபியே!
நாதாந்த வெட்டவெளியே!
நற்சமயம் ஆனபயிர் தழையவரும் மேகமே!
ஞானஆ னந்தமயிலே!
வாதமிடு பரசமயம் யாவுக்கும் உணர்வுஅரிய
மகிமைபெறு பெரியபொருளே!
வரைரா ஜனுக்குஇருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே! 8

## 38. அகிலாண்டநாயகி

பதினான்குசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வட்டம் இட்டுஒளிர்பி ராண வாயுஎனும்
நிகள மோடுகம னஞ்செயும்
மனம்என னும்பெரிய மத்த யானையைஎன்
வசம்அ டக்கிடின்,மும் மண்டலத்து
இஷ்டம் உற்றவள ராஜ யோகம்இவன்
யோகம் என்றுஅறிஞர் புகழவே
ஏழை யேன்உலகில் நீடு வாழ்வன்,இனி
இங்குஇ தற்கும்அனு மானமோ?
பட்ட வர்த்தனர் பராவு சக்ரதர
பாக்யம் ஆனசுப யோகமும்,
பார காவிய கவித்வம் நான்மறை
பராய ணம்செய்மதி யூகமும்,

---

மௌனமந்த்ராதிக்ய வித்தையை – மௌன மந்திர மாகிய பரவித்தையை. மஹாமந்த்ர ரூபியே – பிரணவத்தின் வடிவினளே.

1. நிகளமோடு கமனஞ்செயும் – இணைப்போடு சேர்ந்து செல்லும். மும்மண்டலத்து – நனவு கனவு உறக்கம் ஆகிய மூன்று நிலைகளில். வளராஜயோகம் – மேன்மை பொருந்திய அட்டாங்கயோகம். இதற்கும் அனுமானமோ? – இது மேலான மார்க்கம் என்பதற்குச் சான்று யாது? பட்டவர்த்தனர் பராவு – அரசர்கள் துதிக்கத்தக்க. சக்ரதர பாக்யம் – மன்னர் மன்னன் என்ற நிறைவுநிலை. பாரகாவியகவித்வம் – பெருங்கவிதை ஞானமும்.

Koviloor Digital Library



அஷ்ட சித்தியும்நல் அன்ப ருக்குஅருள
விருது கட்டியபொன் அன்னமே!
அண்ட கோடிபுகழ் காவை வாழும்அகி
லாண்ட நாயகிஎன் அம்மையே! 1

## 39. பெரியநாயகி

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

காற்றைப் பிடித்துமண் கரகத்து அடைத்தபடி,
கன்மப் புனற்குள்ஊறும்
கடைகெட்ட நவவாயில் பெற்றபசு மண்கலக்
காயத்துள் எனைஇருத்திச்,
சோற்றைச் சுமத்திநீ பந்தித்து வைக்கத்,
துருத்திக்குள் மதுஎன்னவே
துள்ளித் துடித்துஎன்ன பேறுபெற் றேன்?அருள்
தோயம்நீ பாய்ச்சல்செய்து,
நாற்றைப் பதித்ததுஎன ஞானம்ஆம் பயிரதனை
நாட்டிப், புலப்பட்டியும்
நமன்ஆன தீப்பூடும் அணுகாமல் முன்நின்று,
நாடுசிவ போகம்ஆன
பேற்றைப் பகுத்துஅருளி எனைஆள வல்லையோ?
பெரியஅகி லாண்டகோடி
பெற்றநா யகி!பெரிய கபிலைமா நகர்மருவு
பெரியநா யகிஅம்மையே! 1

## 40. தந்தைதாய்

தந்தைதாய் மகவுமனை வாழ்க்கை யாக்கை
ஜகம்அனைத்தும் மௌனிஅருள் தழைத்த போதே
இந்த்ரஜா லம்,கனவு, கானல் நீராய்
இருந்ததுவே இவ்இயற்கை என்னே என்னே! 1

---

விருது கட்டிய – உறுதியான முடிவு செய்த. காவை வாழும் – திருவானைக்காவில் எழுந்தருளியுள்ள.

1. கன்மப்புனற்குள்–கருமமாகிய நீரில். பசுமண்கலம்–சுடாத மண்பாண்டம். பந்தித்து வைக்க–தளைத்து வைக்க. அருள்தோயம்–திருவருளாகிய நீரை. புலப் பட்டியும்–ஐம் புலன்களாகிய பட்டிமாடுகளும். நமன் ஆன தீப்பூடும்–யமன் என்று சொல்லப்படுகின்ற களைப்புதர்களும்.

Koviloor Digital Library



என்னைநான் கொடுக்கஒருப் பட்ட காலம்
யாதுஇருந்துஎன்? எதுபோய்என்? என்னை நீங்கா
அன்னைபோல் அருள்பொழியும் கருணை வாரி;
ஆனந்தப் பெருமுகிலே; அரசே சொல்லாய்! 2

அரசே!நின் திருக்கருணை அல்லாது ஒன்றை
அறியாத சிறியேன்நான்; அதனால் முக்திக்
கரைசேரும் படிக்குஉன்அருள் புணையைக் கூட்டும்
கைப்பிடியே கடைப்பிடியாக் கருத்துள் கண்டேன். 3

கண்டேன்இங்கு என்னையும்,என் தனையும் நீங்காக்
கருணையும்,நின் தன்னையும்நான் கண்டேன் கண்டேன்;
விண்டேன்என்று எனைப்புறம்பாத் தள்ள வேண்டாம்;
விண்டதுநின் அருள்களிப்பின் வியப்பால் அன்றோ? 4

ஓஎன்ற சுத்தவெளி ஒன்றே நின்று,இங்கு
உயிரைஎல்லாம் வம்மின்என, உவட்டா இன்பத்
தேஎன்ற நீகலந்து கலந்து,முக்தி
சேர்த்தனையேல் குறைவாமோ ஜெகவி லாசம்? 5

ஜெகத்தைஎல்லாம் அணுஅளவும் சிதறா வண்ணம்
சேர்த்துஅணுவில் வைப்பை;அணுத் திரளை எல்லாம்
மகத்துவமாப் பிரமாண்டம் ஆகச் செய்யும்
வல்லவா! நீநினைந்த வாறே எல்லாம். 6

சொல்லாலே வாய்துடிப்பது அல்லால், நெஞ்சம்
துடித்து, இருகண் நீர்அருவி சொரியத் தேம்பிக்,
கல்லால்ஏய் இருந்தநெஞ்சும் கல்ஆல் முக்கண்
கனியே!நெக்குஉருகிடவும் காண்பேன் கொல்லோ? 7

---

3. புணையைக் கூட்டும் கைப்பிடியே – மரக்கலத்தைக் கொடுத்துதவும் பெரும் துணையே. கடைப்பிடியாக் கருத்துள் கண்டேன் – கருமத்தை ஒழிக்கும் துணிவாக மனத்துள் பார்த்தேன். 4. விண்டேன் என்று – வெளிப்படையாகச் சொன்னேன் என்று. விண்டது – நான் வெளிப்படையாக விளக்கியது. 5. ஓ என்ற – இத்தகையதா என்று வியக்கத் தக்க. தேஎன்ற – தெய்வம் என்று சொல்லப்படுகின்ற. ஜெகவிலாசம் – பிரபஞ்ச நிலை. 7. தேம்பி – வாடி. கல்லால் ஏய் இருந்த – கல் போன்று சமைக்கப்பட்டிருந்த.

Koviloor Digital Library



## 41. பெற்றவட்கே

பெற்றவட்கே தெரியும்அந்த வருத்தம்; பிள்ளை
பெறாப்பேதை அறிவாளோ? பேரா னந்தம்
உற்றவர்க்கே கண்ணீர்,கம் பலைஉண் டாகும்;
உறாதவரே கல்நெஞ்சம் உடையர் ஆவார். 1

ஆஆஎன்று அழுதுதொழும் கையர் ஆகி,
அப்பனே; ஆனந்த அடிக ளே;நீ
வாவாஎன் றவர்க்குஅருளும் கருணை எந்தாய்!
வன்னெஞ்சர்க்கு இரங்குவதுஎவ் வாறு நீயே? 2

நீயேஇங்கு எளியேற்கும் தாக மோக
நினைவூடே நின்றுஉணர்த்தி நிகழ்த்த லாலே;
பேயேற்கும் தனக்குஎனஓர் அன்பும் உண்டோ?
பெம்மானே! இன்னம்அன்பு பெருகப் பாராய். 3

பாராயோ என்துயரம் எல்லாம்? ஐயா
பகரும்முன்னே தெரியாதோ? பாவி யேன்முன்
வாராயோ இன்னம்ஒரு கால்? ஆ னாலும்
மலர்க்கால்என் சென்னிமிசை வைத்தி டாயோ? 4

வைத்திடும்கா லைப்பிடித்துக் கண்ணில், மார்பில்
வைத்துஅணைத்துக் கொண்டு,கையால்
வளைத்துக்கட்டிச்,
சித்தமிசைப் புகஇருத்திப் பிடித்துக் கொண்டு,
தியக்கம்அற இன்பசுகம் சேர்வது என்றோ? 5

சேராமல் சிற்றினத்தைப் பிரிந்து,எந் நாளும்
திருவடிப்பே ரினத்துடனே சேரா வண்ணம்
ஆர்ஆக நான் அலைந்தேன்; அரசே! நீதான்
அறிந்திருந்தும் மாயையில்ஏன் அழுந்த வைத்தாய்? 6

---

3. தாகமோ நினைவூடே – அருள்தாக நினைவுடன்.

5. புக இருத்தி –பொருந்த வைத்து. தியக்கம் அற – மயக்கம் இல்லாமல்.

Koviloor Digital Library



வைத்தபொருள், உடல்,ஆவி மூன்றும் நின்கை
வசம்எனவே யான்கொடுக்க வாங்கிக் கொண்டு,
சித்தம்மிசைப் புகுந்ததுதான் மெய்யோ? பொய்யோ?
சிறியேற்கிங்கு உளவுரையாய் திகையாவண்ணம். 7

திகையாதோ எந்நாளும்? பேரா னந்தத்
தெள்ளமுதம் உதவாமல் திவலை காட்டி,
வகைஆக அலக்கழித்தாய்; உண்டு, உடுத்து
வாழ்ந்தேன்நான் இரண்டுகால் மாடு போலே. 8

மாடு,மக்கள், சிற்றிடையார், செம்பொன், ஆடை,
வைத்தகன தனம்,மேடை மாட கூடம்
வீடும்என்பால் தொடர்ச்சியோ? இடைவி டாமல்
மிக்ககதி வீடுஅன்றோ விளங்கல் வேண்டும். 9

விளங்கஎனக்கு உள்உள்ளே விளங்கா நின்ற
வேதகமே; போதகமே; விமல வாழ்வே;
களங்கரகி தப்பொருளே; என்னை நீங்காக்
கண்ணுதலே; நாதாந்தக் காட்சிப் பேறே! 10

நாதமே; நாதாந்த வெளியே; சுத்த
ஞாதுருவே; ஞானமே; ஞேய மே;நல்
வேதமே; வேதமுடிவு ஆன மோன
வித்தேஇங்கு என்னைஇனி விட்டி டாதே. 11

## 42. கல்ஆலின்

கல்ஆலின் நீழல்தனில் ஒருநால் வர்க்கும்
கடவுள்நீ உணர்த்துவதும் கைகாட்டு என்றால்,
சொல்லாலே சொலப்படுமோ? சொல்லும் தன்மை
துரும்புபற்றிக் கடல்கடக்கும் துணிபே அன்றோ? 1

---

8. திவலை காட்டி – கொடுத்து.

10. களங்க ரகிதப்பொருளே – மாசற்ற மூர்த்தியே.

11. ஞாதுருவே ஞானமே ஞேயமே – காண்போன் காணுதல் காணப்படு பொருள் ஆகிய திரிபுடியே.

1. கைகாட்டு என்றால் – மௌனத்திருந்து சின் முத்திரை போன்று விளக்குதல் என்றால்.

Koviloor Digital Library



அன்றோ,ஆ மோனனவும் சமய கோடி
அத்தனையும் வெவ்வேறாய் அரற்ற நேரே
நின்றாயே; நினைப்பெறுமாறு எவ்வாறு? ஆங்கே
நின்அருள்கொண்டு அறிவதுஅல்லால் நெறிவேறு
உண்டோ? 2

நெறிபார்க்கின் நின்னைஅன்றி அகிலம் வேறோ?
நிலம்நீர்தீக் கால்வானும் நீஅ லாத
குறியாதும் இல்லைஎன்றால், யாங்கள் வேறோ?
கோதைஒரு கூறுஉடையாய் கூறாய் கூறாய்! 3

கூறாய ஐம்பூதச் சுமையைத் தாங்கிக்,
குணம்இலா மனம்எனும்பேய்க் குரங்கின் பின்னே
மாறாத கவலையுடன் சுழல என்னை
வைத்தனையே பரமே;நின் மகிமை நன்றே! 4

நன்றுஎனவும் தீதுஎனவும் எனக்குஇங்கு உண்டோ?
நான்ஆகி நீஇருந்த நியாயம் சற்றே
இன்றுஎனக்கு வெளியானால், எல்லாம் வல்ல
இறைவா!நின் அடியருடன் இருந்து வாழ்வேன். 5

வாழ்வுஎனவும் தாழ்வுஎனவும் இரண்டாப்பேசும்
வையகத்தார் கற்பனையாம் மயக்கம் ஆன
பாழ்வலையைக் கிழித்துஉதறிச் செயல்போய் வாழப்
பரமே!நின் ஆனந்தப் பார்வை எங்கே? 6

எங்கேஎங் கேஅருள்என்று எமைஇ ரந்தான்
ஏழைஇவன் எனவும்எண்ணி, இச்சை கூரும்
அங்கேஅங் கேஎளிவந்து, என்னை ஆண்ட
ஆரமுதே! உனைக்காண்பான் அலந்து போனேன். 7

போனநாட்கு இரங்குவதே தொழிலா, இங்ஙன்
பொருந்தும்நாள் அத்தனையும் போக்கினேன்;என்
ஞானநா யகனே!நின் மோன ஞான
நாட்டம்உற்று வாழ்ந்திருக்கும் நாள்எந் நாளோ? 8

3. கோதை ஒரு கூறு உடையாய் – உமையை இடப்பாகம் உடையவனே. 6. செயல் போய்வாழ – செயலற்று வாழ.

Koviloor Digital Library



நாள்பட்ட கமலம்என்ன இதயம் மேவும்
நறுந்தேனே! துன்மார்க்க நாரி மார்கண்
வாள்பட்ட காயம்இந்தக் காயம்; என்றோ
வன்கூற்றும் உயிர்பிடிக்க வரும்அந் நீதி? 9

நீதிஎங்கே? மறைஎங்கே? மண்விண் எங்கே?
நித்தியர்ஆம் அவர்கள்எங்கே? நெறிதப் பாத
ஜாதிஎங்கே? ஒழுக்கம்எங்கே? யாங்கள் எங்கே?
தற்பரநீ! பின்னும்ஒன்றைச் சமைப்பது ஆனால் 10

ஆனாலும் யான்எனதுஇங்கு அற்ற எல்லை
அதுபோதும், அதுகதிதான் அல்ல என்று
போனாலும், யான்போவன் அல்லால், மோனப்
புண்ணியனே! வேறுஒரு பொருளை நாடேன். 11

பொருளே!நின் பூரணம்மே லிட்ட காலம்
போக்குவரவு உண்டோ?தற் போதம் உண்டோ?
இருள்தான்உண் டோ? அல்லால் வெளிதான் உண்டோ?
இன்பம்உண்டோ? துன்பம்உண்டோ? யாம்அங்கு
உண்டோ? 12

உண்டோநீ படைத்தஉயிர்த் திரளில் என்போல்
ஒருபாவி? தேகாதி உலகம் பொய்யாக்
கண்டேயும், எள்அளவுத் துறவும் இன்றிக்
காசினிக்குள் அலைந்தவர்ஆர்? காட்டாய் தேவே! 13

தேவர்எலாம் தொழச்சிவந்த செந்தாள் முக்கண்
செங்கரும்பே! மொழிக்குமொழி தித்திப்பு ஆக
மூவர்சொலும் தமிழ்கேட்கும் திருச்செ விக்கே
மூடனேன் புலம்பியசொல் முற்று மோதான்? 14

---

9. நாள்பட்ட – அன்று அலர்ந்த. என்றோ – எக்காலமோ. வன்கூற்றும் – கொடிய யமனும். அந்நீதி – அந்த நடை முறை.

10. சமைப்பது ஆனால் – படைப்பதாயின்.

12. மேலிட்டகாலம் – என்னைத் தன்மயமாக்கிய பிறகு.

14. செங்கரும்பே – பரமானந்தமே. முற்றுமோதான் – ஏற்றுக்கொள்ளப்படுமோ.

Koviloor Digital Library



முற்றுமோ எனக்குஇனிஆ னந்த வாழ்வு?
மூதறிவுக்கு இனியாய்!நின் முளரித் தாளில்
பற்றுமோ சற்றும்இல்லை; ஐயோ, ஐயோ!
பாவிபடும் கண்கலக்கம் பார்த்தி லாயோ? 15

பார்த்தனஎல் லாம்அழியும்; அதனால் சுட்டிப்
பாராதே; பார்த்துஇருக்கப், பரமே! மோன
மூர்த்திவடி வாய்உணர்த்தும் கைகாட்டு உண்மை
முற்றிஎனது அல்லல்வினை முடிவது என்றோ? 16

என்றுஉளைநீ அன்றுஉளம்யாம் என்பது என்னை?
இதுநிற்க, எல்லாம்தாம் இல்லை என்றே
பொன்றிடச்செய் வல்லவன்நீ; எமைப்ப டைக்கும்
பொற்புஉடையாய் என்னின்,அது பொருந்திடாதோ? 17

பொருந்துஜகம் அனைத்தினையும் பொய்பொய் என்று
புகன்றபடி, மெய்என்றே போத ரூபத்து
இருந்தபடி என்றுஇருப்பது? அன்றே அன்றோ
எம்பெருமான்! யான்கவலை எய்தாக் காலம். 18

காலமே! காலம்ஒரு மூன்றும் காட்டும்
காரணமே! காரணகா ரியங்கள் இல்லாக்
கோலமே! எனைவாவா என்று கூவிக்
குறைவுஅறநின் அருள்கொடுத்தால் குறைவோ?
சொல்லாய். 19

---

15. முற்றுமோ – வந்து வாய்க்குமோ. முளரித்தாளில் – தாமரைத் திருவடிகளில். பற்றுமோ – விருப்பமானது.

16. முற்றி – முற்றுப்பெற்று.

17. பொன்றிடச்செய்வல்லவன்நீ – துடைத்திடச் செய்யும் வல்லவன் ஆகிய நீ. பொற்பு உடையாய் – பாங்கு உடையாய்.

18. புகன்றபடி மெய் என்றே – சொன்னதுதான் உண்மை என்றே. போத ரூபத்து – ஆன்ம அறிவில்.

19. காரணகாரியங்கள் இல்லாக் கோலமே – காரண காரியங்களுக்கு அப்பாற்பட்டவனே.

Koviloor Digital Library



சொல்ஆய தொகுதிஎல்லாம் கடந்து நின்ற
சொரூபானந் தச்சுடரே! தொண்ட னேனைக்
கல்ஆகப் படைத்தாலும் மெத்த நன்றே;
கரணமுடன் நான்உறவு கலக்க மாட்டேன். 20

கலங்காத நெஞ்சுடைய ஞான தீரர்
கடவுள்!உனைக் காணவே காயம் ஆதி
புலம்காணார்; நான்ஒருவன் ஞானம்பேசிப்
பொய்க்கூடு காத்ததுஎன்ன புதுமை கண்டாய்? 21

கண்டிலையோ யான்படும்பாடு எல்லாம் மூன்று
கண்இருந்தும்? தெரியாதோ? கசிந்துஉள் அன்புஆர்
தொண்டர்அடித் தொண்டன்அன்றோ? கருணை நீங்காச்
சுத்தபரி பூரணம்ஆம் ஜோதி நாதா! 22

ஜோதியாய் இருள்பிழம்பைச் சூறை ஆடும்
தூவெளியே! எனைத்தொடர்ந்து தொடர்ந்து,எந்நாளும்
வாதியா நின்றவினைப் பகையை வென்ற
வாழ்வே! இங்கு உனைப்பிரிந்து மயங்கு கின்றேன். 23

மயக்குறும்என் மனம்அணுகாப் பாதை காட்டி
வல்வினையைப் பறித்தனையே வாழ்வே! நான்என்
செயக்கடவேன்; செயல்எல்லாம் நினதே என்று
செங்கைகுவிப் பேன்;அல்லால் செயல்வேறு இல்லை.24

வேறுபடும் சமயம்எல்லாம் புகுந்து பார்க்கின்,
விளங்குபரம் பொருளே!நின் விளையாட்டு அல்லால்
மாறுபடும் கருத்துஇல்லை; முடிவுஇல் மோன
வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற்று அம்மா. 25

20. கரணமுடன் – ஐம்பொறிகளோடு.

21. காயம் ஆதி புலம் காணார் – உடல் முதலியவை களில் பற்று வைக்கமாட்டார்கள்.

23. வாதியா நின்ற – துன்பப்படுத்துகின்ற.

24. மனம் அணுகாப் பாதை காட்டி – மனத்தை ஒதுக்கி வைக்கின்ற வழியை உணர்த்தி. செங்கை குவிப்பேன் – வணங்குதற்கு என்றே உள்ள கைகளைக் குவிப்பேன்.

25. மோன வாரிதியில் – மௌனக் கடலில்.

Koviloor Digital Library


அம்மாஈது அதிசயம்தான் அன்றோ, அன்றோ!
அகண்டநிலை ஆக்கி,என்னை அறிவுஆம் வண்ணம்
சும்மாவே இருக்கவைத்தாய், ஐயா! ஆங்கே
சுகமயமாய் இருப்பதுஅல்லால், சொல்வான்
என்னே? 26

என்னேநான் பிறந்துஉழல வந்த ஆறுஇங்கு?
எனக்குஎனஓர் செயல்இலையே? ஏழை யேன்பால்
முன்னேசெய் வினைஎனவும், பின்னே வந்து
மூளும்வினை எனவும்வர முறைஏன்? எந்தாய்! 27

தாய்ஆன தண்அருளை நிரம்ப வைத்துத்,
தமியேனைப் புரவாமல் தள்ளித் தள்ளிப்
போய்ஆனது என்கொல்? ஐயா! ஏக தேசம்
பூரணத்துக்கு உண்டோதான்? புகலல் வேண்டும். 28

புகல்அரிய நின்விளையாட்டு என்னே? எந்தாய்!
புன்மைஅறிவு உடையஎன்னைப் பொருளாப் பண்ணி
இகல்விளைக்கும் மலமாயை கன்மத் தூடே
இடர்உறவும் செய்தனையே; இரக்கம் ஈதோ? 29

இரக்கமொடு பொறை,ஈதல், அறிவு,ஆ சாரம்
இல்லேன்நான்; நல்லோர்கள் ஈட்டம் கண்டால்
கரக்கும்இயல்பு உடையேன்,பாழ் நெஞ்சம் எந்தாய்!
கருந்தாதோ? வல்உருக்கோ? கரிய கல்லோ? 30

---

28. தமியேனைப் புரவாமல் – அடியேனைக் காத்தருளா மல். ஏகதேசம் – வேறுபாடு.

29. இகல் விளைக்கும் – போராட்டத்தை உண்டு பண்ணும். இடர் உறவும் செய்தனையே – துன்பப்படும்படி பண்ணினையே.

30. நல்லோர்கள் ஈட்டம் – சான்றோர்களின் திருக்கூட் டத்தை. கரக்கும் இயல்பு உடையேன் – பின்வாங்குகின்ற பாங்குடையேன். கருந்தாதோ – இரும்போ. வல்உருக்கோ – வலிய உருக்குத்தானோ. கரிய கல்லோ – கருங்கல்லோ.

Koviloor Digital Library


## 43. பராபரக்கண்ணி

சீர்ஆரும் தெய்வத் திருஅருள்ஆம் பூமிமுதல்
பார்ஆதி ஆண்ட பதியே பராபரமே. 1

கண்ஆரக் கண்டோர் கருப்பொருள்கா ணாமல்அருள்
விண்ணூடு இருந்தஇன்ப வெற்பே பராபரமே. 2

சிந்தித்த எல்லாம்என் சிந்தைஅறிந் தேஉதவ
வந்த கருணை மழையே பராபரமே. 3

ஆரா அமுதே அரசேஆ னந்தவெள்ளப்
பேராறே மோனப் பெருக்கே பராபரமே. 4

ஆர்அறிவார் என்னை அனந்தமறை ஓலமிடும்
பேரறிவே இன்பப் பெருக்கே பராபரமே. 5

உரைஇறந்த அன்பர்உளத்து ஓங்குஒளியாய் ஓங்கிக்
கரைஇறந்த இன்பக் கடலே பராபரமே. 6

எத்திக்கும் தான்ஆகி என்இதயத் தேஊறித்
தித்திக்கும் ஆனந்தத் தேனே பராபரமே. 7

திக்கொடுகீழ் மேலும் திருஅருள்ஆம் பொறபறிந்தோர்
கைக்குள்வளர் நெல்லிக் கனியே பராபரமே. 8

முத்தே பவளமே மொய்த்தபசும் பொன்சுடரே
சித்தேஎன் உள்ளத் தெளிவே பராபரமே. 9

கண்ணே கருத்தேஎன் கற்பகமே கண்நிறைந்த
விண்ணேஆ னந்த வியப்பே பராபரமே. 10

வாக்காய் மனதாய் மனவாக்கு இறந்தவர்பால்
தாக்காதே தாக்கும் தனியே பராபரமே. 11

---

1. சீர்ஆரும் – ஒழுங்கு நிறைந்த. திருஅருள் ஆம் பூமி முதல் – திருவருள் என்னும் சக்தி முதலான. 2. கருப் பொருள் – பிறப்பெடுத்தல். இன்பவெற்பே – ஆனந்த மலையே. 8. பொற்பு அறிந்தோர் – மெய்யுணர்வு பெற்றோர்.
9. சித்தே – பேரறிவு வடிவமே. 11. தாக்காதே தாக்கும் – உள்ளத்தினுள் எழுந்தருளும்.

Koviloor Digital Library


பார்த்தஇடம் எல்லாம் பரவெளியாய்த் தோன்றஒரு
வார்த்தைசொல்ல வந்த மனுவே பராபரமே. 12

வான்அந்தம் மண்ணின்அந்தம் வைத்துவைத்துப் பார்க்கஎனக்கு
ஆனந்தம் தந்த அரசே பராபரமே. 13

அன்பைப் பெருக்கிஎன்து ஆருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே. 14

வானம்எல் லாம்கொண்ட மௌனமணிப் பெட்டகத்துக்கு
ஆனபணி ஆன அணியே பராபரமே. 15

ஓடும் இருநிதியும் ஒன்றாகக் கண்டவர்கள்
நாடும் பொருள்ஆன நட்பே பராபரமே. 16

சித்த நினைவும் செயும்செயலும் நீஎனவாழ்
உத்தமர்கட்கு ஆன உறவே பராபரமே. 17

போதாந்தப் புண்ணியர்கள் போற்றிஜய போற்றிஎனும்
வேதாந்த வீட்டில் விளக்கே பராபரமே. 18

முத்தாந்த வீதி முளரிதொழும் அன்பருக்கே
சித்தாந்த வீதிவரும் தேவே பராபரமே. 19

ஈனம் தரும்உடலம் என்னதுயான் என்பதுஅற
ஆனந்தம் வேண்டி அலந்தேன் பராபரமே. 20

என்புஉருகி நெஞ்சம் இளகிக் கரைந்துகரைந்து
அன்புஉருவாய் நிற்க அலந்தேன் பராபரமே. 21

சுத்த அறிவாய்ச் சுகம்பொருந்தின் அல்லால்என்
சித்தம் தெளியாதுஎன் செய்வேன் பராபரமே. 22

மாறா அநுபூதி வாய்க்கின்அல்லால் என்மயக்கம்
தேறாதுஎன் செய்வேன் சிவமே பராபரமே. 23

---

15. பணி ஆன அணியே – வைக்கத் தகுந்த ஆபரணமே. 19. முளரி தொழும் – திருவடித் தாமரையினை வணங்கும். சித்தாந்தம் – சித்தத்தின் அந்தம், அந்தக் கரணத்தைத் தாண்டிய நிலை.

Koviloor Digital Library



தாகம்அறிந்து இன்பநிஷ்டை தாராயேல் ஆகெடுவேன்
தேகம் விழுந்திடின்என் செய்வேன் பராபரமே. 24

அப்பாஎன் எய்ப்பில்வைப்பே ஆற்றுகிலேன் போற்றிஎன்று
செப்புவதுஅல் லால்வேறுஎன் செய்வேன் பராபரமே. 25

உற்றுஅறியும் என்அறிவும் உட்கருவி போல்சவிமாண்டு
அற்றும்இன்பம் தந்திலையே ஐயா பராபரமே. 26

சொல்லால் அடங்காச் சுகக்கடலில் வாய்மடுக்கின்
அல்லால்என் தாகம் அறுமோ பராபரமே. 27

பாராயோ என்னைமுகம் பார்த்துஒருகால் என்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே. 28

ஓயாதோ என்கவலை உள்ளேஆ னந்தவெள்ளம்
பாயாதோ ஐயா பகராய் பராபரமே. 29

ஓகோ உனைப்பிரிந்தார் உள்ளம் கனலில்வைத்த
பாகோ மெழுகோ பகராய் பராபரமே. 30

கூர்த்தஅறிவு அத்தனையும் கொள்ளைகொடுத்து
உன்அருளைப்
பார்த்தவன்நான் என்னைமுகம் பாராய் பராபரமே. 31

கடல்அமுதே தேனேஎன் கண்ணே கவலைப்
படமுடியாது என்னைமுகம் பார்நீ பராபரமே. 32

உள்ளம் அறிவாய் உழப்புஅறிவாய் நான்ஏழை
தள்ளிவிடின் மெத்தத் தவிப்பேன் பராபரமே. 33

கன்றினுக்குச் சேதா கனிந்துஇரங்கல் போலஎனக்கு
என்றுஇரங்கு வாய்கருணை எந்தாய் பராபரமே. 34

---

25. எய்ப்பில் வைப்பே – தளர்வுற்றபோது பயன்படும் செல்வமே. 26. சவிமாண்டு அற்றும் – ஒளி மழுங்கிப் போயும். 31. கூர்த்த அறிவு – உலக நாட்டத்தில் தீவிரமாகச் செல்லும் நுண்ணறிவு. 33. உழப்பு அறிவாய் – நான் படும் துன்பத்தை அறிவாய்.

Koviloor Digital Library



எண்ணாத எண்ணம்எலாம் எண்ணிஎண்ணி ஏழைநெஞ்சம்
புண்ஆகச் செய்ததுஇனிப் போதும் பராபரமே. 35

ஆழித் துரும்புஎனவே அங்கும்இங்கும் உன்அடிமை
பாழில் திரிவதுஎன்ன பாவம் பராபரமே. 36

கற்றஅறி வால்உனைநான் கண்டவன்போல் கூத்துஆடில்
குற்றம்என்றுஎன் நெஞ்சே கொதிக்கும் பராபரமே. 37

ஐயோ உனைக்காண்பான் ஆசைகொண்டதத்தனையும்
பொய்யோ வெளியாப் புகலாய் பராபரமே. 38

துன்பக்கண் ணீரில் துளைந்தேற்குஉன் ஆனந்த
இன்பக்கண் ணீர்வருவது எந்நாள் பராபரமே. 39

வஞ்சனையும் பொய்யும்உள்ளே வைத்துஅழுக்கா றாய்உளறும்
நெஞ்சனுக்கும் உண்டோ நெறிதான் பராபரமே. 40

பாசம்போய் நின்றவர்போல் பாராட்டி ஆனாலும்
மோசம்போ னேன்நான் முறையோ பராபரமே. 41

நன்றுஅறியேன் தீதுஅறியேன் நான்என்று நின்றவன்ஆர்
என்றுஅறியேன் நான்ஏழை என்னே பராபரமே. 42

இன்றுபுதிது அன்றே எளியேன் படும்துயரம்
ஒன்றும்அறி யாயோ உரையாய் பராபரமே. 43

எத்தனைதான் ஜன்மம்எடுத்து எத்தனைநான் பட்டதுயர்
அத்தனையும் நீ அறிந்தது அன்றோ பராபரமே. 44

இந்தநாள் சற்றும் இரங்கிலையேல் காலன்வரும்
அந்தநாள் காக்கவல்லார் ஆர்காண் பராபரமே. 45

உற்றுஉற்று நாடி உளம்மருண்ட பாவியைநீ
சற்றுஇரங்கி ஆளத் தகாதோ பராபரமே. 46

---

39. துளைந்தேற்கு–படிந்திருக்கும் எனக்கு. 45. காலன் வரும் அந்தநாள்–சாவு வரும் அந்தக் காலத்தில். 46. உற்று உற்று நாடி – ஆழ்ந்து தேடி.

Koviloor Digital Library



என்அளவும் நின்னைவிட இல்லா எனைமயக்கில்
கள்ளுதலால் என்னபலன் சாற்றாய் பராபரமே. 47

பாடிப் படித்துஉலகில் பாராட்டி நிற்பதற்கோ
தேடி எனைஅடிமை சேர்த்தாய் பராபரமே. 48

சொன்னத்தைச் சொல்வதுஅல்லால் சொல்அறஎன்
சொல்இறுதிக்கு
என்னத்தைச் சொல்வேன் எளியேன் பராபரமே. 49

சொல்லும் பொருளும்அற்றுச் சும்மா இருப்பதற்கே
அல்லும் பகலும்எனக்கு ஆசை பராபரமே. 50

நேச நிருவிகற்ப நிஷ்டையல்லால் உன்னடிமைக்கு
ஆசைஉண்டோ நீ அறியாதது அன்றே பராபரமே. 51

துச்சன்என வேண்டாம்இத் தொல்உலகில் அல்லல்கண்டால்
அச்சம் மிகஉடையேன் ஐயா பராபரமே. 52

கண்ஆவா ரேனும்உனைக் கைகுவியார் ஆயின்அந்த
மண்ஆவார் நட்பை மதியேன் பராபரமே. 53

கொல்லா விரதம் குவலயம்எல் லாம்ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவதுஎன் இச்சை பராபரமே. 54

எத்தால் பிழைப்பேனோ எந்தையே நின்அருட்கே
பித்துஆனேன் மெத்தவும்நான் பேதை பராபரமே. 55

வாயினால் பேசா மவுனத்தை வைத்துஇருந்தும்
தாய்இலார் போல்நான் தளர்ந்தேன் பராபரமே. 56

அன்னைஇலாச் சேய்போல் அலக்கண்உற்றேன் கண்ஆர
என்அகத்தில் தாய்போல் இருக்கும் பராபரமே. 57

உற்றுநினைக் கில்துயரம் உள்உள்ளே செந்தீயாய்ப்
பற்றநொந்தேன் என்னைமுகம் பார்நீ பராபரமே. 58

---

53. கண் ஆவாரேனும் – கண்ணுக்கு நிகராக உலக வாழ்வில் மேன்மை பெற்று இருப்பவரானாலும்.

54. குவலயம்எல்லாம் – உலகமெல்லாம்.

Koviloor Digital Library



பொய்யன்இவன் என்றுமெள்ளப் போதிப்பார் சொல்கேட்டுக்
கைவிடவும் வேண்டாம்என் கண்ணே பராபரமே. 59

எண்ணம் அறிந்தே இளைப்புஅறிந்தே ஏழைஉய்யும்
வண்ணம் திருக்கருணை வையாய் பராபரமே. 60

நாட்டாதே என்னைஒன்றில் நாட்டி ஹிதம்அஹிதம்
காட்டாதே எல்லாம்நீ கண்டாய் பராபரமே. 61

உன்னைநினைந்து உன்நிறைவின் உள்ளே உலாவும்என்னை
அன்னைவயிற்று இன்னம்அடைக் காதே பராபரமே. 62

பரம்உனக்குஎன்று எண்ணும் பழக்கமே மாறா
வரம்எனக்குத் தந்துஅருள்என் வாழ்வே பராபரமே. 63

வந்தித்து நின்னை மறவாக் கடன்ஆகச்
சிந்திக்க நின்னதுஅருள் செய்யாய் பராபரமே. 64

எவ்உயிரும் என்உயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருள்கருணை செய்யாய் பராபரமே. 65

வெட்டவெளிப் பேதையன்யான் வேறுகபடு ஒன்றுஅறியேன்
சிஷ்டருடன் சேர்அனந்தம் தெண்டன் பராபரமே. 66

இரவுபகல் அற்றஇடத்து ஏகாந்த யோகம்
வரவும் திருக்கருணை வையாய் பராபரமே. 67

மால்காட்டிச் சிந்தை மயங்காமல் நின்றுசுகக்
கால்காட்டி வாங்காதே கண்டாய் பராபரமே. 68

எப்பொருளும் நீஎனவே எண்ணிநான் தோன்றாத
வைப்பைஅழி யாநிலையா வையாய் பராபரமே. 69

---

61. ஹிதம் அஹிதம் – நன்மை தீமைகள்.

63. பரம் உனக்கு என்று – என்னைக் காத்தருளும் பொறுப்பு உன்னுடையது என்று.

66. சிஷ்டருடன் – நல்லாருடன்.

68. மால் காட்டி – ஆசை காட்டி. சுகக்கால் காட்டி – இன்பத்தைத் துவக்கிவைத்து.

Koviloor Digital Library



சும்மா இருப்பதுவே சுட்டுஅற்ற பூரணம்என்று
எம்மால் அறிதற்கு எளிதோ பராபரமே. 70

முன்னொடுபின் பக்கம் முடிஅடிநாப் பண்அறநின்
தன்னொடுநான் நிற்பதுஎன்றோ சாற்றாய் பராபரமே. 71

மைவ்வண்ணம் தீர்ந்த மவுனிசொன்னது எவ்வண்ணம்
அவ்வண்ணம் நிஷ்டை அருளாய் பராபரமே. 72

வித்துஅன்றி யாதும் விளைவதுஉண்டோ நின்அருள்ஆம்
சித்துஅன்றி யாங்கள்உண்டோ செப்பாய் பராபரமே. 73

ஆங்காரம் அற்றுஉன் அறிவுஆன அன்பருக்கே
தூங்காத தூக்கம்அது தூக்கும் பராபரமே. 74

சிந்தை அவிழ்ந்துஅவிழ்ந்து சின்மயம்ஆம் நின்அடிக்கே
வந்தவர்க்கே இன்பநிலை வாய்க்கும் பராபரமே. 75

சொல்ஆடா ஊமரைப்போல் சொல்இறந்து நீஆகின்
அல்லால் எனக்குமுக்தி ஆமோ பராபரமே. 76

பேச்சுஆகா மோனம் பிறவா முளைத்ததுஎன்றற்கு
ஆச்சுஆச்சு மேற்பயன்உண் டாமோ பராபரமே. 77

கெட்டிஎன்றுஉன் அன்பர்மலம் கெட்டுஅயர்ந்தோர்
பூரணம்ஆம்
தொட்டிலுக்குள் சேய்போல் துயின்றார் பராபரமே. 78

காட்ட அருள்இருக்கக் காணாது இருள்மலத்து
நாட்டம் எனக்குவரல் நன்றோ பராபரமே. 79

எத்தன்மைக் குற்றம் இயற்றிடினும் தாய்பொறுக்கும்
அத்தன்மை நின்அருளும் அன்றோ பராபரமே. 80

---

70. சுட்டு அற்ற பூரணம் – பொறிகளுக்கு எட்டாத பெரு நிலை. 72. மைவ்வண்ணம் தீர்ந்த – அஞ்ஞான இருள் நீங்கப்பெற்ற. 73. நின் அருள் ஆம் சித்து அன்றி – உன்னுடைய பெருமையாகிய பேரறிவு இன்றி. 74. தூங்காத தூக்கம் – யோகநித்திரை, அறிதுயில். 78. மலம் கெட்டு அயர்ந்தோர் – அஞ்ஞான இருள் நீங்கப்பெற்று ஓய்ந்திருப்பவர்.

Koviloor Digital Library



எத்தனையோ தேர்ந்தாலும் என்னாலே இன்பம்உண்டோ
சித்துஉருவே இன்பச் சிவமே பராபரமே. 81

மண்ணொடுவிண் காட்டி மறைந்துமறை யாஅருளைக்
கண்ணொடுகண் ஆகென்று காண்பேன் பராபரமே. 82

பஞ்சரித்து நின்னைப் பலகால் இரந்ததுஎல்லாம்
அஞ்சல் எனும்பொருட்டே அன்றோ பராபரமே. 83

எங்குஎங்கே பார்த்தாலும் எவ்உயிர்க்கும் அவ்உயிராய்
அங்குஅங்கு இருப்பதுநீ அன்றோ பராபரமே. 84

அனைத்துமாய் நின்றாயே யான்வேறோ நின்னை
நினைக்குமாறு எங்கே நிகழ்த்தாய் பராபரமே. 85

நின்போதத் தாலே நினைப்பும் மறப்பும்என்றால்
என்போதம் எங்கே இயம்பாய் பராபரமே. 86

ஒன்றைநினைந்து ஒன்றைமறந்து ஓடும்மனம் எல்லாம்நீ
என்றுஅறிந்தால் எங்கே இயங்கும் பராபரமே. 87

கொழுந்தில் வயிரம்எனக் கோதுஅறஉள் அன்பில்
அழுந்தும்அவர்க் கேசுகம்உண் டாகும் பராபரமே. 88

பற்றும் பயிர்க்குப் படர்கொழுந்து போல்பருவம்
பெற்றவர்க்கே நின்அருள்தான் பேறுஆம் பராபரமே. 89

யோகியர்க்கே ஞானம் ஒழுங்குஆம்பே ரன்புஆன
தாகியரும் யோகம்முன்னே சார்ந்தோர் பராபரமே. 90

அல்லும் பகலும் அறிவுஆகி நின்றவர்க்கே
சொல்லும் பொருளும் சுமைகாண் பராபரமே. 91

எச்சில்என்று பூவை இகழ்ந்தோர்க்கு உனைப்போற்றப்
பச்சிலையும் கிள்ளப் படுமோ பராபரமே. 92

அந்தக் கரணம் அடங்கத் துறப்பதுவே
எந்தத் துறவினும்நன்று எந்தாய் பராபரமே. 93

83. பஞ்சரித்து – என் தன்மையைப் பலபடக் கூறி.
88. கோது அற – குற்றம் நீங்கப்பெற்று.

Koviloor Digital Library



தன்னை அறிந்தால் தலைவன்மேல் பற்றுஅலது
பின்னைஒரு பற்றும்உண்டோ பேசாய் பராபரமே. 94

அன்பால் கரைந்துகண்ணீர் ஆறுகண்ட புண்ணியருக்கு
உன்பால் வரவழிதான் உண்டோ பராபரமே. 95

தன்னை அறிந்துஅருளே தாரகமா நிற்பதுவே
உன்னை அறிதற்கு உபாயம் பராபரமே. 96

கற்றகலை யால்நிலைதான் காணுமோ காண்பதுஎல்லாம்
அற்றஇடத் தேவெளிஆம் அன்றோ பராபரமே. 97

கண்மூடிக் கண்விழித்துக் காண்பதுஉண்டோ
நின்அருள்ஆம்
விண்மூடின் எல்லாம் வெளிஆம் பராபரமே. 98

நேரே நினதுஅருள்என் நெஞ்சைக் கவரின்ஒன்றும்
பாரேன் சுகமும் படைப்பேன் பராபரமே. 99

வான்காண வேண்டின் மலைஏறல் ஒக்கும்உன்னை
நான்காணப் பாவனைசெய் நாட்டம் பராபரமே. 100

வாதனைவிட்டு உன்அருளின் மன்னின்அல்லால்
வேறும்ஒரு
சாதனைதான் உண்டோநீ சாற்றாய் பராபரமே 101

பார்அகமும் விண்அகமும் பற்றுஆக நிற்பதுஅருள்
தாரகத்தைப் பற்றிஅன்றோ சாற்றாய் பராபரமே. 102

விளக்கும் தகளியையும் வேறுஎன்னார் நின்னைத்
துளக்கம்அற ஜீவன்என்று சொல்வார் பராபரமே. 103

பார்ஆதி நீயாப் பகர்ந்தால் அஹம்எனவும்
ஆராயும் ஜீவனும்நீ ஆம்காண் பராபரமே. 104

பொய்யைப்பொய் என்றுஅறியும் போதத்துக்கு ஆதரவுஉன்
மெய்அருளே அன்றோ விளம்பாய் பராபரமே. 105

---

96. தாரகமா – ஆதாரமாக. 102. அருள்தாரகத்தை – திருவருளாகிய ஆதாரத்தினை. 103. துளக்கம்அற – கலக்கமற.

Koviloor Digital Library



வருவான்வந் தேன்எனல்போல் மன்னிஅழி யும்ஜகத்தைத்
தெரிவுஆக இல்லைஎன்ற தீரம் பராபரமே. 106

மாயா ஜகம்இலையேல் மற்றுஎனக்குஓர் பற்றும்இலை
நீயேநான் என்றுவந்து நிற்பேன் பராபரமே. 107

வான்ஆதி நீஎனவே வைத்தமறை என்னையும்நீ
தான்ஆகச் சொல்லாதோ சாற்றாய் பராபரமே. 108

வெள்ளக் கருணைமத வேழம்ஆம் நின்அருட்குஎன்
கள்ளக் கருத்தே கவளம் பராபரமே. 109

வண்டாய்த் துவண்டு மவுன மலர்அணைமேல்
கொண்டார்க்கோ இன்பம் கொடுப்பாய் பராபரமே. 110

மாயைமுதல் ஆம்வினைநீ மன்உயிர்நீ மன்உயிர்தேர்ந்து
ஆயும்அறிவு ஆனதுநீ அன்றோ பராபரமே. 111

என்அறிவும் யானும்எனது என்பதுவும் ஆம்இவைகள்
நின்னவையே அன்றோ நிகழ்த்தாய் பராபரமே. 112

பார்அறியாது அண்டப் பரப்புஅறியாது உன்பெருமை
யார்அறிவார் நானோ அறிவேன் பராபரமே. 113

அண்டம் அனைத்திலுமாய் அப்பாலுக்கு அப்பாலும்
கொண்டநின்னை யார்அறிந்து கொள்வார் பராபரமே. 114

ஒப்புஉயர்வு ஒன்றும்இன்றி ஒலிபுகா மோனவட்டக்
கப்பலுக்குஆம் வான்பொருள் நீ கண்டாய் பராபரமே. 115

என்போல் எளியவரும் எங்குஎங்கும் பார்த்தாலும்
உன்போல் வலியவரும் உண்டோ பராபரமே. 116

பார்க்கின் அண்டபிண்டப் பரப்புஅனைத்தும் நின்செயலே
யார்க்கும் செயல்இலையே ஐயா பராபரமே. 117

ஒன்றே பலவே உருவே அருவேயோ
என்றே அழைப்பதுஉன்னை என்றோ பராபரமே. 118

செப்புவதுஎல் லாம்ஜெபம்நான் சிந்திப்பது
எல்லாம்நின்
ஒப்புஇல் தியானம் என ஓர்ந்தேன் பராபரமே. 119

Koviloor Digital Library



ஆர்இருந்துஎன் ஆர்போய்என் ஆர்அமுதுஆம் நின்அருளின்
சீர்இருந்தால் உய்வேன் சிவமே பராபரமே. 120

வஞ்சநமன் வாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கும்
அஞ்சி உனைஅடைந்தேன் ஐயா பராபரமே. 121

எந்தப் படிஉன் இதயம் இருந்ததுஎமக்கு
அந்தப் படிவருவது அன்றோ பராபரமே. 122

எந்தெந்த நாளும் எனைப்பிரியாது என்உயிராய்ச்
சிந்தைகுடி கொண்டஅருள் தேவே பராபரமே. 123

அஞ்சல்அஞ்சல் என்றுஅடிமைக்கு அப்போதைக்கு அப்போதே
நெஞ்சில் உணர்த்தும் நிறைவே பராபரமே. 124

என்னைஉந்தன் கைக்குஅளித்தார் யாவர்என்னை யான்கொடுத்துப்
பின்னைஉன்னால் பெற்றநலம் பேசேன் பராபரமே. 125

வாய்பேசா ஊமைஎன வைக்கஎன்றோ நீமவுனத்
தாய்ஆக வந்துஅருளைத் தந்தாய் பராபரமே. 126

தன்னைத்தந்து என்னைத் தடுத்துஆண்ட நின்கருணைக்கு
என்னைக்கொண்டு என்னபலன் எந்தாய் பராபரமே. 127

மார்க்கண்டர்க்கு ஆக மறலிபட்ட பாட்டைஉன்னிப்
பார்க்கின்அன் பர்க்குஎன்ன பயங்காண் பராபரமே. 128

சுட்டிஉண ராமல் துரியநிலை யாய்வெளியில்
விட்டநின்னை யானோ வியப்பேன் பராபரமே. 129

தூதுஒன்றும் இன்றிஎன்னைச் சும்மா இருக்கவைத்தாய்
ஈதுஒன்றும் போதாதோ இன்பம் பராபரமே 130

வாய்ஒன்றும் பேசா மவுனியாய் வந்துஆண்ட
தேஒன்றும் போதாதோ இன்பம் பராபரமே. 131

---

120. சீர்இருந்தால் உய்வேன் – ஆதரவு இருந்தால் பிழைப்பேன்.

Koviloor Digital Library



என்றும் இருந்தபடிக்கு என்னை எனக்குஅளித்தது
ஒன்றும்போ தாதோ உரையாய் பராபரமே. 132

எண்திசைக்கீழ் மேல்ஆன எல்லாம் பெருவெளியாக்
கண்டஇடத்து என்னையும்நான் கண்டேன் பராபரமே. 133

பித்தனைஏ தும்அறியாப் பேதையனை ஆண்டஉனக்கு
எத்தனைதான் தெண்டன் இடுவேன் பராபரமே. 134

தாயர்கர்ப்பத் தூடு அனமும் தண்ணீரும் தந்துஅருளும்
நேயஉனை யாரே நினையார் பராபரமே. 135

விரிந்த மனம்ஒடுங்கும் வேளையில்நான் ஆகப்
பரந்தஅருள் வாழி பதியே பராபரமே. 136

சிந்தனைபோய் நான்எனல்போய்த் தேக்கஇன்பமாமழையை
வந்து பொழிந்தனைநீ வாழி பராபரமே. 137

தந்தேனே ஓர்வசனம் தந்தபடிக்கு இன்பமுமாய்
வந்தேனே என்தனைநீ வாழி பராபரமே. 138

மண்ணும்விண்ணும் வந்து வணங்காவோ நின்அருளைக்
கண்ணுறஉள் கண்டவரைக் கண்டால் பராபரமே. 139

என்றும் கருணைபெற்ற இன்பத் தபோதனர்சொல்
சென்றசென்ற திக்குஅனைத்தும் செல்லும் பராபரமே. 140

ஆடுவதும் பாடுவதும் ஆனந்தம் ஆகநின்னைத்
தேடுவதும் நின்அடியார் செய்கை பராபரமே. 141

பொங்கியநின் தண்அருளைப் புஷ்கலமாப் பெற்றவர்கட்கு
எங்குஎழுந்துஎன் ஞாயிறு இயம்பாய் பராபரமே. 142

பாலரொடு பேயர்பித்தர் பான்மைஎன நிற்பதுவே
சீலம்மிகு ஞானியர்தம் செய்கை பராபரமே. 143

உண்டுஉடுத்துப் பூண்டுஇங்கு உலகத்தார் போல்திரியும்
தொண்டர்விளை யாட்டே சுகம்காண் பராபரமே. 144

---

142. புஷ்கலமா - நிறைவாக.

Koviloor Digital Library



கங்குல்பகல் அற்றதிருக் காட்சியர்கள் கண்டவழி
எங்கும் ஒருவழியே எந்தாய் பராபரமே. 145

காயம்நிலை அல்லஎன்று காண்பார் உறங்குவரோ
தூயஅருள் பற்றாத் தொடர்வார் பராபரமே. 146

அப்பும்உப்பும் போன்ற அயிக்கியபரா னந்தர்தமக்கு
ஒப்புஉவமை சொல்லவும்வாய் உண்டோ பராபரமே. 147

சித்தம் தெளிந்து சிவம்ஆனோர் எல்லோர்க்கும்
கொத்தடிமை ஆன குடிநான் பராபரமே. 148

தம்உயிர்போல் எவ்வுயிரும் தான்என்று தண்அருள்கூர்
செம்மையருக்கு ஏவல்என்று செய்வேன் பராபரமே. 149

விண்ணுக்கும் விண்ஆகி மேவும்உனக்கு யான்பூஜை
பண்ணிநிற்கும் ஆறு பகராய் பராபரமே. 150

நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்அன்பே
மஞ்சனநீர் பூஜைகொள்ள வாராய் பராபரமே. 151

கெட்டவழி ஆணவப்பேய் கீழ்ஆக மேல்ஆன
சிஷ்டர் உனைப்பூஜை செய்வார் பராபரமே. 152

கால்பிடித்து மூலக் கனலைமதி மண்டலத்தின்
மேல்எழுப்பில் தேகம் விழுமோ பராபரமே. 153

பஞ்சசுத்தி செய்துநின்னைப் பாவித்துப் பூஜைசெய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே. 154

அன்பர்பணி செய்யஎனை ஆள்ஆக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே. 155

மூர்த்திதலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்குஓர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே. 156

---

148. கொத்தடிமைஆன – வழிவழி அடிமையான.
153. கால் பிடித்து – பிராணாயாமம் செய்து.
154. பஞ்சசுத்தி செய்து – பூத சுத்தி, உடல் சுத்தி, திரவிய சுத்தி, ஆத்ம சுத்தி, மந்திர சுத்தி ஆகிய ஐவகைச் சுத்திகள் செய்து. விஞ்சிய ஞானம் – பரஞானம்.

Koviloor Digital Library



விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே. 157

தானம் தவம்தருமம் சந்ததமும் செய்வர்சிவ
ஞானம் தனைஅணைய நல்லோர் பராபரமே. 158

சொன்னத்தைச் சொல்லித் துடிக்கின்ற ஆணவப் பேய்க்கு
இன்னல் வருவதுஎந்நாள் எந்தாய் பராபரமே. 159

இன்றோ இருவினைவந்து ஏறியது நான்என்றோ
அன்றே விளைந்ததுஅன்றோ ஆற்றேன் பராபரமே. 160

எண்ணமும்தான் நின்னைவிட இல்லைஎன்றால் யான்முனமே
பண்ணவினை ஏது பகராய் பராபரமே. 161

என்னைஇன்னது என்றுஅறியா ஏழைக்கும் ஆகெடுவேன்
முன்னைவினை கூடல் முறையோ பராபரமே. 162

அறியாநான் செய்வினையை ஐயாநீ கூட்டும்
குறிஏது எனக்குஉளவு கூறாய் பராபரமே. 163

என்னைக் கெடுக்க இசைந்த இருவினைநோய்
தன்னைக் கெடுக்கத் தகாதோ பராபரமே. 164

வல்லமையே காட்டுகின்ற மாமாயை நான்ஒருவன்
இல்லைஎனின் எங்கே இருக்கும் பராபரமே. 165

முக்குணத்தால் எல்லாம் முளைக்கப் பிரகிருதிக்கு
இக்குணத்தை நல்கியதுஆர் எந்தாய் பராபரமே. 166

ஆற்றப் படாதுதுன்பம் ஐயஎன்னால் என்மனது
தேற்றப் படாது இனிஎன் செய்வேன் பராபரமே. 167

பூராய மாய்மனதைப் போக்கஅறி யாமல்ஐயோ
ஆராய் அலைந்தேன் அரசே பராபரமே. 168

---

159. இன்னல் வருவது – அழிந்து பட்டுப்போவது.
168. பூராயமாய் – படிப்படியாக. ஆராய் அலைந்தேன் – படாதபாடு பட்டேன்.

Koviloor Digital Library



சினம்இறக்கக் கற்றாலும் சித்திஎல்லாம் பெற்றாலும்
மனம்இறக்கக் கல்லார்க்கு வாய்ஏன் பராபரமே. 169

வாதுக்கு வந்துஎதிர்த்த மல்லரைப்போல் பாழ்த்தமனம்
ஏதுக்குக் கூத்துஆடுது எந்தாய் பராபரமே. 170

சூதுஆடு வார்போல் துவண்டு துவண்டுமனம்
வாதாடின் என்னபலன் வாய்க்கும் பராபரமே. 171

கொள்ளித்தேள் கொட்டிக் குதிக்கின்ற பேய்க்குரங்காய்க்
கள்ளமனம் துள்ளுவதுஎன் கண்டாய் பராபரமே. 172

வந்ததையும் போனதையும் வைத்துவைத்துப் பார்த்துஇருந்தால்
சிந்தை ஹிதம்அஹிதம் சேரும் பராபரமே. 173

ஏறுமயிர்ப் பாலம்உணர்வு இந்தவிஷ யங்கள்நெருப்பு
ஆறுஎனவும் நன்றாய் அறிந்தேன் பராபரமே. 174

பொறிவழியே ஏழை பொறியாய் உழல்வதுநின்
அறிவின் விதித்தவிதி ஆமோ பராபரமே. 175

பாசஜா லங்கள்எல்லாம் பற்றுவிட ஞானவைவாள்
வீசுநாள் எந்நாள் விளம்பாய் பராபரமே. 176

எந்தஉட லேனும் எடுத்தஉடல் நல்லதுஎன்று
சிந்தைசெய வந்ததிறம் செப்பாய் பராபரமே. 177

பொய்எல்லாம் ஒன்றாப் பொருத்திவைத்த பொய்உடலை
மெய்என்றால் மெய்யாய் விடுமோ பராபரமே. 178

மின்அனைய பொய்உடலை மெய்என்று நம்பிஐயோ
நின்னை மறக்கை நெறியோ பராபரமே. 179

நித்தியம்ஒன்று இல்லாத நீர்க்குமிழி போன்றஉடற்கு
இத்தனைதான் துன்பம்உண்டோ என்னே பராபரமே. 180

தேகம்இறும் என்றுஜடர் தேம்புவதுஎன் நித்திரையில்
ஊகம்அறிந் தால்பயம்தான் உண்டோ பராபரமே. 181

---

173. ஹிதம் அஹிதம்–நல்வினை தீவினைகள். 176. ஞான வை வாள் – ஞானமாகிய கூர்மையான வாளாயுதம். 181. தேகம் இறும் – உடல் அழியும்.

Koviloor Digital Library



ஏதைச் சுமையா எடுப்பார் எடுத்தஉடல்
சேதம்உறின் யாதுபின்னே செல்லும் பராபரமே. 182

தோல்பாவை நாலாள் சுமைஆகும் ஜீவன்ஒன்றுஇங்கு
ஆர்ப்பால் எடுத்ததுஎவ ராலே பராபரமே. 183

ஞாலத்தை மெய்எனவே நம்பிநம்பி நாளும்என்தன்
காலத்தைப் போக்கிஎன்ன கண்டேன் பராபரமே. 184

பொய்உலக வாழ்க்கைப் புலைச்சேரி வாதனைநின்
மெய்அருளில் மூழ்கின் விடும்காண் பராபரமே. 185

நூல்ஏணி விண்ஏற நூற்குப் பருத்திவைப்பார்
போலே கருவிநன்னூல் போதம் பராபரமே. 186

சின்னஞ் சிறியார்கள் செய்தமணல் சோற்றைஒக்கும்
மன்னும் கலைஞான மார்க்கம் பராபரமே. 187

வாசகஞா னத்தால் வருமோ சுகம்பாழ்த்த
பூசல்என்று போமோ புகலாய் பராபரமே. 188

கேட்டதையே சொல்லும் கிளிபோல நின்அருளின்
நாட்டம்இன்றி வாய்பேசல் நன்றோ பராபரமே. 189

வெளியாய் அருளில் விரவும்அன்பர் தேகம்
ஒளியாய்ப் பிறங்கியதும் உண்டோ பராபரமே. 190

காலம்ஒரு மூன்றும் கருத்தில்உணர்ந் தாலும்அதை
ஞாலம் தனக்குஉரையார் நல்லோர் பராபரமே. 191

கொல்லா விரதம்ஒன்று கொண்டவரே நல்லோர்மற்று
அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே. 192

---

183. தோல் பாவை – தோலினால் செய்த பொம்மை, உடல்.

184. ஞாலத்தை – உலகத்தை.

186. கருவி நன்னூல் போதம் – இலக்கண நூலும் ஏனைய சாத்திரங்களும் கூறும் ஞானத்தைக்கொண்டு முக்தி அடையலாம் என்பது.

190. விரவும் அன்பர் – ஒன்றுபடுகின்ற யோகிகள். ஒளியாய்ப் பிறங்கியதும் – பிரகாசமாகத் தோன்றியதும்.

Koviloor Digital Library



இல்லாத காரியத்தை இச்சித்துச் சிந்தைவழி
செல்லாமை நல்லோர் திறம்காண் பராபரமே. 193

ஏதுவந்தும் ஏதுஒழிந்தும் என்னதுயான் என்னார்கள்
போதநிலை கண்ட புலத்தோர் பராபரமே. 194

ஆயிரம்சொன் னாலும் அறியாத வஞ்சநெஞ்சப்
பேயரொடு கூடின் பிழைகாண் பராபரமே. 195

மாய மயக்குஒழிந்தார் மற்றுஒன்றை நாடுவரோ
நேய அருள்நிலையில் நிற்பார் பராபரமே. 196

நித்திரையில் செத்தபிணம் நேரும்உடற்கு இச்சைவையாச்
சுத்தர்களே நல்ல துறவோர் பராபரமே. 197

எந்நெஞ்ச மேனும் இரங்குமே நின்அருட்குக்
கல்நெஞ் சரும்உளரோ காட்டாய் பராபரமே. 198

மந்தஅறிவு ஆகிஇன்பம் வாயாது இருந்துஅலைந்தால்
சிந்தைமயங் காதோஎன் செய்வேன் பராபரமே. 199

தேடினேன் திக்குஅனைத்தும் தெண்டனிட்டேன்
சிந்தைநைந்து
வாடினேன் என்மயக்கம் மாற்றாய் பராபரமே. 200

மடிமைஎனும் ஒன்றை மறுத்துஅன்றோ என்னை
அடிமைகொளல் வேண்டும் அரசே பராபரமே. 201

காலர்பயம் தீரஇன்பக் காற்குஅபயம் என்றுஎழுந்த
மாலை வளர்த்தனையே வாழி பராபரமே. 202

நீர்ப்புற் புதமாய் நினைவுஅருட்கே நின்றுஅழியப்
பார்ப்பதுஅல்லால் வேறும்ஒன்றைப் பாரேன்
பராபரமே. 203

நீர்க்குமிழி போல்என் நினைவுவெளி யாய்க்கரையப்
பார்க்கும்இடம் எல்லாம்என் பார்வை பராபரமே. 204

201. மடிமை – சோம்பல். 202. மாலைவளர்த்தனையே – ஆசையைப் பெருக்கினையே. 203. நீர்ப்புற்புதமாய் – நீர்க்குமிழியினை ஒத்த.

Koviloor Digital Library



ஆடிஓய் பம்பரம்போல் ஆசையுடன் எங்கும்உனைத்
தேடிஓய் கின்றேன்என் செய்வேன் பராபரமே. 205

வேதாந்தம் சித்தாந்தம் வேறுஎன்னார் கண்களிக்கும்
நாதாந்த மோன நலமே பராபரமே. 206

ஆனந்தம் ஆனநின்னை அன்றிஒன்றை உன்னாத
மோனம் தமியேற்கு முக்தி பராபரமே. 207

ஏதுக்கும் உன்னைவிட இல்லைஎன்றால் என்கருத்தைச்
சோதிக்க வேண்டாம்நான் சொன்னேன் பராபரமே. 208

முக்தியிலும் தேகமிசை மூவிதம்ஆம் சித்திபெற்றோர்
எத்தனைபேர் என்றுஉரைப்பது எந்தாய் பராபரமே. 209

நீஅன்றி நான்ஆர் நினைவுஆர்என் நெஞ்சகம்ஆர்
தாய்அன்றிச் சூலும்உண்டோ சாற்றாய் பராபரமே. 210

அங்கமே நின்வடிவம் ஆனசுகர் கூப்பிடநீ
எங்கும்ஏன் ஏன்என்றது என்னே பராபரமே. 211

கொள்ளைவெள்ளத் தண்அருள்மேல் கொண்டுசுழித்து
ஆர்த்துஇழுத்தால்
கள்ளமனக் கப்பல்எங்கே காணும் பராபரமே. 212

எக்கலையும் கற்றுஉணர்ந்தோம் என்றவர்க்கும்
சம்மதம்சொல்
வக்கணையால் இன்பம் வருமோ பராபரமே. 213

கல்எறியப் பாசி கலைந்துநன்னீர் காணும்நல்லோர்
சொல்உணரின் ஞானம்வந்து தோன்றும் பராபரமே. 214

நின்னைஉணர்ந் தோர்கடமை நிந்தித்த பேய்அறிஞர்
என்ன கதிபெறுவார் எந்தாய் பராபரமே. 215

என்னதுயான் என்னல்அற்றோர் எங்குஇருந்து
பார்க்கினும்நின்
சன்னிதிஆம் நீபெரிய சாமி பராபரமே. 216

215. பேய்அறிஞர் – புல்லறிவாளர்.

Koviloor Digital Library



சோற்றுத் துருத்திச் சுமைசுமப்பக் கண்பிதுங்கக்
காற்றைப் பிடித்துஅலைந்தேன் கண்டாய் பராபரமே. 217

உள்ளபடி ஒன்றை உரைக்கின்அவர்க்கு உள்உறவாய்க்
கள்ளம்இன்றி அன்பாய்க் களிப்பேன் பராபரமே. 218

அடுத்தஇயல்பு ஆகஒன்றை யான்பகர்வது அல்லால்
தொடுத்ததுஒன்றை யான்வேண்டிச் சொல்லேன்
பராபரமே. 219

உள்ளம்அறி யாதுஒருவர் ஒன்றைஉன்னிப் பேசில்ஐயோ
துள்ளிஇளங் கன்றாய்த் துடிப்பேன் பராபரமே. 220

எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறுஒன்று அறியேன் பராபரமே. 221

முன்னாள்மெய்ஞ் ஞான முனிவர்தவம் ஈட்டுதல்போல்
இந்நாளில் காணஎனக்கு இச்சை பராபரமே. 222

கன்மம்என்பது எல்லாம் கரிசுஅறவே மெய்ஞ்ஞான
தன்மநிலை சார்ந்ததுஅன்பர் தன்மை பராபரமே. 223

கண்துயிலாது என்அறிவின் கண்ணூடே காட்சிபெற
மண்டிய பேரொளிநீ வாழி பராபரமே. 224

நான்ஆன தன்மைஎன்றும் நாடாமல் நாடஇன்ப
வான்ஆகி நின்றனைநீ வாழி பராபரமே. 225

அகத்தூடு அணுஅணுவாய் அண்டம்எல்லாம் தானாய்
மகத்துஆகி நின்றனைநீ வாழி பராபரமே. 226

கார்அகம்ஆம் கர்ப்பஅறைக் கண்ணூடும் என்கண்ணே
வாரம்வைத்துக் காத்தனைநீ வாழி பராபரமே. 227

---

218. உள்உறவாய் – நெருங்கிய சுற்றமாய். 219. அடுத்த இயல்புஆக – உண்மைக்கு ஒத்தபடி. தொடுத்தது ஒன்றை – கற்பித்த ஒன்றை. 223. கரிசுஅறவே – குற்றம் நீங்க. தன்மநிலை – நன்னெறியை. 225. நான் ஆனதன்மை – ஆன்ம அறிவு. 227. கார் அகம்ஆம் கர்ப்ப அறைக் கண்ணூடும் – இருள் சூழ்ந்த கர்ப்பத்தினுள்ளும். வாரம் வைத்து – அன்பு வைத்து.

Koviloor Digital Library



புரந்தோர்தம் தேசம்என்பார் பூமியைப்போர் ஆடி
இறந்தோரும் தம்மதுஎன்பார் என்னே பாராபரமே. 228

மூர்த்திஎல்லாம் வாழிஎங்கள் மோனகுரு வாழிஅருள்
வார்த்தைஎன்றும் வாழிஅன்பர் வாழி பராபரமே. 229

சொல்லும் பொருளும் தொடரா அருள்நிறைவில்
செல்லும் படிக்குஅருள்நீ செய்தாய் பராபரமே. 230

இற்றைவரைக்கு உள்ஆக எண்ணரிய சித்திமுக்தி
பெற்றவர்கள் எத்தனைபேர் பேசாய் பராபரமே. 231

நாடும்நக ரும்நிசான் நாட்டிய பாளயமும்
ஈடுசெயு மோமுடிவில் எந்தாய் பராபரமே. 232

தேடும் திரவியமும் சேர்ந்தமணிப் பெட்டகமும்
கூட வரும்துணையோ கூறாய் பராபரமே. 233

தேடாத தேட்டினரே செங்கைத் துலாக்கோல்போல்
வாடாச் சமன்நிலையில் வாழ்வார் பராபரமே. 234

நீராய்க் கசிந்துஉருகி நெட்டுயிர்த்து நின்றேனைப்
பாராதது என்னோ பகராய் பராபரமே. 235

உள்ள பொருள்ஆவி உடல்மூன்றும் அன்றேதான்
கொள்ளைகொண்ட நீஎன் குறைதீர் பராபரமே. 236

ஆழ்ந்தாயே இவ்உலகில் அல்லல்எல்லாம் தீர்ந்துஅருளால்
வாழ்ந்தாயே என்றனைநீ வாழி பராபரமே. 237

தாரா அருளைஎல்லாம் தந்துஎனையும் நின்அருளில்
வாராயோ என்றனைநீ வாழி பராபரமே. 238

ஆசைஉன்மீது அல்லால் அருள்அறிய வேறும்ஒன்றில்
பாசம்வையேன் நின்கருணைப் பாங்கால் பராபரமே. 239

---

228. புரந்தோர் – பூமியை ஆண்டவர்கள்.

232. நிசான் நாட்டிய பாளயமும் – அடையாளமிட்ட சேனையும்.

234. தேடாத தேட்டினரே – புறஉலகில் பெறமுடியாத அருளைப்பெற்றவர்களே.

Koviloor Digital Library



ஆதிஅந்தம் நீகுருவாய் ஆண்டதுஅல்லால் நின்னைஅன்றிப்
போதனையும் உண்டோ புகலாய் பராபரமே. 240

தான்ஆக வந்து தடுத்துஆண்டு எனைஇன்ப
வான்ஆகச் செய்தஇன்ப வானே பராபரமே. 241

பற்றுஅற்று இருக்கும்நெறி பற்றின் கடல்மலையும்
சுற்ற நினைக்கும்மனம் சொன்னேன் பராபரமே. 242

படிப்புஅற்றுக் கேள்விஅற்றுப் பற்றுஅற்றுச் சிந்தைத்
துடிப்புஅற்றார்க்கு அன்றோ சுகம்காண் பராபரமே. 243

சத்துஆகி நின்றோர் ஜடங்கள் இலிங்கம்என
வைத்தாரும் உண்டேஎன் வாழ்வே பராபரமே. 244

சித்த நிருவிகற்பம் சேர்ந்தார் உடல்தீபம்
வைத்தகர்ப்பூ ரம்போல் வயங்கும் பராபரமே. 245

ஆதிகா லத்தில்எனை ஆண்டனையே இப்பால்நீ
போதிஎனில் எங்கேநான் போவேன் பராபரமே. 246

நாவமுத்தும் சொல்மலரோ நாள்உதிக்கும் பொன்மலரோ
தேவைஉனக்கு இன்னதுஎன்று செப்பாய் பராபரமே. 247

கன்னல்தரும் பாகாய்க் கருப்புவட்டாய்க் கற்கண்டாய்
இன்னமுதாய் என்உள் இருந்தாய் பராபரமே. 248

சிற்பரமே தற்பரமே தெய்வச் சுருதிசொன்ன
அற்புதமே அன்பே அறிவே பராபரமே. 249

அறிவிப்பான் நீஎன்றால் ஐம்புலம்க டந்து!அந்
நெறிநிற்பார் யாரே நிகழ்த்தாய் பராபரமே. 250

அந்தக் கரணம்எனும் ஆகாத பேய்கள்எனை
வந்துபிடித்து ஆட்ட வழக்கோ பராபரமே. 251

ஐவரொடும் கூடாமல் அந்தரங்க சேவைதந்த
தெய்வ அறிவே சிவமே பராபரமே. 252

---

240. போதனையும் உண்டோ – உணர்வும் உளதோ. 241. இன்பவான் ஆகச் செய்த – பரவெளிப் பேரானந்த மாகச் செய்த. 252. ஐவரொடும் கூடாமல் – ஐம்பொறி களுடன் சேராதிருந்து.

Koviloor Digital Library



அருள்ஆகி நின்றசுகம் ஆகாமல் ஐயோ
இருள்ஆகி நிற்க இயல்போ பராபரமே. 253

அன்பர்எல்லாம் இன்பம் அருந்திடவும் யான்ஒருவன்
துன்புறுதல் நன்றோநீ சொல்லாய் பராபரமே. 254

சந்ததமும் நின்கருணை சாற்றுவதுஅல் லால்வேறு
சிந்தை அறியேன்உன் சித்தம் பராபரமே. 255

நான்நான் எனக்குளறும் நாட்டத்தால் என்னைவிட்டுப்
போனாலும் உன்னைவிட்டுப் போகேன் பராபரமே. 256

இக்காயம் பொய்என்றோர் ஈட்டத்து உனக்குஅபயம்
புக்காதார் உண்டோ புகலாய் பராபரமே. 257

தான்ஆதல் பூரணமே சாரும்இடம் உண்டுஉயிரும்
வான்ஆதி யும்ஒழுங்காய் மன்னும் பராபரமே. 258

உன்னும்மனம் கர்ப்பூர உண்டைபோ லேகரைய
மின்னும்ஆ னந்த விளக்கே பராபரமே. 259

நாள்பட்டு அலைந்த நடுக்கம்எலாம் தீரஉனக்கு
ஆள்பட்டும் துன்பம்எனக்கு ஆமோ பராபரமே. 260

பாவிபடும் கண்கலக்கம் பார்த்தும்இரங் காதுஇருந்தால்
ஆவிக்கு உறுதுணையார் ஐயா பராபரமே. 261

நின்நிறைவே தாரகமாய் நின்றுசுகம் எய்தாமல்
என்நிறைவே பாவித்தேன் என்னே பராபரமே. 262

நின்னைச் சரண்புகுந்தால் நீகாக்கல் வேண்டும்அல்லால்
என்னைப் புறம்விடுதல் என்னே பராபரமே. 263

மாறாத துன்பம்எல்லாம் வந்துஉரைத்தால் நின்செவியில்
ஏறாத வாறுஏது இயம்பாய் பராபரமே. 264

---

257. ஈட்டம் – கூட்டம். புக்காதார் – புகாதவர்.
265. விஞ்சு புலப்பாடு அனைத்தும் – மேலான விவேகத்தை எல்லாம். வீறுதுன்பம் – பெருந்துன்பமாக. அஞ்சுபுல வேடருக்கும் – ஐம்பொறிகளாகிய குறும்புக் காரருக்கும்.

Koviloor Digital Library



விஞ்சுபுலப் பாடுஅனைத்தும் வீறுதுன்பம் செய்யவந்த
அஞ்சுபுல வேடருக்கும் ஆற்றேன் பராபரமே. 265

கன்னம் கரியநிறக் காமாதி ராக்ஷசப்பேய்க்கு
என்னைஇலக்கு ஆகவைத்தது என்னே பாராபரமே. 266

சித்திநெறி கேட்டல் ஜெகமயக்கம் ஜன்மம்அற
முக்திநெறி கேட்டல் முறைகாண் பராபரமே. 267

சிந்தை சிதையச் சிதையாத ஆனந்தம்
எந்தவகை யாலேவந்து எய்தும் பராபரமே. 268

கூர்த்தஅறி வால்அறியக் கூடாது எனக்குரவன்
தேர்த்தபடி தானே திரிந்தேன் பராபரமே. 269

பக்தர் அருந்தும் பரமசுகம் யான்அருந்த
எத்தனைநாள் செல்லும் இயம்பாய் பராபரமே. 270

தீரத்தி னால்துறவு சேராமல் இவ்வுலகில்
பாரத் தனம்பேசல் பண்போ பராபரமே. 271

இந்த வெளியினைஉண்டு ஏப்பம்இடப் பேரறிவாத்
தந்தவெளிக் கேவெளியாய்ச் சார்ந்தேன் பராபரமே. 272

உணர்த்தும்உனை நாடாது உணர்ந்தவையே நாடி
இணக்குறும்என் ஏழைமைதான் என்னே பராபரமே. 273

உண்டுபோல் இன்றாம் உலகைத் திரம்எனஉள்
கொண்டுநான் பெற்றபலன் கூறாய் பராபரமே. 274

உள்ளபடி யாதும்என உற்றுஉணர்ந்தேன் அக்கணமே
கள்ளமனம் போனவழி காணேன் பராபரமே. 275

266. கன்னம்கரிய – அஞ்ஞான இருள் சூழ்ந்த.

269. கூர்த்த அறிவால் – வெறும் ஆன்ம அறிவால். தேர்த்தபடிதானே திரிந்தேன் – தெளிவித்த வண்ணமே தெரிந்துகொண்டேன்.

271. பாரத்தனம் பேசல் – தற்பெருமை பேசுதல்.

273. இணக்குறும் – இசைவு பூணுகிற.

274. உண்டு போல் இன்றாம் – இருப்பது போல் தோன்றி இல்லாமல் அழியும்.

Koviloor Digital Library



சித்தம் மவுனம் செயல்வாக்கு எலாம்மவுனம்
சுத்த மவுனம்என்பால் தோன்றின் பராபரமே. 276

எண்ணில்பல கோடிஉயிர் எத்தனையோ அத்தனைக்கும்
கண்ணில் கலந்தஅருள் கண்ணே பராபரமே. 277

எனக்குஇனியார் உன்போலும் இல்லைஎன்றால் யானும்
உனக்குஇனியான் ஆகா உளவுஏன் பராபரமே. 278

அண்டபிண்டம் காணேன் அகமும் புறமும்ஒன்றாக்
கண்டஎன்னை நீகலந்த காலம் பராபரமே. 279

எத்தனையோ கோடி எடுத்துஎடுத்துச் சொன்னாலும்
சித்தம் இரங்கிலைஎன் செய்வேன் பராபரமே. 280

அன்றுஅந்த நால்வருக்கும் அற்புதமாய் நீஉரைத்தது
ஒன்றுஅந்த வார்த்தைஎனக்கு உண்டோ பராபரமே. 281

அப்பன்என்றும் அன்னைஎன்றும் ஆரியன்என்றும்உனையே
செப்புவதும் உன்நிலையின் சீர்காண் பராபரமே. 282

கட்டும் கனமும்அந்தக் காலர்வரும் போதுஎதிர்த்து
வெட்டும் தளமோ விளம்பாய் பராபரமே. 283

பேசாத மோனநிலை பெற்றுஅன்றோ நின்அருள்ஆம்
வாசாம் அகோசரந்தான் வாய்க்கும் பராபரமே. 284

கற்றாலும் கேட்டாலும் காயம்அழி யாதசித்தி
பெற்றாலும் இன்பம்உண்டோ பேசாய் பராபரமே. 285

கண்டவடிவு எல்லாம் கரைக்கின்ற அஞ்சனம்போல்
அண்டம்எல்லாம் நின்அருளே அன்றோ பராபரமே. 286

278. உளவு ஏன்? – காரணம் யாது? 281. உரைத்தது ஒன்று – உபதேசித்த சிவோகம் என்னும் மகாவாக்யம். 282. ஆரியன் என்றும் – நிறைவு அடைந்தவன் என்றும். 283. தளமோ – சேனையாகுமோ. 284. வாசாம்அகோசரந்தான் – பேச்சைத் தாண்டிய நிலை. 286. அஞ்சனம் போல் – நீண்டியதைத் தன்மயம் ஆக்கவல்ல அஞ்சனம் போல.

Koviloor Digital Library



தன்செயலால் ஒன்றும்இலை தான்என்றால் நான்பாவி
நின்செயலாய் நில்லா நினைவுஏன் பராபரமே. 287

கொலைகளவு கள்காமம் கோபம்விட்டால் அன்றோ
மலைஇலக்கா நின்அருள்தான் வாய்க்கும் பராபரமே. 288

தன்னைஅறி யாதுஐகம் தானாய் இருந்துவிட்டால்
உன்னை அறியஅருள் உண்டோ பராபரமே. 289

ஒன்றுஇரண்டுஎன்று உன்னா உணர்வுகொடுத்து உள்ளபடி
என்றும்என்னை வையாய் இறையே பராபரமே. 290

கருதும்அடி யார்கள்உளம் காணவெளி ஆகும்
துரியநிறைவு ஆன சுகமே பராபரமே. 291

பொய்குவித்த நெஞ்சன்அருள் பொற்புஅறிந்து திக்குஅனைத்தும்
கைகுவித்து நிற்பதுஎந்தக் காலம் பராபரமே. 292

அத்வைதம் ஆன அயிக்ய அனுபவமே
சுத்தநிலை அந்நிலையார் சொல்வார் பராபரமே. 293

வைத்த சுவர்அலம்பின் மண்போமோ மாயையினோர்க்கு
எத்தனைபோ தித்தும்என் ஆம் எந்தாய் பராபரமே. 294

பூட்டுஅற்றுத் தேகம்அற்றுப் போகும்முன்னே நின்அருளைக்
காட்டத் தகாதோஎன் கண்ணே பராபரமே. 295

சொல்லில் பதர்களைந்து சொல்முடிவு காணாதார்
நெல்லில் பதர்போல நிற்பார் பராபரமே. 296

அழுக்காற்றால் நெஞ்சம் அழுங்கியபுன் மாக்கள்
இழுக்காற்றால் இன்பநலம் எய்தார் பராபரமே. 297

தேகாதி பொய்எனவே தேர்ந்தஉப சாந்தருக்கு
மோகாதி உண்டோ மொழியாய் பராபரமே. 298

---

289. ஐகம் தானாய் இருந்துவிட்டால்—மயக்கத்தால் உலகமயமாய் அதில் மூழ்கிவிட்டால். 295. பூட்டு அற்று—நரம்புக் கட்டுக்கள் நீங்கி. 297. புன்மாக்கள்—கீழ்மக்கள். இழுக்காற்றால்—தீயநெறியால். 298. உபசாந்தருக்கு— நல்ல சாந்த மூர்த்திகளுக்கு.

Koviloor Digital Library



சாதனைஎல் லாம்அவிழத் தற்போதம் காட்டாதோர்
போதனைநீ நல்குவதுஎப் போதோ பராபரமே. 299

ஒன்றும்அறி யாஇருள்ஆம் உள்ளம் படைத்தஎனக்கு
என்று கதிவருவது எந்தாய் பராபரமே. 300

சிந்திக்குந் தோறும்என்உள் சிற்சுகமாய் ஊற்றுஊறிப்
புந்திக்குள் நின்றஅருள் பொற்பே பராபரமே. 301

என்றும்அடைந் தோர்கட்கு இரங்கார் குறிப்புஅனைத்தும்
கன்றைஉதை காலி கதைகாண் பராபரமே. 302

குற்றம் குறையக் குணம்மே லிடஅருளை
உற்றவரே ஆவிக்கு உறவுஆம் பராபரமே. 303

ஓர்உரையால் வாய்க்கும்உண்மைக்கு ஓர்அனந்த நூல்கோடிப்
பேருரையால் பேசில்என்ன பேறுஆம் பராபரமே. 304

சொல்லும் சமயநெறிச் சுற்றுக்கு ளேசுழலும்
அல்லல் ஒழிவதுஎன்றைக்கு ஐயா பராபரமே. 305

பிடித்ததையே ஸ்தாபிக்கும் பேரா ணவத்தை
அடித்துத் துரத்தவல்லார் ஆர்காண் பராபரமே. 306

நேசத்தால் நின்னை நினைக்கும் நினைவுஉடையார்
ஆசைக் கடலில் அழுந்தார் பராபரமே. 307

கள்ளாது கட்டுணவும் காரியமோ நான்ஒருசொல்
கொள்ளாத தோஷம்அன்றோ கூறாய் பராபரமே. 308

சென்றஇடம் எல்லாம் திருஅருளே தாரகமா
நின்றவர்க்கே ஆனந்த நிஷ்டை பராபரமே. 309

நீட்சி குறுகல்இல்லா நித்யசுகா ரம்பஜக
சாக்ஷிஆம் உன்னைவந்து சார்ந்தேன் பராபரமே. 310

வான்ஆதி தத்துவமாய் மன்னிநின்ற காரணநீ
நான்ஆகி நிற்பதுஎந்த நாளோ பராபரமே. 311

காஷ்டத்தில் அங்கி கடையவந்தால் என்னஉன்னும்
நாட்டத்தி னூடுவந்த நட்பே பராபரமே. 312

Koviloor Digital Library



நித்திரையாய்த் தானே நினைவுஅயர்ந்தால் நித்தம்நித்தம்
செத்தபிழைப்பு ஆனதுஎங்கள் செய்கை பராபரமே. 313

இன்பநிஷ்டை எய்தாமல் யாதுஎனினும் சென்றுமனம்
துன்புறுதல் வன்பிறவித் துக்கம் பராபரமே. 314

பொய்அகல மெய்ஆன போதநிலை கண்டோர்க்குஓர்
ஐயம்இலை ஐயம்இலை ஐயா பராபரமே. 315

மந்திரத்தை உன்னி மயங்காது எனக்குஇனிஓர்
தந்திரத்தை வைக்கத் தகாதோ பராபரமே. 316

விண்கருணை பூத்ததுஎன்ன மேவி உயிர்க்குஉயிராய்த்
தண்கருணை தோன்றஅருள் தாய்நீ பராபரமே. 317

தன்மயமாய் நின்றநிலை தானேதான் ஆகிநின்றால்
நின்மயமாய் எல்லாம் நிகழும் பராபரமே. 318

ஏங்கிஇடை யும்நெஞ்சம் ஏழையைநீ வாஎன்றே
பாங்குபெறச் செய்வதுஉன்மேல் பாரம் பராபரமே. 319

ஆண்டநின்னை நீங்கா அடிமைகள்யாம் ஆணவத்தைப்
பூண்டதுஎன்ன கர்மம் புகலாய் பராபரமே. 320

எங்கணும்நீ என்றால் இருந்தபடி எய்தாமல்
அங்கும்இங்கும் என்றுஅலையல் ஆமோ பராபரமே. 321

கற்கும்மது உண்டு களித்ததுஅல்லால் நின்அருளில்
நிற்கும்மது தந்ததுஉண்டோ நீதான் பராபரமே. 322

அண்டபகி ரண்டம் அறியாத நின்வடிவைக்
கண்டவரைக் கண்டால் கதிஆம் பராபரமே. 323

---

312. காஷ்டத்தில் அங்கி – விறகில் நெருப்பு. 317. விண் கருணை பூத்தது என்ன – பரவெளி கருணை மயமாக இருப்பது போன்று. 319. இடையும் நெஞ்சம் ஏழையை – நைகின்ற மனத்தையுடைய எளியேனை.

321. அங்கும் இங்கும் என்று அலையல்ஆமோ – கடவுள் அங்கு இருக்கிறார் இங்கு இருக்கிறார் என்று அலைவது பொருந்துமோ. 322. கற்கும் மது உண்டு – உலகக் கல்வியாகிய தேனைப் பருகி.

Koviloor Digital Library



கலக்கம்உற நெஞ்சைக் கலக்கித் திரும்பத்
துலக்குபவன் நீஅலையோ சொல்லாய் பராபரமே. 324

சிந்தையும்என் போலச் செயல்அற்று அடங்கிவிட்டால்
வந்ததுஎலாம் நின்செயலா வாழ்வேன் பராபரமே. 325

பந்தம்எலாம் தீரப் பரஞ்ஜோதி நீகுருவாய்
வந்தவடிவை மறவேன் பராபரமே. 326

தான்அந்தம் ஆன சகஜ நிருவிகற்ப
ஆனந்த நிஷ்டைஅருள் ஐயா பராபரமே. 327

அல்லல்எல்லாம் தீரஎனக்கு ஆனந்தம் ஆகஒரு
சொல்லைஎன்பால் வைத்ததைஎன் சொல்வேன்
பராபரமே. 328

சிந்தை மயக்கம்அறச் சின்மயமாய் நின்றஉன்னைத்
தந்தஉனக்கு என்னையும்நான் தந்தேன் பராபரமே. 329

மைகாட்டும் மாயை மயக்கம்அற நீகுருவாய்க்
கைகாட்ட வும்கனவு கண்டேன் பராபரமே. 330

மால்வைத்த சிந்தை மயக்குஅறஎன் சென்னிமிசைக்
கால்வைக்க வும்கனவு கண்டேன் பராபரமே. 331

மண்ஆன மாயைஎல்லாம் மாண்டுவெளி ஆகஇரு
கண்ஆர வும்கனவு கண்டேன் பராபரமே. 332

மண்நீர்மை யாலே மயங்காதுஉன் கையால்என்
கண்ணீர் துடைக்கவும்நான் கண்டேன் பராபரமே. 333

உள்ளது உணரா உணர்விலிமா பாவிஎன்றோ
மெள்ளமெள்ளக் கைநெகிழ விட்டாய் பராபரமே. 334

எல்லாம் நினதுசெயல் என்றுஎண்ணும் எண்ணமும்நீ
அல்லால் எனக்குஉளதோ ஐயா பராபரமே. 335

327. தான் அந்தம் ஆன – ஆன்ம அறிவு ஒழிந்துபட்டுப் போன. 330. மை காட்டும் – பிறப்பை வளர்க்கின்ற. 331. மால் வைத்த சிந்தை மயக்குஅற – ஆசையை வளர்க்கும் மனமயக்கம் நீங்க. 333. மண்நீர்மையாலே – பிரபஞ்ச மாயையாலே.

Koviloor Digital Library



பந்தம் மயக்குஇருக்கப் பற்றுஒழிந்தேன் என்றுஉளறும்
இந்த மயக்கம் எனக்குஏன் பராபரமே. 336

காட்சிஎல்லாம் கண்ணைவிடக் கண்டதுஉண்டோ
யாதினுக்கும்
ஆட்சி உனதுஅருளே அன்றோ பராபரமே. 337

எட்டுத் திசையும்ஒன்றாய் இன்பமாய் நின்றஉன்னை
விட்டுப் பிரியஇடம் வேறோ பராபரமே. 338

பிரியாது உயிர்க்குஉயிராய்ப் பின்னம்அற ஓங்கும்
செறிவே அறிவே சிவமே பராபரமே. 339

ஏதுஏது சொன்னாலும் எள்அளவும் நீஇரங்காச்
சூதுஏது எனக்குஉளவு சொல்லாய் பராபரமே. 340

கற்பனையாப் பாடுகின்றேன் கண்ணீரும் கம்பலையும்
சொற்பனத்தும் காணேன்என் சொல்வேன் பராபரமே. 341

வன்புஒன்று நீங்கா மனதுஇறப்ப மாறாப்பேர்
அன்புஒன்றும் போதும்எனக்கு ஐயா பராபரமே. 342

ஏதும் தெரியா எளியேனை வாஎனநின்
போதநிலை காட்டின் பொறாதோ பராபரமே. 343

ஓராமல் எல்லாம் ஒழிந்தேற்குஉன் தெய்வஅருள்
தாராது இருக்கத் தகுமோ பராபரமே. 344

மோனம் தரும்ஞானம் ஊட்டி எனக்குஉவட்டா
ஆனந்த வாழ்க்கை அருளாய் பராபரமே. 345

வாடுமுகம் கண்டுஎன்னை வாடாம லேகாத்த
நீடும் கருணை நிறைவே பராபரமே. 346

புந்தியினால் நின்அடியைப் போற்றுகின்ற மெய்அடியார்
சிந்தைஇறப் போநின் தியானம் பராபரமே. 347

---

339. செறிவே – நிறைவே. 342. வன்புஒன்று – கடினத்தன்மையொன்றினை. 346. நீடும் கருணை – நிலைத்த கருணை. 347. சிந்தைஇறப்போ நின்தியானம் – மனத்தின் அழிவோ சமாதி.

Koviloor Digital Library



உனக்குஉவமை யாக்கருணை உள்ளவரும் வன்மைக்கு
எனக்குஉவமை ஆனவரும் இல்லை பராபரமே. 348

தாய்இருந்தும் பிள்ளை தளர்ந்தாற்போல் எவ்இடத்தும்
நீஇருந்தும் நான்தளர்ந்து நின்றேன் பராபரமே. 349

வாயால் கிணறுகெட்ட வாறேபோல் வாய்பேசிப்
பேய்ஆனார்க்கு இன்பம்உண்டோ பேசாய் பராபரமே. 350

பாவம்என்றால் ஏதும் பயம்இன்றிச் செய்யஇந்த
ஜீவனுக்குஆர் போதம் தெரித்தார் பராபரமே. 351

இன்ப நிருவிகற்பம் இன்றேதா அன்றுஎனிலோ
துன்பம் பொறுப்புஅரிது சொன்னேன் பராபரமே. 352

கற்கும்நிலை கற்றால் கருவிஅவி ழாதுஅருளாய்
நிற்கும்நிலை கற்பதுவே நீதம் பராபரமே. 353

காச்சச் சுடர்விடும்பொன் கட்டிபோல் நிர்மலமாய்ப்
பேச்சற் றவரே பிறவார் பராபரமே. 354

பற்றுஒழிந்து சிந்தைப் பதைப்புஒழிந்து தானேதான்
அற்றிருப்பது என்றைக்கு அமைப்பாய் பராபரமே. 355

உருவெளிதான் வாதவூர் உத்தமர்க்குஅல் லால்இனமும்
குருவழிநின் றார்க்கும்உண்டோ கூறாய் பராபரமே. 356

தேகம்யா தேனும்ஒரு சித்திபெற ஜீவன்முக்தி
ஆகும்நெறி நல்லநெறி ஐயா பராபரமே. 357

உலகநெறி போல்ஜடலம் ஓய உயிர்முக்தி
இலகும்எனல் பந்த இயல்போ பராபரமே. 358

பரமாப் பரவெளியாப் பார்ப்பது அல்லால் மற்று எவர்க்கும்
திரம்ஏதும் இல்லைநன்றாத் தேர்ந்தேன் பராபரமே. 359

தேடுவேன் நின்அருளைத் தேடும்முன்னே எய்தில்நடம்
ஆடுவேன் ஆனந்தம் ஆவேன் பராபரமே. 360

---

358. ஜடலம் ஓய – தேகம் விழும்போது. பந்த இயல்போ – பிறவிப்பிணியின் பாங்கோ.

Koviloor Digital Library



உள்ளம் குழைய உடல்குழைய உள்இருந்த
கள்ளம் குழையஎன்று காண்பேன் பராபரமே. 361

பட்டப் பகல்போலப் பாழ்த்தசிந்தை மாளின்எல்லாம்
வெட்டவெளி ஆக விளங்கும் பராபரமே. 362

பார்க்கின்அணுப் போல்கிடந்த பாழ்ஞ்சிந்தை
மாளின்என்னை
யார்க்குச் சரிஇடலாம் ஐயா பராபரமே. 363

பாட்டுக்கோ அன்பினுக்கோ பக்திக்கோ அன்பர்தங்கள்
நீட்டுக்குஎல் லாம்குறுகி நின்றாய் பராபரமே. 364

முத்தாந்த வித்தே முளைக்குநில மாய்எழுந்த
சித்தாந்த மார்க்கச் சிறப்பே பராபரமே. 365

உன்னா வெளியாய் உறங்காத பேருணர்வாய்
என்ஆவிக்கு உள்ளே இருந்தாய் பராபரமே. 366

தத்துவம்எல் லாம்அகன்ற தன்மையர்க்குச் சின்மயம்ஆம்
நித்தமுக்த சுத்த நிறைவே பராபரமே. 367

உள்ளக் கொதிப்புஅகல உள்உள்ளே ஆனந்த
வெள்ள மலர்க்கருணை வேண்டும் பராபரமே. 368

என்னைப் புரப்பதுஅரு ளின்கடன்ஆம் என்கடன்ஆம்
நின்னில் பணிஅறவே நிற்கை பராபரமே. 369

தானேஆம் நன்னிலையைத் தந்தஅருள் ஆனந்த
வானே மனாதீத வாழ்வே பராபரமே. 370

மண்ஆதி பூதம்எல்லாம் வைத்திருந்த நின்நிறைவைக்
கண்ஆரக் கண்டு களித்தேன் பராபரமே. 371

அறியாமை ஈதுஎன்று அறிவித்த அன்றேதான்
பிறியா அருள்நிலையும் பெற்றேன் பராபரமே. 372

---

361. கள்ளம் குழைய – வஞ்சம் நழுவவும்.
364. நீட்டுக்கு எல்லாம் – தொண்டுகளுக்கு எல்லாம்.
366 உன்னா வெளியாய் – மனத்துக்கு எட்டாத பரவெளியாய்.

Koviloor Digital Library



தீதுஎனவும் நன்றுஎனவும் தேர்ந்துநான் தேர்ந்தபடி
ஏதும் நடக்கஒட்டாது என்னே பராபரமே. 373

கண்ட அறிவுஅகண்டா காரம்என மெய்அறிவில்
கொண்டவர்க்கே முக்தி கொடுப்பாய் பராபரமே. 374

ஈறுஆக வல்வினைநான் என்னாமல் இன்பசுகம்
பேறுஆம் படிக்குஅடிமை பெற்றேன் பராபரமே. 375

பெற்றார் அனுபூதி பேசாத மோனநிலை
கற்றார் உனைப்பிரியார் கண்டாய் பராபரமே. 376

நீயேநான் என்று நினைப்பும் மறப்பும்அறத்
தாயே அனையஅருள் தந்தாய் பராபரமே. 377

சஞ்சலம்அற்று எல்லாம்நீ தான்என்று உணர்ந்தேன்என்
அஞ்சலியும் கொள்ளாய் அரசே பராபரமே. 378

பூதம்முதல் நாதம்வரை பொய்என்ற மெய்யர்எல்லாம்
காதலித்த இன்பக் கடலே பராபரமே. 379

வாக்குமனம் ஒன்றுபட்ட வார்த்தைஅல்லால் வெவ்வேறாய்ப்
போக்குடைய வார்த்தை பொருந்தேன் பராபரமே. 380

வன்மைஇன்றி எல்லாம் மதித்துஉணர்வார்க்கு ஆகெடுவேன்
தன்மைஒன்றும் தோயாத் தடையோ பராபரமே. 381

பக்தர்சித்தர் வாழிபரி பக்குவர்கள் வாழிசெங்கோல்
வைத்தவர்கள் வாழிகுரு வாழி பராபரமே. 382

கல்லாதேன் ஆனாலும் கற்றுஉணர்ந்த மெய்அடியார்
சொல்லாலே நின்னைத் தொடர்ந்தேன் பராபரமே. 383

சொல்இறப்பச் சற்குருவாய்த் தோன்றிச் சுகம்கொடுத்த
நல்லவர்க்கே கொத்தடிமை நான்காண் பராபரமே. 384

முக்திக்கு வித்துஆன மோனக் கரும்புவழி
தித்தித் திடவிளைந்த தேனே பராபரமே. 385

379. பூதம் முதல் நாதம் வரை – பஞ்சபூதங்கள் முதல் ஓசை ஈறு ஆக.

Koviloor Digital Library



நித்திரையும் பாழ்த்த நினைவும்அற்று நிற்பதுவோ
சுத்த அருள்நிலைநீ சொல்லாய் பராபரமே. 386

மண்ணும் மறிகடலும் மற்றுஉளவும் எல்லாம்உன்
கண்ணில் இருக்கவும்நான் கண்டேன் பராபரமே. 387

பூட்டிவைத்து வஞ்சப் பொறிவழியே என்தனைநீ
ஆட்டுகின்றது ஏதோ அறியேன் பராபரமே. 388

பொய்உணர்வாய் இந்தப் புழுக்கூட்டைக் காத்திருந்தேன்
உய்யும் வகையும் உளதோ பராபரமே. 389

## 44. பைங்கிளிக்கண்ணி

அந்தமுடன் ஆதி அளவாமல் என்அறிவில்
சுந்தரவான் ஜோதி துலங்குமோ பைங்கிளியே. 1

அகம்மேவும் அண்ணலுக்குஎன் அல்லல்எல்லாம் சொல்லிச்
சுகம்ஆன நீபோய்ச் சுகம்கொடுவா பைங்கிளியே. 2

ஆவிக்குள் ஆவிஎனும் அற்புதனார் சிற்சுகம்தான்
பாவிக்கும் கிட்டுமோ சொல்லாய்நீ பைங்கிளியே. 3

ஆரும்அறி யாமல்எனை அந்தரங்கம் ஆகவந்து
சேரும் படிஇறைக்குச் செப்பிவா பைங்கிளியே. 4

ஆறுஆன கண்ணீர்க்குஎன் அங்கபங்கம் ஆனதையும்
கூறாதது என்னோ குதலைமொழிப் பைங்கிளியே. 5

இன்புஅருள ஆடைஅழுக்கு ஏறும்எமக்கு அண்ணல்சுத்த
அம்பரம்ஆம் ஆடை அளிப்பானோ பைங்கிளியே. 6

உன்னாமல் ஒன்றுஇரண்டுஎன்று ஓராமல் வீட்டுநெறி
சொன்னான் வரவும்வகை சொல்லாய்நீ பைங்கிளியே. 7

ஊரும்இலார் பேரும்இலார் உற்றார்பெற் றாருடனே
யாரும்இலார் என்னை அறிவாரோ பைங்கிளியே. 8

---

387. மறிகடலும்—அலைவீசும் கடலும். 388. பூட்டிவைத்து—தத்துவங்களில் என்னைக் கட்டி வைத்து. 389. உய்யும் வகை – கடைத்தேறும் வழி.

2. சுகம்ஆனநீ – கிளியாகிய நீ. 5. அங்கபங்கம் ஆனதை – உடல் நனைந்து விகாரமானதை.

Koviloor Digital Library



ஊரைப்பா ராமல்எனக்கு உள்அகத்து நாயகனார்
சீரைப்பார்த் தால்கருணை செய்வாரோ பைங்கிளியே. 9

என்று விடியும் இறைவாஓ என்றுஎன்று
நின்றநிலை எல்லாம் நிகழ்த்தாய்நீ பைங்கிளியே. 10

எந்தமட லூடும் எழுதா இறைவடிவைச்
சிந்தைமட லாஎழுதிச் சேர்ப்பேனோ பைங்கிளியே. 11

கண்ணுள்மணி போல்இன்பம் காட்டி எனைப்பிரிந்த
திண்ணியரும் இன்னம்வந்து சேர்வாரோ பைங்கிளியே. 12

ஏடுஆர் மலர்சூடேன் எம்பெருமான் பொன்அடிஆம்
வாடா மலர்முடிக்கு வாய்க்குமோ பைங்கிளியே. 13

கல்லேன் மலரேன் கனிந்தஅன்பே பூஜைஎன்ற
நல்லோர்பொல் லாஎனையும் நாடுவரோ பைங்கிளியே. 14

கண்டதனைக் கண்டு கலக்கம் தவிர்எனவே
விண்டபெரு மானையும்நான் மேவுவனோ பைங்கிளியே. 15

காணாத காட்சி கருத்துவந்து காணாமல்
வீண்நாள் கழித்து மெலிவேனோ பைங்கிளியே. 16

காந்தம் இரும்பைக் கவர்ந்துஇழுத்தால் என்னஅருள்
வேந்தன் எமைஇழுத்து மேவுவனோ பைங்கிளியே. 17

காதலால் வாடினதும் கண்டனையே எம்இறைவர்
போதரவாய் இன்பம் புசிப்பேனோ பைங்கிளியே. 18

கிட்டிக்கொண்டு அன்பர்உண்மை கேளாப் பலஅடிகொள்
பட்டிக்கும் இன்பம்உண்டோ சொல்லாய்நீ பைங்கிளியே. 19

9. சீரைப்பார்த்தால் – மனப்பக்குவத்தைப் பார்த்தால்.
11. மடலூடும் – ஏட்டிலும்.
13. ஏடுஆர் மலர் – இதழ்களுடன் கூடிய பூக்களை.
14. கல்லேன் – நூல்களைக் கற்கமாட்டேன். மலரேன் – உள்ளத்தை மலரச் செய்யேன்.
18. போதரவாய் - வருகையால.

Koviloor Digital Library



கிட்டுராய் நெஞ்சில் கிளர்வார் தழுவஎன்றால்
நெட்டுரர் ஆவர்அவர் நேசம்என்னோ பைங்கிளியே. 20

கூறும் குணமும்இல்லாக் கொள்கையினார் என்கவலை
ஆறும் படிக்கும் அணைவாரோ பைங்கிளியே. 21

சின்னம் சிறியேன்தன் சிந்தைகவர்ந் தார்இறைவர்
தன்னம் தனியே தவிப்பேனோ பைங்கிளியே. 22

சிந்தை மருளைத் தெளிவித்து எனைஆள
வந்தகுரு நாதன்அருள் வாய்க்குமோ பைங்கிளியே. 23

சொல்இறந்து நின்ற சுகரூபப் பெம்மானை
அல்லும் பகலும் அணைவேனோ பைங்கிளியே. 24

தற்போதத் தாலே தலைகீழது ஆகஐயன்
நற்போத இன்புவர நாள்செலுமோ பைங்கிளியே. 25

தன்னை அறியும் தருணம் தனில்தலைவர்
என்னைஅணை யாதவண்ணம் எங்குஒளித்தார்
பைங்கிளியே. 26

தாங்கரிய மையல்எல்லாம் தந்துஎனைவிட்டு இன்னருளாம்
பாங்கியைச்சேர்ந் தார்இறைக்குப் பண்போசொல்
பைங்கிளியே. 27

தாவியதுஓர் மர்க்கடம்ஆம் தன்மைவிட்டே அண்ணல்இடத்து
ஓவியம்போல் நிற்கின்எனை உள்குவரோ பைங்கிளியே. 28

நீராக் கருவழக்கைத் தீர்வைஇட்டுஅங்கு என்னைஇனிப்
பார்ஏறாது ஆண்டானைப் பற்றுவனோ பைங்கிளியே. 29

---

20. கிட்டுராய் (கிட்டுரராய்) – பக்கத்தில் உள்ள ஊரின ராக. நெட்டுரர் ஆவர் – தூரத்தில் உள்ள ஊரினராவர்.

25. தற்போதத்தாலே – பரஞானத்தாலே.

28. தாவியது ஓர் மர்க்கடம்ஆம் தன்மை – மரத்திற்கு மரம் இடையறாது தாவும் குரங்கின் பாங்கினை ஒத்த.

29. நீராக் கரு வழக்கை – ஒயாது பிறப்பெடுக்கும் போக்கை. பார் ஏறாது ஆண்டானை – பூமியில் பிறவாமல் காத்தவனை.

Koviloor Digital Library



தூங்கிவிழித்து என்னபலன் தூங்காமல் தூங்கிநிற்கும்
பாங்குகண்டால் அன்றோ பலன்காண்பேன்
பைங்கிளியே. 30

தொல்லைக் கவலை தொலைத்துத் தொலையாத
எல்லைஇலா இன்பமயம் எய்துவனோ பைங்கிளியே. 31

நன்னெஞ்சத்து அன்பர்எல்லாம் நாதரைச்சேர்ந்து
இன்புஅணைந்தார்
வன்னெஞ்சத் தாலேநான் வாழ்வுஇழந்தேன்
பைங்கிளியே. 32

நானே கருதின்வர நாடார்சும் மாஇருந்தால்
தானே அணைவர்அவர் தன்மைஎன்னோ பைங்கிளியே. 33

நீர்க்குமிழி போன்றஉடல் நிற்கையிலே சாசுவதம்
சேர்க்கஅறி யாமல் திகைப்பேனோ பைங்கிளியே. 34

நெஞ்சகத்தில் வாழ்வார் நினைக்கின்வேறு
என்றுஅணையார்
வஞ்சகத்தார் அல்லர்அவர் மார்க்கம்என்னோ
பைங்கிளியே. 35

பன்முத் திரைச்சமயம் பாழ்படக்கல் ஆல்அடிவாழ்
சின்முத் திரைஅரசைச் சேர்வேனோ பைங்கிளியே. 36

பச்சைகண்ட நாட்டில் பறக்கும்உனைப் போல்பறந்தேன்
இச்சைஎல்லாம் அண்ணற்கு இயம்பிவா பைங்கிளியே. 37

---

30. தூங்காமல் தூங்கி நிற்கும் பாங்கு – யாண்டும் விழிப்புறும் ஆத்மபோதம்.

31. தொல்லைக் கவலை தொலைத்து – பிறவிகளில் வருகின்ற துன்பங்களை நீக்கி.

34. சாசுவதம் சேர்க்க – முக்தியடைய.

35. நினைக்கின் வேறு என்று அணையார் – மனத் தகத்து இறைவரை நான் வேறாக எண்ணினால் அவர் நான் வேற்றான் என்று என்னைச் சாரார்.

36. பன்முத்திரைச் சமயம் – யுக்திக்கு ஒவ்வாத அடையாளங்களையுடைய பல நெறிகள்.

Koviloor Digital Library



பாசபந்தம் செய்ததுன்பம் பாராமல் எம்இறைவர்
ஆசைதந்த துன்பம்அதற்கு ஆற்றேன்நான் பைங்கிளியே. 38

பார்ஆசை அற்றுஇறையைப் பற்றுஅறநான் பற்றிநின்ற
பூராயம் எல்லாம் புகன்றுவா பைங்கிளியே. 39

பேதைப் பருவத்தே பின்தொடர்ந்துஎன் பக்குவமும்
சோதித்த அண்ணல்வந்து தோய்வாரோ பைங்கிளியே. 40

பைம்பயிரை நாடும்உன்போல் பார்பூத்த பைங்கொடிசேர்
செம்பயிரை நாடித் திகைத்தேன்நான் பைங்கிளியே. 41

பொய்க்கூடு கொண்டு புலம்புவனோ எம்இறைவர்
மெய்க்கூடு சென்று விளம்பிவா பைங்கிளியே. 42

பொய்ப்பணி வேண்டேனைப் பொருள்படுத்தி
அண்ணல்என்பால்
மெய்ப்பணியும் தந்துஒருகால் மேவுவனோ பைங்கிளியே. 43

மண்உறங்கும் விண்உறங்கும் மற்றுஉளள லாம்உறங்கும்
கண்உறங்கேன் எம்இறைவர் காதலால் பைங்கிளியே. 44

மட்டுப் படாத மயக்கம்எல்லாம் தீரஎன்னை
வெட்டவெளி வீட்டில்அண்ணல் மேவுவனோ
பைங்கிளியே. 45

மாலைவளர்த்து என்னை வளர்த்துஇறைவர்
பன்னெறிஆம்
பாலைவனத் தில்விட்ட பாவம்என்னோ பைங்கிளியே. 46

மெய்யில்நோய் மாற்றுஅவுழ்தம் மெத்தஉண்டுஎம்
அண்ணல்தந்த
மையல்நோய் தீர்க்க மருந்தும்உண்டோ பைங்கிளியே. 47

---

39. பூராயம் எல்லாம் – விவரங்களை எல்லாம்.

42. பொய்க்கூடுகொண்டு – பொய்யாகிய சரீரத்தைச் சுமந்து. மெய்க்கூடு – உண்மை வடிவம்.

43. பொய்ப்பணிவேண்டேனை – உலக நாட்டத்தை விரும்பாத என்னை.

47. அவுழ்தம் மெத்தஉண்டு – மருந்து மிக உண்டு.

Koviloor Digital Library



மேவுபஞ்ச வண்ணம்உற்றாய் வீண்சிறையால்
அல்லல்உற்றாய்
பாவிபஞ்ச வண்ணம் பகர்ந்துவா பைங்கிளியே. 48

வாய்திறவா வண்ணம்எனை வைத்துஆண்டார்க்கு
என்துயரை
நீதிறவாச் சொல்லின் நிஜம்ஆம்காண் பைங்கிளியே. 49

வாட்டப் படாத மவுனஇன்பம் கையாலே
காட்டிக் கொடுத்தானைக் காண்பேனோ பைங்கிளியே. 50

வாரா வரவுஆக வந்துஅருளும் மோனருக்குஎன்
பேராசை எல்லாம்போய்ப் பேசிவா பைங்கிளியே. 51

விண்ணவர்தம் பால்அமுதம் வேப்பங்காய் ஆகஎன்பால்
பண்ணியதுஎம் அண்ணல்மயல் பார்த்தாயோ
பைங்கிளியே. 52

விண்ணுள் வளிஅடங்கி வேறுஅற்றது என்னஅருள்
கண்ணுள் அடங்கிடவும் காண்பேனோ பைங்கிளியே. 53

விண்ஆர் நிலவுதவழ் மேடையில்எல் லாரும்உற
மண்ஆன வீட்டில்என்னை வைத்ததுஎன்னோ
பைங்கிளியே. 54

உள்ளத்தின் உள்ளே ஒளித்துஇருந்துஎன் கள்ளம்எல்லாம்
வள்ளல்அறிந் தால்எனக்கு வாயும்உண்டோ
பைங்கிளியே. 55

48. பாவி பஞ்சவண்ணம் – பாவியேனுடைய துன்பத் தன்மைகளை. 49. நீ திறவாச் சொல்லின் – நீ வெளிப் படையாக உரைத்தால். 50. வாட்டப்படாத – கடுமையான தவத்தால் மெலிவடையாமைக்குக் காரணமாகிய. 51. வாரா வரவு ஆக – உலகத்தவர் அழைப்புக்கு இணங்காது ஞானி யர்க்கு வருகை தர. 52. விண்ணவர்தம்பால் அமுதம் – இந் திரிய சுகம். எம் அண்ணல் மயல் – எம் இறைவரது அருள் நாட்டம். 53. விண்ணுள்வளி அடங்கி வேறு அற்றது என்ன – வாயு ஆகாயத்தில் ஒன்றுபட்டது போன்று. 54. விண்ஆர் நிலவு தவழ்மேடையில் – வானில் நிலவும் மதிமண்டலத் தில், பரவெளியில்.

Koviloor Digital Library



ஆகத்தை நீக்கும்முன்னே ஆவித் துணைவரைநான்
தாகத்தின் வண்ணம் தழுவுவனோ பைங்கிளியே. 56

தானே சுபாவம் தலைப்படநின் றான்ஞான
வான்ஆ னவரும் வருவாரோ பைங்கிளியே. 57

கள்ளத் தலைவர்அவர் கைகாட்டிப் பேசாமல்
உள்ளத்தில் வந்த உபாயம்என்னோ பைங்கிளியே. 58

## 45. எந்நாள்கண்ணி

### 1. தெய்வ வணக்கம்

நீர்பூத்த வேணி நிலவுஎறிப்ப மன்றுஆடும்
கார்பூத்த கண்டனையான் காணுநாள் எந்நாளோ. 1

பொன்ஆரும் மன்றுள்மணிப் பூவைவிழி வண்டுசுற்றும்
என்ஆர் அமுதின்நலம் இச்சிப்பது எந்நாளோ. 2

நீக்கிமலக் கட்டுஅறுத்து நேரே வெளியில்எம்மைத்
தூக்கிவைக்கும் தாளைத் தொழுதிடுநாள் எந்நாளோ. 3

கருமுகம்காட் டாமல்என்றும் கர்ப்பூரம் வீசும்
திருமுகமே நோக்கித் திருக்குஅறுப்பது எந்நாளோ. 4

---

56. ஆகத்தை நீக்கும் முன்னே – உடலைவிட்டுப் போகும் முன்னரே. 58. கள்ளத் தலைவர் அவர் – உலக நாட்டமுடையவர்க்கு அகப்படாத இறைவர்.

1. நீர்பூத்தவேணி – கங்கை தங்கிய சடையின் கண்ணே. மன்றுஆடும் – தில்லைச் சிற்றம்பலத்தில் ஆனந்த நடனம் செய்கின்ற. கார்பூத்த கண்டனை – கருமை நிறம் தங்கிய நீலகண்டனை.

2. பொன் ஆரும் மன்றுள் – பொன்னம்பலத்தில். மணிப்பூவை விழி வண்டுசுற்றும் – அழகிய சிவகாம ..ந்தரியின் விழிகளாகிய வண்டுகள் சுற்றிக்கொண் டிருக்கும். என்ஆர் அமுதின் நலம் – என்னுடைய அரிய அமுதம் போன்ற கூத்தப்பிரானின் திருவருளை.

4. கரு முகம் காட்டாமல் – இனிப் பிறவிக்கு இடம் கொடாமல். திருக்கு அறுப்பது எந்நாளோ – குற்றத்தை ஒழிப்பது எக்காலமோ.

Koviloor Digital Library


வெஞ்சேல் எனும்விழியார் வேட்கைநஞ்சுக்கு அஞ்சினரை
அஞ்சேல் எனும்கைக்கு அபயம்என்பது எந்நாளோ. 5

ஆறுசம யத்தும் அதுஅதுவாய் நின்றுஇலங்கும்
வீறு பரைதிருத்தாள் மேவுநாள் எந்நாளோ. 6

பச்சைநிற மாய்ச்சிவந்த பாகம் கலந்துஉலகை
இச்சையுடன் ஈன்றானை யாம்காண்பது எந்நாளோ. 7

ஆதிஅந்தம் காட்டாது அகண்டிதமாய் நின்று உணர்த்தும்
போதவடிவு ஆம்அடியைப் போற்றுநாள் எந்நாளோ. 8

கங்கை நிலவுஜடைக் காட்டானைத் தந்தைஎனும்
புங்கவெண்கோட்டு ஆனைபதம் புந்திவைப்பது எந்நாளோ 9

அஞ்சுமுகம் காட்டாமல் ஆறுமுகம் காட்டவந்த
செஞ்சரணச் சேவடியைச் சிந்தைவைப்பது எந்நாளோ. 10

தந்தைஇரு தாள்துணித்துத் தம்பிரான் தாள்சேர்ந்த
எந்தைஇரு தாள்இணைக்கே இன்புறுவது எந்நாளோ. 11

5. வெஞ்சேல் எனும் விழியார் வேட்கை நஞ்சுக்கு – விருப்பத்தைத்தரும் கெண்டை மீன் போன்ற கண்களை யுடைய மாதரின் ஆசையாகிய நஞ்சுக்கு. 6. வீறுபரை திருத்தாள் – மேலான பராசக்தியின் திருவடியை. 7. பச்சை நிறமாய் – மரகத நிறமுள்ளவளாய். சிவந்த பாகம் – சிவனாருடைய சிவந்த பாகத்தினை. ஈன்றானை – தோற்று வித்த உமாதேவியை. 8. போதவடிவுஆம் அடியை – ஞான வடிவமாயிருக்கின்ற பராசக்தியின் அடியினை. 9. ஜடைக் காட்டானை – சடையாகிய காட்டையுடைய சிவனை. புங்கவெண்கோட்டு ஆனைபதம் – சிறந்த வெண்ணிறமான ஒற்றைக் கொம்பினையுடைய விநாயகக் கடவுளின் திரு வடியை. புந்தி வைப்பது – மனத்தில் வைப்பது. 10. அஞ்சு முகம் – அஞ்சத்தகும் கூற்றுவன் முகத்தினை. ஆறுமுகம் – ஆறுதல் அடையும்படியான ஆறுமுகங்களை. 11. தந்தை இருதாள் துணித்து – தன் பிதாவின் இரண்டு கால்களையும் வெட்டி. எந்தை இருதாள் இணைக்கே – எம் தந்தையாகிய சண்டேசுவர நாயனாருடைய இரண்டு திருவடிகளுக்கே. இன்புறுவது – ஆசைவைப்பது.

Koviloor Digital Library

## 2. குருமரபின் வணக்கம்

துய்ய கரமலரால் சொல்லாமல் சொன்னஉண்மை
ஐயனைக்கல் ஆல்அரசை யாம்அணைவது எந்நாளோ. 1

சிந்தையினுக்கு எட்டாத சிற்சுகத்தைக் காட்டவல்ல
நந்திஅடிக் கீழ்க்குடியாய் நாம்அணைவது எந்நாளோ. 2

எந்தை சனற்குமரன் ஆதிஎமை ஆட்கொள்வான்
வந்த தவத்தினரை வாழ்த்துநாள் எந்நாளோ. 3

பொய்கண்டார் காணாப் புனிதம்எனும் அத்வைத
மெய்கண்ட நாதன்அருள் மேவுநாள் எந்நாளோ. 4

பாதிவிருத் தத்தால்இப் பார்விருத்தம் ஆகஉண்மை
சாதித்தார் பொன்அடியைத் தான்பணிவது எந்நாளோ. 5

சிற்றம் பலம்மன்னும் சின்மயர்ஆம் தில்லைநகர்க்
கொற்றங் குடிமுதலைக் கூறுநாள் எந்நாளோ? 6

குறைவுஇல்அருள் ஞானமுதல் கொற்றங் குடிஅடிகள்
நறைமலர்த்தாட்கு அன்புபெற்று நாம்இருப்பது எந்நாளோ. 7

நாள்அவங்கள் போகாமல் நன்னெறியைக் காட்டிஎமை
ஆளவந்த கோலங்கட்கு அன்புவைப்பது எந்நாளோ. 8

என்அறிவை உள்அடக்கி என்போல் வரும்மவுனி
தன்அறிவுக்கு உள்ளேநான் சாருநாள் எந்நாளோ. 9

ஆறுள்ஒன்றை நாடின்அதற்கு ஆறும்உண்டாம் என்றுஎமக்குக்
கூறும் மவுனிஅருள் கூடுநாள் எந்நாளோ. 10

---

1. துய்யகரமலரால் – தூய்மை வாய்ந்த கைத்தாமரை கொண்டு. 5. இப்பார் விருத்தம் ஆக – இந்த உலகம் பயனற்றது என்று. 7. நறை மலர்த் தாட்கு – தேன் நிறைந்த தாமரை மலர்போலும் திருவடிக்கு. 8. நாள் அவங்கள் போகாமல் – காலம் வீண்போகாமல். 10. ஆறுள் ஒன்றை நாடின் – ஆறு சமயங்களில் ஒன்றைப் பின்பற்றினால். அதற்கு ஆறும் உண்டாம் என்று – அதற்கேற்ற பயனான முக்தியுண்டாமென்று.

Koviloor Digital Library



நில்லாமல் நின்றுஅருளை நேரேபார் என்றஒரு
சொல்லால் மவுனிஅருள் தோற்றுநாள் எந்நாளோ. 11

வைதிகம்ஆம் சைவ மவுனிமவு னத்துஅளித்த
மெய்திகழ்ந்துஎன் அல்லல் விடியுநாள் எந்நாளோ. 12

வாக்குமனம் அற்ற மவுனிமவு னத்துஅருளே
தாக்கவும்என் அல்லல்எல்லாம் தட்டுஅழிவது எந்நாளோ. 13

## 3. அடியார் வணக்கம்

வெம்பந்தம் தீர்த்துஉலகு-ஆள் வேந்தன் திருஞான
சம்பந் தனைஅருளால் சாருநாள் எந்நாளோ. 1

ஏரின் சிவபோகம் இங்குஇவற்கே என்னஉழ
வாரம்கொள் செங்கையர்தாள் வாரம்வைப்பது எந்நாளோ. 2

பித்தர்இறை என்றுஅறிந்து பேதைபால் தூதுஅனுப்பு
வித்த தமிழ்ச்சமர்த்தர் மெய்புகழ்வது எந்நாளோ. 3

போதவூர் நாடுஅறியப் புத்தர்தமை வாதில்வென்ற
வாதவூர் ஐயன்அன்பை வாஞ்சிப்பது எந்நாளோ. 4

ஒட்டுடன்பற்று இன்றி உலகைத் துறந்தசெல்வப்
பட்டினத்தார் பத்ரகிரி பண்புஉணர்வது எந்நாளோ. 5

கண்டதுபொய் என்றுஅகண்டா காரசிவம் மெய்எனவே
விண்டசிவ வாக்கியர்தாள் மேவுநாள் எந்நாளோ. 6

சக்கர வர்த்தி தவராஜ யோகிஎனும்
மிக்கதிரு மூலன்அருள் மேவுநாள் எந்நாளோ. 7

---

1. வெம்பந்தம் தீர்த்து – கொடிய பிறவித் தளையை ஒழித்து.

2. ஏரின் சிவபோகம் – மேன்மைதங்கிய சிவானந்தம். வாரம் – அன்பு.

3. பேதைபால் – பரவைநாச்சியாரிடத்து. தமிழ்ச் சமர்த்தர் – தமிழிலே (தேவாரத்தில்) வல்லவராகிய சுந்தரமூர்த்தி அடிகள்.

5. ஒட்டுடன்பற்று இன்றி – உலகப்பற்றுடன் ஆசை சிறிதுமில்லாது.

Koviloor Digital Library



கந்தர்அநு பூதிபெற்றுக் கந்தர்அநு பூதிசொன்ன
எந்தை அருள்நாடி இருக்குநாள் எந்நாளோ. 8

எண்ணரிய சித்தர் இமையோர் முதல்ஆன
பண்ணவர்கள் பக்தர்அருள் பாலிப்பது எந்நாளோ. 9

## 4. யாக்கையைப் பழித்தல்

சுக்கிலமும் நீரும் சொரிமலமும் நாறும்உடல்
புக்குஉழலும் வாஞ்சைஇனிப் போதும்என்பது எந்நாளோ. 1

நீர்க்குமிழி பூண்அமைத்து நின்றாலும் நில்லாமெய்
பார்க்கும் இடத்துஇதன்மேல் பற்றுஅறுவது எந்நாளோ. 2

காக்கைநரி செந்நாய் கழுகுஒருநாள் கூடிஉண்டு
தேக்குவிருந்து ஆம்உடலைச் சீஎன்பது எந்நாளோ. 3

செங்கிருமி ஆதி ஜெனித்தஜென்ம பூமியினை
இங்குஎன்உடல் என்னும் இழுக்குஒழிவது எந்நாளோ. 4

தத்துவர்தொண் ணூற்றுஅறுவர் தாமாய்வாழ் இந்நாட்டைப்
பித்தன்நான் என்னும் பிதற்றுஒழிவது எந்நாளோ. 5

ஊன்ஒன்றி நாதன் உணர்த்துமதை விட்டுஅறிவேன்
நான்என்ற பாவிதலை நாணுநாள் எந்நாளோ. 6

வேலைஇலா வேதன் விதித்தஇந்த்ர ஜாலஉடல்
மாலைவியா பார மயக்குஒழிவது எந்நாளோ. 7

ஆழ்ந்து நினைக்கின் அரோசிகம்ஆம் இவ்உடலில்
வாழ்ந்துபெறும் பேற்றை மதிக்குநாள் எந்நாளோ. 8

மும்மலச்சேறு ஆன முழுக்கும்பி பாகம்எனும்
இம்மலகா யத்துள் இகழ்ச்சிவைப்பது எந்நாளோ. 9

---

9. பண்ணவர்கள் – மேலோர்கள்.

3. தேக்கு விருந்துஆம் – பெருண்டியாகும்.

6. ஊன் ஒன்றி நாதன் உணர்த்துமதை – உடலில் வீற்றிருந்து இறைவன் அறிவிக்கின்றதை.

8. அரோசிகம்ஆம் – அருவருக்கத்தக்கதாகிய.

Koviloor Digital Library


நாற்றம்மிகக் காட்டும் நவவாயில் பெற்றபசுஞ்
சோற்றுத் துருத்தி சுமைஎன்பது எந்நாளோ. 10

உருவுஇருப்ப உள்ளேதான் ஊறும்மலக் கேணி
அருவருப்பு வாழ்க்கையைக்கண்டு அஞ்சுநாள் எந்நாளோ 11

## 5. மாதர் மயக்கு அறுத்தல்

மெய்வீசும் நாற்றம்எலாம் மிக்கமஞ்ச ளால்மறைத்துப்
பொய்வீசும் வாயார் புலைஒழிவது எந்நாளோ. 1

திண்ணியநெஞ் சப்பறவை சிக்கக் குழல்காட்டில்
கண்ணிவைப்போர் மாயம் கடக்குநாள் எந்நாளோ. 2

கண்டுமொழி பேசிமனம் கண்டுகொண்டு கைவிலையாக்
கொண்டுவிடும் மானார்பொய்க் கூத்துஒழிவது
எந்நாளோ. 3

காமனைவா என்றுஇருண்ட கண்வலையை வீசும்மின்னார்
நாமம் மறந்துஅருளை நண்ணுநாள் எந்நாளோ. 4

கண்களில்வெண் பீளை சுரப்பக் கருமைஇட்ட
பெண்கள்மயல் தப்பிப் பிழைக்குநாள் எந்நாளோ. 5

வீங்கித் தளர்ந்து விழும்முலையார் மேல்வீழ்ந்து
தூங்கும்மதன் சோம்பைத் துடைக்குநாள் எந்நாளோ. 6

கச்சுஇருக்கும் கொங்கை கரும்புஇருக்கும் இன்மாற்றம்
வைச்சுஇருக்கும் மாதர் மயக்குஒழிவது எந்நாளோ. 7

பச்சென்ற கொங்கைப் பசப்பியர்பாழ் ஆனமயல்
நச்சுஎன்று அறிந்துஅருளை நண்ணுநாள் எந்நாளோ. 8

உந்திச் சுழியால் உளத்தைச் சுழித்தகன
தந்தி ஸ்தனத்தார் தமைமறப்பது எந்நாளோ. 9

---

11. உருவு இருப்ப உள்ளேதான் – அகத்தே அறிவுத் தெய்வம் இருக்கும்பொழுது.

1. புலை ஒழிவது – பொல்லாங்கு நீங்குவது.

3. மானார் – மான்போன்ற விழியினையுடைய மகளிரின்.

Koviloor Digital Library


தட்டுவைத்த சேலைப்பூங் கொய்சகத்தில் சிந்தைஎல்லாம்
கட்டிவைக்கும் மாயமின்னார் கட்டுஅழிவது எந்நாளோ. 10

ஆழ்ஆழி என்ன அளவுபடா வஞ்சநெஞ்சப்
பாழ்ஆன மாதர்மயல் பற்றுஒழிவது எந்நாளோ. 11

தூயபனித் திங்கள் சுடுவதுஎனப் பித்துஏற்றும்
மாய மடவார் மயக்குஒழிவது எந்நாளோ. 12

ஏழைக் குறும்புசெயும் ஏந்திழையார் மோகம்எனும்
பாழைக் கடந்து பயிர்ஆவது எந்நாளோ. 13

விண்டு மொழிகுளறி வேட்கைமது மொண்டுதரும்
தொண்டியர்கள் கண்கடையின் சுற்றுஒழிவது எந்நாளோ. 14

மெய்யில் சிவம்பிறக்க மேவும்இன்பம் போல்மாதர்
பொய்யில்இன்பு இன்றுஎன்று பொருந்தாநாள்
எந்நாளோ. 15

## 6. தத்துவ முறைமை

ஐம்பூதத் தாலே அலக்கழிந்த தோஷம்அற
எம்பூத நாதன்அருள் எய்துநாள் எந்நாளோ. 1

சத்தமுதல் ஆம்புலனில் சஞ்சரித்த கள்வர்எனும்
பித்தர்பயம் தீர்ந்து பிழைக்குநாள் எந்நாளோ. 2

நாளும் பொறிவழியை நாடாத வண்ணம்எமை
ஆளும் பொறியால் அருள்வருவது எந்நாளோ. 3

வாக்குஆதி ஆனகர்ம மாயைதம்பால் வீண்காலம்
போக்காமல் உண்மை பொருந்துநாள் எந்நாளோ. 4

மனம்ஆன வானரக்கைம் மாலைஆ காமல்
எனைஆள் அடிகள்அடி எய்துநாள் எந்நாளோ. 5

வேட்டைப் புலப்புலையர் மேவாத வண்ணம்மனக்
காட்டைத் திருத்திக் கரைகாண்பது எந்நாளோ. 6

5. வானரக்கைம்மாலை – குரங்கின் கையில் அகப்பட்ட பூ மாலைபோல.

Koviloor Digital Library



உந்து பிறப்புஇறப்பை உற்றுவிடாது எந்தைஅருள்
வந்து பிறக்க மனம்இறப்பது எந்நாளோ. 7

புத்திஎனும் துத்திப் பொறிஅரவின் வாய்த்தேரை
ஒத்துவிடாது எந்தைஅருள் ஓங்குநாள் எந்நாளோ. 8

ஆங்காரம் என்னும்மத யானைவா யில்கரும்பாய்
ஏங்காமல் எந்தைஅருள் எய்துநாள் எந்நாளோ. 9

சித்தம்எனும் பௌவத் திரைக்கடலில் வாழ்துரும்பாய்
நித்தம்அலை யாதுஅருளில் நிற்குநாள் எந்நாளோ. 10

வித்தியா தத்துவங்கள் ஏழும் வெருண்டுஓடச்
சுத்தபர போகத்தைத் துய்க்குநாள் எந்நாளோ. 11

சுத்தவித்தை யேமுதலாத் தோன்றும்ஓர் ஐந்துவகைத்
தத்துவத்தை நீங்கிஅருள் சாருநாள் எந்நாளோ. 12

பொல்லாத காமப் புலைத்தொழிலில் என்அறிவு
செல்லாமல் நன்னெறியில் சேருநாள் எந்நாளோ. 13

அடிகள்அடிக் கீழ்க்குடியாய் யாம்வாழா வண்ணம்
குடிகெடுக்கும் பாழ்மடிமைக் கூறுஒழிவது எந்நாளோ. 14

ஆன புறக்கருவி ஆறுபத்தும் மற்றுஉளவும்
போனவழி யும்கூடப் புல்முளைப்பது எந்நாளோ. 15

அந்தகனுக்கு எங்கும்இருள் ஆனஆ றாஅறிவில்
வந்தஇருள் வேலை வடியுநாள் எந்நாளோ. 16

புன்மலத்தைச் சேர்ந்துமல போதம் பொருந்துதல்போய்
நின்மலத்தைச் சேர்ந்துமலம் நீங்குநாள் எந்நாளோ. 17

கண்டுகண்டும் தேறாக் கலக்கம்எல்லாம் தீர்வண்ணம்
பண்டைவினை வேரைப் பறிக்குநாள் எந்நாளோ. 18

---

8. துத்திப்பொறி அரவின் வாய்த்தேரை ஒத்துவிடாது – படத்தில் புள்ளிகள் வாய்ந்த பாம்பின் வாயில் அகப்பட்ட தவளையைப் போலாகாமல். 15. புல் முளைப்பது – முன்னே இருந்த பயிர் அழிந்துபட்டுப் போனதற்கு அறிகுறியாகப் புல்முளைப்பது. 16. இருள் வேலை வடியு நாள் – அஞ்ஞானக் கடல் வற்றிப்போகும் நாள்.

Koviloor Digital Library


பைங்கூழ் வினைதான் படுசாவி ஆகஎமக்கு
எம்கோன் கிரணவெயில் எய்துநாள் எந்நாளோ. 19

குறித்தவிதம் ஆதியால் கூடும்வினை எல்லாம்
வறுத்தவித்தாம் வண்ணம்அருள் வந்திடுநாள் எந்நாளோ. 20

சஞ்சிதமே ஆதி சரக்குஆன முச்சேறும்
வெந்தபொரி ஆகஅருள் மேவுநாள் எந்நாளோ. 21

தேகம்முதல் நான்காத் திரண்டுஒன்றாய் நின்றுஇலகும்
மோகம்மிகு மாயை முடியுநாள் எந்நாளோ. 22

சத்தம் முதலாத் தழைத்துஇங்கு எமக்குஉணர்த்தும்
சுத்தமா மாயை தொடக்குஅறுவது எந்நாளோ. 23

எம்மை வினையை இறையைஎம்பால் காட்டாத
அம்மை திரோதை அகலுநாள் எந்நாளோ. 24

நித்திரையாய் வந்து நினைவுஅழிக்கும் கேவலம்ஆம்
சத்துருவை வெல்லும் சமர்த்துஅறிவது எந்நாளோ. 25

சன்னல்பின்னல் ஆன சகலம்எனும் குப்பையிடை
முன்னவன்ஞா னக்கனலை மூட்டுநாள் எந்நாளோ. 26

மாயா விகார மலம்ஒழிசுத் தாவஸ்தை
தோயா அருளைத் தொடருநாள் எந்நாளோ. 27

## 7. தன் உண்மை

உடம்புஅறியும் என்னும்அந்த ஊழல்எல்லாம் தீரத்
திடம்பெறவே எம்மைத் தெரிசிப்பது எந்நாளோ. 1

செம்மைஅறி வால்அறிந்து தேகாதிக் குள்இசைந்த
எம்மைப் புலப்படவே யாம்அறிவது எந்நாளோ. 2

தத்துவம்ஆம் பாழ்த்த ஜடஉருவைத் தான்சுமந்த
சித்துஉருஆம் எம்மைத் தெரிசிப்பது எந்நாளோ. 3

---

24. அம்மை திரோதை – மறைப்புச் சக்தியாகிய மாயை.
1. ஊழல்எல்லாம் தீர – குளறுபாடெல்லாம் ஒழிய.

Koviloor Digital Library



பஞ்சப் பொறியைஉயிர் என்னும்அந்தப் பஞ்சம்அறச்
செஞ்செவே எம்மைத் தெரிசிப்பது எந்நாளோ. 4

அந்தக் கரணம்உயிர் ஆம்என்ற அந்தரங்க
சிந்தைக் கணத்தில்எம்மைத் தேர்ந்துஅறிவது எந்நாளோ. 5

முக்குணத்தை ஜீவன்என்னும் மூடத்தை விட்டுஅருளால்
அக்கணமே எம்மை அறிந்துகொள்வது எந்நாளோ. 6

காலைஉயிர் என்னும் கலதிகள்சொல் கேளாமல்
சீலமுடன் எம்மைத் தெளிந்துகொள்வது எந்நாளோ. 7

வான்கெடுத்துத் தேடும் மதிகேடர் போலஎமை
நான்கெடுத்துத் தேடாமல் நன்குஅறிவது எந்நாளோ. 8

## 8. அருள் இயல்பு

ஈனம் தரும்நாடு இதுநமக்கு வேண்டாஎன்று
ஆனந்த நாட்டில் அவதரிப்பது எந்நாளோ. 1

பொய்க்காட்சி ஆன புவனத்தை விட்டுஅருள்ஆம்
மெய்க்காட்சி ஆம்புவனம் மேவுநாள் எந்நாளோ. 2

ஆதிஅந்தம் காட்டாமல் அம்பரம்போ லேநிறைந்த
நீதிஇல் அருள்கடலைச் சேருநாள் எந்நாளோ. 3

எட்டுத் திசைக்கீழ்மேல் எங்கும் பெருகிவரும்
வெட்டவெளி விண்ஆற்றில் மெய்தோய்வது எந்நாளோ. 4

தூதானம் என்று சுருதிஎல்லாம் ஓலமிடும்
மீதானம் ஆனவெற்பை மேவுநாள் எந்நாளோ. 5

வெந்துவெடிக் கின்றசிந்தை வெப்புஅகலத் தண்அருளாய்
வந்துபொழி கின்ற மழைகாண்பது எந்நாளோ. 6

சூரியர்கள் சந்திரர்கள் தோன்றாச் சுயம்ஜோதிப்
பூரணதே சத்தில் பொருந்துநாள் எந்நாளோ. 7

---

4. அந்தப்பஞ்சம்அற – அந்தச் சிறுமையானது ஒழிய.

7. காலை உயிர் என்னும் கலதிகள் – பிராணனை ஆத்மா என்று சொல்லும் மூடர்கள்.

4. விண்ஆற்றில் – பரஞானமாகிய சிவானந்த நதியில்.

Koviloor Digital Library



கன்றுமன வெப்பக் கலக்கம்எலாம் தீரஅருள்
தென்றல்வந்து வீசுவெளி சேருநாள் எந்நாளோ. 8

கட்டுநமன் செங்கோல் கடாஅடிக்கும் கோல்ஆக
வெட்ட வெளிப்பொருளை மேவுநாள் எந்நாளோ. 9

சாலக் கபாடத் தடைதீர எம்பெருமான்
ஓலக்க மண்டபத்துள் ஓடுநாள் எந்நாளோ. 10

விண்ணவன் தாள்என்னும் விரிநிலா மண்டபத்தில்
தண்ணீர் அருந்தித் தளர்வுஒழிவது எந்நாளோ. 11

வெய்யபுவி பார்த்து விழித்துஇருந்த அல்லல்அறத்
துய்ய அருளில் துயிலுநாள் எந்நாளோ. 12

வெய்ய பிறவிவெயில் வெப்பம்எலாம் விட்டுஅகல
ஐயன்அடி நிழல் அணையுநாள் எந்நாளோ. 13

வாதைப் பிறவி வளைகடலை நீந்தஐயன்
பாதப் புணைஇணையைப் பற்றுநாள் எந்நாளோ. 14

ஈனம்இல்லா மெய்ப்பொருளை இம்மையிலே காணவெளி
ஞானம்எனும் அஞ்சனத்தை நான்பெறுவது எந்நாளோ. 15

எல்லாம் இறந்தஇடத்து எந்தைநிறைவு ஆம்வடிவைப்
புல்லாமல் புல்லிப் புணருநாள் எந்நாளோ. 16

ஜடத்துள்உயிர் போல்எமக்குத் தான்உயிராய் ஞானம்
நடத்தும்முறை கண்டுபணி நாம்விடுவது எந்நாளோ. 17

எக்கணும்ஆம் துன்ப இருள்கடலை விட்டுஅருள்ஆம்
மிக்ககரை ஏறி வெளிப்படுவது எந்நாளோ. 18

---

8. கன்று மன வெப்பக் கலக்கம் – புழுங்குகின்ற மன வெப்பத்தாலான கலக்கங்கள். 9. கடா அடிக்கும் கோல்ஆக – எமனுடைய எருமைக் கடாவை ஓட்டும் கோல் ஆகும்படி. 10. சாலக் கபாடத் தடைதீர – மாயையின் பெரிய கதவு என்னும் தடை அகல. 16. புல்லாமல் புல்லிப் புணருநாள் – உடலின் துணையில்லாது திருவருளைச் சேர்ந்திருக்கு நாள். 17. பணி நாம் விடுவது – கருமத்தை நாம் விட்டொழிப்பது.

Koviloor Digital Library



## 9. பொருள் இயல்பு

கைவிளக்கின் பின்னேபோய்க் காண்பார்போல்
மெய்ஞ்ஞான
மெய்விளக்கின் பின்னேபோய் மெய்காண்பது எந்நாளோ. 1

கேடுஇல்பசு பாசம்எல்லாம் கீழ்ப்படவும் தானேமேல்
ஆடும் சுகப்பொருளுக்கு அன்புறுவது எந்நாளோ. 2

ஆணவத்தை நீக்கி அறிவூடே ஐவகையாக்
காண்அவஸ்தைக்கு அப்பாலைக் காணுநாள் எந்நாளோ. 3

நீக்கப் பிரியா நினைக்கமறக் கக்கூடாப்
போக்குவரவு அற்ற பொருள்அணைவது எந்நாளோ. 4

அண்டருக்கும் எய்ப்பில்வைப்புஆம் ஆர்அமுதை
என்அகத்தில்
கண்டுகொண்டு நின்று களிக்கும்நாள் எந்நாளோ. 5

காட்டும் திருஅருளே கண்ஆகக் கண்டுபர
வீட்டுஇன்ப மெய்ப்பொருளை மேவுநாள் எந்நாளோ. 6

நான்ஆன தன்மை நழுவியே எவ்உயிர்க்கும்
தான்ஆன உண்மைதனைச் சாருநாள் எந்நாளோ. 7

சிந்தை மறந்து திருஅருளாய் நிற்பவர்பால்
வந்தபொருள் எம்மையும்தான் வாழ்விப்பது எந்நாளோ. 8

எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் வியாபகமாய்
உள்ளஒன்றை உள்ளபடி ஒருநாள் எந்நாளோ. 9

அருஉருவம் எல்லாம் அகன்றுஅதுவாய் ஆன
பொருள்எமக்கு வந்து புலப்படுவது எந்நாளோ. 10

ஆரணமும் காணா அகண்டிதா காரபரி
பூரணம்வந்து எம்மைப் பொருந்துநாள் எந்நாளோ. 11

சத்தொடுசித்து ஆகித் தயங்கியஆ னந்தபரி
சுத்த அகண்டசிவம் தோன்றுநாள் எந்நாளோ. 12

---

10. அதுவாய் ஆன பொருள் – தன்னில் தானாய் நின்ற சிவம். 11. ஆரணமும் காணா – வேதங்களுக்கும் எட்டாத.

Koviloor Digital Library



எங்குஎங்கும் பார்த்தாலும் இன்புஉருவாய் நீக்கம்இன்றித்
தங்கும் தனிப்பொருளைச் சாருநாள் எந்நாளோ. 13

அடிமுடிகாட் டாதசுத்த அம்பரம்ஆம் ஜோதிக்
கடுவெளிவந்து என்னைக் கலக்குநாள் எந்நாளோ. 14

ஒன்றனையும் காட்டா உளத்துஇருளைச் சூறைஇட்டு
நின்றபரஞ் ஜோதியுடன் நிற்குநாள் எந்நாளோ. 15

எந்தச் சமயம் இசைந்தும்அறி வூடுஅறிவாய்
வந்தபொரு ளேபொருளா வாஞ்சிப்பது எந்நாளோ. 16

எவ்வாறுஇங்கு உற்றுஉணர்ந்தார் யாவர் அவர்தமக்கே
அவ்வாறாய் நின்றபொருட்கு அன்புவைப்பது எந்நாளோ. 17

பெண்ஆண் அலிஎனவும் பேசாமல் என்அறிவின்
கண்ணூடே நின்றஒன்றைக் காணுநாள் எந்நாளோ. 18

நினைப்பும் மறப்பும்அற நின்றபரஞ் ஜோதி
தனைப்புலமா என்அறிவி.ல் சந்திப்பது எந்நாளோ. 19

## 10. ஆனந்த இயல்பு

பேச்சுமூச்சு இல்லாத பேரின்ப வெள்ளம்உற்று
நீச்சுநிலை காணாமல் நிற்குநாள் எந்நாளோ. 1

சித்தம் தெளிந்தோர் தெளிவில் தெளிவுஆன
சுத்த சுகக்கடலுள் தோயுநாள் எந்நாளோ. 2

சிற்றின்பம் உண்டுஊழ் சிதையஅனந் தம்கடல்போல்
முற்றின்ப வெள்ளம்எமை மூடுநாள் எந்நாளோ. 3

எல்லைஇல்பே ரின்பமயம் எப்படிஎன் றோர்தமக்குச்
சொல்அறியா ஊமர்கள்போல் சொல்லுநாள் எந்நாளோ. 4

அண்டர்அண்ட கோடி அனைத்தும் உகாந்தவெள்ளம்
கொண்டதுஎனப் பேரின்பம் கூடுநாள் எந்நாளோ. 5

---

14. கடுவெளி – எல்லையில் அடங்காத பரவெளி.
19. புலமா என் அறிவில் – வெளியாக என் அறிவின் கண்ணே.
1. நீச்சு நிலை காணாமல் – அகண்டத்தில் நீந்தி.
5. உகாந்த வெள்ளம் – ஊழிவெள்ளம்.

Koviloor Digital Library



ஆதிஅந்தம் இல்லாத ஆதிஅ நாதிஎனும்
ஜோதிஇன்பத் தூடே துளையுநாள் எந்நாளோ. 6

சாலோகம் ஆதி சவுக்கியமும் விட்டநம்பால்
மேல்ஆன ஞானஇன்பம் மேவுநாள் எந்நாளோ. 7

தற்பரத்தின் உள்ளேயும் சாலோகம் ஆதிஎனும்
பொற்புஅறிந்துஆ னந்தம் பொருந்துநாள் எந்நாளோ. 8

உள்ளத்தின் உள்ளேதான் ஊறும் சிவானந்த
வெள்ளம் துளைந்து விடாய்தீர்வது எந்நாளோ. 9

கன்னலுடன் முக்கனியும் கற்கண்டும் தீனியுமாய்
மன்னும்இன்ப ஆரமுதை வாய்மடுப்பது எந்நாளோ. 10

மண்ணூடு உழன்ற மயக்கம்எல்லாம் தீர்ந்திடவும்
விண்ணூடு எழுந்தசுகம் மேவுநாள் எந்நாளோ. 11

கானல் ஜலம்போன்ற கட்டுஉழலைப் பொய்தீர
வான்அமுத வாவி மருவுநாள் எந்நாளோ. 12

தீங்கரும்புஎன் றால்இனியா தின்றால் இனிப்பனபோல்
பாங்குறும்பே ரின்பம் படைக்குநாள் எந்நாளோ. 13

புண்ணியபா வங்கள் பொருந்தாமெய் அன்பர்எல்லாம்
நண்ணியபே ரின்பசுகம் நான்அணைவது எந்நாளோ. 14

## 11. அன்பு நிலை

தக்கரவி கண்ட சரோருகம்போல் என்இதயம்
மிக்கஅருள் கண்டு விகசிப்பது எந்நாளோ. 1

வானமுகில் கண்ட மயூரபக்ஷி போலஐயன்
ஞானநடம் கண்டு நடிக்குநாள் எந்நாளோ. 2

6. துளையும்நாள் — முழுகும் நாள்.

1. ரவிகண்ட சரோருகம்போல் — சூரியனைக்கண்ட தாமரை மலர்வதுபோல.

2. மயூரபக்ஷிபோல — மயில் பறவை ஆடுதல் போல.

Koviloor Digital Library



சந்திரனை நாடும் சகோரபக்ஷி போல்அறிவில்
வந்தபரஞ் ஜோதியையான் வாஞ்சிப்பது எந்நாளோ. 3

குத்திரமெய்ப் புற்றகத்துக் குண்டலிப்பாம்பு ஒன்றுஆட்டும்
சித்தனைஎன் கண்ணால் தெரிசிப்பது எந்நாளோ. 4

அந்தரத்தே நின்றுஆடும் ஆனந்தக் கூத்தனுக்குஎன்
சிந்தை திறைகொடுத்துச் சேவிப்பது எந்நாளோ. 5

கள்ளன்இவன் என்றுமெள்ளக் கைவிடுதல் காரியமோ
வள்ளலே என்று வருந்துநாள் எந்நாளோ. 6

விண்நாடர் காணா விமலா பரஞ்ஜோதி
அண்ணாவா வாஎன்று அரற்றுநாள் எந்நாளோ. 7

ஏதுஏது செய்தாலும் என்பணிபோய் நின்பணிஆம்
மாதேவா என்று வருந்துநாள் எந்நாளோ. 8

பண்டும்கா ணேன்நான் பழம்பொருளே இன்றும்உனைக்
கண்டும்கா ணேன்எனவும் கைகுவிப்பது எந்நாளோ. 9

பொங்குஏதம் ஆன புழுக்கம்எலாம் தீரஇன்பம்
எங்கேஎங் கேஎன்று இரங்குநாள் எந்நாளோ. 10

கடலின்மடை கண்டதுபோல் கண்ணீர் ஆறுஆக
உடல்வெதும்பி மூர்ச்சித்து உருகுநாள் எந்நாளோ. 11

புலர்ந்தேன் முகம்சருகாய்ப் போனேன்நின் காண
அலந்தேன்என்று ஏங்கி அழுங்குநாள் எந்நாளோ. 12

புண்ணீர்மை யாளர் புலம்புமா போல்புலம்பிக்
கண்ணீரும் கம்பலையும் காட்டுநாள் எந்நாளோ. 13

---

3. சகோரப்பக்ஷிபோல் – வானத்தில் வாழும் சகோரம் என்னும் ஒருவகைப் பறவை போன்று.

4. குத்திரம் – இழிவு.

5. திறைகொடுத்து – கப்பம்கட்டி.

9. கண்டும்காணேன் – அரைகுறை ஞானம் படைத்தவனாக இருக்கின்றேன்.

10. பொங்கு ஏதம் – மிகுதியான குற்றம்.

Koviloor Digital Library



போற்றேன்என் றாலும்என்னைப் புந்திசெயும் வேதனைக்குஇங்கு
ஆற்றேன்ஆற் றேன்என்று அரற்றுநாள் எந்நாளோ. 14

பொய்ம்முடங்கும் பூமிசில போட்டுஅலறப் பூங்கமலன்
கைம்முடங்க நான்ஜனனக் கட்டுஅறுவது எந்நாளோ. 15

கல்குணத்தைப் போன்றவஞ்சக் காரர்கள்கை கோவாமல்
நல்குணத்தார் கைகோத்து நான்திரிவது எந்நாளோ. 16

துஷ்டனைமா மாயைச் சுழல்நீக்கி அந்தரமே
விட்டனையோ என்று வியக்குநாள் எந்நாளோ. 17

## 12. அன்பர் நெறி

அத்துவா எல்லாம் அடங்கச்சோ தித்தபடி
சித்துஉருவாய் நின்றார் தெளிவுஅறிவது எந்நாளோ. 1

மூச்சுஅற்றுச் சிந்தை முயற்சிஅற்று மூதறிவாய்ப்
பேச்சுஅற்றோர் பெற்றஒன்றைப் பெற்றிடுநாள் எந்நாளோ. 2

கோட்டாலை ஆன குணம்இறந்த நிர்க்குணத்தோர்
தேட்டாலே தேடுபொருள் சேருநாள் எந்நாளோ. 3

கெடுத்தே பசுத்துவத்தைக் கேடுஇலா ஆனந்தம்
அடுத்தோர் அடுத்தபொருட்கு ஆர்வம்வைப்பது எந்நாளோ. 4

கல்கண்டால் ஓடுகின்ற காக்கைபோல் பொய்ம்மாயச்
சொல்கண்டால் ஓடும்அன்பர் தோய்வுஅறிவது எந்நாளோ. 5

மெய்த்தகுலம் கல்விபுனை வேஷம்எலாம் ஓடவிட்ட
சித்தர்ஒன்றும் சேராச் செயல்அறிவது எந்நாளோ. 6

குற்றச் சமயக் குறும்புஅடர்ந்து தற்போதம்
அற்றவர்கட்கு அற்றபொருட்கு அன்புவைப்பது எந்நாளோ. 7

தர்க்கமிட்டுப் பாழ்ஆம் சமயக் குதர்க்கம்விட்டு

---

1. அத்துவா – ஆத்ம சாதனத்துக்குரிய முறைகள்.

3. கோட்டாலை ஆன – துன்பத்துக்கு ஏதுவான. தேட்டாலே தேடுபொருள் – விருப்பத்துடன் தேடவேண்டிய மெய்ப்பொருள்.

Koviloor Digital Library



நிற்கும்அவர் கண்டவழி நேர்பெறுவது எந்நாளோ. 8

வீறியவே தாந்தமுதல் மிக்கக லாந்தம்வரை
ஆறும்உணர்ந் தோர்உணர்வுக்கு அன்புவைப்பது
எந்நாளோ. 9

கண்டஇடம் எல்லாம் கடவுள்மயம் என்றுஅறிந்து
கொண்டநெஞ்சர் நேயநெஞ்சில் கொண்டு இருப்பது
எந்நாளோ. 10

பாக்கியங்கள் எல்லாம் பழுத்து மனம்பழுத்தோர்
நோக்கும் திருக்கூத்தை நோக்குநாள் எந்நாளோ. 11

எவ்உயிரும் தம்உயிர்போல் எண்ணும் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்பது எந்நாளோ. 12

## 13. அறிஞர் உரை

இருநிலனாய்த் தீஆகி என்றதிருப் பாட்டின்
பெருநிலையைக் கண்டுஅணைந்து பேச்சுஅறுவது
எந்நாளோ. 1

அற்றவர்கட்கு அற்றசிவன் ஆம்என்ற அத்வைத
முற்றுமொழி கண்டுஅருளில் மூழ்குநாள் எந்நாளோ. 2

தான்என்னை முன்படைத்தான் என்ற தகஉரையை
நான்என்னா உண்மைபெற்று நாம்உணர்வது எந்நாளோ. 3

என்னுடைய தோழனுமாய் என்ற திருப்பாட்டின்
நன்னெறியைக் கண்டுஉரிமை நாம்செய்வது எந்நாளோ. 4

ஆருடனே சேரும் அறிவுஎன்ற அவ்உரையைத்
தேரும் படிக்குஅருள்தான் சேருநாள் எந்நாளோ. 5

உன்னில்உன்னும் என்ற உறுமொழியால் என்இதயம்
தன்னில்உன்னி நன்னெறியைச் சாருநாள் எந்நாளோ. 6

நினைப்புஅறவே தான்நினைந்தேன் என்றநிலை நாடி
அனைத்தும்ஆம் அப்பொருளில் ஆழுநாள் எந்நாளோ. 7

சென்றுசென் றேஅணுவாய்த் தேய்ந்துதேய்ந்து ஒன்றுஆகி
நின்றுவிடும் என்றநெறி நிற்குநாள் எந்நாளோ. 8

Koviloor Digital Library



ஆதிஅந்தம் இல்லா அரியபரஞ் ஜோதிஎன்ற
நீதிமொழி கண்டுஅதுவாய் நிற்குநாள் எந்நாளோ. 9

பிறிதுஒன்றில் ஆசைஇன்றிப் பெற்றிருந்தேன் என்ற
நெறிஉடையான் சொல்லில்நிலை நிற்குநாள் எந்நாளோ 10

திரைஅற்ற நீர்போல் தெளிய எனத்தேர்ந்த
உரைபற்றி உற்றுஅங்கு ஒடுங்குநாள் எந்நாளோ. 11

அறியா அறிவில் அவிழ்ந்துஏற என்ற
நெறிஆம் உரைஉணர்ந்து நிற்குநாள் எந்நாளோ. 12

எனக்குள்நீ என்றும் இயற்கையாப் பின்னும்
உனக்குள்நான் என்ற உறுதிகொள்வது எந்நாளோ. 13

அறிவை அறிவதுவே ஆகும் பொருள்என்று
உறுதிசொன்ன உண்மையினை ஒருநாள் எந்நாளோ. 14

## 14. நிற்கும் நிலை

பண்ணின் இசைபோலப் பரமன்பால் நின்றதிறன்
எண்ணிஅருள் ஆகி இருக்குநாள் எந்நாளோ. 1

அறிவோடு அறியாமை அற்றுஅறிவி னூடே
குறியில் அறிவுவந்து கூடுநாள் எந்நாளோ. 2

சொல்லால் மனத்தால் தொடராச்சம் பூரணத்தில்
நில்லா நிலையாய் நிலைநிற்பது எந்நாளோ. 3

செங்கதிரின் முன்மதியம் தேசுஅடங்கி நின்றிடல்போல்
அங்கணனார் தாளில் அடங்குநாள் எந்நாளோ. 4

வானூடு அடங்கும் வளிபோல இன்புஉருஆம்
கோனூடு அடங்கும் குறிப்புஅறிவது எந்நாளோ. 5

செப்பரிய தண்கருணைச் சித்சுகனார் பூரணத்தில்
அப்பினிடை உப்பாய் அணையுநாள் எந்நாளோ. 6

தூய அறிவுஆன சுகரூப ஜோதிதன்பால்
தீயில் இரும்புஎன்னத் திகழுநாள் எந்நாளோ. 7

தீதுஅணையாக் கர்ப்பூர தீபம்என நான்கண்ட
ஜோதியுடன் ஒன்றித் துரிசுஅறுவது எந்நாளோ. 8

Koviloor Digital Library



ஆர்ஆரும் காணாத அற்புதனார் பொற்புஅடிக்கீழ்
நீர்ஆர் நிழல்போல் நிலாவுநாள் எந்நாளோ. 9

எட்டத் தொலையாத எந்தைபிரான் சந்நிதியில்
பட்டப் பகல்விளக்காய்ப் பண்புறுவது எந்நாளோ. 10

கருப்புவட்டை வாய்மடுத்துக் கண்டார்நாப் போல
விருப்புஉவட்டா இன்புஉருவை மேவுநாள் எந்நாளோ. 11

துச்சப் புலனால் சுழலாமல் தண்அருளால்
உச்சிக் கதிர்ஸ்படிகம் ஒவ்வுநாள் எந்நாளோ. 12

இம்மா நிலத்தில் இருந்தபடி யேஇருந்து
சும்மா அருளைத் தொடருநாள் எந்நாளோ. 13

தானவன்ஆம் தன்மைஎய்தித் தண்டம்என அண்டம்எங்கும்
ஞானமத யானை நடத்துநாள் எந்நாளோ. 14

ஒன்றுஇரண்டும் இல்லதுவாய் ஒன்றுஇரண்டும்
உள்ளதுவாய்
நின்ற சமத்துநிலை நேர்பெறுவது எந்நாளோ. 15

பாசம்அக லாமல் பதியில் கலவாமல்
மாசுஇல் சமத்துமுக்தி வாய்க்குநாள் எந்நாளோ. 16

சிற்றறிவு மெள்ளச் சிதைந்துஎம்மான் பேரறிவை
உற்றுஅறியா வண்ணம்அறிந்து ஓங்குநாள் எந்நாளோ. 17

தந்திரத்தை மந்திரத்தைச் சாரின்நவை ஆம்அறிவுஎன்று
எந்தைஉணர் வேவடிவாய் எய்துநாள் எந்நாளோ. 18

போக்குவரவு அற்றவெளி போல்நிறைந்த போதநிலை
நீக்கம்அறக் கூடி நினைப்புஅறுவது எந்நாளோ. 19

காண்பானும் காட்டுவதும் காட்சியுமாய் நின்றஅந்த
வீண்பாவம் போய்அதுவாய் மேவுநாள் எந்நாளோ. 20

வாடாதே நானாவாய் மாயாதே எம்கோவை
நாடாதே நாடி நலம்பெறுவது எந்நாளோ. 21

---

12. உச்சிக்கதிர் ஸ்படிகம் ஒவ்வு நாள் – நடுப்பகலில் சூரியனுக்கு நிகராகப் படிகம் ஒளிவிடுவதுபோல.

Koviloor Digital Library



ஆடலையே காட்டிஎனது ஆடல்ஒழித்து ஆண்டான்பொன்
தாள்தலைமேல் சூடித் தழைக்குநாள் எந்நாளோ. 22

மேலொடுகீழ் இல்லாத வித்தகனார் தம்முடனே
பாலொடுநீர் போல்கலந்து பண்புறுவது எந்நாளோ. 23

அறியாது அறிந்துஎமைஆள் அண்ணலைநாம் ஆகக்
குறியாத வண்ணம் குறிக்குநாள் எந்நாளோ. 24

ஓராமல் மந்திரமும் உன்னாமல் நம்பரனைப்
பாராமல் பார்த்துப் பழகுநாள் எந்நாளோ. 25

ஊன்பற்றும் என்னோடு உறவுபற்றும் பூரணன்பால்
வான்பற்றும் கண்போல் மருவுநாள் எந்நாளோ. 26

ஆண்டான் மவுனி அளித்தஅறி வால்அறிவைத்
தூண்டாமல் தூண்டித் துலங்குநாள் எந்நாளோ. 27

ஆணவத்தோடு அத்வைதம் ஆனபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோடு அத்வைதம் சாருநாள் எந்நாளோ. 28

## 15. நிலைபிரிந்தோர் கூடுதற்கு உபாயம்

கன்மநெறி தப்பில் கடுநரகுஎன்று எந்நாளும்
நன்மைதரும் ஞானநெறி நான்அணைவது எந்நாளோ. 1

ஞானநெறி தானே நழுவிடினும் முப்பதத்துள்
ஆனமுக்தி நல்கும்என அன்புறுவது எந்நாளோ. 2

பன்மார்க்கம் ஆன பலஅடிபட் டேனும்ஒரு
சொல்மார்க்கம் கண்டு துலங்குநாள் எந்நாளோ. 3

அத்வைதம் என்ற அந்நியச்சொல் கண்டுஉணர்ந்து
சுத்த சிவத்தைத் தொடருநாள் எந்நாளோ. 4

கேட்டல்முதல் நான்காலே கேடுஇலா நாற்பதமும்
வாட்டம் அறஎனக்கு வாய்க்குநாள் எந்நாளோ. 5

---

2. முப்பதத்துள் ஆன முக்தி – சரியை கிரியை யோகமாகிய மூன்று பதங்களால் வாய்க்கும் பேறு.

5. கேடு இலா நாற்பதமும் – சாலோக்யம், சாமீப்யம், சாரூப்யம், சாயுஜ்யம் ஆகிய நான்கு நிலைகளும்.

Koviloor Digital Library



என்னதுயான் என்பதுஅற எவ்இடமும் என்ஆசான்
சந்நிதியாக் கண்டுநிஷ்டை சாதிப்பது எந்நாளோ. 6

நாம்பிரமம் என்றால் நடுவேஒன்று உண்டாமால்
தேம்பிஎல்லாம் ஒன்றாய்த் திகழுநாள் எந்நாளோ. 7

முச்சகமே ஆதி முழுதும்அகண் டாகார
சச்சிதா னந்தசிவம் தான்என்பது எந்நாளோ. 8

எவ்வடிவும் பூரணம்ஆம் எந்தைஉருவு என்றுஇசைந்த
அவ்வடிவுக்கு உள்ளே அடங்குநாள் எந்நாளோ. 9

சிந்தித்தது எல்லாம் சிவபூ ரணம்ஆக
வந்தித்து வாழ்த்தி வணங்குநாள் எந்நாளோ. 10

தாங்கியபார் விண்ஆதி தானேஞா னாக்கினியாய்
ஓங்கும் யோகஉணர்வு உற்றிடுநாள் எந்நாளோ. 11

ஆசனமூர்த் தங்கள் அறஅகண்டா காரசிவ
பூஜைசெய ஆசை பொருந்துநாள் எந்நாளோ. 12

அஞ்சுஎழுத்தின் உண்மை அதுஆன அப்பொருளை
நெஞ்சு அழுத்தி ஒன்றுஆகி நிற்குநாள் எந்நாளோ. 13

அவ்உயிர்போல் எவ்உயிரும் ஆனபிரான் தன்அடிமை
எவ்உயிரும் என்றுபணி யாம்செய்வது எந்நாளோ. 14

தேசிகர்கோன் ஆன திறன்மவுனி நம்தமக்கு
வாசி கொடுக்க மகிழுநாள் எந்நாளோ. 15

குருலிங்க ஜங்கமமாக் கொண்ட திருமேனி
அருள்மயம்என்று அன்புற்று அருள்பெறுவது எந்நாளோ. 16

## 46. காண்பேனோ என் கண்ணி

சிந்திக்கும் தோறும் தெவிட்டா அமுதேஎன்
புந்திக்குள் நீதான் பொருந்திடவும் காண்பேனோ. 1

கேவலத்தில் நான்கிடந்து கீழ்ப்படாது இன்பஅருள்
காவலன்பால் ஒன்றிக் கலந்திடவும் காண்பேனோ 2

15. வாசி கொடுக்க – யோகதத்துவத்தை விளக்க.

2. கேவலத்தில் நான் கிடந்து – சாதாரண உலக நாட்டத்தில் நான் இருந்து.

Koviloor Digital Library



துரியம் கடந்தஒன்றே தூவெளியாய் நின்ற
பெரியநிறை வேஉனைநான் பெற்றிடவும் காண்பேனோ. 3

மாசுஅற்ற அன்பர்நெஞ்சே மாறாத பெட்டகமாத்
தேசுஉற்ற மாமணிநின் தேசினையும் காண்பேனோ. 4

மாயா விகார மலம்அகல எந்தைபிரான்
நேயாநு பூதி நிலைபெறவும் காண்பேனோ. 5

பொய்உலகும் பொய்உறவும் பொய்உடலும் பொய்எனவே
மெய்யநினை மெய்எனவே மெய்யுடனே காண்பேனோ. 6

வால்அற்ற பட்டம்என மாயா மனப்படலம்
கால்அற்று வீழவும்முக் கண்உடையாய் காண்பேனோ. 7

உள்ளும் புறம்பும் ஒருபடித்தாய் நின்றுசுகம்
கொள்ளும் படிக்குஇறைநீ கூட்டிடவும் காண்பேனோ. 8

காட்டுகின்ற முக்கண் கரும்பே கனியேஎன்
ஆட்டம்எல்லாம் தீரஉனது ஆடலையும் காண்பேனோ. 9

தூங்காமல் தூங்கிச் சுகப்பெருமான் நின்நிறைவில்
நீங்காமல் நிற்கும் நிலைபெறவும் காண்பேனோ. 10

வாதவூ ராளிதனை வான்கருணை யால்விழுங்கும்
போதவூர் ஏறேநின் பொன்அடியும் காண்பேனோ. 11

சாட்டைஇலாப் பம்பரம்போல் ஆடும் ஜடஜால
நாட்டம்அற எந்தைசுத்த ஞானவெளி காண்பேனோ. 12

மன்றுஆடும் வாழ்வே மரகதம்சேர் மாணிக்கக்
குன்றேநின் தாள்கீழ்க் குடிபெறவும் காண்பேனோ. 13

பொய்என்று அறிந்தும்எமைப் போகஒட்டாது ஐயஇந்த
வையம் கனமயக்கம் ஆற்றிடவும் காண்பேனோ. 14

தாயினும் நல்ல தயாளுவே நின்னைஉன்னித்
தீயின்மெழுகு ஒத்துஉருகும் சிந்தைவரக் காண்பேனோ. 15

என்செயினும் என்பெறினும் என்இறைவா ஏழையன்யான்
நின்செயல்என்று உன்னும் நினைவுவரக் காண்பேனோ. 16

Koviloor Digital Library



எள்ளத் தனையும் இரக்கம்இலா வன்பாவி
உள்ளத்தும் எந்தை உலவிடவும் காண்பேனோ. 17

வஞ்சகத்துக்கு ஆலயம்ஆம் வல்வினையேன் ஆகெடுவேன்
நெஞ்சு அகத்தில் ஐயாநீ நேர்பெறவும் காண்பேனோ. 18

தொல்லைப் பிறவித் துயர்கெடவும் எந்தைபிரான்
மல்லல் கருணை வழங்கிடவும் காண்பேனோ. 19

வாள்ஆரும் கண்ணார் மயல்கடலில் ஆழ்ந்தேன் சற்று
ஆள்ஆக எந்தை அருள்செயவும் காண்பேனோ. 20

பஞ்சாய்ப் பறக்கும்நெஞ்சப் பாவியைநீ கூவிஐயா
அஞ்சாதே என்றுஇன் னருள்செயவும் காண்பேனோ. 21

ஆடுகறங்கு ஆகி அலமந்து உழன்றுமனம்
வாடும்எனை ஐயாநீ வாஎனவும் காண்பேனோ. 22

சிஷ்டர்க்கு எளிய சிவனேயோ தீவினையேன்
மட்டற்ற ஆசை மயக்குஅறவும் காண்பேனோ. 23

உள்நின்று உணர்த்தும் உவப்புஇலா ஒன்றேநின்
தண்என்ற சாந்தஅருள் சார்ந்திடவும் காண்பேனோ. 24

ஓடும் கருத்துஒடுங்க உள்உணர்வு தோன்றநினைக்
கூடும் படிக்குஇறைநீ கூட்டிடவும் காண்பேனோ. 25

வாக்கால் மனத்தால் மதிப்புஅரியாய் நின்அருளை
நோக்காமல் நோக்கிநிற்கும் நுண்ணறிவு காண்பேனோ. 26

இவ்உடம்பு நீங்கும்முனே எந்தாய்கேள் இன்னருளாம்
அவ்உடம்புக்கு உள்ளே அவதரிக்கக் காண்பேனோ. 27

நித்தமாய் ஒன்றாய் நிரஞ்சனமாய் நிர்க்குணம்ஆம்
சுத்தவெளி நீவெளியாய்த் தோன்றிடவும் காண்பேனோ. 28

கண்நிறைந்த மோனக் கருத்தேஎன் கண்ணேஎன்
உள்நிறைந்த மாயை ஒழிந்திடவும் காண்பேனோ. 29

---

19. மல்லல் கருணை – பெருங்கருணை.
22. அலமந்து உழன்று – அலைந்து திரிந்து.
25. உள் உணர்வு தோன்ற – ஆத்மபோதம் மேலிட்டு.

Koviloor Digital Library



அத்தா விமலா அருளாளா ஆனந்த
சித்தா எனக்குஉன்அருள் செய்திடவும் காண்பேனோ 30

வீணே பிறந்துஇறந்து வேசற்றேன் ஆசைஅறக்
காணேன் இறைநின் கருணைபெறக் காண்பேனோ. 31

சட்டைஒத்த இவ்உடலைத் தள்ளுமுன்னே நான்சகஜ
நிட்டையைப் பெற்றுஐயா நிருவிகற்பம் காண்பேனோ. 32

எல்லாம் தெரியும் இறைவாஎன் அல்லல்எலாம்
சொல்லாமுன் நீதான் தொகுத்துஇரங்கக் காண்பேனோ. 33

அண்டபகி ரண்டம் அனைத்தும் ஒருபடித்தாக்
கண்டவர்கள் கண்டதிருக் காட்சியையும் காண்பேனோ. 34

ஊன்இருந்த காயம் உடன்இருப்ப எந்தைநின்பால்
வான்இருந்தது என்னவும்நான் வந்திருக்கக்
காண்பேனோ. 35

தினைஅத் தனையும் தெளிவுஅறியாப் பாவியேன்
நினைவில் பரம்பொருள்நீ நேர்பெறவும் காண்பேனோ. 36

துன்பம்எனும் திட்டுஅனைத்தும் தூறையிட ஐயாவே
இன்பவெள்ளம் வந்துஇங்கு எதிர்ப்படவும் காண்பேனோ.37

## 47. ஆகாதோ என் கண்ணி

கல்லாத நெஞ்சம் கரைந்துஉருக எத்தொழிற்கும்
வல்லாய்நின் இன்பம் வழங்கினால் ஆகாதோ. 1

என்னை அறிய எனக்குஅறிவாய் நின்றுஅருள்நின்
தன்னைஅறிந்து இன்பநலம் சாரவைத்தால் ஆகாதோ. 2

பொய்ம்மயமே ஆன புரைதீர எந்தைஇன்ப
மெய்ம்மயம்வந்து என்னை விழுங்கவைத்தால் ஆகாதோ. 3

மட்டுஇல்லாச் சிற்சுகம்ஆம் வாழ்வேநின் இன்பமயம்
சிட்டர்போல் யான்அருந்தித் தேக்கவைத்தால் ஆகாதோ. 4

அத்தாநின் பொன்தாள் அடிக்கே அநுதினமும்
பித்துஆக்கி இன்பம் பெருகவைத்தால் ஆகாதோ. 5

---

31. வேசற்றேன் – அலக்கழிந்தேன்.

Koviloor Digital Library



மெல்லியலார் மோக விழற்குஇறைப்பேன் ஐயாநின்
எல்லையில்ஆ னந்தநலம் இச்சித்தால் ஆகாதோ. 6

சுட்டுஅழகாய் எண்ணும்மனம் நூறையிட்டுஆ னந்தமயக்
கட்டழகா நின்னைக் கலக்கவைத்தால் ஆகாதோ. 7

ஜோதியே நந்தாச் சுகவடிவே தூவெளியே
ஆதியே நின்னை அறியவைத்தால் ஆகாதோ. 8

நேசம் சிறிதும்இலேன் நிர்மலனே நின்அடிக்கே
வாசம் செயஇரங்கி வாஎன்றால் ஆகாதோ. 9

என்அறிவுக்கு உள்ளே இருந்ததுபோல் ஐயாவே
நின்அறிவுள் நின்னுடன்யான் நிற்கவைத்தால் ஆகாதோ. 10

ஆதிப் பிரானேஎன் அல்லல் இருள்அகலச்
ஜோதிப்ர காசமயம் தோற்றுவித்தால் ஆகாதோ. 11

ஆசைச் சுழல்கடலில் ஆழாமல் ஐயாநின்
நேசப் புணைத்தாள் நிறுத்தினால் ஆகாதோ. 12

பாசநிக ளங்கள்எல்லாம் பஞ்சுஆகச் செஞ்செவே
ஈசஎனை வாஎன்று இரங்கினால் ஆகாதோ. 13

ஓயாஉள் அன்பாய் உருகிவாய் விட்டுஅரற்றிச்
சேய்ஆகி எந்தைநின்னைச் சேரவைத்தால் ஆகாதோ. 14

ஆதிஆம் வாழ்வாய் அகண்டிதமாய் நின்றபரஞ்
ஜோதிநீ என்னைத் தொழும்பன்என்றால் ஆகாதோ. 15

விண்ஆரக் கண்ட விழிபோல் பரஞ்ஜோதி
கண்ஆர நின்நிறைவைக் காணவைத்தால் ஆகாதோ. 16

சேராமல் சேர்ந்துநின்று சின்மயனே நின்மயத்தைப்
பாராமல் பார்எனநீ பக்ஷம்வைத்தால் ஆகாதோ 17

கண்ணாடி போலஎல்லாம் காட்டும் திருவருளை
உள்நாடி ஐயா உருகவைத்தால் ஆகாதோ. 18

---

13. பாசநிகளங்கள் – பாசமாகிய விலங்குகள்.

Koviloor Digital Library



மூலஇருள் கால்வாங்க மூதறிவு தோன்றஅருள்
கோலம்வெளி ஆகஎந்தை கூடுவித்தால் ஆகாதோ. 19

சாற்றரிய இன்பவெள்ளம் தாக்கும்அதில் நீமுளைக்கில்
ஊற்றம்உறும் என்னஅதில் உண்மைசொன்னால்
ஆகாதோ. 20

கையும் குவித்துஇரண்டு கண்அருவி பெய்யஅருள்
ஐயநின்தாள் கீழே அடிமைநின்றால் ஆகாதோ. 21

## 48. இல்லையோ என் கண்ணி

ஏதும் தெரியாது எனைமறைத்த வல்இருளை
நாதநீ நீக்கஒரு ஞானவிளக்கு இல்லையோ. 1

பணிஅற்று நின்று பதைப்புஅறஎன் கண்ணுள்
மணிஒத்த ஜோதிஇன்ப வாரிஎனக்கு இல்லையோ. 2

எம்மால் அறிவதுஅற எம்பெருமான் யாதும்இன்றிச்
சும்மா இருக்கஒரு சூத்திரம்தான் இல்லையோ. 3

நாய்க்கும் கடையானேன் நாதாநின் இன்பமயம்
வாய்க்கும் படிஇனிஓர் மந்திரம்தான் இல்லையோ. 4

ஊன்ஆக நிற்கும் உணர்வைமறந்து ஐயாநீ
தான்ஆக நிற்கஒரு தந்திரம்தான் இல்லையோ. 5

அல்லும் பகலும் அகண்டவடி வேஉனைநான்
புல்லும் படிஎனக்குஓர் போதனைதான் இல்லையோ. 6

## 49. வேண்டாவோ என் கண்ணி

கண்டவடிவு எல்லாம்நின் காட்சிஎன்றே கைகுவித்துப்
பண்டும்இன்றும் நின்றஎன்னைப் பார்த்துஇரங்க
வேண்டாவோ. 1

வாதனையோடு ஆடும் மனப்பாம்பு மாயஒரு
போதனைதந்து ஐயா புலப்படுத்த வேண்டாவோ. 2

தன்னை அறியத் தனிஅறிவாய் நின்றுஅருளும்
நின்னைஅறிந்து என்அறிவை நீங்கிநிற்க வேண்டாவோ. 3

6. புல்லும்படி – கலந்திருக்கும்படி.

Koviloor Digital Library



அள்ளக் குறையா அகண்டிதா னந்தம்எனும்
வெள்ளம்எனக்கு ஐயா வெளிப்படுத்த வேண்டாவோ. 4

அண்டனே அண்டர் அமுதேஎன் ஆருயிரே
தொண்டனேற்கு இன்பம் தொகுத்துஇரங்க வேண்டாவோ. 5

பாராதே நின்று பதையாதே சும்மாதான்
வாராய் எனவும் வழிகாட்ட வேண்டாவோ. 6

## 50. நல்லறிவே என் கண்ணி

எண்நிறைந்த மேன்மைபடைத்து எவ்உயிர்க்கும்
அவ்உயிராய்க்
கண்நிறைந்த ஜோதியைநாம் காணவா நல்லறிவே. 1

சித்துஆன நாம்என் ஜடத்தைநாம் என்னஎன்றும்
சத்துஆன உண்மைதனைச் சாரவா நல்லறிவே. 2

அங்கும்இங்கும் எங்கும்நிறை அற்புதனார் பொற்புஅறிந்து
பங்கயத்துள் வண்டாய்ப் பயன்பெறவா நல்லறிவே. 3

கான்றசோறு என்னஇந்தக் காசினிவாழ்வு அத்தனையும்
தோன்ற அருள்வெளியில் தோன்றவா நல்லறிவே. 4

## 51. பலவகைக் கண்ணி

என்அரசே கேட்டிலையோ என்செயலோ ஏதும்இலை
தன்அரசு நாடுஆகித் தத்துவம்கூத்து ஆடியதே. 1

பண்டுஒருகால் நின்பால் பழக்கம்உண்டோ எந்தைநினைக்
கண்டுஒருகால் போற்றக் கருத்தும் கருதியதே. 2

கண்டனவே காணும்அன்றிக் காணாவோ காணாஎன்
கொண்டுஅறிவேன் எந்தைநினைக் கூடும் குறிப்பினையே. 3

கல்ஆல் அடியில்வளர் கற்பகமே என்அளவோ
பொல்லா வினைக்குப் பொருத்தம்தான் சொல்லாயோ. 4

---

4. கான்றசோறுஎன்ன – கக்கிய சோற்றினைப் போல.

Koviloor Digital Library



தப்பிதம்ஒன்று இன்றிஅது தான்ஆக நிற்கஉண்மை
செப்பியதும் அல்லால்என் சென்னியது தொட்டனையே. 5

மாசுஆன நெஞ்சன்இவன் வஞ்சன்என்றோ வாய்திறந்து
பேசா மவுனம் பெருமான் படைத்ததுவே. 6

கற்பதுஎல்லாம் கற்றேம்முக் கண்ணுடையாய் நின்பணியாய்
நிற்பதுகற்று அன்றோ நிருவிகற்பம் ஆவதுவே. 7

முன்அளவில் கர்மம் முயன்றான் இவன்என்றோ
என்அளவில் எந்தாய் இரங்காது இருந்ததுவே. 8

நெஞ்சகம்வேறு ஆகி நினைக்கூட எண்ணுகின்ற
வஞ்சகனுக்கு இன்பம்எந்தாய் வாய்க்குமாறு எவ்வாறே. 9

பள்ளங்கள் தோறும் ப்ரந்தபுனல் போல்உலகில்
உள்ளம் பரந்தால் உடையாய்என் செய்வேனே. 10

முன்நினைக்கப் பின்மறைக்கும் மூடஇருள் ஆகெடுவேன்
என்நினைக்க என்மறக்க எந்தை பெருமானே. 11

வல்லாளா மோனாநின் வான்கருணை என்னிடத்தே
இல்லாதே போனால்நான் எவ்வண்ணம் உய்வேனே. 12

வாக்கும் மனமும் மவுனம்உற எந்தைநின்னை
நோக்கும் மவுனம்இந்த நூல்அறிவில் உண்டாமோ. 13

ஒன்றாய்ப் பலவாய் உலகம்எங்கும் தானேயாய்
நின்றாய்ஐ யாஎனைநீ நீங்கற்கு எளிதாமோ. 14

ஆவித் துணையே அருமருந்தே என்றனைநீ
கூவிஅழைத்து இன்பம் கொடுத்தால் குறைவுஆமோ. 15

எத்தனையோ நின்விளையாட்டு எந்தாய்கேள்
இவ்வளவுஎன்று
அத்தனையும் என்னால் அறியும் தரம்ஆமோ. 16

---

5. என் சென்னியது தொட்டனையே – அடியேன் தலைமீது கை வைத்தாயே. 6. மாசுஆன நெஞ்சன் இவன் – குற்றம் பொருந்திய மனத்தையுடையவன் இவன். 12. வல்லாளா – எல்லாம் வல்லவனே.

Koviloor Digital Library



தேடுவார் தேடும் சிவனேயோ நின்திருத்தாள்
கூடுவான் பட்டதுயர் கூறற்கு எளிதாமோ. 17

பற்றினதைப் பற்றும்எந்தாய் பற்றுவிட்டால் கேவலத்தில்
உற்றுவிடும் நெஞ்சம்உனை ஒன்றிநிற்பது எப்படியோ. 18

ஒப்புஇலா ஒன்றேநின் உண்மைஒன்றும் காட்டாமல்
பொய்ப்புவியை மெய்போல் புதுக்கிவைத்தது
என்னேயோ. 19

காலால் வழிதடவும் காலத்தே கண்முளைத்தால்
போலே எனதுஅறிவில் போந்துஅறிவாய் நில்லாயோ. 20

தன்அரசு நாடாம் ஜடஜால பூமிமிசை
என்அரசே என்னை இறையாக நாட்டினையோ. 21

திங்கள்அமு தாநின் திருவாக்கை விட்டுஅரசே
பொங்கு விஷம்அனைய பொய்ந்நூல் புலம்புவனோ. 22

உன்னஉன்ன என்னைஎடுத்து உள்விழுங்கும்
நின்நிறைவை
இன்னம்இன்னம் காணாமல் எந்தாய் சுழல்வேனோ. 23

ஆரா அமுதுஅனைய ஆனந்த வாரிஎன்பால்
தாராமல் ஐயாநீ தள்ளிவிட வந்ததுஎன்னோ. 24

## 52. நின்ற நிலை

நின்றநிலை யேநிலையா வைத்துஆ னந்த
நிலைதானே நிர்விகற்ப நிலையும் ஆகி,
என்றும்அழி யாதஇன்ப வெள்ளம் தேக்கி
இருக்கஎனைத் தொடர்ந்து தொடர்ந்து
இழுக்கும்அந்தோ. 1

---

19. புதுக்கி வைத்தது என்னேயோ – அலங்கரித்து வைத்தது எதற்கோ.

22. பொங்கும் விஷம் அனைய பொய்ந்நூல் புலம்பு வனோ – கொடிய நஞ்சை ஒத்த பொய்யான கருத்துக்கள் புதைந்துள்ள நூல்களைப் படிப்பேனோ.

Koviloor Digital Library



இருக்கு ஆதி மறைமுடிவும் சிவாகமம் ஆதி
இதயமும்கை காட்டுளனவே இதயத்து உள்ளே
ஒருக்காலே உணர்ந்தவர்கட்கு எக்கா லும்தான்
ஒழியாத இன்பவெள்ளம் உலவா நிற்கும். 2

கற்றதும்கேட் டதும்தானே ஏதுக்கு ஆகக்
கடபடம்என்று உருட்டுதற்கோ? கல்ஆல் எம்மான்
குற்றம்அறக் கைகாட்டும் கருத்தைக் கண்டு
குணம்குறிஅற்று இன்பநிஷ்டை கூட அன்றோ. 3

## 53. பாடுகின்ற பனுவல்

பாடுகின்ற பனுவலோர்கள், தேடுகின்ற செல்வமே
நாடுகின்ற ஞானமன்றில், ஆடுகின்ற அழகனே. 1

அத்தன்என்ற நின்னையே, பக்திசெய்து பனுவலால்
பித்தன்இன்று பேசவே, வைத்ததுஎன்ன வாரமே. 2

சிந்தைஅன்பு சேரவே, நைந்துநின்னை நாடினேன்
வந்துவந்துஉள் இன்பமே, தந்துஇரங்கு ஸ்தாணுவே. 3

அண்டர்அண்டம் யாவும்நீ, கொண்டுநின்ற கோலமே
தொண்டர்கண்டு சொரிகணீர், கண்டநெஞ்சு கரையுமே. 4

அன்னைபோல அருள்மிகுத்து, மன்னும்ஞான வரதனே
என்னையே எனக்குஅளித்த, நின்னையானும்
நினைவனே. 5

## 54. வண்ணம்

அருஎன் பனவும்அன்றி உருஎன் பனவும்அன்றி
அகமும் புறமும் அன்றி—முறைபிற ழாது,
குறியும் குணமும்அன்றி நிறைவும் குறைவும் அன்றி
மறைஒன்று எனவிளம்ப—விமலமது ஆகி,

---

2. இருக்கு ஆதிமறை முடிவும் — இருக்கு முதலிய வேதங்களில் அமைந்துள்ள நுட்ப முடிவுகளும்.

1. பனுவலோர்கள் — ஞானநூல் உணர்ச்சி உடையவர்கள். ஞானமன்றில் — சித் அம்பலத்தில். 2. வாரமே — பெருமையே. 3. ஸ்தாணுவே — நிலைத்த பொருளே.

Koviloor Digital Library



அசலம் பெறஉயர்ந்து விபுலம் பெறவளர்ந்து
சபலம் சபலம்என்றுஉள்—அறிவினர் காண
—ஞானவெளியிடை மேவும்உயிராய்,

அனல்ஒன் றிடஎரிந்து புகைமண் டிடுவது அன்று
புனல்ஒன் றிடஅமிழ்ந்து—மடிவிலது ஊதை
சருவும் பொழுது உயர்ந்து சலனம் படுவதுஅன்று
சமர்கொண்டு அழிவதுஅன்றுஓர்—இயல்பினது ஆகும்;
அவன்என் பதுவும் அன்றி அவள்என் பதும்அன்றி
அதுஎன் பதுவும்அன்றி—எழில்கொடு உலாவும்
—ஆரும்நிலைஅறி யாதபடியே. 1/4

இருள்என் பதுவும்அன்றி ஒளிஎன் பதுவும்அன்றி
எவையும் தன்உள்அடங்க ஒருமுதல் ஆகும்;
உளதுஎன் பதுவும்அன்றி இலதுஎன் பதுவும்அன்றி
உலகம் தொழஇருந்த-அயன்முத லோர்கள்
எவரும் கவலைகொண்டு சமயங் களில்விழுந்து
சுழலும் பொழுதுஇரங்கி அருள்செயு மாறு
— கூறரியஐக மாயைஅறவே.

எனதுஎன் பதைஇகழ்ந்த அறிவின் திரளில்நின்றும்
அறிவுஒன்று எனவிளங்கும் உபயமது ஆக
அறியும் தரமும்அன்று பிறியும் தரமும்அன்று
அசரம் சரம்இரண்டின்—ஒருபடி ஆகி,
எதுசந் ததம்நிறைந்தது எதுசிந் தனைஇறந்தது
எதுமங் களசுபங்கொள்—சுகவடிவு ஆகும்
—யாதுபரம்அதை நாடிஅறிநீ. 1/2

---

1/4 சபலம் சபலம் என்று உள் அறிவினர் காண — வாய்ப்பு வாய்ப்பு என்று மனத்தில் நினைக்கின்ற பேரறிஞர் தரிசிக்க. புகைமண்டிடுவது அன்று — புகை மிகுவது அன்று. ஊதை சருவும் பொழுது — காற்றடிக்கும் பொழுது. சமர்கொண்டு அழிவது அன்று — சண்டையில் சாவதன்று.

Koviloor Digital Library



பருவம் குலவுகின்ற மடமங் கையர்தொடங்கு
கபடம் தனில்விழுந்து—கெடுநினைவு ஆகி,
வலையின் புடைமறிந்த மறிஎன்று அவசம்உண்டு
வசனம் திரமும்இன்றி—அவர்இதழ் ஊறல்
பருகும் தொழில்இணங்கி இரவும் பகலும்இன்சொல்
பருகும் படிதுணிந்து—குழல்அழகு ஆக,
—மாலைவகைபல சூடிஉடனே,

பதுமம் தனைஇசைந்த முலைஎன்று அதைஉகந்து
வரிவண்டு எனஉழன்று—கலில்என ஆடும்
சிறுகிண் கிணிசிலம்பு புனைதண் டைகள்முழங்கும்
ஒலிநன்று எனமகிழ்ந்து—செவிகொள, நாசி
பசுமஞ் சளின்வியந்த மணம்முந் திடமுகந்து,
பவமிஞ் சிடஇறைஞ்சி—வரிசையி னூடு
—காலின்மிசைமுடி சூடிமயலாய், 3/4

மருளும் தெருளும்வந்து கதிஎன் பதைமறந்து
மதனன் சலதிபொங்க—இரணமது ஆன
அளிபுண் தனைவளைந்து விரல்கொண்டு
உறஅளைந்து
சுரதம் சுகம் இதுஎன்று—பரவசம் ஆகி,
மருவும் தொழில்மிகுந்து தினமும் தினமும்விஞ்சி
வளரும் பிறைகுறைந்த—படிமதி சோர
—வானரமதுஎன மேனிதிரையாய்,

வயதும் படஎழுந்து பிணியும் திமிதிம்என்று
வரவும் செயல்அழிந்துஉள்—இருமலும் ஆகி,
அனமும் செலுதல்இன்றி விழியும் சுடர்கள்இன்று
முகமும் களைகள்இன்று—சரிஎன நாடி,
மனைஇன் புறஇருந்த இனமும் குலைகுலைந்து
கலகம் செயஇருண்ட—யமன்வரும் வேளை
—ஏதுதுணைபழி காரமனமே! 1

---

3/4 — வலையின் புடைமறிந்த மறி என்று அவசம் உண்டு — வலையின்கண் சிக்கிக்கொண்ட மானை ஒத்துத் துன்பமடைந்து.

Koviloor Digital Library



## 55. அகவல்

